# படிக்கம்

ஆரையம்பதி ஆ. தங்கராசா



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படிக்கம்

---

## ஆரையம்பதி ஆ. தங்கராசா

தாயதி வெளியீடு - 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கம்
(சிறுகதைகள்)
ஆசிரியர்: **ஆரையம்பதி ஆ. தங்கராசா**

முதற்பதிப்பு: டிசம்பர் 2021
அட்டை, நூல் வடிவமைப்பு: றஷ்மி

வெளியீடு: தாயதி
மொபைல்: +41 793343522
மின்னஞ்சல்: thayathy12@gmail.com

விலை: இலங்கை ரூ. 650
இந்தியா ரூ. 220

விற்பனை உரிமை: பாரதி புத்தகாலயம்
எண்:7, இளங்கோ சாலை
தேனாம்பேட்டை
சென்னை- 600018

*Padikkam*
*(Short Stories)*
*Author: Arayampathy A. Thangarasa*
*© Arayampathy A. Thangarasa*
*First Edition - December 2021*
*Book & Cover Design: rashmy*

*Published by - Thayathy*
*+41 793343522*
*thayathy12@gmail.com*

*Price: SLR. 650*
*INR. 220*

*Distribution in India:*
*Bharathi Puthakalayam*
*No:7, Elango Salai*
*Teynampet*
*Chennai- 600018*
*Phone: 044 24332924*

ISBN: 978 81 9078 914 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி -

இந்தத் தொகுப்பிலுள்ள கதைகளை வெளியிட்ட

- தினக்கதிர்
- தினக்குரல்
- தினகரன்
- மல்லிகை
- செங்கதிர்
- ஞானம்
- வானவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை
கருக்கூட்டிய
அம்மாவுக்கும்
அப்பாவுக்கும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'படிக்கம்' என்னும் படைப்பின் வீரியம்**

**ஆரையம்பதி** ஆ. தங்கராசாவின் முதல் சிறுகதைத் தொகுதி 'யுகமொன்று உடைகிறது'. அது வெளிவந்து இருபது வருடங்கள் கடந்தபின், இரண்டாவது சிறுகதைத் தொகுதியாக 'படிக்கம்' இப்போது வெளிவருகிறது. இத்தொகுப்பு, தாயதிக்கு முதலாவது சிறுகதைத் தொகுப்பு என்ற அளவிலும் இது மிக முக்கியம் பெறுகிறது.

ஆரையம்பதி ஆ. தங்கராசாவின் கதைகள் மட்டக்களப்பு மண்வளத்தை படம்பிடித்துக் காட்டும் கதைகள், அவரின் கதைகளில் அநேகமானவர்கள் வாழ்வும் துயரங்களும் இழையோடும் மாந்தர்கள்...

யதார்த்தத்தின் சொல்லாடல்கள் ஒவ்வொரு கதைகளிலும் உயிர்விடுகிறது. மட்டக்களப்பில் மறைந்துபோகும் மண்வளச் சொற்கள் கதைகளில் அதிகம் ஆவணப்படுத்தப்பட்டிருப்பதோடு அடுத்த தலைமுறைக்கும் கையளிக்கப்பட்டிருக்கிறது. மட்டக்களப்பின் தனித்துவமான பண்பியல்புகளை ஆரையம்பதி கிராமம் கொண்டிருந்தது.
எனினும் சமூகம் கண்டுள்ள மாற்றம் ஆரையம்பதி ஆ. தங்கராசாவின் கதைகளினூடாக உலகதரிசனத்திற்கு வெளிப்பட்டு நிற்கின்றது.
அந்த ஊரின் படைப்பின் வீரியம் இந்தத் தொகுப்பில் கிளைவிட்டுப் படர்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரையம்பதி ஆ. தங்கராசாவின் எழுத்தாற்றல், அவர் கையாளும் மொழிநடை மற்றும் உவமைகள் ஆகியவை அவரின் கதைகளை வாசிப்போருக்கு வியப்பைக் கொடுக்கும். அவலம் மிகுந்த சமூகத்தின்பால் அவர் கொண்ட ஈடுபாடே அவரை இவ்வாறான கதைகளை எழுதத் தூண்டியிருக்கும் என்று நினைக்கிறேன்.

இந்தத் தொகுப்பை கொண்டுவருவதில் றஷ்மியின் ஆர்வம்தான் மிக முக்கியமானது. இலக்கியத்தை மையப்படுத்திய எந்தப் பூரணமான உரையாடலையும் இதுவரையில் எழுத்தாளர் மலர்ச்செல்வனோடு நிகழ்த்தாத சூழலில், அவரின் தந்தையின் நூலை தாயதி வெளியிடுவது குறித்துப் பேசுவதற்கு கொஞ்சம் தயக்கம் இருந்த போதிலும், மின்னஞ்சல் மூலம்தான் அந்த அனுமதியைப் பெற முடிந்தது. எழுத்தாளர் மலர்ச்செல்வனுக்கு தாயதியின் நன்றிகள். தாயதி வெளியீடுகளுக்கு தொடர்ந்து ஊக்கம் தரும் றஷ்மிக்கும் நன்றிகள்.

**- தில்லை**

**'தாயதி' சமூக செயலூக்கத்திற்கான முன்னோடி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் உரை

**சிறுகதை** எழுதுவதென்பது 'கிள்ளுக்கீரை' பிடுங்கி கறிசமைக்கும் சம்பவமல்ல.

அது பிள்ளைப்பெறும் கர்ப்பிணிப்பெண்ணின் பிரசவவேதனை. தலைசிறந்த சிறுகதைகளை நினைத்தநேரமெல்லாம் எழுதமுடியாது. அதற்கொரு நேரம்வரும். சிந்தனையில் தெளிவு ஏற்பட்டு எண்ணக்கரு கருக்கொண்டு எழுச்சிபெறும் பொன்னான நேரத்தில்த்தான் சிறுகதை எழுதமுடியும். அந்தச் சிறுகதைகள்தான் காலத்தோடு போட்டிபோட்டு வெற்றிக்கொடி நாட்டும்.

பல மாதங்கள் வயிற்றிலே குழந்தையைச்சுமந்து தீராத வேதனையோடு பெற்றெடுக்கும் தாயின் தவிப்பு ஒரு சிறுகதை எழுத்தாளனுக்கும் பொருந்தும்.

'வகைவகையான வடிவங்கள், உத்திவேறுபாடுகள், உரையாடல்கள், மாற்றங்கள், கதைசொல்லும் முறைமைகள், மொழிநுணுக்கம்' ஒரு சிறுகதை எழுத்தாளன் இந்த வட்டத்திற்குள் நின்று கதைகளைப்படைத்தால் அதுதான் உயிர்ப்போடு என்றும் வாழும் மலையகம் தந்த சிறுகதைச்சிற்பி தெளிவத்தை ஜோசப் கூறியவார்த்தைகள் நூற்றுக்குநூறு உண்மையானவை.

நான் 1962ம் ஆண்டு முதல் இன்று எண்பது வயது நடக்கும்போதும் சிறுகதை எழுதிக்கொண்டுதான் இருக்கிறேன். எனது சிறுகதைகள் மண்ணின் வாசனையைப்புடம்போட்டுப் பேசுகிறது. எனது முதலாவது சிறுகதைத்தொகுப்பு 'யுகமொன்று உடைகிறது' என்ற தலைப்பிலே 17 சிறுகதைகள் அடங்கிய புத்தகமாக வெளிவந்தது. இப்பொழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16 கதைகள் அடங்கிய 'படிக்கம்' எனும் தலைப்பில் சிறுகதைத்தொகுப்பாக வெளிவருகிறது. இந்தக்கதைகள் அத்தனையும் மண்ணின் பசுமை நினைவுகளையும், போர் அவலங்களையும் கலை பண்பாட்டுவாழ்க்கை முறைகளையும், பாடுமீன்வாவி தரும் வளப்பான வாழ்க்கையையும், மீன்பிடித் தொழிலின் மகத்துவமான நுணுக்கங்களையும், போர்வெறியால் மனித்துவம் அழிந்த அவலங்களையும், தேரோட்டத்தையும் அதன் மகத்துவத்தையும் மண்வாசனை மிளிர எடுத்துப்பேசுகிறது. நானும் அங்கேயும் இங்கேயும் மேயாமல் எனது பண்பாட்டுப் பூமியிலே நின்றே கதை எழுதுகிறேன். இன்று 'புற்றீசல்கள்' போல் சிறுகதைப்பனுவல்கள் வந்து கொண்டிருக்கிறது. இவை காலத்தால் தாக்குப்பிடிக்கமுடியாமல் அழிந்து மறைந்துவிடும். அந்தப்பாவத்துக்கு நான் உடந்தையாகவில்லை. ஒரு முறை ஆனந்தவிகடன் முந்திரைக்கதைச் சிற்பி ஜெயகாந்தன் கூறினார் 'நான் சிறுகதையைத் தேடிப்போவதில்லை. எனது பசுமை மாறாத பச்சை மண்ணான ஊரே எனக்கு சிறுகதை எழுத உயிர்மூச்சாகவிளங்குகிறது' இந்தவாசகம் என்றும் தொலைந்துபோகாத சத்தியவாக்காகும். இது எனக்கும் பொருந்தும். இந்தச்சிறுகதைகள் மக்களைப்பேசுகிறது. அவலத்தைக்கூறுகிறது. மண்ணின் வடிவத்தைப் பேசுகிறது.

**- ஆரையம்பதி ஆ. தங்கராசா**

வேளாளர்தெரு, ஆரையம்பதி - 03

28.10.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மண்ணை மீட்போம் - 11

- உப்புக்கரைச்சை - 22

- தொடரும் துயரங்கள் - 31

- எங்கிருந்தோ வந்தான் - 39

- தீர்த்தக் கரையினிலே - 49

- அது ஒரு அழிவுக்காலம் - 59

- சிலுவை சுமக்கப் பிறந்தவர்கள் - 69

- கலியுக அரங்கேற்றம் - 74

- தேரோட்டம் - 81

- கொழுந்தொன்று கருகிப்போகிறது - 93

- இருள் விலகுக - 101

- புதிர் - 110

- துறைக்காறன் - 121

- ஆற்றங்கரை பங்களா - 129

- ஒட்டிக்கூடு - 136

- படிக்கம் 146

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மண்ணை மீட்போம்.** மருந்துக் கங்காணி முத்துச்சாமி தேயிலைத் தோட்டத்துத் தொழிலாளர்களின் குடியிருப்புக்களான 'லயங்களுக்குச்' செல்லும் படிக்கட்டுக்களில் கால் வைத்து தனை மறந்த ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியவாறு மெதுமெதுவாக லயக் குடியிருப்புக்களை நோக்கி வந்து கொண்டிருக்கிறார். ஐம்பது வயதுக்குச் சற்றுக் கூடுதலாக இருக்கும் அவருக்கு. வாழ்க்கைப் போராட்டத்திலே நன்கு உழன்று அலுத்த உடம்பாக இருந்தாலும் இன்னும் கட்டுக்குலையாத தோற்றம் தலையிலே மயிர் குறைந்து முன்நெற்றிப் பக்கமும், தலையின் பின் சரிவிலும் லேசான வழுக்கை இத்தனை வயதுக்கும் திருமணத்தை எட்டிப்பார்க்காமல் தமக்கையின் மக்களுக்காக உழைத்துக்கொடுத்து வாழுகின்ற தியாகத் தழும்பு மேனியெங்கும் பசலையாகப் படர்ந்து கிடக்கிறது. பளிச்செனத் தெரியும் மல்லிகைப் பூ நிறமான வெள்ளைச் சாரணை மடித்துக் கட்டி, அதே நிறத்தில் அரைக்கைச் சட்டை போட்டு, பனிக் கூதலுக்காகக் கம்பளிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்வையை உடம்பு மறையப் போர்த்தியவாறு, தலையைத் துவாய்த் துண்டால் தலைப்பாகையாகக் கட்டி, வலப்பக்கத் தோளிலே தொங்கும் மருந்து, குளிசை நிறைந்த கடினமான, உறுதியான தோல் பையோடு இழுபட்டு நடந்து வருகிறார் மருந்துக்கங்காணி.

அவர் மட்டும் இழுபட்டு வரவில்லை. அவரோடு அவரது மனமும் பந்தயக்குதிரைபோல் அவசரப்பட்டு ஓடிக்கொண்டே வருகிறது. "சீ என்ன வாழ்க்கையடா இது. அதுவும் பாருங்க, இந்த மலைநாட்டானுக்குக் கெடச்ச வாழ்க்கையைப் போல, இந்த ஒலகத்துல எந்த மனுஷச் சாதிக்கும் கெடையா! அப்படி இல்லன்னா பரம்பர பரம்பரையா வாழ்ந்துக்கிட்டுவாற இந்த மண்ணவுட்டுத்து உடன் எங்கயாவது எழும்பித்துப் போங்க. அப்படின்னு சொல்லுவானுகளா? பாவிப்பசங்க. தங்கட ரெத்தத்தை உசிரையும் தெனம் தெனம் கொடுத்து அழிச்சிக்கிட்டுப் போன இந்த மலநாட்டுத்தமிழனுக்கு போடா ஒணக்கு மண்ணுமில்ல, லயமுமில்ல வீடுதானுமில்ல என்று விரட்டி அடிக்கப் போகிறான். எண்ட அக்கா மகள் பஞ்சவர்ணம் புள்ள குட்டிக்காறி அடா! போதாக்குறைக்கு எட்டாவது புள்ளைய வயித்தில சுமந்துகிட்டுத் திரியிறாள். அவபுருஷன் ரொம்பச் சோம்பேறி, வருஷம் தப்பாம புள்ளங்களுக்குத் தகப்பனாகிற கலையமட்டும் நல்லா ஒழுங்காகப் படிச்சிருக்கான் இந்த இக்கட்டான நேரத்தில் அந்தப்புள்ளங்கள எங்கையா அள்ளிக்கிட்டுப் போறது. ஒதுக்குப் புறமாகக் கிடக்கிற "பீலிக்கரைக்கு" அப்பால் பரந்து விரிந்து கிடக்கிற மலைக்காட்டில போய்க்குடி இருங்க அப்படி எண்டு தோட்ட நிர்வாகம் ஆளமாக கூறுது பாருங்க".

அவரது மனக்குதிரை எதை எதையோவெல்லாம் நினைச்சு வேகம் வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது. முத்துச்சாமிக் கங்காணிக்கு ஞாயிற்றுக்கிழமை மட்டுந்தான் லீவுநாள் மற்ற ஆறுநாளும் காலையில எழுந்து, பேருக்கு மட்டும் ஆஸ்பத்திரியாக இருக்கும் தோட்டத்து ஆஸ்பத்திரிக்குச் சென்று அங்கு செய்யவேண்டிய வேலைகளை ஒழுங்காகச் செய்துவிட்டு, அங்கு கடமையாற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அப்போதிக்கரி கார்த்திகேசு அவர்கள் கொடுக்கும் மருந்து குளிசைகளை பையிலே அடக்கிக் கொண்டு லயக் காம்புறாக்களுக்குப் புறப்பட்டு விடுவார் முத்துச்சாமி கங்காணி. "அப்போதிக்கரி கார்த்திகேசு ஐயா அவர்கள் ரொம்ப நல்லவர்தான் ஆனாப்பாருங்க, தோட்டத்து நிர்வாகம் சீராக மருந்து வகைகளை கொடுத்தால் அல்லவா அவர் உருப்படியாக எதுவும் செய்யமுடியும். ஏதோ வேண்டா வெறுப்பாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத்து நிர்வாகம் நடக்கும்போது அந்தப் புள்ளக்குட்டிகார கார்த்திகேசு டொகுத்தர் என்னையா செய்ய முடியும். யாழ்ப்பாணத்தில நடக்கிற அமளிதுமளிக்கு ஈடுகொடுக்க முடியாம குடும்பத்தையே இந்தத்தோட்டத்திற்குக் கொண்டு வந்து சேர்த்து ஏதோ போராட்ட வாழ்வு நடத்திக்கொண்டிருக்கிறவர். அவரில குற சொல்ல ஏலாதுங்க. அந்த மனுஷன் தங்கமானவர்தான். தோட்டக் காட்டுச் சனங்க அப்படி என்று பேதம் பார்க்காத மனுஷன். எந்த நேரம் போனாலும் மனம் கூசாம வாற நோயாளிகளுக்கு மருந்து கொடுத்து அனுப்புவாரு. பெரிய நோய் அப்படி என்றா என்னங்க செய்வார் அந்த அப்புறாணி மனுஷன். டவுண் அரசாங்க ஆஸ்பத்திரிக்குப் போகச் சொல்லுவார். நாசமாப்போன அந்தச் சிங்களச் சாதி தோட்டக்காட்டான் கள்ளத்தோணி அப்படி என்று ஒதுக்கிவைக்கிறான். நல்ல சிங்கள ஆக்களும் அவங்களுக்குப் பயந்து பேசாம இருக்காங்க. இத்தனைக்கும் புத்ததர்மம் பொங்கிப்புரளும் புண்ணிய பூமியாம் மனித நாகரிகத்திற்கே சவால் விடுறானுங்க பாருங்க அந்த மிருகங்களால் நம்மிட மல நாட்டுத் தமிழனுங்கள் கவனிப்பாரற்று, ஒழுங்கான வைத்தியம் பார்க்காம செத்துப்போய்க்கிட்டுத்தான் இருக்கு தெரியுமா? ஐயோ! என்ன கொடுமங்க இந்த இக்கட்டான வாழ்வு வாழுற மனித சாதியப்பாத்துத் தான் உடனே இருநூற்றுக்குமேல் குடும்பங்களாக வாழுற மக்கள லயங்கள விட்டுட்டு எழும்பிக் கிட்டு போகச் சொல்லுறானுங்க"

மருந்துக் கங்காணி முத்துச்சாமியின் மனக்குதிரை தங்குதடையில்லாமல் ஒரே ஓட்டமாக ஓடிக்கொண்டே இருக்கிறது. படிக்கட்டுக்களைக் கடந்து வரிசையாகக் கிடக்கும் லயங்களை நெருங்குகிறார் மருந்துக் கங்காணி. மருந்துக் கங்காணியைக் கண்டதும் லயங்களிலே ஒதுங்கிக் கிடக்கும் கிழடுகள் தலையை எட்டிப் பார்த்தவாறு வெளியே வருகிறார்கள் நிர்வாணமாக. மூக்கு ஒழுக ஊர்ந்து திரியும் குட்டிபசங்கள் "மருந்துக் கங்காணி டோய். மருந்துக்கங்காணி டோய்" என்று தொண்டை வெடிக்கக் கத்திக் கூச்சல் இடுகிறார்கள். "டேய் வாயப் பொத்துங்கடா தறுதலப் பசங்க" என்று உரக்கச் சத்தம் போட்டவாறு கங்காணி ஒவ்வொரு லயக் காம்பறாவாகச் சென்று நோயால் முனகும் நோயாளிகளுக்கு மருந்தும், குளிசையும் கொடுத்துக் கொண்டே வருகிறார். நடுவே கிடக்கும் லயக் காம்பறாவை நெருங்க, காவிபடிந்த பற்களை வெளியே காட்டி முத்தம்மாக் கிழவி "வாடப்பா முத்துச்சாமி ஒன்னத்தான் பார்த்துக்கிட்டிருக்கேன். என்னப்புடிச்ச வருத்தம் தொலையிறாப்போல இல்லடா. மருந்துக்கங்காணி. தம்பி முத்துச்சாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதாச்சும் குளிச கொடப்பா. இண்டையோ, நாளையோ எனத் தவிக்கிற இந்த உசிருக்கு ஒண்ட கையால் குளிச மருந்து தந்தா கொஞ்சம் லேசா இருக்கும் அப்பா. "மருந்துக்கங்காணி கொடுத்த குளிசைகளை வாங்கி குவளைத் தண்ணீரிலே தொண்டையை நனைத்துக் கொண்டு முத்தம்மாக் கிழவி குளிசைகளை விழுங்குகிறாள். முத்தம்மாகக் கிழவி குளிசை விழுங்கும் பாவனையைப் பார்த்தவாறு மருந்துக்கங்காணி "அம்மாயி எத்தன நாளைக்கு இந்தக் குளிச மருந்து வேக்கச் சுமந்து திரியப்போறன். அந்த நாசமாப் போனவனுகளுக்கு நம்ம குடியிருப்பு லயப் பகுதிகள் உடனே தேவையாம் அதனால பீலிக்கரைக்கு அங்கால, பேயா இருண்டு கிடக்கும் காட்டை வெளியாக்கி அதில் போய் நம்மள இருக்கட்டாம். என்ன நியாயங்கா அம்மாயி ஒழைச்சு ஒழைச்சி கோடிக் கணக்காகக் கொடுக்கிற சாதிக்கு இருக்க இடமில்லை. குந்திக்கிட்டுச் சாக வீடு இல்ல. இதப்பாக்க எந்தச் தொழில்ச்சங்கம் இங்கு இருக்கண்டு கேக்கேன். மாசம் மாசம் ஒழுங்கா நம்மிட சம்பளத்தில் சந்தாப்பணம் மட்டும் வெட்டிக்கிறானுங்கள். நம்ம பணத்தில சொகுசா வாழ்ற தொழிற்சங்கங்கள் இருக்குதே ஒளிய, நமது இனத்தின் விடிவுக்குப் போராடுறதக் காணோம். இல்லாட்டி இந்த இக்கட்டான நேரத்தில இந்தக் தொழிற்சங்கங்கள் கொதித்தெழும்ப வேணாமா? பேசாம வாய்மூடி இருந்தா என்ன நடக்கப்போகுது. லயங்கள விட்டுத்துப் போங்க. அப்படின்னு நிர்வாகம் விரட்டி அடிக்குதே. நம்மட தலைவிதிய ஆருட்டச் சொல்ற அம்மாயி" மருந்துக்கங்காணி முத்துச்சாமி தீக்கோளியாகப் புதைந்து கிடந்த ஆக்கிரோஷமான எண்ணச் சிதறல்களை வெளியே கக்கிவிட்டு முத்தம்மாக் கிழவியின் சுருங்கி ஒடுங்கிய பால்வற்றிப்போன றப்பர் மரமாகக் கிடக்கும் வதனத்தை உற்று நோக்குகிறார். "என்னடா முத்துச்சாமித் தம்பி என்னவொல்லாம் கதைக்கிற, எனக்கு ஒண்ணுமே புரியல்லடா? நம்மள எழும்பிக்கிட்டு எங்கடா போகச் சொல்றான். நம்மள எழும்பிப் போகச் சொல்றவன் காட்ட வெளியாக்கி லயங்களைக் கட்டவா போறான். அப்படின்னா எங்கடா ஒதுங்கச் சொல்றான். இந்த மலக்காட்டு மண்ணிலே தாண்டா எண்ட ஆத்தா, அப்பன், எண்ட புருஷன் எல்லாம் உரமாப்போனாங்க நான் மட்டும் இந்த மண்ணில புதையாம எங்கடா சாகச் சொல்றான். நம்மட சனங்கள்ற இரத்தந்தாண்டா தேயிலைச்சாயம் என்று சொல்றாக. நேத்து நம்மள ஆளவந்த சிங்களவன் அந்த நாட்டில வாழுற சிங்களவனுக்கு வக்காலத்து வாங்கி நம்மள எழுப்பிக்கிட்டு நாட்டில வாழுற சிங்களவனுக்கு நிலத்த அளந்து கொடுத்து ஊடுகட்டிக் கொடுக்கப்போறானுகளா? வக்காள ஒளிப்பசங்க அந்த வெள்ளக்காரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரச் சீமானுகள்ற கால்ச் செருப்புக் கழுவுற யோக்கியத இருக்கடா அவனுகளுக்கு அந்தச் சீமானுகள் இந்த மண்ண ஓதறிப்போட்டு போனப்புறம் இந்தக் காட்டுச் சிங்களவன் நம்மச் செக்கில வெச்சு ஆட்டுறாண்டா மருந்துக்கங்காணி கொஞ்சம் யோசித்துப் பாருடா அந்த வெள்ளக்கார சீமானுகள்ற காலத்தில இந்தத் தோட்டத்தில என்னடா இல்லாமப் போச்சு. தீபாவளி, ஆடிப்பூச அம்மன் விழா எவ்வளவு சிறப்பாக நடாத்திருச்சி இந்தச் சாதி தோட்டத்தக் கைப்பிடிச்சதும் எல்லாமே கருகிப்போச்சிடா. தேயிலை மரங்கள்கூட கொழுந்து தர தயக்கம் காட்டுதிடா. இப்ப அவண்ட சாதிய, நாட்டில இருந்து கொண்டு வந்து கொழுந்து நோண்ட வைக்கானுகள். மையோர்க்கிழங்கு மரம் நாட்டப் பழகிய சிங்களத்துக்கு தேயிலைக் கொழுந்திட செப்பம் புரியுமாடா. கித்துள் கள்ளு இறக்கத் தெரிந்த நாட்டுச் சிங்களவனுக்கு நம்மிடவன் செய்யிற "கவாத்து" வெட்ட முடியுமாடா? எனக்கு ஒண்ணுமே புரியுதில்லடா தம்பி. நம்மிட நாய்களுக்குச் செருப்பால அடிக்கவேணும். நாட்டிற்குப்போய் இந்த தேவாங்குகள் கடனுக்கு கள்ளும் கசிப்பும் குடிக்கிறதால எத்தன குழப்பண்டா இந்த லயங்களில வந்திருக்கு. எண்ட மூத்த மகன் வேலப்பன் கசிப்புப் பழக்கத்தால் தானடா ஈரல் அழுகிச் செத்தான். சுப்புக் கங்காணிய நாட்டில இருந்து வந்த சிங்களக் காடையனுகள் குத்திக் கொல்லவில்லையா? எத்தன தரம் நம்மட லயங்களை அடிச்சி நொறுக்கி, நெருப்பு வைத்து நாசமாக்கி இருக்கானுங்கள். புள்ள குட்டிகளையும் தூக்கிக் கொண்டு ஓடி பாம்புகள் உறையும் காட்டுக்குள்ள எத்தன நாளு சோறு தண்ணி இல்லாம ஒளிஞ்சுக்கிட்டுக் கிடந்தோம். நம்மட குமரிகள் மானத்திற்குப் பயந்து தேயில ஸ்ரோருக்குப் பக்கத்தில ஓடுற பெரிய ஆத்தில விழுந்து உசிர மாச்சிக்கிட்டுதுகள். இத்தனைக்கும் காலம் காலமாக ஒழைச்சு ஓடாகத் தேஞ்சி மாஞ்சி போனோம். இப்ப எழும்பிக்கிட்டுப் போகச் சொன்னா எங்கிட்டுத் தம்பி போற? இந்தச் சங்கக்காரனுக்கெல்லாம் காச மட்டும் கண்ணும் கருத்துமாகப் புடுங்கி எடுக்கிறவனுகள் நாசமாப் போனவனுங்க ஓட்டுக்கேட்க மட்டும் முப்பத்திரெண்டு பல்லையும் வெளியே காட்டி கும்பிட்டுக் கொண்டு வருவானுகள். இப்ப எங்கடா தொலைஞ்சு போய்க்கிட்டானுங்கள். நியாயம் கேட்டுப் போயித்தானே நாட்டுச் சிங்கள காடையனுகள் ஒண்ட மண்டைய ஒடைச்சு, மாதக்கணக்காக ஆஸ்பத்திரியில கிடந்த நீ அப்ப எந்தத் தொழிற்சங்கம் உண்ட குடும்பத்திற்குச் சோறு போட்டவனுக. இண்டைக்கு நாட்டுச் சிங்களவனுக்கு நம்மிட நிலத்தப் புடுங்கிக் கொடுக்க தோட்ட நிர்வாகம் முன்னுக்கு நிக்குது செத்தாலும் அப்பிட்டுப் பேரும் ஒண்ணாக எதிர்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிண்டு சாகோணும் இந்தச் சிங்கள முதலாளிமாருக்கு மசிந்து கொடுக்கப் போடாடா தம்பி மருந்துக்கங்காணி" முத்தம்மாக் கிழவி ஓயாத கடல் அலை போல் ஒப்பாரிவைத்துக் கத்துகிறாள்.

"அம்மாயி இதற்குச் சரியான முடிவு கட்ட வேணும். நாம செத்து அழிஞ்சு போனாலும் நம்மிட வேள்வியில உருவாக்கிக்கிடக்கும் இந்த லயங்களவிட்டு எழும்பவே கூடாது. மாட்டுக் கொட்டில் போலக்கிடந்த லயங்கள் இப்பவும் அப்படித்தான் கல்லாட்டம் கிடக்கு. கடசி உயிர் இருக்கும் வரைக்கும் இந்த மண்ண உதறிப் போட்டு ஓட மாட்டோம். நம்ம இரத்தத்தால வேர்வையால, உசிரால கட்டி எழுப்பிய இந்தத் தேயிலைத் தோட்டத்தை நாட்டுச் சிங்களவன் குடியேறி சொகுசாக வாழ விட்டுக் கொடுப்பதா? "சரி அம்மாயி, நீ கவலைப்படாம இரி நான் என்னால முடிஞ்சளவு தொழிலாளர்களை எல்லாம் ஒன்று திரட்டி நம்மிட உரிமைப் பிரச்சினைக்கு ஒரு முடிவு காட்டுவன். "மருந்துக் கங்காணி முத்துச்சாமி முத்தம்மாக் கிழவியிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு பக்கத்து லயத்தை நோக்கிப் போகிறான். தூரத்தே பரந்து விரிந்து கிடக்கும் மலைகளிலே பசுமையாக வளர்ந்து கிடக்கும் தேயிலைச் செடிகள் பச்சைக் கம்பளம் போல் கண்களுக்குப்படும் காட்சிகளை ரசித்தவாறு நினைவுக் குதிரையினால் அலையுண்டுவரும் மருந்துக் கங்காணி காணி லயங்களை அண்டிய தேயிலை மலையிலே கொழுந்தெடுக்கும் பெண்கள் தோளிலே கிடக்கும் கொழுந்துக் கூடைகள் ஆடி அசைய இயந்திரங்கள் போல் கைகளை இயக்கப்பண்ணி கொழுந்துகளை நோண்டி நோண்டிக் கூடைகளை நிரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

தேயிலை மரங்களில் இடையிடையே வானத்தைத்தொட நிற்கும் சவுக்கு மரங்களின் கிளைபரப்பிய இலைகளிலிருந்து குளிரான பனிக்காற்று "ஐஸ்" ஊசிகளைச் சூழல் எங்கும் அள்ளி இறைக்கின்றது. தேயிலைக் கொழுந்தெடுக்கும் பெண்களை அட்டகாசமான வார்த்தைகளை உதிர்த்த வண்ணம் வேலை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். கொழுந்துக் கங்காணிமார் சவுக்கு மரத்தின் உச்சிக் கிளையிலிருந்து கொண்டு பெயர் தெரியாத குருவி ஒன்று உரக்கக் கத்துகிறது. மருந்துக் கங்காணி முத்துச்சாமி கொழுந்தெடுக்கும் பெண்களை உற்று நோக்கியவாறு "அட பாவங்களே! இந்த அப்பாவி பொண்ணுகளுக்கு என்ன தான் விளங்கப் போகிறது. உதயப் பொழுதில் வேலைச் சங்கு ஊதியதும் அவசர அவசரமாக தூக்கத்திலிருந்து எழுந்து ஏதோ அசுர வேகத்தில் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு பெயருக்கு ஆட்டமாவில் றொட்டிகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டுச் சாப்பிட்டு விட்டு தண்ணீர் குடித்ததும் குடியாமலும் சாக்கை இடுக்கிலே கட்டி தோளிலே கூடையைப் போட்டுக் கொண்டு "பிரட்டுக் களத்திற்குப் போகும் பெண்களே கொளுந்தை நோண்டுவதும் நோண்டிய கொளுந்தை கொளுந்து மடுவத்திலே நிறுத்திக் கொடுப்பதும் பின்பு லயங்கள் வந்து சமையல் வேலைக்குள் புகுந்து, ஆக்கி அவித்து நித்திரையிலும் புருஷன்மார்களின் தொல்லைக்கும் இயங்கிப்போய் வருஷம் தவறாமல் குழந்தைகளைப் பெற்றுத் தள்ளுவதும் வேறு என்ன தெரியும் இந்த கிணற்றுத்தவளைகளுக்கு. இங்கே நமது பிறந்த மண் பறிபோகப் போகிறது என்று எவளுக்குக் கவலை தெரிகிறது? எவளுக்கு அதைப் பற்றிய சிந்தனை எழுகிறது, புருன்மார் சிங்கள நாட்டிற்குச் சென்று கசிப்போடு, கித்துள் கள்ளையும் வயிறு முட்டக் குடிச்சுப் போட்டு அவன் கொடுக்கும் மையோர் கிழங்கோடு லயம் வந்து சேர்ந்தால் அவர்களது வாழ்க்கையும் அத்தோடு முடிகிறது. என்ன சமுதாயண்டா நம்மட தொழிலாளர் சமூதாயம் இந்த கேவலமான நிலை எப்பொழுது மாறப்போகிறதோ? நமது பிறந்த மண் காப்பாற்றப்பட்டு தமக்கென்றதொரு வீடு. ஆளுக்கொரு வீடு எப்பொழுது கிடைக்கப் போகிறதோ நிரந்தரமான கல்வி, இலவச வைத்தியம், சமுர்த்தி திட்டம், பதிவாளர் கிராமசேவையாளர் என்று சகல சனநாயக உரிமைகளும் நமது நலிந்து போன தொழிலாளர் சமுதாயத்திற்கு எப்பொழுது வந்துசேரப்போகிறது? வாக்குரிமை கூட சகலருக்கும் இன்னும் கிடைக்கவில்லையே? கள்ளத்தோணி என்னும் நாமம் இன்னும் சுழன்று ஓடவில்லையே! கள்ளத் தோணி என்னும் அவமானம் எப்போது தொலையுமோ? சரி! சரி! இந்த மண்ணைப் பறிகொடுக்காமல் காப்பாற்றும் போராட்டத்தையாவது உடனே ஆரம்பிப்போம் என்று அதையும், இதையும் மனதுக்குள்ளே மாடுபோல் இரைமீட்டு அடுத்த லயக்காம்பிராவை எட்டிப் பார்க்கிறார் மருந்துக் கங்காணி முத்துச்சாமி.

லயத்துக் குசினிக்குள்ளிருந்து நெருப்புப் புகை மெலிந்து வெளியே பரவிச்சிதற மருந்துக்கண்காணியைக் கண்டு பதற்றத்துடன் ஓடி வருகிறான். இரண்டு கைகளும் வெட்டப்பட்டு ஊனமாய் முடங்கிப் போய்க் கிடக்கும் மலைநாட்டுக் காவலாளியாக வேலைபார்த்து இன்று பொஞ்சாதி வள்ளி நாயகியின் உழைப்பிலே உயிர் வாழும் மீசைக்கார வேலு வந்தவனைக் கண்டதும் மருந்துக் கங்காணிக்குப் பாரிய துயரச் சம்பவங்கள் திரைப்படமாகக் கண்ணிலே விழுகிறது. நாட்டுச் சிங்களக் காடையர்கள் இரவோடு இரவாக வந்து லயங்களை உடைத்து எங்கும் நெருப்பு வைத்து அழிக்கும் போது தோட்டக் காவலாளிகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடிய கருங்காலிப் பொல்லோடு வலம்வந்த காவலாளி மீசைக்கார வேலு அந்த அரக்கர்களைக் கண்டு விடுகிறான். அவன் கூக்குரல் இட்டுத் தொழிலாளர்களை அழைக்க நெருப்பிற்குப் பயந்து குழந்தை குட்டிகளோடு காடுகளிலே போய் ஒழிந்து கொண்டவர்களைத் தவிர மற்றவர்கள் காடையர்களோடு போராடி அவர்களில் ஐந்து சிங்கள காடையர்களுக்கு மண்டையை உடைக்க ஆவேசம் கொண்ட சிங்களவர்கள் சிதறி பாய்ந்துவரச் சிங்களக் காடையன் ஒருவன் காவலாளி மீசைக்கார வேலுவின் இரு கைகளையும் வெட்டிச் சாய்க்கிறான். மருந்துக்கங்காணி முத்துச்சாமிக்கு வேலுவைக் கண்டதும் அந்தப் பழைய ஞாபகம் மேடை நாடகமாகக் காட்சி தர "என்ன மருந்துக் கங்காணியண்ணா ஒருமாதிரியாக என்னைப் பாக்கிறியள் என்ன சங்கதி எனக்கு ஒன்றுமே புரியல்லையே" மீசைக்கார வேலு மருந்துக் கங்காணியைப் பார்த்து ஆதங்கத்தோடு கேட்க "அட தம்பி வேலு உண்ட பழைய போராட்டத்தை எண்ட மனத் திரையிலே படமாகப் பாத்துக்கிட்டன். அன்று நீ செய்த தியாகத்தால் தொழிலாளர்கள் ஒன்றுபட்டுச் சிங்களக் காடையர்களை துவம்சம் பண்ணி நாட்டிற்கு அனுப்பினார்கள். அதனால் உனது இரு கைகளையும் பறிகொடுத்து தியாகக் கொழுந்தாகச் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறாய். அந்தத் தியாக வேள்வி இன்றுதான் முக்கியமாகத் தேவைப்படுகிறது. நம்மிட தாய் மண் நாம் பிறந்த நிலம் பறிபோகப்போகுது வேலு சடுதியாக எமையெல்லாம் எழுப்பி பீலிக்கரைக்கு அப்பாலுள்ள காடுகளுக்குப் போய்க் குடியேறட்டாம். நாட்டுச் சிங்களவர்களுக்கு நம்ம பூமியை அளந்து கொடுத்து வீடுகட்டிக் கொடுக்கப் போறாங்களாம். நவீன வீட்டுத் திட்டங்களோடு ஆஸ்பத்திரி, மின்சாரம், பாடசாலை என்று உருவாக்கி நம்மையெல்லாம் நாடு கடத்தப் போறாங்களாம். இதனை நாம விட்டுக் கொடுத்தால் காட்டு மலையிலே ஏறி உச்சிக்குப் போய் விழுந்து சாக வேண்டியதுதான். நாமெல்லாம் துணிந்து ஒன்றுபட்டு நமது ஓட்டுக்களால் மந்திரியானவர்டகளிடம் எடுத்துக்கூறி நமது பறி போகப்போகும் நிலத்தை மீட்டு எடுக்க வேண்டும். இன்று எல்லோரும் ஒன்று கூடி நாளைக் காலையிலே அவர்களது தொழிற்சங்கக் காரியாலயத்துக்குச் சென்று நமது கோரிக்கையான உயிர்ப் பிரச்சினையை முன்வைப்போம். தொழிற்சங்கங்களை நம்பி நாம ஏமாந்துவிட்டோம். இனியும் ஏமாறக்கூடாது. பலமுறை கோரிக்கை விட்டும் அவர்கள் ஏனோ தானோவென்று வாழுகிறார்கள். பாராளுமன்ற கதிரைகளை பிடிக்கமட்டுந்தான் அவர்கள் தொழிற்சங்கம் நடத்துகிறார்கள். தேர்தல் வந்தால் ஓட்டுக் கேட்க மட்டும் வருகிறார்கள். கும்பிடுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவைகளோடு கதை முடிந்தது. நமது உயிர்ப் பிரச்சினையை அவர்கள் ஏறெடுத்தும் பார்க்கக் காணோம். இதை விட்டுக் கொடுத்தால் மலையகத்திலுள்ள அத்தனை தோட்டங்களிலும் வாழுகிற தமிழர்களுக்கு இதேகதிதான் வரும். ஒரு சோற்றுப் பானைக்கு ஒரு சோறுதான் பதம். இந்தத் தோட்டத்துச் சம்பவமே ஏனைய தோட்டங்களுக்கும். எனவே நாம் விட்டுக் கொடுக்காமல் நாளையே புறப்படுவோம் தம்பி நமது இளந்த உரிமையை மீட்டு எடுக்கும் அகிம்சைப் போராட்டம் நடத்துவோம்" ஓரளவு படித்துத் தொழிற்சங்கங்களில் ஈடுபாடு கொண்டு உழைத்து அதனால ஏமாற்றம் கண்டு விரக்தி நிலையில் வாழும் முத்துசாமிக் கங்காணி கூறி முடிக்க "நான் தியாகத்தழும்பு பெற்றவன் கங்காணி அண்ணே உடனே லயத்து ஆட்களை எல்லாம் திரட்டிக்கொண்டு காலையிலே வந்து சேருகிறேன்" என்று மீசைக்கார வேலு கூற மருந்துக் கங்காணி அவனைக் கட்டி அணைத்து முத்தமிட்டவாறு அடுத்த லயம் நோக்கித் தாவுகிறார்.

அவருக்கு அந்தக் காட்சி கண்களிலே அக்கினி அம்புகளாக குத்திக் காட்டுகிறது. தனது அக்கா மகள் பஞ்சவர்ணத்தின் புருஷன் இராமையா தோட்டத்து வேலைகளில் உஷார் இல்லை பச்சைச் சோம்பறி. தினமும் நாட்டிற்குச் சென்று கடனுக்குக் கசிப்பும் கித்துள்க் கள்ளும் வயிறு முட்டப் போட்டுக்கொண்டு வருவான். பஞ்சவர்ணந்தான் மாடுபோல ஓய்வில்லாமல் உழைத்துச் சாப்பாடு போடுவது, அவன் பட்ட கடனை இறுப்பதும் சம்பளத்திற்கு முதல்நாள் வந்து கடன் கொடுத்த நாட்டுச் சிங்களவன், கடன் கேட்டுத் தாறுமாறாகப் பேசிவிட்டுப்போக பஞ்சவர்ணம் அவனுக்கு சவுக்கு மரக்கொள்ளிக் கட்டையால் மண்டையில் ஓங்கி அடிக்க அவன் இரத்தம் பெருகி மயங்கி விழ, பின்பு பொலிஸ் வந்து பஞ்சவர்ணத்தைப் பிடித்துச் செல்ல... இந்த அவமானம் தாங்காமல் அவனது பக்குவப்பட்ட மூத்த மகள் இராசலட்சுமி கயிற்றைக்கட்டி லயக் காம்பிறாவிலே தூக்குப்போட்டுச் செத்துத் தொங்க... முத்துச்சாமி அப்போது மருந்துக் கங்காணியாக வேலை பார்க்கவில்லை. தோட்டத்திலே "கவாத்து" வெட்டும் வேலையும் தேயிலைக் கன்று நாட்டிப் பதனிடுவதும் கைதேர்ந்த வேலையாக இருந்த காலம். "கவாத்து" வெட்டிவிட்டுக் கத்தியும், கையுமாக லயத்தை நெருங்கினால் மரண ஓலம் லயங்களையே ஆட்டிப்பிரட்டுகிறது. அங்கே முத்துச்சாமி கண்டகாட்சி நாக்கு வெளியே நீண்டு தொங்க அவனது மருமகளின் மூத்தமகள் கயிற்றிலே தொங்கிக் கிடந்தாள். முத்துச்சாமி அந்தக் காட்சியைக் கண்டதும் பேய் பிடித்தவன் போல் கத்திக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருமகளின் தூக்குக் கயிற்றை அவிழ்த்து விட்டுச் சவத்தை தரையிலே வளர்த்தாட்டினார். இந்தச் சங்கதி "லயம்" முழுவதும் பரவி... அப்பொழுது தலைகெட்ட வெறியோடு பஞ்சவர்ணத்தின் கணவன் இராமையா வந்து கொண்டிருந்தான் முத்துச்சாமிக்கு ஆவேசம் காட்டுத் தீயாகப் பரவிக்கொண்டு கோப அக்கினி சீறிவர... ஆத்திரம் தாங்காமல் பளீர் பளீரென அவனது இரண்டு கன்னங்களும் வீரப் பழம் போல் சிவந்து வர அறைகிறான் முத்துச்சாமி. அப்பொழுதும் அவனுக்கு ரோசம் வரவில்லை. கத்திக் கொம்பியவாறு இராமையா எங்கையோ ஓடிவிட்டான்.

இந்த அனர்த்தங்களுக்குப் பிறகு முத்துச்சாமி மருமகள் பஞ்சவர்ணத்திற்கும், மக்களுக்கும் தனது வாழ்க்கையைத் தியாகம் செய்தான். மஸ்கேலியா, வட்டவளை, அப்புத்தளை, பதுளை, உடப்புசல்லாவ, பலாங்கொட என்று எத்தனையோ கலியாணம் பேசிவந்தும் அவற்றையெல்லாம் ஒதுக்கித்தள்ளினான். அவனது தளப்பமில்லாத தூய மனம் இறுதியான முடிவொன்றை எடுத்துக் கொண்டது.

ஆமாம் முத்துச்சாமி மருமகள் பஞ்சவர்ணத்தோடு அவர்களது லயத்திலே வாழ்ந்து வந்தான். சோம்பல்படாமல் எந்தநாளும் தேயிலை மலைக்குச் சென்றான். அவனது வேலைச் செப்பத்துக்காக தோட்டத்து நிர்வாகம் அவனை மருந்துக் கங்காணியாக ஆக்கியது. "கவாத்து" வெட்டுவதிலும் தேயிலைக் கன்றுகளை நட்டு உற்பத்தியாக்குவதும் முத்துச்சாமி கைதேர்ந்த கலைஞராக விளங்கினார். அவனால் தோட்டம் பெருமையுற்றுச் செழித்து ஓங்கி வளர்ந்தது. தேயிலைக் கன்றுகள் பதனிடும் "மடுவத்தில்" அவன் எந்த நேரமும் சுறுசுறுப்பாக இயங்குவான். தேயிலைக் கன்றுகளின் பசுமைத்தளிர் இலைகளைக் கண்டால் மெதுவாகத் தாய்மை உணர்வோடு தடவிக் கொடுப்பான். தேயிலைக் கன்றுகளைத் தன் பெற்ற மகளாக நேசித்தான். இத்தனைக்கும் அவனது மருமகளின் புருஷன் இராமையா திருந்தவே இல்லை. இருந்து விட்டு வேலைக்குப் போவான். ஆனால் வருஷம் வருஷம் பிள்ளைகளுக்குத் தந்தை ஆவான். முத்துச்சாமி கண்டும் காணாதமாதிரி சகலதையும் மறந்து... மருமகள் பஞ்சவர்ணத்திற்காகவே இந்தத் தியாக வாழ்க்கையைக் கடைப்பிடித்து வந்தான். அதற்குள் இன்று வாழ்வா? சாவா? என்ற உயிர்ப் பிரச்சினை வந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்துக் கங்காணி முத்துச்சாமி தனது மருந்து கொடுக்கும் கடமைகளை ஓரளவு முடித்துவிட்டு, நாளைக்கு மக்களை ஒன்றுதிரட்டிச் செல்லும் பாரிய கடமையை நினைத்துக்கொண்டு வேகமாக நடந்து வருகிறார். அருகே தேயிலைத் தோட்டத்துத் தொழிற்சாலையில் கொழுந்து வாட்டப்படும் ரம்மியமான மணம் மூக்கைத் துளைக்க அவனது சிந்தனை அருகே பேர் இரைச்சலோடு ஓடும் ஆற்றின் சலசலப்பில் அறுபட, நாளைக்கு மண்ணை மீட்கும் போராட்டத்துக்காக ஆட்களைத் திரட்டும் பணியை நினைத்து வேகமாக நடந்து போகிறான்.

*28.07.2002*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உப்புக்கரைச்சை**

அந்த அமாவாசை நாட்களுக்குப் பிறகு அவன் முழுமையாக மாறிவிட்டான். அவன் எல்லாவற்றையும் இழந்து அரைமனிதனாக உலாவந்தான். எதிலும் பற்றில்லாத, பித்தம் தலைக்கேறிய சிரிப்புக்கிடமான அரை வேக்காடாக, தாடி வைத்த அழுக்குச் சாமியாக அந்தப் படுவான்கரைப் பிரதேசமெங்கும் நடமாடித் திரிந்தான். அன்பு மனைவி, அருமை மக்கள், வீடுவாசல், தாந்தாமலைக் காட்டினிலே கஷ்டப்பட்டு வெட்டிச் செய்துவந்த சேனைக்காடு அந்த அமாவாசை இருட்டிலே அமுங்கிப் போய்விட்டது. இன்று அவன் தாந்தாமலை முருகன் திருக்குளத்திலே தலை முழ்கித் தீர்த்தம் ஆடி அந்த முருகன் பள்ளி கொண்டு கிடக்கும் மலைப் பாதையிலே நிஷ்டையிலே முழ்கித் தவம் கிடைப்பதும், கொக்கட்டி மரச்சோலையிலே எழுந்தருளியிருக்கும் தேரோட்டப் பெருமான் சிவத்தலத்திலே மௌனக்கோலம் பூண்டு கிடப்பதும் வாடிக்கையாகி, என்னதான் நடமாடும் மௌனச்சாமியாக அவன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழடித்தீவு உலையாண்டப் போடி அலையுண்டு திரிந்தாலும் அந்தப் பயங்கர நாட்கள் மனதை விட்டு என்றுமே அழிந்து ஒழிந்து போகாத அந்த மரணவெறி பிடித்த அரக்க வெறிக்கூத்துக்கள் அவனைவிட்டு என்றுமே மறைந்ததில்லை. ஓய்ந்ததில்லை. அழிந்து போனதுமில்லை, எப்படி மறையும்?

அந்த அழியாத இரத்தம் தோய்ந்த அவலங்களின் விளை நிலமாகத் திகழும் 'உப்புக்கரைச்சை எப்படி மறந்து வாழ முடியும்? அன்று நடந்தேறப்போகும் பயங்கரச் சோகத்துக்குக் கட்டியம் கூறுமாப்போல் மழையுமில்லை, வெயிலுமில்லை என்ற நிலையில் அந்த படுவான்கரையைச் சூழக் கிடக்கும் மேகக்கூட்டங்கள் எல்லாம் மப்பும் மந்தாரமுமாக ஊமைக்கோலம் பூண்டு கிடந்தன.

"புள்ள பவளக்கொடி உப்புக் கரைச்ச இறால் பண்ணைக்கு வேலைக்குப் போன தம்பி கந்தசாமி மத்தியானம் சாப்பாட்டுக்கு வந்திடுவான். நீ அடுப்பில உலைய ஏத்து நான் ஆத்தோரம் உப்புக்கரைச்சைக்குள்ள வேலி கட்டிக்கிடக்கும் கண்ணாக்காட்டுக்குள்ள ஏதும் மீன் குஞ்சு வீசித்து வாறன்" குசினிக்குள்ள அடுப்பில் நெருப்புப் பற்ற வைத்துக் கொண்டிருந்த பொஞ்சாதி பவளக்கொடியிடம் கூறியவாறு உலையாண்டப்போடி ஒரு கையிலே வலையும், மறுகையிலே மீன் கூடையுமாக ஆற்றிலே சங்கமமாகிப் போய்க்கிடக்கும் உப்புக்கரைச்சையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான்.

மண்முனைத்துறையைப் பாதையால் கடந்து கால் வைத்தால் ஆற்றங்கரையிலிருந்து ஊர்மனையான மகிழடித்தீவு எல்லையைத் தொட்டு, அப்படியே வலப்பக்கமாக முதலைக்குடா, குறிஞ்சாமுனை, முனைக்காடு என்று கண் வைத்த தூரமும், அதற்கப்பாலும் பரந்து விரிந்து ஒன்றுக்குமே பிரயோசனமில்லாமல் சீரழிந்து போய்க்கிடக்கும் மலட்டுப்பூமியான உப்புக்கரைச்சையைத் தரிசிக்கலாம். 'பாடும் மீன்' வாவியின் சங்கமிப்பால் அந்த பரந்துபட்ட வேளாண்மை செய்யக்கூடிய பூமி உப்பு விளையும் கரைச்சையாக மாறி மலடுதட்டிப் போய்க்கிடக்கிறது. ஒவென்ற ஒரே வெட்டை மழை பெய்யும் காலங்களில் வெள்ளம் நிறைந்து போய் மட்டக்களப்பு பாடும் மீன் வாவியும், உப்புக் கரைச்சையும் சங்கமித்து நீர்ப்பரப்பாகக் காட்சி தரும். மண்முனைத்துறையிலிருந்து கொக்கட்டிச்சோலைக்குச் செல்லும் பிரதான வீதிக்கு வலப்பக்கம் பரந்துகிடந்த 'உப்புக்கரைச்சை'யின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல ஏக்கர் நிலம் இறால் பண்ணையாக கருக்கொண்டு கிடக்கிறது. வெளிநாட்டு வெள்ளைக்கார கம்பனி ஒன்று அரசாங்கத்தின் அனுமதியோடு அந்த இறால் பண்ணையை சிறப்பாக நடத்திக்கொண்டு வருகிறது. நூற்றுக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கியதோடு, புதிய நவீன முறையில் இறால் உற்பத்தியைப் பெருக்கி இலங்கையின் வருமானத்துக்கும் உந்து சக்தியாக விளங்குகிறது.

புழுதி நாற்றத்தைக் கிளப்பி, மண்வாசனையைக் காற்றோடு ஊரெங்கும் பரப்பி 'புதுமழை' கொட்டு கொட்டெனக் கொட்டும் போது 'ஏறுகெழுத்திகள்' ஆயிரம் ஆயிரமாக உப்புக்கரைச்சையை மொய்க்கும். உலையாண்டப்போடி 'உப்புக்கரைச்சையிலே' 'ஏறுகெழுத்திகள்' வாரிவாரி அள்ளியதை நினைத்தவாறு 'உப்புக்கரைச்சையின்' ஓரங்களில் தவம் கிடக்கும் கண்ணாப் பற்றைக்குள் கால்வைக்க எத்தனிக்கும் போது நீர்ப்பரப்பிலே மீனுக்குக் குறிவைத்துக் கிடக்கும் வெள்ளைக் கொக்குகளும், சாம்பல் நிற நாரைகளும் சிறகுகளை விரித்து, நீரிலே ஓசை எழுப்பி அம்புகளாக விரிந்து கண்ணாக் காட்டை முற்றுகை இட மரங்களிலே குடி கொண்டு கிடந்த கொக்குகளும், விதம் விதமான பறவைகளும் ஒரே வீச்சில் பல கதம்ப ஒலிகளை ஓசைகளாக எழுப்பி பயங்கர அமைதியைக் கலைத்து அச்ச உணர்வுகளை விதைக்க உலையாண்டப்போடி கண்ணாக்குகைக்குள் புகுந்து கொள்ளுகிறான்.

மீன்கள் அசுப்புக் காட்டிய பகுதியை நோக்கி வலையை லாவகமாக வீசுவதற்கு ஆயத்தம் செய்யும்போது தவளைகளின் ஓங்கார மரண அலறல்களும், கண்ணாப்பற்றைகளுக்கு மேலே வானத்தை வட்டமிட்டவாறு 'ஆக்காண்டிப்' பறவையொன்றும் கத்திக் கொண்டு போனதுகால்ஓசைஎழுப்பாமல்"கறிப்பாட்டுக்கு" ஏதாவதுவீசிஅகப்பட்ட மீன்களைப் பிடிக்க வேண்டுமென்ற துடிப்போடு உலையாண்டப்போடி வலையை மெதுவாக வீசுகிறான். வலை நீரிலே பட்ட ஒலிக்குப் பயந்த மீன்கூட்டம் 'சில்லென்ற' ஓசைகள் எழுப்பியவாறு கண்ணாமர வேர்களை முட்டி மோதிச் சிதறி மறைகின்றது. உலையாண்டப்போடி வீசிய வலையை மெதுவாகத் தூக்கி மேலே எடுக்கும் போது வீசிய வலையிலே சிறுதரவளியான சள்ளல்ப் பொட்டுக்களும், கொஞ்சம் பெருத்த செல்வன் மீன்களும் அப்பிக் கிடக்க, இன்றையப் பொழுதுக்கு நல்ல கறிதான் என்று நினைத்துச் சிரித்தவாறு மீன்களைப் பவுத்திரமாகப் பிடித்து கூடைக்குள் போடும் போது படபட வென்ற வெடிச்சத்தங்கள், இறால் பண்ணை கொலுவிருக்கும் 'உப்புக்கரைச்சைப்' பக்கம் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர உலையாண்டப்போடிக்கு அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டு வர" எண்ட அப்பனே எண்ட புள்ளையளுக்கு ஒண்டும் வரப்போடாது" என்று தொண்டை கரகரக்கக் கூறியவாறு கண்ணாப்பற்றைக்குள் மறைந்து கொள்ளுகிறான்.

படபடத்த வெடிச்சத்தங்கள் கும்பலாகக் கும்பலாக புயல் போல் பரந்து, விரிந்து ஓயாத ஓசைகளைக் கொட்டிய வண்ணம் இருக்க 'உப்புக்கரைச்சைப்' பக்கம் பூகம்பமே வெடித்தது போல் ஒரு பயங்கரப் பிரளயம் எழுந்த வண்ணம் இருந்தது. கண்ணாப் பற்றைப் பொந்துக்குள் மறைந்து கிடந்த உலையாண்டப்போடிக்கு வெடிச்சத்தங்கள் அருகே அருகே கண்ணாப்பற்றைகளை நெருங்கி வருவது போல் ஒரு பிரமை ஏற்பட அவனது உயிர் மூச்சே நின்றுவிடும் போல் மரண அச்சுறுத்தல் உள்புகுந்து ஆட்டத் துவங்கியது. வானத்திலே கப்பல்கள் பறந்து குண்டுகள் போடும் சத்தங்களும், ஷெல் அடிகளும், சோனா மாரியாகப் பெய்வதும் கண்ணாப்பற்றைகளை அண்ட விழுவதும் அவனது காதுகளைச் செவிடாக்க "தான்தோன்றி ஈஸ்வரா" எனத் தொண்டைக்குள் கத்துகிறான்.

நஞ்சு வேரின் சாறைக் குடித்த மீன்கள் மயங்கிக் கிடப்பது போல் வெடிச்சத்தங்களின் பயத்தால் மயங்கி பற்றைக்குள் ஒளிந்து கிடந்த உலையாண்டப்போடி மெதுவாகக் கண்களை விழித்து காதுகளைக் கூராக்கி வெடிச்சத்தங்களை கூர்ந்து அவதானிக்கிறான். 'உப்புக்கரைச்சைப்' பக்கம் இன்னும் வெடிச்சத்தம் கேட்ட வண்ணமே இருந்தது. பயத்தால் மரத்தைக் கட்டிப்பிடித்தவாறு கண்ணாப் பற்றைக்குள் குளுகுளுப்பாக வைத்திருக்கும் ஆற்றுநிரை அவதானிக்கிறான். வெடிச்சத்தங்களால் கண்ணாப்பற்றை வேருக்குள் குடும்பம் நடத்திய மீன் கூட்டங்கள் வேர்களை விட்டு வெளியேறி நாலாபக்கமும் சிதறி ஓடுகின்றன. சள்ளல், ஒட்டி, திரளி, கிளக்கன், செல்வன், மணலை, கூரல், முரல், காரல் என்று பல வகையான மீன் சாதிகளும் கூட்டம் கூட்டமாகப் போவதை உலையாண்டப்போடி பார்க்கிறான்.

அந்தக் காட்சிகளைக் கண்டதும் அவனுக்கு அழுகை பொத்துக்கொண்டு வந்தது. இந்த மீன்கூட்டத்தைப் போல் தானே, ஊர்களிலிருக்கும் சனங்களும், "உப்புக்கரைச்சை" இறால் பண்ணைக்கு வேலைக்குப் போன தொழிலாளர்களும் சிதறிச் சிதறி ஓடியிருப்பார்கள் "தாந்தா மலை முருகா உப்புக்கரைச்சை இறால் பண்ணைக்கு வேலைக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன எண்ட மகன் கந்தசாமிக்கு ஒண்டும் நடந்திருக்கப் போடா அப்பனே எண்ட புள்ளைக்கு ஒண்டு நடந்தா எண்ட குமருகளுக்கு என்ன கதி அப்பனே" உலையாண்டப்போடி கத்திக் கதறி ஒப்பாரி வைக்கிறான். வெடிச்சத்தம் கொஞ்சம் ஓய்வது போல் தெரிகிறது. மண்முனைத்துறை பாதை வேலை செய்கிறதா என்று காதை கூர்மையாக வைத்துக் கொண்டு பார்க்கிறான் சீ மண்முனைத்துறை பாதை வேலை செய்யவில்லை. துறையிலிருந்து ஒரு வாகனம் போன அசுப்பில்லை. வீசிக் கூடைக்குள் போட்ட மீன்கள் துள்ளிக் குதித்து நேரம் போக நேரம் போக மூச்சடங்கிப் போய்க் கிடக்கின்றன. உலையாண்டப்போடிக்கு எப்படியாவது ஊருக்குப் போகவேண்டுமென்ற அவதி ஏற்படுகிறது.

வெடிச்சத்தங்கள் முற்றாக ஓய்ந்து விட்டன. விடிய ஒன்பது மணிக்கு முதல் வீசுவதற்கு வந்த உலையாண்டப்போடி மதியம் கடந்து பின்னேரம் மூன்று மணிக்கு மேலிருக்கும் இன்னும் கண்ணுப்பற்றையை விட்டு அசையவில்லை. தண்ணீருக்குள் நின்று காலெல்லாம் விறைத்து குளிர் போட்டு நடுக்கம் போடத் துவங்கியது. அவனுக்குப் உப்புக்கரைச்சைப் பக்கம் எந்தவிதமான சத்தமும் கேட்கவில்லை. ஆமிக்காரனுகள் மனித வேட்டை ஆடிவிட்டு ஓடிப்போய் விட்டானுகளா? வாகனச் சத்தங்களும், மனித நடமாட்டமும் காணவில்லையே. கொஞ்ச நேரம் பொறுத்துப் பார்த்துக்கொண்டு மெதுவாக கண்ணாப்பற்றையை விட்டு வெளியேறி கரையிலே கால வைக்கிறான் உலையாண்டப்போடி. "உப்புக்கரைச்சைப்" பக்கமும், மகிழடித்தீவு ஊர்ப் பக்கமும் கண்களை மேயவிடுகிறான் உலையாண்டப்போடி ஒரு மனிதரின் நடமாட்டமும் வானகங்களின் அசுப்பும் வீதியிலே தென்படவில்லை. "உப்புக்கரைச்சை" இறால் பண்ணை நீண்ட சோகத்தில் மௌனத்திற்குள் அமுங்கிப் போய் கிடக்கிறது. அவன் துணிந்து விட்டான். பயந்து பயந்து மெது மெதுவாக கால்களை பதிய வைத்து கண்ணாப்பற்றை ஓரமாக ஆற்றங்கரை ஓரமாக ஊருக்கு பதுங்கிப் பதுங்கிப் போய்க்கொண்டடிருக்கிறான். தூரத்தே நாய்களின் மரண ஓலங்கள் காற்றிலே வந்து காதுகளைக் குடைகின்றன. பதுங்கிப் பதுங்கி ஊருக்குள் புகுந்து கொண்ட உலையாண்டப்போடிக்கு ஊர் செத்துப் போய்க்கிடந்த மாதிரி ஒரு உணர்வு ஏற்பட்டது. வீதியிலே மனித நாட்டமோ வீடுகளில் மக்கள் இருப்பதாகவோ அவனுக்குப் புலப்படவில்லை. என்ன நடந்தது இந்த ஊருக்கு? நாய்கள் தான் அங்கேயும் இங்கேயும் குலைத்துக் கொண்டு திரிந்தன. குறுக்கு ஒழுங்கையால் புகுந்த உலையாண்டப்போடி தனது வளவுக்குள் கால் வைக்கிறான். அங்கே வீட்டிலே ஒருத்தருமில்லை. பேய் உறைந்தது போல் ஒரு பயங்கரம் அங்கே குடிகொண்டு கிடந்தது. பக்கத்து வளவுக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கிழவியின் இருமல் சத்தம் கேட்கவே உலையாண்டப்போடி வலையைக் கம்பிலே போட்டு விட்டு, மீன் கூடையைக் குசினிக்குள் தூக்கி எறிந்துவிட்டு கிழவியை நோக்கிப் போகிறான்.

“பெத்தா எங்ககா எண்ட ஊட்டுக்காறக்கள்ற அசுமாத்தத்தக் காணல்ல” உலையாண்டப்போடி கேட்க, குடிலுக்குள் இருந்தவாறே சின்னாச்சிக் கிழவி, “எண்ட மகனே உலையாண்டப்போடி எங்கடா கிடந்து வாறா. ஊர் கொஞ்ச நேரம் என்ன அவதிராபட்டது. வெடிக்குப் பயத்திலே ஒரு மனிசக்குருவியும் ஊரில இல்லை. இப்பதாண்டா அந்த ஆமிக்காரனுகள் போனபிறகு அங்கிட்டும் இங்கிட்டும் கிடந்து வருதுகள். நான் குடிலுக்கதான் கிடந்த நான். உண்ட பொண்டாட்டி புள்ளைகள் எல்லாம் தலையிலும், வாயிலும் அடிச்சிக் கொண்டு இறால் பண்ணை இருக்கிற உப்புக்கரைச்சைக்கு ஓடுதுகள். உப்புக்கரைச்சை இறால் பண்ணையிலே ஒருத்தரும் உயிரோட தப்பல்லையாம் எண்டு கதைச்சாங்க. உண்ட மகன் கந்தசாமியும் வேலைக்குப் போனவன் என்ன நடந்தது எண்டு தெரியாம ஆமிக்காறன் போனபிறகு கத்திட்டு ஓடுதுகள். மகிழடித்தீவு மட்டுமல்ல எல்லா ஊர் மக்களும் அங்குதான் திரண்டு நிக்குதுகளாம். நீயும் கெதியா ஓடிப்போடா மகனே” கிழவி மூச்சுவாங்க மூச்சுவாங்கச் சத்தம் போட்டுக் கதைக்க உலையாண்டப்போடி, எண்ட அப்பனே என்று தலையிலே அடித்தவாறு இறால் பண்ணை இருக்கும் “உப்புக்கரைச்சையை” நோக்கி ஓடுகிறான்.

“உப்புக்கரைச்சை”யிலே அவன் கண்ட காட்சி அவனை நிலைகுலைய வைத்தது. குரங்குப் படைகளால் அழகிய இலங்கை நாசமாக்கப்பட்டது போல் அந்த ‘உப்புக்கரைச்சை’ இறால் பண்ணை சின்னாபின்னமாக்கப்பட்டு அழிந்து கிடந்தது. உறவினர்களும், உரித்தாளிகளும், ஊர்மக்களும் அழுது புலம்பும் மரண ஓசை அந்த இறால் பண்ணையை நிலைகுலைய வைத்தது. இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்த இறால்பண்ணைத் தொழிலாளர்கள். அவனுக்கு மயக்கம் போட்டு நினைவிழக்க வைத்தது.

“எண்ட மகனே எங்கள விட்டு எங்கப்பா போனா” என்ற கதறலும், “எண்ட ராசாவே ஏன் “எங்களத் தவிக்க விட்டுப் போய்விட்டா” என்ற சோகப்புலம்பலும் அந்த உப்புக்கரைச்சையை நிலைகுலைய வைத்தன. உலையாண்டப்போடி பேய் பிடித்தவன் மாதிரிக் கத்திக்கொண்டு தன்மகனைத் தேடி அலைகிறான். அங்கே இறால்கள் குவிந்து கிடந்த வரம்புக் கட்டுக்குள் அவனது பொஞ்சாதியும், மூன்று குமர் மக்களும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழு வயதுப் போடியனும் ஒரு இரத்தம் தோய்ந்து கிடக்கும் சவத்தைக் கட்டிப்பிடித்து அழுவதைக் காணுகிறான். அங்கே அவனது ஆசை மகன் குடும்பத்தைத் தாங்கிவந்த கொழு கொம்பு பிணமாக வெடிபட்டு இரத்தம் தோயக் கிடப்பதைக் கண்டான். அடுத்த கணம் அவனுக்கு என்ன செய்வதென்று தெரியாமல் மயக்கம் போட்டு செத்துப் போன மகனின் சடலத்திலே விழுந்தான்.

இத்தனை அமர்க்களம் நடந்து அழிவுகள் எல்லைதாண்டிப் போன வேளையிலும் பேராசை பிடித்த மனத்தன்மை இல்லாத கூட்டங்கள் வரம்புக்குள் குவிந்து கிடந்த இறால்களை கூடை கூடையாக அள்ளிய கேவலமான காட்சி...

"சீ இதுகளும் மனிதப் பிறப்பா" என்று நினைக்க வைத்தது. வீடு எரியும்போது எரியும் நெருப்பிலே வீடி பற்ற வைத்தவனின் செய்கைக்கும் இதற்கும் எந்த மாறுபட்ட வித்தியாசமும் காணப்படவில்லை. அநியாயமாக நூற்றுக்கணக்கான உயிர்கள் பறிக்கப்பட்ட அந்தக் கொடுமைக்குள் இந்த மிருகத்தனமான காரியத்தை யாரும் செய்வார்களா? செய்தார்கள்! செய்தார்கள்!! செய்து கொண்டே இருந்தார்கள்!!! சிறு இடைவெளிக்குப் பிறகு இயக்கத் தோழர்கள் வந்து இதனைக் கட்டுப்படுத்தி தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பிணங்கள் அத்தனையும் வண்டிகளில் ஏற்றப்பட்டு பிரேதப் பரிசோதனைக்காக ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டன. எரித்துச் சாம்பலாக்கப்பட்ட சவங்களைத் தள்ளி.

உலையாண்டப்போடி இந்த அநியாயத்திற்குப் பிறகு அரைப் பைத்தியம் போல் ஆகிவிட்டான். என்றாலும் மூன்று குமர்களையும், சிறு பொடியனையும், பொஞ்சாதியையும் வாழ வைக்க வேண்டிய பொறுப்பு அவன் தலையிலே தானே சுமையாக விழுந்தது ஊரை அண்டிய குளத்தோரம் ஊரிலே பெரிய பணக்காரரான பெரிய போடியார் பாலிப்போடியாரின் பல ஏக்கர் பூமிகளில் ஐந்து ஏக்கர் பூமியை உலையாண்டப்போடி குத்தகைக்கு எடுத்துச் செய்து வந்தான். இது சோத்துப்பாட்டுக்கு உதவ தாந்தா மலைக் காட்டிலே காடுகள் அழித்துச் சேனைப்பயிரும் செய்து வந்தான். உலையாண்டப்போடி சோளன், மையோர், மரக்கறி வகைகள் இத்தனையும் சேனைப்பயிராகச் செய்து வந்தான். வண்டி வண்டியாக சோளங் குலைச்சாக்குகளும், பழுத்த சுரக்காய்களும், மரவள்ளிக் கிழங்குகளும் ஊருக்கு அடிக்கடி வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவளக்கொடியும், மூன்று குமர் மக்களும் சும்மா கையை வைத்துக் கிடக்கவில்லை. கையாலே அரிசியைக் குத்தி மண்முனைத்துறையாலே அக்கரப்பட்டு ஆரையம்பதியிலே வீடு வீடாகக் கொண்டு விற்று வந்தார்கள். இதனால் அவர்களது குடும்ப வண்டி தளப்பம் இல்லாமல் ஓடிக்கொண்டிருந்தது. அன்பு மகன் கந்தசாமி அநியாயமாக "உப்புக்கரைச்சை" இறால் பண்ணையிலே செத்துப் போன கொடுமை அவர்களை தினமும் வாட்டி வதைத்தது. குமர்கள் ஒன்றுக்கும் திருமண வாழ்வு இன்னும் கிடைக்கவில்லை. சொந்தத்தில் மாப்பிள்ளைகள் இருந்தும் அந்த இளம் குட்டிகளுக்கு தாலிப்பாக்கியம் ஏறாமலே காலம் ஓடிக்கொண்டிருந்தது. உலையாண்டப்போடி சோம்பல்படாத உழைப்பாளி என்றபடியால் பவளக்கொடியின் அப்பா செல்லையா அண்ணாவி அவனுக்குக் கட்டி வைத்தது பழைய கதை. அவனும் நல்ல கூத்தாட்டக்காறன். கொக்கட்டிச்சோலை தேரோட்டத் திருவிழாக்களில் அவன் கூத்தாடி பல பெண்களின் மனதைக் கவர்ந்து இருக்கிறான்.

பவளக்கொடியும் அதிலே ஒருத்தி என்று அறிந்த படியால் தான் செல்லையா அண்ணாவி மனம் கூசாமல் மூண்டறை களிமண் வீடும், போடப்பட்ட நகைகளும், இரண்டு எருது மாடுகளும் கொடுத்து உலையாண்டப்போடியை மாப்பிள்ளை ஆக்கினாள். வண்டியிலே தாந்தாமலை சேனைக்குப் போகும் போது அவன் பாடிப் போகும் கூத்துப்பாட்டு அந்தச் சுற்றாடலையே அதிரவைக்கும். "தேன் தினைமா உண்ணத் தாறன்" பாடும் போது குறவள்ளியாக மாறிவிடுவான்.
மகன் செத்த கவலையை மறக்காமல் குடும்ப பாரத்தைச் சுமந்து கொண்டு வந்தவனுக்கு, அந்த எதிர்பாராத இடி தலையிலே விழுந்தால் என்ன செய்வான். அவன் சேனைக் காட்டுக்குப் போய் பத்து நாளிருக்கும். ஊரிலே நடந்தது ஒன்றுமே அவனுக்குத் தெரியாமல் இருந்தது. மரவள்ளிப் பாத்தி ஒன்றைப் பிடுங்கி கிழங்குகளை உடைத்து ஒரு பானையிலே அவியப்போடுகிறான் உலையாண்டப்போடி. பிஞ்சுப்பருவமான வழுதிலங்காய்களை ஆய்ந்து ஒரு சட்டியிலே போட்டு கடைந்தெடுக்கிறான். சுண்ணாம்பு வெள்ளையாக அவிந்து கிடக்கும் மாக்கிழங்கை வழுதிலங்காக்கடையலோடு அவன் சாப்பிடும்பொழுது அந்தத் தேவ உலக அமிர்தத்துக்கு நிகராக அவனுக்குப் பட்டது. அவ்வளவு சுவையாக இருந்தது அந்த உணவு. கிழங்கைச் சாப்பிட்டுக் கைகழுவும் போது சைக்கிளைத் தள்ளிக்கொண்டு மூன்று நாலு ஊர் பொடியன்கள் சேனைக்குள் கால் வைக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களைக் கண்டதும் ஏதோ ஒர இனங்காணாத பயம் நெஞ்சைக் குடைய அவர்களைச் சிரித்த முகத்தோடு வரவேற்கிறான் உலையாண்டப்போடி, அவனை நெருங்கிய ஊர்ப்பொடியன் கள் ஒப்பாரி வைத்தக் கத்துகிறார்கள்.

"என்னடா தம்பிமாரே ஊரிலே என்ன நடந்தது"? உலையாண்டப்போடி அவர்களைப் பார்த்து கேட்க, "அந்த அக்கிரமமான அநியாயத்தை எப்படி அண்ண சொல்லுவம். ஆமிக்காறனுகளுக்கு கண்ணிவெடி வெச்சு மகிழடித்தீவுச் சந்தியிலே வேதக்கோவிலுக்குப் பக்கத்தில ரெண்டு ஆமி சாக, அந்த நாசமாப்போனவனுகள் மகிழடித்தீவு ஊருக்குள்ள புகுந்து எதிர்ப்பட்ட சனங்களையெல்லாம் சுட்டுத் தள்ளிப் போட்டானுகள். குஞ்சும் குராலும், குமர்ப் புள்ளைகளும், இளந்தாரிகளும், கிழவன்மாரும் பிணக்குவியலாக ஊரே நாறுதாம். ஊரிலேயும் முனைக்காடு, முதலைக்கிடாவிலையும் ஆமிக்காறனுகள் புகுந்து வீடுவீடாக ஆக்களைக் கூட்டி வந்து அவர்களது கைகளாலே மடுவை வெட்டச் சொல்லி அந்த "உப்புக்கரைச்சையிலே" சுட்டுத்தள்ளிப் புதைச்சானுகளாம். போதாக்குறைக்கு நெருப்பு வெச்சு நெருப்புக்குள்ள தூக்கிப் போட்டுக் கொண்டானுகளாம். பொம்புளைகளா, குமர்ப்பொட்டைகளா ....சொல்லவே ஏலாம கிடக்கண்ணா. இப்படி பண்ணித்தானுகளே.... பண்ணித்து சுட்டு சடலமாகப் போட்டுக் கிடக்கானுகளாம்; ஐந்நூறு, ஆயிரத்தைத் தாண்டுமாம் செத்தாக்கள். பத்தி எரிஞ்சிபோன வீடுகள் நூற்றுக்கணக்காம். நாங்க எப்படியோ தப்பி ஓடி வந்திட்டம் அண்ண". உலையாண்டப்போடிக்கு ஊர்ப்பொடியன்கள்ற கதையைக் கேட்டு அரைப்பைத்தியம் முழுப் பைத்தியமாக மாற

"எண்ட அப்பனே எண்ட புள்ளைகளுக்கு என்ன நடந்தது அப்பா" தலையிலே அடித்து ஒப்பாரி வைத்துக் கத்துகிறான். அரிசி குத்தும் மில்லுக்குள் நடந்த அநியாயத்தைக் கூறும் போது அழுதே விட்டான். ஒரு கிழமைக்குப் பிறகு, நிலைமை சரிவர உலையாண்டப்போடி ஊருக்குப் போனால் அங்கே அவனுக்குக் கிடைத்த தரிசனம்.... பொஞ்சாதி, மூன்று குமர்ப்புள்ளைகள், சின்னப்பொடியன் வீடுவாசல் எல்லாம் சாம்பலாகிப்போன காட்சிதான். அவன் நடைப்பிணமாகிவிட்டான்.

அந்த காட்சிக்குப் பிறகு, அவன் நிலை குலைந்த மனிதனாக மாறி, பைத்தியமாக உருவெடுத்து, உப்புக்கரைச்சைக்குத் தினமும் போய் அழுது புலம்பி, படுவான் கரையெங்கும் அலைந்து திரிகிறான்.

*30.11.2003*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொடரும் துயரங்கள்...**

'நானும் பேசாமல் இங்கே இருந்திருந்தால் ஒன்று ஆயுதம் தூக்கி இருக்க வேண்டும். இல்லையேல், ஆயுதம் தூக்கிகளால் சமாதி ஆகியிருக்க வேண்டும். எனது வெளிநாட்டு முடிவால் அக்காவும் பிள்ளைகளும் நிம்மதியாக வாழும் நிலை ஏற்பட்டிருக்கிறது...'

சரியாகப் பதினைந்து வருடங்களுக்குப் பிறகு, தான் பிறந்த மண்ணில் கால் பதிக்கிறான் அவன். வாழ முடியாத பயங்கரச் சூழலில், அவதிக்குள் அவதியாக, மூழ்கி மூச்சிழந்து, நொடிப்பொழுதும் இங்கே தரித்திருக்க முடியாதென்ற அவசர உணர்வில் அள்ளுண்டு, கொஞ்சநெஞ்சம் இருந்ததோடு, மேலதிகமாக இருந்த வீட்டையும் படுவான்கரைப் பகுதியில் காய்ந்து கிடந்த வானம் பார்த்த பூமியான காணிநிலத்தையும் வட்டிக்கு ஈடுவைத்து, கடல் கடந்து, போராட்டத்தில் நீச்சலடித்து, ஐரோப்பிய மண்ணான ஜேர்மனுக்குப் போனவன், பிறந்த தாயகமான ஊரிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்பதித்த பொழுது அவன் நெஞ்சம் வெடித்து... நினைவு சிதறி.... தான் பிறந்த ஊர் எங்கே மறைந்துவிட்டது? என்று கலக்கத்தோடு பார்த்தான். உருமாறிப் போயிருந்த ஊரைப் பார்த்தபோது, அவனுக்குச் சத்தம் போட்டு அழ வேண்டும் போல் இருக்கிறது. ஆனால், அவனால் அழ முடியவில்லை. அவன் நினைவு முழுவதையும் இழந்து சூனிய வலயத்திற்குள் சஞ்சரிக்கலானான்.

சூனியவலயத்து இருள் மெல்ல மெல்ல அகல... திண்ணைக்கட்டில் சப்பாணி கொட்டி இருக்கிற அவனைப் பெற்ற தாயாரை நெருங்குகிறான். அவனைக் கண்டதும் அந்த வயோதிபத் தாயாரின் சூம்பி வாடிக்கிடந்த வதனம் சூரியனைக் கண்ட தாமரைப் பூவைப் போல் விரிந்து மலர்கிறது. "எத்தன வருடங்களுக்குப் பிறகு வந்திருக்கா மகனே. எனக்கு ஒரே ஆம்பிளப்புள்ள நீதான். எண்ட 'சா' உனக்குக் கிடைக்கு மென்று நான் நினைக்கல்ல, கொஞ்ச நாளைக்குப் பிறகு உண்ட தேசத்துக்குப் பறந்து போயிடுவாய். போகாமல் இஞ்ச இருந்துதான் என்ன செய்யுற. இளந்தாரிப்புள்ளைகள வெடி மருந்துக்குத் தீனி போடுற இந்த மண்ணில எப்படிரா மகன் உன்ன நிக்கச் சொல்லுவன். வாழ வேண்டிய எத்தனையோ பிள்ளைகள் இந்த மண்ணுக்கு உரமாகிப் போய்த்தானுகள். அதுக்குப் பயந்துதானே உன்னையும் வெளிநாட்டுக்கு அனுப்பி வெச்ச" தாயின் பாசக்குமுறல் 'திரிவேணி' சங்கமமாக வெளிக்கிளம்புவதை அவன் ஆதங்கத்தோடு நோக்குகிறான். பெற்ற தாயின் பாச அதிர்விலே அவனது கூட்டாளிமாரான சோமன், மூர்த்தி, சண்முகம், பரமன் போன்றவர்களின் அநியாயச் சாவும் புலப்படுகிறது. அந்தப் பெற்றதாயின் "பாசப்பன்னீரில்" நனைந்து தன்னை இழந்த அவன் பொலபொலவென்று கண்களால் கண்ணீரைச் சொரிந்தவாறு, "அம்மா நம்மட குடும்பத்தில ஏற்பட்ட இழப்புகளுக்கு நான் வெளியே போகாமல் எப்படி அம்மா இருக்கமுடியும். உழைச்சுக் குடும்பத்தக் காப்பாற்றிக் கொண்டு வந்த அக்காவின் கணவனுக்கு அந்த அநியாயச் சாவு ஏற்பட்ட பிறகு, குஞ்சும் குராலுமான அக்காவின் பிஞ்சுக்குருத்துகளுக்கு என்னத் தவிர, வேறு எந்தத் துணை இருந்தது. நானும் பேசாமல் இங்கே இருந்திருந்தால் ஒன்று ஆயுதம் தூக்கி இருக்க வேண்டும். இல்லையேல், ஆயுதம் தூக்கிகளால் சமாதி ஆகியிருக்க வேண்டும். எனது வெளிநாட்டு முடிவால் அக்காவும் பிள்ளைகளும் நிம்மதியாக வாழும் நிலை ஏற்பட்டிருக்கிறது. மெல்ல மெல்ல அவனது ஆழ்மனதிலிருந்து வந்த கலங்கிய வார்த்தைகள் அந்தப் பெற்ற தாயின் நெஞ்சத்தை ஒரு தரம் உலுக்கி எடுத்து உண்மையின் மெய்ப் பொருளைக் கண்ட திருப்தியில் நிறைவு காணுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அம்மாவோடு கதைத்து, மருமக்களோடு கொஞ்சிக்குலாவி, அக்கா தந்த காலை உணவை உளம் மகிழ உண்டு பெருமிதம் உற்ற வேளையில்... தன் ஊரில் நடந்த கொடூரமான சம்பவம் மனத்திரையில் மீண்டும் பதிவாகிச் செல்கிறது.

வழக்கம் போல் அந்த விடிந்தும் விடியாத இருட்டுப் பொழுதில் தோளிலே வலைகளைப் போட்டுக் கொண்டு, மீன்பிடிக்க ஆற்றங்கரைக்குப் போன அக்காவின் கணவன் போன கையோடு வீட்டுக்குத் திரும்புகிறான். ஏன் அத்தான் அவசரம் அவசரமாக வருகிறார் என்று அவனுக்கு விளங்கவில்லை. பயம் நெஞ்சை செக்குக் கல்லிலிலே அகப்பட்ட "கொப்புறாவாக" அரைத்துத்தள்ள... உருக்கொண்டு ஆடும் கோவில் பூசாரியாக அவன் மனம் பதட்டம் அடைந்து, மேனி வெத வெதத்து ஆட... "அடேசுந்தரமூர்த்தி ஆத்தங்கர எங்கும் ஆமிக்காறன் ஈசல் கிளமாதிரி நிக்கான். என்ன நடந்த தெண்டு தெரியல்ல. ஏதோ றவுண்டப்புப் போல கிடக்கு. அவனுகள கண்டதும் நான் அசுப்பில்லாம ஓடிவாறன். நீ பேசாம எங்கையும் ஓடி திரும்பவா. நான் ஊட்ட இருக்கன்" என்று அக்கா புருஷன் கனகசபை, பயந்து சொற்கள் தடுமாறிக்கூறியதும்... அவன் மெதுவாகத் தூரத்தே இருக்கும் காட்டுப் பக்கம் ஓடி ஒளிந்து கொள்ளுகிறான்.

அவன் காட்டுப் பற்றைக்குள் மறைந்து ஒளிந்திருக்கும் வேளை, ஆகாயத்தையும் பூமியையும் அதிரவைக்கும் குண்டுச்சத்தங்கள் காதுப்பறையைச் சுக்குநூறாகப் பிய்த்து எறிய அவன், நினைவு முற்றும் இழந்தவனாக பற்றை மறைவுக்கள் கிடக்கிறான். வெடிச்சத்தம் ஓயாது மழையாகப் பொழிகிறது, அந்தக் குண்டு மழையால் அவனது பிறந்த மண் பற்றி எரிவதை அவன் எப்படி அறிவான்.

சத்தங்கள் ஓய்ந்து... சனங்கள் நடமாடத் தொடங்கிய போது பற்றைக்குள்ளிருந்து பசிக்களையும் பயக்களையும் பின்னிப்பிணைந்து ஆட்ட, வீதிக்கு வருகிறான். பிரளயக் கொந்தளிப்பால் சிதறுண்ட அந்த ஊர் நொடிப் பொழுதுக்குள் அதையெல்லாம் மறந்து, பழைய நிலைக்கு வந்து விட்டதா? வீட்டில் என்ன நடந்ததோ? எது நடந்ததோ என்று அறிவதற்காக அந்த மயக்க நிலையிலும் வேகம் வேகமாகய் நடந்து வரும் பொழுது.. ஆற்றந்துறைப்பக்கம் அழுகை ஒலி கேட்கிறது. அவனது உச்சந்தலையிலே நூற்றுக்கணக்கான சுத்தியல் அடிகள் ஒன்று சேர்ந்து விழுந்தது போல் ஒரு கொடிய பயங்கரமான வேதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுத்தித்தள்ள... அவன் தங்களது வளவை நெருங்க.... அம்மா, அக்கா, குழந்தைகளின் அழுகை ஒலி அந்தச் சுற்று வட்டாரத்தையே கதிகலக்கி சோகப் புயலைச் சுற்றிச் சுற்றி வீசவைக்கிறது.

அவனைக் கண்டதும் அழுகை ஒலி ஓங்காரமாக எழுந்து அந்த வளவை சோகப்பிம்பமாக மாற்றி அமைக்க... சுந்தரமூர்த்தி, முற்றத்திலே, இரத்த வெள்ளத்திலே, கண்கள் பிதுங்கி செத்துக்கிடந்த தனது அத்தான் கனகசபையைக் கண்டதும், நினைவிழந்து மண்ணிலே சாய்கிறான். கண்விழித்துப் பார்த்த போது, "தம்பி பாருடா உண்ட மச்சாண்ட கோலத்த, உண்ட உயிரக்காப்பாத்திப் போட்டு அவர் நிம்மதியாக அந்த உலகத்துக்குப் போயித்தாருடா தம்பி. ஆத்தந் துறையில நிண்ட ஆமிக்காறன யாரோ சுட்டுப் போட்டு இந்த ஒழுங்கையால ஓட, அந்த நாசமாப் போன ஆமிக்காறனுகள் மதங்கொண்ட, வெறிபிடித்த யானைகளாக ஓடி வந்து நம்மட திண்ணைக்க இருந்த உண்ட மச்சான இழுத்துக் கொண்டு போய் வாசலில் சுட்டுப் போட்டுப் போயித்தானுகள்றா தம்பி. இனி எனக்கும், எண்ட பிள்ளைகளுக்கும் என்ன கெதியிரா தம்பி...

"ஒப்பாரி வைத்து, குமுறிக்குமுறி மடை திறந்த வெள்ளமாக நீரைச் சொரிந்து தலையிலும், மார்பிலும் அடித்துக் கத்துகிறாள் சுந்தரமூர்த்தியின் அக்கா. அந்தக் கிழட்டுத் தாய் வக்கணை வசனங்களோடு சோகம் ததும்ப ஒப்பாரி வைத்துக் கத்தும் கத்தல்... சுந்தரமூர்த்தியை பைத்தியக்காரனாக மாற்றி அமைக்க...அவனும் அவர்களோடு சேர்ந்து அழுதான். பக்கத்து வீட்டிலும் 'சா'.. அடுத்த வீட்டிலும் மரணம், ஊரே மயான பூமியாகி... பழைய நினைவுகளால் சுந்தரமூர்த்தி துயரச் சுமையிலே நசுங்கிப் போய்விடுகிறான். அவன் வீட்டை விட்டு ஊரை ஒரு தரம் வலம் வர நினைத்து வெளியே கிளம்புகிறான். ஊரின் வளர்ச்சி தேய்பிறையாகி இராணுவக் கட்டமைப்புக்குள் முற்றும் மாறுதல் அடைந்து... அழிந்து, சிதைந்து, தொலைந்து போய்க்கிடப்பதை..., உருக்குலைந்து "எதியோப்பியக்" குழந்தைகளின் எலும்பு உருவமாகக் கிடப்பதை.... சப்பாணிக் குழந்தையாக முடங்கிப் போய்க்கிடப்பதை... அவன் வேதனையோடு தரிசித்து நடக்கிறான். அவன் படித்த பள்ளிக்கூடம் "ஷெல்விழுந்து" சிதறிக்கிடப்பதையும் அந்த ஊருக்கே தெய்வீக உணர்வை ஊட்டிப் பொலிவாக எழுந்து நின்ற ஆலயம் குண்டுகள் பல விழுந்து நொறுங்கிச் சிதிலமாகிக் கிடப்பதையும் அவன் கண்கள் கண்டதும் வேதனையின் நீள்துயரம் அவனைச் சுற்றிப் படர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றுகை இட... அவனது ஆன்மா காற்றுப் போன பலூனாகச் சுருங்கி வேதனைகாட்டுகிறது.

அங்கேயும் இங்கேயும் மேய்ந்த அவனது கால்கள் ஆற்றங்கரைப்பக்கம் நடைபோட... எந்த நேரமும் சனப்புழக்கமும் மக்கள் ஆரவாரமும், மீன் பிடித் தோணிகளும் நிறைந்து காணப்பட்ட "பாடும் மீன்" வாவிகளால் செழிப்பாகக் காணப்பட்ட அந்த அழகிய இயற்கைச் சூழல் மாசடைந்து சுடலை மைதானமாக, பயங்கர வலயமாகக் கிடக்கிறது. நூற்றுக்கணக்கான மீன்பிடித் தோணிகளை உள் அடக்கிய "தோணிமால்கள்" இருந்த இடம் வெறும் காடு மண்டி பயங்கரமாகக் கிடக்கிறது. அவன் குழந்தைப் பருவத்திலும் இளந்தாரியாகக் காலந்தள்ளிய நேரங்களிலும் ஏறிவிளையாடிய "பூவரச மரங்கள்" இன்று எங்கே போய் விட்டன? அதன் அழிவுக்கு யார் காரணம்? ஒரு கோரமான வெப்ப காலத்தில் அந்தப் "பாடும் மீன்வாவி" வற்றி மிக மிக நீண்ட தூரம் "முற்றவெளி" மாதிரி நீண்டு பெருத்துக் கிடந்த காலத்தில், அந்த வற்றி நிலமாகக் கிடந்த வாவித்திடலிலே "சில்லுக்கட்டைப் பந்து" விளையாடிய இளமைக் காலத்து நினைவை எண்ணிப் பார்க்கிறான். இன்று அந்த வாவிக்கரை ஓரம் "ஆமிச் சென்றி" அடிக்கப்பட்டு... நீட்டிய துவக்குகளோடு அங்குமிங்கும் சுழன்று அவர்கள் மரணப்பயம் காட்டுவதை அவன் பார்க்கும் பொழுது, அவனது பதட்டப்பட்ட நெஞ்சு துயரக் காற்றால் சிதைந்து வெடிக்கப் பார்க்கிறது.

தூரத்தே பச்சை ஓவியங்களாகக் கிடந்த கண்ணாப்பற்றைகளும் கிண்ணமரச் சோலைகளும் முற்றாக அழிக்கப்பட்டு சூனிய வெளியாகத் தெரிவதை அவன் காணுகிறான். அந்தக் கரையிலே தவம் கிடக்கும் அந்த மரச் சோலைகளுக்கு கூட்டாளிமார்களோடு சென்று நாரைகளையும் வெள்ளைக் கொக்குகளையும் கிளிகளையும் பிடித்து வந்ததையும் தோணியில் போய் அந்தக் காட்டுச் சூழலை ஒரு கலக்குக்கலங்கியதையும் அவன் ஒரு தரம் நினைத்துப் பெருமூச்சு விடுகிறான். தூரத்தே தெரியும் "கரையாக்கன்தீவின்" பசுமை இன்று பட்டுப் போய்க்கிடக்கும் கோலத்தைக் காணுகிறான். அந்த நாளில் "வேடன்கரையிலும்" "கொத்தியாமலையிலும்" இருந்து வருகின்ற "வள்ளங்களிலே" நெல்மூடைகளும், அறுத்த காட்டு மரங்களும் இனிய எருமைத் தயிர்ப்பானைகளும் இக்கரைக்கு வந்த சிறப்பை இந்த பயங்கரத்துயரம் பறித்து மறைத்து வைத்திருப்பதை அவன் நினைத்துப் பார்க்கும் பொழுது ... அவனைத் துயர ஈட்டி குத்திக் குதறி எடுத்துப் புரட்டி எடுக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு கண்டங்களிலிருந்து, தூர தேசங்களிலிருந்து நீண்ட பயங்கரக் கடல்களைத் தாண்டி "சீசனுக்குச் சீசன்" வருகின்ற விதம் விதமான அந்நிய தேசத்துப் பறவைகள் அந்த வெடிகுண்டுகளுக்கும் ஷெல் அடிகளுக்கும் துப்பாக்கி வெடிகளுக்கும் பயந்து இக்கரைகளிலே இருக்கும் அழகிய மரங்களிலே, பற்றைகளிலே தங்க வருவதில்லையாம். அந்த அழகிய, இனிய மனசுக்கு இங்கிதம் காட்டுகின்ற அற்புதக் காட்சி இனி எப்பொழுதுதான் இந்த மண்ணிலே மலரப்போகிறதோ?

அவன் வேதனையோடு வீதிக்கு நடக்க எத்தணிக்கும் போது அவன் சிறுவனாக இருக்கும் பொழுது, கூத்துப்பழக்கிய "அண்ணாவியார்" செல்லையாக் கிழவர் தள்ளாடித் தள்ளாடி அவனை நெருங்குகிறார். "யாரது சுந்தரமூர்த்தியா? எப்படா தம்பி நீ ஊருக்கு வந்தா? வெள்ளைக்காரப் பொட்டைய கலியாணம் முடிச்சித்தியாம். மெய்தானா? நீ கட்ட இருந்த உண்ட தாய் மாமன்ட மகள் பூவையும் பொட்டையும் ஆமிர குண்டுக்குப் புருஷனைப் பறிகொடுத்துப் போட்டு குஞ்சும் குராலுலுமான புள்ளைகளோடு எங்கையோ ஓடித்தாளாம்". மூச்சு இழைக்க இழைக்க அவர் கூறியதும், சுந்தரமூர்த்திக்கு அழுகைதான் முட்டி வந்தது. பயங்கரநிலையால் இந்த நாட்டை விட்டு ஓட வேண்டிய அவலத்தில்.. எத்தனை சோகச் சம்பவங்களை அவன் கண்டும் கேட்டும் தாங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. அவன் சமாதிக்குள் அகப்பட்ட அனார்க்கலியாகி...

அண்ணாவியாரோடு கதைக்க முடியாமல் துயரச் சிலுவையால் அறையப்பட்ட சுந்தரமூர்த்தி, மச்சாள் பூபதியை நினைத்தவாறு வீதியிலே கால் வைக்கிறான். வீதி மூலையிலே வாசப்பூக்களோடு, வௌவால்கள் உறையும் "இலுப்பை" மரம். எத்தனை எத்தனை வருடங்களாக அந்த மரத்துக்குக் கீழே இலுப்பை மரத்துப் பழக்கொட்டைகளைப் பொறுக்கி எடுத்திருக்கிறேன். அந்த பசுமையின் நிறைவு "வெம்பு றோட்டில்" தவம் கிடக்கும் "ஆமிக் கேம்பிலே" இருந்து வந்த அதிர்ந்த வெடிகளால் ஊனமுற்று அழிந்து போக... வேகமாக வீட்டை நோக்கி நடந்து போகிறான்.

மீண்டும் அவனது நினைவுக்குதிரை துயரச் சுமைகளைத் தாங்கிக் கொண்டு ஜேர்மன் மண்ணை நோக்கிப் பறக்கிறது. உயிரைக் கையிலே பிடித்துக்கொண்டு அக்காவின் குடும்பத்தைக் காப்பாற்ற... அள்ளி அள்ளிக் கடனைப்பட்டு... தான் விரும்பிய மச்சாள் பூபதியையும் மறந்து உதறிவிட்டு... "அல்ப்ஸ்" மலையின் அடிவாரத்தில் இயற்கையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனிக்கூத்திலே நீச்சலடிக்கும் அந்த அழகிய ஐரோப்பிய நாட்டின் "கிட்லரால்" சாபப்பட்ட மண்ணுக்குத்தாவி... அங்கு சென்றுதான் துயரச்சுமை இறங்கி ஆறுதல் தந்ததா? அவுஸ்திரேலிய நாட்டின் "கங்காரு" மிருகம் தனது குட்டியைப் பையிலே கொண்டு திரிவது போல் சுந்தரமூர்த்தியை ஜேர்மன் மண்ணிலும் அவலச்சுமை அழுத்திக் கொண்டே இருந்தது. அகதியாக ஜேர்மனியிலே தஞ்சம் புகுந்து, அகதி முகாம்களிலே கூண்டுக் கிளியாகச் சிறைப்பட்டு... அவன் தந்த உபகாரப் பிச்சைச் சம்பளத்தால் வாழ்ந்து... உண்டது போக மிச்சத்தை ஊருக்கு அனுப்பி... கொடிய பாசிசக் கொலைக்காரன் கிட்லர் "அட்டகாசம் புரிந்த கொலை ஊரான ஜேர்மன்தான் இலங்கையின் இனவெறி பிடித்த சிங்களப்படையால் தப்பி அங்கே தஞ்சம் புகுந்த இலங்கைத் தமிழர்களுக்கும் கதவு திறந்து... கருணை மழை பொழிந்து..." அவன் தன்னை வாட்டி வதைக்கும் துயரத்திலும் அந்தத் தர்ம பூமிக்கு ஒருதரம் மானசீக வணக்கம் செலுத்துகிறான்... "பெர்லின் சுவர் போல்" துயரம் தொடரத் தொடர... வங்காள விரிகுடாவாக எண்ணங்கள் குமுறுகிறது. அகதி அந்தஸ்தை இழந்து... ஜேர்மன் நாட்டுப் பிரஜையாக மாறியதும்... குதிரைகள் பல வைத்து ஜீவியம் நடத்தும் ஜேர்மன் நாட்டுச் சீமாட்டியின் உறவு கிடைத்து... அவளது மோக உறுத்தல்களுக்கு இடம்கொடுக்காததால்... அந்தக் குடிகார அரக்கியின் சவுக்கடிக்கு இலக்காகி.. இலங்கையிலிருந்து ஜேர்மனுக்கு துரத்தி வந்த கஷ்டத்திற்குள் மீண்டும் மூழ்கி... எப்படியோ அந்தக் கொடிய பொறிக்குள் இருந்து விலகி.. வேறு ஒரு தொழிற்சாலையில் நல்லதொரு வேலையிலே சேர்ந்து... மாடுபோல் இரவும் பகலும் ஓயாது உழைத்து... அடிக்கடி நோய்கண்டு... ஜேர்மன் நாட்டுப் பணமான "மார்க்கை" அள்ளி அள்ளிக் குவித்து.. ஊருக்கு "டொலர்களாக" மாற்றி அனுப்பி என்றாலும் துயரம் அவனை விட்டு ஓடிப் போக முடியாமல் அவனை ஆட்டிப் படைக்கிறது.

அவனோடு இருக்கும் இலங்கைத் தமிழ் இளைஞர்கள் அங்கே பொழுதுபோக்குக்கு ஜேர்மன்காரிகளை வைப்பாட்டிகளாக வைத்துக் கொண்டு... எந்தநேரமும் மதுச்சாலைகளில் நீச்சல் அடித்து... போதாக் குறைக்கு இலங்கையிலே தங்களது சொந்த ஊர்களிலே 'இளம்குமரர்களை' டொலர்களுக்கு வாங்குகிறார்கள். இந்தக் காட்சிகளைக் காணும் பொழுதெல்லாம் அவனது உள்மனம் 'கல்வாரி மலையிலே' சிலுவையால் அறையப்பட்ட இயேசுவின் ஆன்மாவாகத் துடிக்கும்.

இலங்கையிலே இருந்து வருகின்ற கடிதங்களில், அது தருகின்ற "எரிமலைச் சிதறல்" போன்ற செய்திகளில்.. அவனைத் துயரம் வாட்டும் பொழுது மதுசாலைக்குப் போய் மது அருந்துவான். அங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ பெரிய இடத்துப் பிள்ளைகள்.. மதுவும் ஜேர்மன் நாட்டு அழகிய மங்கைகளுமாக...

“சீ இதுவும் ஒரு வாழ்வா” என உள் வாய்க்குள்ளே அலம்பிக் கொண்டு காறித்துப்புவான். எந்தத் துயரம் அவனை அமுக்கி எடுத்தாலும் அவன் யோக்கியமானவன்தான். அதனால்தானே அவன் இன்று தாயின் அழைப்பை ஏற்று இலங்கைக்கு வந்திருக்கிறான்.

இன்னும் சில நாளில் சுந்தரமூர்த்தி இலங்கையை விட்டுப் போய் விடுவான். பெற்ற தாயை, சகோதரியை, மருமக்களை விட்டுப் பிரிந்து... கண்காணாத தேசமான ஜேர்மனுக்குப் பறந்து விடுவான். சமாதானம் கேள்விக் குறியாகிப் போன இலங்கை... எந்த நேரமும் முறுகல் வருமென எதிர்பார்க்கப்படும் ஸ்ரீலங்கா... அவன் இங்கே கேட்கும் அவலச் செய்திகள்...காணும் துன்பச் சங்கதிகள்... அதனைத் தொடர்ந்து ஜேர்மனிக்குள் தள்ளிக் கொண்டே இருக்கப் போகின்றன.

“அடே சுந்தரமூர்த்தி ஆத்தங்கர எங்கும் ஆமிக்காறன் சிலைகள் மாதிரி நிக்கான். என்ன நடந்ததெண்டு தெரியல்ல. ஏதோ றவுண்டப்புப் போல கிடக்கு. அவனுகள கண்டதும் நான் அசுப்பில்லாம ஓடி வாறன். நீ பேசாம எங்கையும் ஓடி திரும்பவா. நான் ஊட்ட இருக்கன்”

*18.06.2006*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கிருந்தோ வந்தான்!

நீண்ட காலப் போராட்டத்திற்குப் பிறகு கிழவியின் மூச்சு அடங்கிவிட்டது. மிக மிகத் தூரத்திலிருந்து புறப்பட்ட புகையிரதம் தனது சேவையை இறுதியான பிளாட்பாரத்தில் முடித்துக் கொள்ளும் போது ‘புஸ்’ என்று ஓசையுடன் அடங்கிக் கொள்வது போல் கிழவியின் உயிரும் டப்பென்று அடங்கிவிடுகிறது.

கருக்கட்டிய மேகம் எந்தநேரம் என்று தெரியாமல் திடீரென்று சோனா மாரியாகப் பெய்யக்காத்துக் கொண்டிருப்பது போல், அவனுள்ளே திரண்டு அமுங்கிக் கிடந்த சோகமேகம் எப்பொழுது வெளியே குமுறி வெடித்துச் சிதறும் என்று தெரியாத உணர்வோடு அவன் அடங்காத சோகத்துள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூழ்கித் திளைத்த போதும், அவன் தனது முழுமையான பொறுப்புக்களை பரிபூரணமாக உணர்ந்தவனாக அந்த இழவு வீட்டிலே பம்பரமாகச் சுழன்று திரிந்தான்.

நித்திய தூக்கத்தில் ஒப்புவித்த கோலத்தோடு சுடலைக்குப் புறப்பட ஆயத்தமான படுத்துக்கிடக்கும் அந்தப் பணக்காரக் கிழவிக்கு தற்பொழுது உறுதுணையாக நின்று கைகொடுத்துக் கொண்டிருப்பவன் அவன் ஒருவன் மட்டுந்தான். இத்தனைக்கும் அவன் அந்தக் கிழவி பெற்ற மகன் இல்லை. சின்னஞ்சிறுவயதில் எங்கிருந்தோ வந்து அண்டிக் கொண்டு அந்த வீட்டுப்பிள்ளையாகிப் போனவன். கிழவிக்கு இன்று சகலதும் அவன்தான். இன்று மட்டுமா? அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக அந்த வீட்டிலே நன்றியுள்ள நாயாக வலம் வந்தவன். வருகிறவன். கிழவியின் மக்கள் எல்லாம் இருபது வருடங்களுக்கு முதல் பிறந்த மண், பெற்றதாய், பாசம், பற்று சகல சௌபாக்கியங்களையும் மறந்து, புறந்தள்ளிவிட்டு ஐரோப்பிய மண்ணுக்குப் படை எடுத்துச் சென்று அந்த நாட்டுப் பிரஜைகளான பிறகு கிழவியின் அந்திம வாழ்க்கைக்குக் கைகொடுத்து அவள் சாகும் வரைக்கும் தன் வாழ்க்கையை அழித்துக் கொண்டு வந்தவன் அவன். கிழவி தனது வயிற்றால் பெற்று வளர்த்ததோ ஆறுமக்கள். மூன்று ஆணும் மூன்று பெண்ணும். இரண்டு பெண்கள் லண்டனிலும், மற்றவள் பிரான்சிலும், ஒரு மகன் இத்தாலியிலும், மற்றவன் சுவிசியிலும் இன்னுமொருவன் ஜேர்மனியிலுமாக ஐரோப்பிய மண்ணிலே வேர் பாய்ச்சிய பிறகு கிழவிக்கு அவனைத் தவிர வேறு யார் துணையாக நிற்கமுடியும்?

இன்று அவன்தான் கிழவியின் அந்திமக் காரியங்களுக்கு ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறான். அரண்மனைபோல் வீடு இருந்தும், பத்துப் பதினைந்து வளவுகள் ஊரிலே பரவிக்கிடந்தும், குலைகுலையாகக் காய்த்துக்கிடக்கும் தென்னைகள் நிறைந்த ஆற்றங்கரை ஓரத்துக் 'கந்தட்டி'களும், நூறு ஏக்கருக்குக் கூடுதலான வேளாண்மை பூமி மண்முனைக்கண்டத்திலும், மண்டூர் வட்டவளையிலும், நிந்தவூருக்கு அப்பாலுள்ள மாட்டுப் பளையிலும் பரந்து கிடந்த போதும், இலட்சக்கணக்கான பணம் வங்கிகளில் முடங்கிக் கிடந்த போதிலும், அவள் பெற்ற மக்கள் புறத்தே சென்றுவிட கிழவியோடு ஐக்கியமாகி அவளது சகல தேவைகளுக்கும் ஈடுகொடுத்து, தனது இளமையைச் சந்தனக் கட்டையாகத் தேய்த்துக் கொண்டே கிழவிக்கு ஒருகுறையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்காமல் சகலதையும் அவளது காலடியில் சமர்ப்பணம் செய்தவன் அவன். பணத்தை மட்டும் வாரிக்கொட்டினால் போதுமா? உடன் இருந்து பாதுகாக்க பேணிக் கடமை செய்ய தக்க நேரத்தில் அது அதுக்குரிய தேவைகளை முகம் சுளிக்காமல் செய்து முடிக்க ஒரு உற்ற துணை தேவையல்லவா? அந்த உற்றதுணையாக நடமாடிக் கொண்டு அந்த வீட்டிலே தொண்டு செய்து கொண்டு வந்தவன்தான் அவன்.

இழவு வீடு சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. கிழவியின் சாக்கோலத்தை கோணம் கோணமாகப் படம் பிடித்துக் கொண்டிருந்தது வீடியோ கெமரா. சாவுக்கு வந்து வந்து போவோரையும், காசுக்கு ஒப்பாரி வைக்கும் பெண்களையும், பறை அடிக்கும் கோலத்தையும், சவக் கட்டில் கட்டும் அழகையும், தென்னங்குருத்தோலை கொண்டு பின்னுவதையும், கடதாசிகளை வெட்டி அலங்காரம் செய்து ஒட்டுவதையும், தாலி, மாலைகள், ஒட்டியல் காம்புகள், தோடு, மோதிரங்கள் என்று தங்கத்தால் ஜோடனை செய்து விலை உயர்ந்த பட்டுக் கூரைச் சீலையால் உடம்பை ஒ;ப்பனை செய்த கிழவியின் சவத்தையும் அப்படியும், இப்படியுமாகப் பிடித்துக் கொண்டிருந்தது நவீன வீடியோ கெமரா. கிழவியின் மக்கள் கிழவி செத்த பின்பு அவரது கடைசிப் பயணத்தை தங்களுக்கு வீடியோபடம் மூலம் பார்ப்பதற்கு ஒழுங்குகள் செய்து தரக் கேட்டிருந்தார்கள். அதனைச் சற்றும் பிசகாமல் முறையாகப் படம் எடுக்கும் ஒழுங்குகளைச் செய்வதற்கு வீடியோப் படப்பிடிப்பாளர்களை அழைப்பித்திருந்தான் அவன். பெற்றதாயின் சவக்கோலத்தைப் படத்திலே பார்த்து நிம்மதிப் பெருமூச்சு விடுவார்களாக்கும்! தூரத்தண்ணி ஆபத்துக்கு உதவாது என்பது எவ்வளவு யதார்த்தமான உண்மை.!

அவன் அங்கே ஓடுவதும், இங்கே ஓடுவதுமாக பம்பரமாகச் சுழன்று திரிந்தான். எடுபிடி வேலைகளுக்கு பல பேரைக் கிழவியின் "பொறின் பணம்" விலைக்கு வாங்கியிருந்தாலும், அவன் பெற்ற மக்களின் பாசத்தை விட சகல கடமைகளையும் செய்ய ஆயத்தமாகிறான். பறை மேளம் ஊரை அழைக்க ஓங்காரமாக அதிர்கிறது. 'ஸ்ப்பீக்கர் செற்' சோக கீதங்களைப் பாடிய வண்ணம் ஓயாமல் அலறுகிறது. கிழவியின் பணம் தாராளமாக விளையாடுவதால் எடுபிடி வேலைகள் சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருக்கிறது. கள்ளும் சாராயமும் வேகம் வேகமாக வேலைகளைச் செய்து முடிக்கிறது. கிழவியின் இறுதிக் கிரிகைகளைக் கண்டுகளிக்க ஊரே அந்த வீட்டில் திரண்டு வந்து நிற்கிறது.

நோய்வாய்ப்பட்டு படுக்கையில் விழுந்த பொழுது கிழவி அவனுக்கிட்ட அன்புக் கட்டளைகளை அவன் பரிவோடு நிறைவேற்றிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கின்றான். "நான் உன்ன எண்ட வயிற்றால பெறா விட்டாலும் நீதான் எண்ட நேசமான மகன். எண்ட சுகதுக்கங்களில ஐப்பழுக்கின்றி நடந்து, உண்ட தாயப் போல என்னப் பேணிப் பாதுகாத்து, அந்த நரைகண்ட ஐம்பது வயதிலும் எண்ட தொண்டுகளச் செய்து, எண்ட பீ, மூத்திரத்த அழைஞ்சு, என்னக் குளிக்க முழுகவைத்து, உண்ட கையால எனக்குச் சோறு தீத்தி, வேளைக்கு வேளை மருந்து குளிசைகளைக் கவனம் தப்பாமல் தந்து, அருவருப்பில்லாமல் பொம்பிளப் புள்ளபோல என்னப்பாத்து மேச்ச நீ எண்ட மகன் இல்லாமல் வேறு யார்? நான் கண்ண மூடியதும் சகல காரியங்களையும் நிறைவேற்றி, சுடலைக்கு எடுத்துச் சென்று குடம் கொள்ளி உடைக்க வேணும் மகனே" என்று கிழவி படுக்கையில் கிடந்த நேரம் அவனைக் கட்டி அணைத்து முத்தம் இட்டு, பாசவளையால் வீசி அவனைக் கட்டி வைத்த அன்புப் பிணைப்பை அவன் எப்படி ஒதுக்கி எறிந்துவிட முடியும்! அவன் அந்த அன்புச் சமுத்திரத்திற்குள் தன்னையே இழந்து நின்றான். அது என்றுமே அழிவில்லாத பாசப் பிணைப்பு.

கிழவியின் அன்புக் கட்டளைகளை அவளது மகனாகப் பாவனை செய்து அவன் இறுதிக் கடமைகளைச் செய்து கொண்டிருக்கிறான். ஊரார் அவனது செய்கைகளை வைத்த கண் வாங்காமல், வாய்களிலே விரலை வைத்த வண்ணம் ஆச்சரியம் தொக்கி நிற்க வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆண்கள் கூட்டம் கூட்டமாக நிற்கும் இடங்களில் பலதும் பத்தும் பேச்சுக்களாக முளைகட்டி எழும்புகிறது. "என்ன சின்னவண்ண எத்தன கோடிப் பணம் இருந்தாலும், கிழவி வயித்தால பெத்த புள்ளையள் வெளிநாட்டில சொகுசாக வாழ, தாயிர அத்தன கடமைகளையும் இந்தப் பொடியன்தானே செய்துவாறான். அவைய அனுப்புற காசு இத்தன வேலையையும் செய்யுமா? அந்தப் பொடியன் தண்ட வாழ்க்கைய அழிச்சுக் கொண்டு கிழவிக்காகவே காத்திருக்கிறான். கலியாணம் கார்த்திகைக்காக ஆசைப்படாம இந்த வெளிநாட்டுப் பணத்தில மூழ்கித்திழைக்காம, ஒரு ஞானியைப் போல, ஒரு சாமியைப் போல அல்லவா வாழ்ந்து வந்திருக்கிறான். வேறவனாக இருந்தா இந்தப் பண வெள்ளத்தச் சாதகமாக்கி எத்தன கலியாணத்த முடிச்சிருப்பான். பணத்த தண்ணியாகச் செலவழிச்சிருப்பான். கூத்தி, குடி கும்மாளம் எண்டு ஆட்டம் போட்டிருப்பான்கள். கலியாணத்த மறந்து, பொஞ்சாதிபுள்ள ஆசைகளை ஒதுக்க இந்தக் கிழவிக்காக ஒருத்தன் வாழுறதெண்டா அது தேவ வாழ்க்கதான் சின்னவண்ண"

அவனின் நடத்தைகளை, செயல்பாடுகளை, குணாதிசயங்களை, பண்பட்ட நடைமுறைகளை, படம் பிடித்துக்காட்டுகிறார் காத்த முத்தண்ணன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓண்டா தம்பி நீ சொல்றது நூத்துக்கு நூறு சரி. தன்னந்தனியாக தாய இஞ்ச உட்டுப்போட்டு அவைய வெளிநாட்டில சொகுசாக வாழ்றாங்க. அவையிர பணம் இந்தப் பாசத்துக்கு நிகராகுமா? வெளிநாட்டுக்குப் போனவங்களுக்கு. பெற்ற தாய், பாசம், அன்பு, இரக்கம் எல்லாமே பண நோட்டாகத்தான் தம்பி விளங்குகிறது. படத்த எடுத்து அங்க அனுப்பினா அதப் போட்டு வெள்ளக்காறனுக்கும் காட்டுவாங்களாக்கும். இந்தக் காலத்தில் இந்தக் கூத்தெல்லாம் வந்துதான் உண்மையான குடும்பப் பாசமெல்லாம் மண்ணுக்குள்ள புதைஞ்சு போச்சிரா. உண்மையில இந்தப் பொடியன் இல்லாட்டி இந்தக் கிழவியிர கெதி என்னடா? இந்தப் பொடியன் ஒரு தெய்வப் பிறப்பிடா. இவன் இல்லாட்டி கிழவிய அனாத மடத்தில் கொண்டு போடுறதுக்கும் ஆண் இல்லாம இருந்திருக்கும். காசு இருந்தாப்புல எல்லாம் நடந்திடுமா? இந்தக் கசவாரக் காட்சிகளக் காணத்தான் நாம் பிறந்திருக்கம். புள்ளையளப் பெத்து என்ன புண்ணியண்டா. தாயிர சாவுக்குப் பக்கத்தில இல்லாத புள்ளையள் ஒரு புள்ளையா? பீ மூத்திரம் திண்டு கஷ்ரப்பட்டு வளர்த்துவிட்டது இதுக்காகத்தானா? இண்டைக்குக் குடும்பப் பாசமெல்லாம் வெறும் போலியாகி வேதனை தருகுதிடா தம்பி" சின்னவண்ணன் ஆதங்கப்பட கூட்டத்திலே எண்ணங்கள் விரிந்து படர்கிறது.

வண்ண வண்ண உடைகளோடு, மேனிமுழுவதும் தங்க ஆபரணங்களைச் ஜோடித்து அந்த அலங்கார உருவங்களான பெண்கள் மத்தியிலும் அவன் உருவமும், செய்கைகளும் நிழலாகப் படர்கிறது. "அவன் அவட பெத்த மகன் இல்லையாம். சின்ன வயதில அனாதையாக வந்து சேர்ந்தவனாம். அவனுக்கு தனது தாய் தகப்பன், உறவினர்கள் ஒருத்தருமே தெரியாதாம். எங்க பிறந்தது, எங்க வளர்ந்தது என்பது கூட அவனுக்குத் தெரியாதாம். எல்லாம் இந்த ஊரும் இந்த வீடுந்தானாம் அவனுக்குத் தஞ்சம். இத்தன வயதுக்குக் கலியாணம் இல்லாம இந்தக் குடும்பத்திலே கிடந்து உழன்று வாழ்ந்திருக்கானே. கிழவிக்கு இவனில நல்ல பாசமாம். தண்ட வகுத்தால பெத்த பிள்ளையாகத்தான் கிழவி இவன நினைச்சாவாம். பூமணி தலையை ஆட்டி ஆட்டி, தன் கைகளிலே வரிசையாகக் கிடக்கும் காப்புகள் பளிச்சிடக் கூறினாள்.

"ஓண்டி பூமணி, கிழவிக்கு அவனில உசிர்தான். கிழவிர அத்தன கருமத்தையும் அவன்தானே பாத்தவன். பெத்த புள்ளையும் அவனப் போல பாத்திராது. கிழவிய மக்கள் தங்களோட வெளிநாட்டில் வந்து இருக்கச் சொல்லி எவ்வளவோ தெண்டிச்சிப் பாத்தும் கிழவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகல்லையாம். அந்த வெள்ளைக்காரண்ட ஊரில குளிரில ஆருடா விறைக்கச் சாகுற, நாம புறந்த மண்ணையும், இந்தக் கோவில் குளங்களையும் விட்டுத்து அந்தக் கண்காணாத தேசத்தில் என்னத்தரா காணப்போறம். அந்தச் சிறைச்சால வாழ்க்க எனக்கு வேணாந் தாயே. அங்க நான் வந்தா இஞ்ச என்ன நம்பி வாழ்ந்து வாற ஒருவன்ட கெதி என்னடா? நான் வரமாட்டன். அவன் எண்ட புள்ள போல என்னப் பாப்பான் எண்டு மக்களிட்ட கிழவி சொல்லித்து அவனால கிழவியும் நம்மிட ஊரில தங்கித்தாவு. அவனும் கிழவியால சாமி வேஷம் பூண்டுத்தான். இண்டைக்குப் பெத்த புள்ளையப் போல சகல காரியங்களையும் முடிச்சு, சுடலைக்குக் கொண்டுபோய்; தாய்க்குச் செய்கிற கடமைகள் அத்தனையும் செய்து குடம் கொள்ளி உடைக்கப் போகிறான்" பொன்னம்மா தாலிக்கொடியைக் கைகளால் பிணைந்து பிணைந்து வார்த்தைகளைச் சிதற, பெண்கள் கூட்டம் வேடிக்கை பார்த்துக் கொண்டே இருந்தது.

சாவீட்டிலே சவம் எடுக்கும் வேளை நெருங்கிக் கொண்டே இருக்கிறது. சகல காரியங்களும் ஒன்றும் தவறாமல் படிப்படியாக நடந்து கொண்டிருக்கிறது. பெற்ற மகன் போல் முன்னுக்கு நின்று சகல காரியங்களையும் பம்பரம் போல் சுழன்று சுழன்று செய்து கொண்டிருந்தான் அவன். ஒருகுறையும் வைக்காமல் கிழவியின் இறுதிக் கடமைகளைக் கண்ணும் கருத்துமாகச் செய்து கொண்டிருந்தான் அவன். ஓயாமல் வீடியோ கெமரா அத்தனை கருமங்களையும் படம் ஆக்கிக் கொண்டிருந்தது. கல்லுக்குள் ஈரம் போல் அவனது நெஞ்சுக்குள் துயரச் சுமை சிலுவையாக அறைபட்டுக் கிடந்தது. கிழவிக்கு வாய்க்கரிசி போடும் பொழுது குமுறிக் குமுறிக் அழத் தொடங்கிவிட்டான் அவன். உடைப்பெடுத்த குளம் போல் அவனது கண்மடல் வெடித்து துயரக் கண்ணீரைச் சிந்திக்கொண்டிருக்கிறது. வளர்த்த தாயின் கடமையை நிறைவேற்றும் வரைக்கும் பொறுமையைக் கடைப்பிடிக்க முற்படுகின்றான் அவன். ஆனால் முடியவில்லை. என்றாலும் பல்லைக் கடித்துக் கொண்டு அந்தப் புனிதமான கடமையை நெஞ்சில் தூக்கியவனாக வலம் வந்துகொண்டிருக்கின்றான் அவன்.

இறுதிப் பயணத்துக்கு ஊரை அழைக்கப் பறை ஓசை உக்கிரமாக அதிர்கிறது. வளர்த்த தாயைச் சுடலைக்குக் கொண்டு போகும் இறுதிப் பயணத்துக்கு ஆயத்தமாகிறான். பயணம் தொடங்கும் முன்னே பழைய நினைவுகளின் சிதைவுகள் நெஞ்சத்திரையிலே நிழல்காட்டத் துவங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அந்த வீட்டிலே வந்து தஞ்சம் அடைந்தது மட்டும்தான் ஞாபகத்துக்கு வருகிறது. தன்னை இந்த மண்ணிலே பெற்றுவிட்டவளையோ, தான் பிறக்கக் காரணமான தகப்பனையோ தான் எங்கு பிறந்தேன் என்ற எதனையும் அவன் அறியான்.

ஐந்து வயதிருக்கும். ஒரு தாடி நரைத்த கிழவரோடு அவன் அந்த வீட்டுக்கு வந்த பொழுது அவனை அந்தக் கிழவர் அங்கே விட்டுத்துப் போன மட்டுந்தான் அவனுக்கு ஞாபகத்துக்கு வருகிறது. மலைப்பாங்கான பகுதியில், பசுமையான மரங்களுக்கிடையில் பனியில் நடுங்கி விளையாடியது கனவுபோல் நினைவுகள் மங்கலாக மறைகிறது.

அதன் பிறகு அவன் அந்த வீட்டுப் பிள்ளையாகி விட்டான்.

ஐந்து வயதிலிருந்து அந்த வீட்டிலேயே ஜீவியம் நடத்தியவன். அவனால் முடிந்த கருமங்கள் அத்தனையையும் ஆற்றி, அந்த வீட்டிலே உள்ளவர்கள் அத்தனை பேருடைய நன்மதிப்பையும் பெறத் தொடங்கினான். குடுகுடுவென்று எந்த நேரமும் எந்த வேலையாவது செய்து கொண்டிருப்பான். வீட்டிலே உள்ள அத்தனை வேலைகளும் அவனுக்கு அத்துப்படி. பூமரங்களுக்குத் தண்ணீர் ஊற்றுவதிலிருந்து வீடுவளவுகளைத் துப்பரவு செய்வது வரை அவன் மின் விசிறியாக அயராது சுழன்று சுழன்று வேலை செய்து கொண்டிருப்பான். வீட்டுப் பாத்திரங்களைக் கழுவிச் சுத்தம் செய்வான். வீட்டுக்கு ஒட்டறை அடிப்பான். மேசை, கதிரை பண்டங்களைத் தூசி தட்டிப் பளிச்செனப் பார்வைக்குப்பட வைத்துக் கொண்டிருப்பான். மீன் அறுத்துக் கழுவி கொடுப்பான். கோழியை உரித்து இறைச்சியாக வெட்டிக் கொடுப்பான். தேங்காய் துருவிக் கொடுப்பான். சில வேளையில் சோறு கறிகளும் ஆக்கிக் கொடுப்பான். இத்தனை கலைகளும் அவனுக்கு இறைவன் கொடுத்த கலையான வரமாகும். இத்தனைக்கும் மத்தியிலும் அவர்களிடம் பாடங்களைக் கேட்டுப் படித்துக் கொள்ளுவான். செய்யாத வேலை அந்த வீட்டிலே எதுவும் இல்லை. எல்லாவற்றுக்கும் பூரணவடிவம் தீட்டிக்காட்டியவன் அவன். பொய் பேசுவதோ, களவு செய்வதோ, எரிச்சல்படுவதோ, பொறாமை அடைவதோ அவனது வாழ்க்கையிலே கிடையாத ஒன்று. அவன் இளகிய மனம் கொண்டவன். எதனையும், தாங்கிக் கொள்ளும் இதயம் படைத்தவன். எவரையும் அனுசரித்து நடக்கத் தெரிந்தவன். எவர் எது சொன்னாலும் கூசாமல் செய்பவன். எவர் ஏசி அவமானம் செய்தாலும் அதனை ஒரு பொருட்டாக எண்ணிப் பார்க்காதவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை அவர்களுக்குத் தாரை வார்த்து விட்டுச் சென்ற தாத்தா அவனது பெயர் மாடசாமி என்று கூறியிருந்தாராம். அந்த வீட்டிலே உள்ளவர்கள் எல்லோரும் அவனை மாடன் என்றுதான் செல்லமாக அழைத்தார்கள். கிழவியும் ஆரம்பத்திலே அவனை அப்படித்தான் அழைத்தாள். அவன் வளர்ந்து பெரியவனாகி கிழவியின் தொண்டுகள் அத்தனையும் செய்யத் தொடங்கியதும் கிழவி பாசம் பொங்க ஆசையோடு, அன்பு உதிர 'ராசா' என்று அழைக்கத் தொடங்கினாள். கிழவியின் மக்கள் எல்லோரும். அக்கினிப் பரீட்சைக்காக நடந்து கொண்டிருந்த ஓயாத சண்டைகளுக்குப் பயந்து ஊரை உதறி எறிந்து விட்டு பெற்ற தாயைத் தனியே போட்டுவிட்டு மேற்கு உலகம் புறப்பட்டுப் போன பிறகு அவனது பெயர் ராசாவாகவே நிலைத்துவிட்டது.

வெளிதேசம் போன அத்தனை மக்களும் மாதம் மாதம் பணத்தை அள்ளி இறைத்தாலும் கிழவியை பராமரிக்க அவன் தேவைப்பட்டான். அவனாலும் கிழவியை ஒதுக்கி எறிந்துவிட்டு தனியாக ஓடிப்போய் வாழ மனம் இடம் தரவில்லை. கிழவியின் பாசமும், விலை மதிப்பில்லாத அன்பும், அனுதாபமும், அரவணைப்பும் அப்பழுக்கில்லாத தாய்மையின் பெருமிதமும் அவன் நெஞ்சிலே நிலையான பாச உணர்வை அழியாத வக்கிரமாக ஓட்ட வைத்தது. பழுத்த கொய்யா கனிக்காக அணில் பிள்ளை தவிப்பது போல் அவளது பிசிறு இல்லாத தாய்மை அன்புக்காக ஏங்கித் தவித்தான். தனது ஆசை, பாசம், ஆவல் அத்தனைக்கும் மூடுவிழா நடத்திவிட்டு கிழவியின் வாழ்வுக்கு உரமானான். மற்றவர்களுக்கு ஒளியைக் கொடுத்து அழிந்து அணைந்து போகும் மெழுகு வர்த்தி போல் அவன் தனது ஆசாபாசங்கள், குடும்ப வாழ்வு அத்தனையையும் அனார்க்கலியின் சமாதியாகக் கட்டி எழுப்பி, கிழவிதான் தனக்கு எல்லாம் என்ற நினைப்போடு வாழத் தொடங்கினான். பசுமையான பூஞ்சோலையின் இங்கிதமான இனிய நறுமணம் போல் அவளது பாசிப்படராத தூய ஓடைபோன்ற நெஞ்சத் தடாகத்தில் கிழவியை அம்மா ஸ்தானத்தில் அமர வைத்தான்.

கிழவிக்கு அவன் அங்கு வந்து சேர்ந்தது பெரும் பொக்கிஷத்தைக் கண்டெடுத்தது போல் ஆகியது. தேடியும் கிடைக்காத இலக்கியம் கரையான் அரிக்காமல் கிடைத்தது போல் இருந்தது. அவன் அங்கு வந்து சேர்ந்தது. இத்தனைக்கும் அவன் அணிவதோ தூய வெள்ளை வேட்டி ஒன்றும், தோளிலே துண்டுச் சால்வையுந்தான். கிழவி எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் அவனுக்கு ஆடம்பர உடுப்புக்களில் நாட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டவில்லை. இதுபோதும் அம்மா போலியான வாழ்க்கை நமக்குத் தேவையில்லை. வானவில்லப்போல் நிலை இல்லாத வாழ்வு மனித வாழ்வு" என்று கிழவிக்கு நியாயம் கற்பிப்பான். கிழவிக்கு அவனது அடக்கமான உள்ளுணர்வு மெய்சிலிர்க்க வைக்கும். "எங்கிருந்தோ வந்தான். இடைச்சாதி நான் என்றான். இங்கிவனை நான் பெறவே என்ன தவம் செய்த விட்டேன்" என்று கிழவியின் வாய் அடிக்கடி முணுமுணுக்கும் கிழவி அழைத்தால் நாய்க்குட்டி போல் காலுக்குள் பணிந்து குலைந்து ஒடுங்கி ஒதுங்கி நிற்பான். அந்தக் கோலத்தைக் கண்டதும் கிழவிக்குச் சிரிப்புத்தான் வரும்.

கிழவி நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் விழுந்ததும் அவனது வாழ்வு பூரணமாக கிழவியோடு சங்கமமாகியது. கிழவி ஒருநாள் பாசம் பொங்கச் சொன்னாள்.

"மகனே! நான் கொஞ்ச நாளையால் செத்துவிடுவேன். எனக்குள்ள சகலதையும் உன் பெயருக்கே எழுதப் போகிறேன். நீ நல்லதொரு பெண்ணைப் பார்த்துக் கலியாணம் செய்யச் சம்மதம் தா" கிழவி முடிக்கும் முன்னே அவன் பேயாகக் கத்தினான். கிழவி பயந்தேவிட்டாள். அவனுக்கா இப்படிக் கோபம் வருகிறது! சினம் தணிந்து பொறுமையாக "என்ன கொடுமையான வார்த்தைகளைக் கூறிவிட்டாய் அம்மா. இந்த அடிமை நாய் இதற்காகத்தான் வாழ்ந்தான் என்றா நீங்கள் நினைத்தக் கொண்டிருக்கிறீர்கள். இப்படி ஒருவார்த்தையை இனிமேல் நீங்கள் கூறி என் நெஞ்சைப் புண்ணாக்காதீர்கள். நான் இந்த அற்ப சுகத்துக்காக வாழ்ந்தவன் அல்ல. உங்கள் கடமை முடிந்ததும் இந்த ஏழை தோளிலே கிடக்கும் துண்டை உதறிக் கொண்டு எங்கையாவது போய்விடுவான். உங்களது சகல சொத்துக்களையும் வயோதிபர் மடத்துக்கும், அனாதை இல்லங்களுக்கும், கோவில்களுக்கும் எழுதிவிட்டு. நிம்மதி அடையுங்கள். அதுதான் நீங்கள் எனக்குச் செய்யும் முழுமையான உதவி கலியாணம் என்ற கதையைத் திரும்பவும் ஒருதரம் கூறாதீர்கள் என் வாழ்க்கையை எப்பொழுதோ நான் தீர்மானித்துவிட்டேன். நான் ஏதும் கோபமாகக் கூறியிருந்தால் என்தாயே என்னை மன்னித்துவிடுங்கள். "கட்டிலிலே நோயால் படுத்துக் கொண்டிருக்கும் அந்தக் கிழட்டு உருவம் அவனது தியாக வேள்வியிலே முழுமையாகச் சங்கமித்து பரவச நிலையில் கிடக்கையில் ...

அவனது நினைவு படீரென அறுபட....

சவம் தூக்கிவிட்டார்கள். நினைவுகளை உதறி எறிந்து விட்டு, குடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளி உடைக்கும் முட்டியை தலையிலே சுமந்தவாறு தனது வளர்ப்புத் தாயின் இறுதிக் கடமையைச் செய்யப் புறப்படுகிறான். சவம் தூக்கிவரப்பட்டு வீதிவழியாகப் பவனி வந்து கொண்டிருக்கிறது. அவனது கண்களால் தாரை தாரையாகக் கண்ணீர் வடிகிறது. அவளது உள்ளம் உருகிவடிய சவ ஊர்வலம் சுடலையை அண்மிக்கிறது.

*15.07.2007*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தீர்த்தக் கரையினிலே** நீண்ட நாட்களாக "ஊமச்சி வம்பில புள்ள உண்டாகி வகுத்தில புள்ளயச் சுமந்த அவலத்தை வெளியே சொல்ல முடியாத மௌனமான இருட்டுப் போல. ஒரு மெல்லிய அசைவுதானுமில்லாமல் கிடந்த வானமும், பூமியும், வாவியும், மரங்களும் எங்கும் செறிந்துகிடந்த தென்னைகளும் மெல்ல மெல்ல அந்தக் "கச்சான் காற்றால்" உசும்பி, உசும்பி இப்பொழுது பேய்த்தனமாக ஆவேசக் கோலமாக தென்னைகளையும், இதர மரங்களையும், ஆற்றங்கரை ஓரங்களில் வேலியாகக் கிளை பரப்பிக் கிடந்த பூவரச மரங்களையும், ஏன் அந்த மட்டக்களப்பு பாடும் மீன் வாவியையும் ஆட்டி அலைக்கழிப்பதைப் பார்த்து, மூத்த தம்பி அண்ணனுக்கு பழைய ஞாபகங்கள் குண்டுமல்லிகைப் பூக்களாகப் பூத்துக் குலுங்கி மணக்கத் தொடங்கின.

"அடே எத்தன எத்தன வருஷமாக இந்தக் "கச்சான் காத்தக் கண்டுத்தம். "கச்சான்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்து, அடிக்கத்துவங்க "ஆடி அமாவாசை"த் தீர்த்தக்கரையும் வந்துவிடும். இப்ப எனக்கு எண்பது வயதையும் தாண்டிடித்து. நான் அறிய அஞ்சு வயதில இருந்து போன வருஷம் கூட தீர்த்தக்கரைக்குப் போயித்தான் வந்த நான். இலங்கைக்குச் சீதா பிராட்டியாரைத் தேடிப்பிடிக்க வந்த வாயுபுத்திரன் அனுமான் எமக்களித்த மாமாங்கத் தீர்த்த மெல்லவா இந்தப் புண்ணிய தீர்த்தக்கரை! இந்தத் தீர்த்தக் குளத்தில் மூழ்கி எழுந்தா நம்மப்புடிச்ச பிசாசு எல்லாம் தொலைஞ்சு போகாதா? அடா அந்தக் காலத்திலே தீபாவளி, வருஷம் போல அல்லவா மாமாங்கத் தீர்த்தக் கரவந்தால் ஊரில ஒரு கலகலப்பு. சொல்ல முடியாத ஒரு ஊமைச் சுகம். அந்த மாமாங்கப் புள்ளையார ஒரு தரம் போய்க் கும்பிட்டா நம்மள ஆட்டிப்படைக்கும் தரித்திரம் புடிச்ச தோஷம் ஓடிப்போகாதா? மூத்ததம்பி அண்ணன் வாய்க்குள்ளே முணு முணுத்து 'தீர்த்தக்கரை' இன்பத்திலே திளைத்துப் போய்விடுகிறார்.

மாமாங்கப் பிள்ளையாரின் தீர்த்தக்கரைக்கு அச்சாரமாகக் கொடியேற்ற ஆரம்ப நிகழ்வு நடந்து முடிந்துவிட்டது. பத்துப் பன்னிரெண்டு திருவிழாவுக்குப் பிறகு கிழக்கிலங்கையே அல்லோலகல்லோலப் படவைக்கும் அந்த ஆனந்தத் தீர்த்தம் அமர்க்களமாக நடக்கும். இந்தக் கிழட்டு வயதிலும் மாமாங்கத் தலத்துக்குப் போய் அந்த அனுமபுத்திரன் தனது அற்பத வாலால் தோண்டிய தீர்த்தக் குளத்திலே ஒருதரம் மூழ்கி எழும்ப, அந்தத் தீர்க்கக் கரையிலே புரண்டு எழ ஆவல் உந்தித்தள்ளகிறது. எத்தனை வருஷமாகத்தான் அவர் அந்த அற்புதத் தீர்த்தக்குளத்திலே தீர்த்தம் ஆடிக்கொண்டுவருகிறார்.! கண்ணும் மணியுமாக இருந்த பொஞ்சாதி உமையாத்தை பத்து வருஷத்துக்கு முன்பு கண்ணை மூடின பின்னர் கடசி மகள் கண்மணிதான் அவருக்குத் துணையாக நிற்கிறாள். ஆத்துப்புழைப்பிலே கரைகண்ட மூத்ததம்பி அண்ணன் இப்பொழுது இந்தப் பயங்கரவாத அட்டகாசத்துக்குள் மூழ்கி எழுந்து ஆத்துப்புழைப்புச் செய்ய "மூப்பு" இடம் தராத அவலத்தால் மகளுக்குக் காவல் நாயாகத் திண்ணையிலே முடங்கிப் போய்க் கிடக்கிறார். என்றாலும் அவர் முதுமைத் தளர்ச்சியால் ஆடிப் போகவில்லை. பல்லொன்றும் விழாமல், கண்பார்வை மங்காமல் ஏதோ சின்ன சின்ன வீட்டு வேலைகளைச் செய்து மகள் போடும் சோற்றைத் தின்று உயிர் வாழுகிறார்.

சமுர்த்திக் கூப்பனால் வரும் அரிசியும் மாதம் மாதம் வரும் நூற்றி ஐம்பது ரூபாய் பிச்சைச் சம்பளமும், வராது வந்ததாக வந்த சுனாமிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பனவுகளும் சோறு போடும் மக்களுக்குச் சிறு ஆறுதலைக் கொடுப்பதை அவர் பெருமையோடு நினைத்துக் கொண்டாலும் "அட ஆத்துப் புழைப்புச் செய்ய முடியெல்லையே" என்ற ஆதங்கம் மரத்தைத் துளைக்கும் வண்டாக அவரைத் துளைத்து வேதனைப் படுத்துவது என்னவோ உண்மைதான். என்றாலும் வீட்டுக்கறிப்பாட்டுக்குப் பஞ்சம் வைக்காமல் ஆற்றங்கரை ஓரங்களில் பழைய வலைகளைக் கட்டி நாளாந்தம் செல்வன், கிளக்கன், திரளி, சள்ளல், கெழுத்தி போன்ற மீன் வர்க்கங்களை விடியச்சாமத்திலே போய்ப் பிடித்துக் கொண்டுவந்து, கறித் தட்டுப்பாட்டை நீக்கியதோடு, மீனுக்கு அலையும் அல்லையல் பொண்டுகளுக்கு ஏதோ மிச்சம் சொச்சங்களைக் கொடுத்து ஓயாத வெற்றிலைச் சப்பலுக்கு வழி பார்த்துவிடுவார்.

அவர் சிறுவனாக இருக்கும் பொழுது தாய் தகப்பனோடு மாமாங்கத் தீர்த்தக்கரைக்கு நடந்து போய்வந்த இங்கிதமான இன்ப நிகழ்வு அவரது முதுமை மனத்திலே பசுமரத்தாணி போல் ஆழமாகப் பதிந்து இன்றும் புல்லரிக்க வைத்து போதை உணர்வுக்குள் தள்ள வைக்கிறது. மாமாங்கத் தீர்த்தத்துக்கு முதல் நாள் சனங்கள் நடந்தும், இருந்து போட்டுவரும் பழைய காலத்து கடகடத்து புகைதள்ளும் ஓட்டை பஸ் வண்டியிலும், அநேகம் பேர் மட்டக்களப்பு வாவி மூலம் தோணிகளிலே மூட்டை முடிச்சுகளை, அன்னதான அமுது குடுப்பதற்கு பானை, சட்டி, அகப்பை, தட்டுமுட்டுச் சாமான்களை ஏற்றிக்கொண்டு போவதையும், ஒரு பெருவிழா ஊரை அமர்க்களப்படுத்துவதை மூத்ததம்பி அண்ணன் மனத்திரையிலே படமாக ஓடவைத்துச் சிரித்துக் கொள்ளுகிறார்

தீர்த்தக்கரைக்கு முதல் நாளே ஊரே புது எழுச்சி பெற்று விழாக்கோலம் பூண்டுவிடும். புதுப்புது உடுப்புகளைச் சிறுவர்கள் போட்டு அலங்கரித்துக் கொண்டும், பளபளத்துப் படபடக்கும் ஜப்பான், சீனச் சீத்தச்சீலையும், லங்கா பப்ளின் புடவைகளையும் பதினாறு முழத்தில் அவையவங்கள் முழுவதையும் மறைத்துப் பெண்கள் உடுத்துக் கொண்டு வெளிக்கிடுவதையும் மூத்ததம்பி அண்ணனால் ஒருபோதும் மறந்துவிட முடியாது. இப்பொழுது பிரமாதமாக வளர்ந்து, பிரமாண்டமான கலகலப்பான வீதியாகக் கிடக்கும் மட்டக்களப்புக் கல்முனை வீதி அந்தக் காலத்திலே சனப்புழக்கமில்லாத பேய்நடமாடும் காட்டுப்பிரதேசமாக இருட்டுச் சூழலில் உறங்கிப் போய்க்கிடந்தது. சனங்கள் பகல் நேரங்களில் கூடத் தனியாகப் போவதில்லை. கூட்டம் கூட்டமாகத் தேவைகளுக்கு மட்டும் போய்வருவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தான்குடிக்கும், மஞ்சந்தொடுவாய் கிராமத்துக்கும் எல்லையாக வானைமுட்ட கிளைபரப்பி பெருத்துக்கிடந்த 'ஏழாலை' என்று மக்களால் அழைக்கப்பட்ட ஆலமரங்களிலே ஆள் அடியன் பேய்கள் வாழ்ந்ததாக ஊர்மக்கள் அச்சத்தோடு பேசிக் கொள்ளுவார்கள்.

"புள்ளையப்புடி புள்ளையப்புடி" என்று மொக்காடு போட்ட பொம்பிளப் பேய் புள்ளையோட ஓடிவந்து கைகளை நீட்டுவதாகவும,; அதிலே பயந்து இரத்தம் கக்கிச் சிலர் செத்ததாகவும் ஊரிலே பரவலாகக் கதை அடிபட்டதுண்டு.

வெம்பு றோட்டு என்றுதான் ஊர்மக்களால் அந்தப் பகுதி அழைக்கப்பட்டது. வீதி இரண்டு பக்கமும் சலகலத்து எந்தநேரமும் தென்றல் காற்றை வீசிக் கொண்டிருக்கும் வேப்ப மரங்கள் வேலிபோல் வரிசை வரிசையாக நடப்பட்டு வளர்ந்து கிடக்கும்.

சடைத்துப் பெருத்து நீண்டு இடைக்கிடையே வம்மி மரங்களும் அவற்றிலே இலை தெரியாமல் பூத்துக்கிடக்கும் மஞ்சள் நிறப் பூக்களின் செண்டு வாசனையும், கிளைபரப்பி விழுதுகள் பரவிக்கிடக்கும் பெருத்து உயர்ந்த ஆலமரங்களும், காற்றிலே எந்த வேளையும் தென்றல் கீதம் இசைக்கும் அரச மரங்களும் காணப்பட்டாலும், படர்ந்த காடுகள், முந்திரித் தோட்டங்கள், இளம் பனங்காய்களை கொல்லை கொல்லையாகத் தொங்க விட்டுக் கிடக்கும் பனை மரங்களும் சிவந்தும் மழை வேகமாக நீலம் காட்டியும் குலைகுலையாகக் காய்ந்து எங்கும் பரவிக் கிடக்கும்.

மாமாங்க தீர்த்தக் கரைக்காலங்களில் கிரான்குளம், புதுக்குடியிருப்பு, தாழங்குடா போன்ற ஊர்களிலிருந்து நடந்து வரும் சனங்கள் மண்முனைத்துறையால் பாதையால், தோணிகளால் அக்கரைப்பட்டு வரும் படுவான்கரைப்பகுதி மக்களும் கூட்டம் கூட்டமாகக் குழந்தை குட்டிகளோடு ஆண்களும், பெண்களுமாக நடந்துதான் தீர்த்தக்கரைக்கு வருவார்கள். ஆண்கள் சிறு குழந்தைகளைத் தோளிலே தூக்கிச் சுமந்தவாறு வேகம் வேகமாகவரும் அழகு மூத்தம்பி அண்ணனை இப்பொழுதும் தூண்டில் போட்டுப் இழுத்து மயக்கம் காட்டுகிறது. ஊர்றோட்டு என்று அழைக்கப்படும் மக்கள் நெருக்கமாக வாழும் ஊர்மனையாலே தீர்த்தக்கரைக்குப் போகவந்து கொண்டிருப்பார்கள்.

கீரை, வெண்டி, கத்தரி, மரவள்ளிக்கிழங்கு, சுரக்காய், பயத்தை, தக்காளி என்று மரக்கறிக் கடைகள் வீதியோரமெங்கும் வரிசையாகக் கிடக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெட்டி பெட்டியாக ஒரு தர வளியான சட்டைபோட்டு இடையிலே துண்டு கட்டிய கலட்டிக்காய்ப் பருவமான குமருகள் கைத்குத்தரிசி விற்கும் அழகு மட்டக்களப்பு வாவி மார்க்கமாக வள்ளத்திலே வந்து கொத்தியாமலைத் தையிர்ப்பானைகள் நிறைந்து கிடக்கும் பாங்கு குருக்கள்மடம், செட்டிபாளையம், மாங்காடு, தேற்றாத்தீவு, களுதாவளை போன்ற ஊர்களிலிருந்து வெற்றிலைப் பொட்டலங்களும், பெட்டிகளும் குவிந்து கிடக்கும் லஷ்மிகரமான தனிச்சிறப்பு பரமநயினார் கோவிலடி திருவிழாக்கோலம் பூண்டுகிடக்கும் போது தீர்த்தக்கரைக்கு நடையிலே வந்த சனங்கள் தயிர்த்தண்ணி, தேசிக்கய்க்கரையல் போன்றவற்றைத் தாகம் தீரக் குடித்துவிட்டு தீர்த்தக்கரையிலே கொடுக்கும் அன்னதானத்திற்கு மரக்கறிகளையும், அரிசி தயிர்ப்பானைகளையும் வாங்கிக் கொண்டு போகும் தனிச்சிறப்பு தீர்த்தக்கரைக் காலத்திலே பரமநயினார் கோவிலடியில் மூத்ததம்பி அண்ணன் கண்ட புதினத்தை எப்படி அவரால் மறந்து விடமுடியும்.

தீர்த்தக்கரைக்கு முதல்நாள் பின்னேரம் தாய் தகப்பனோடு தங்கச்சிமார் இரண்டையும் கூட்டிக்கொண்டு மூத்ததம்பி அண்ணன் நடந்து போன காட்சியை நினைத்துப் பார்க்கிறார். தீர்த்தக்கரைக்குப் போய் முற்றிக்கல் விளைந்த சருவந்துப் போத்தல், தேன் பூந்தி, சீனிகாய்ச்சிப் பொரித்த சீனிக்கடலை, மொரிஸ் நாட்டிலே இருந்து வரும் அன்னாசிப்பழங்கள், சிங்களப் பகுதிகளிலிருந்து வரும் இனிப்புக் கரும்புகள், றம்புட்டான் பழம், பெரிய நாரத்தங்காய், கொடுமுந்திரியாப்பழம் இப்படி எத்தனையோ பண்டங்களை வாங்கி ஆசையோடு சுமந்துகொண்டு வந்த இனிப்புக்காட்சி இந்தக் கிழட்டு வயதிலும் இனிக்கிறது அவருக்கு. ஊர் றோட்டிலும் முஸ்லிம்கள் நிறைந்து வாழும் காத்தான்குடியில் மட்டும்தான் சனப்புழக்கம் நிறைந்து காணப்படும் வீதி இரு மருங்கிலும் நின்று கொண்ட சனங்கள் புதினம் பார்ப்பார்கள். கடப்பு ஒழுங்கைக்குள்ளே மொக்காட்டால் முகத்தை மறைத்துக் கொண்டு முஸ்லிம் மாதர்களும் வேடிக்கை பார்ப்பார்கள். கக்கூசிமரைக்கான், ஓநாய்காவலன், முஸ்தபா போன்ற காடையர்கள் தீர்த்தக்கரைக்குப் போகும் சனக்கூட்டத்தைப் பார்த்து சண்டித்தனமாக உறுக்கிப் பயங்காட்டி நக்கல் அடிப்பதும் உண்டு.

வாய் திறக்காமல் பயந்துகொண்டு காத்தான்குடியைத் தாண்டினால் தொடர்ந்து மஞ்சந்தொடுவாய், நாவற்குடா, நொச்சிமுனை, கல்லடி உப்போடை, கல்லடி என்று தமிழ்க் கிராமங்கள்தான். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கொன்றும் இங்கொன்றுமாகத்தான் வீடுகள் இருக்கும். சனப்புழக்கம் மிகவும் குறைவாகவே காணப்படும். என்றாலும் தீர்த்தக்கரைக்குப் போகும் சனங்கள் பாடியும், காவடி எடுத்து ஆடிப்போகும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். போகும் வழி எங்கும் தாகசாந்தி நிறையக் கிடைக்கும்.

மூத்ததம்பியாருக்குப் பத்து வயது நடக்கும் போதே பெரும் பூதமாகக் கோலம் காட்டும் கறுத்த இரும்புப் பாலமான கல்லடிப்பாலம் போடப்பட்டுவிட்டது. இந்த கறுத்த இரும்புப் பாலத்தால் நடக்கும் போதே இருதயமே வெடித்து விடும் போல் ஒரு பயங்கரமான பயம் ஏற்படும். பயந்து வந்து தகப்பனின் கையைப் பிடித்து பாலத்தால் நடந்து வருவார்.

நடந்துபோய் அமிர்தகழித் தீர்த்தக் கரையை அண்டினால் ஒரே இரைச்சலும் சத்தமுமாக காதைப் புழக்கும். எங்கும் மண் போட்டாலும் மண்விழாதபடி சனக்கூட்டம் காணப்படும். தகப்பனின் கையைப் பிடித்துக் கொண்டு கூட்டத்தை விலக்கி முண்டி அடித்துக்கொண்டு கோவில்ப் பக்கம் போனால் இருபக்கமும் கடைகளாகவே காட்சிதரும். கல்விளைந்து நிறக் கோலம் பூண்ட சருவந்துக் கடைகள் கண்களைத் தூண்டில் போட்டு இழுக்கும். ஓடிப்போய் சருவந்துப் போத்தலைத் தூக்க வேண்டும் போலிருக்கும் மூத்ததம்பிக்கு. காவடி ஆட்டங்களும், கற்பூரச்சட்டி எடுக்கும் பெண்கள் கூட்டமும் கோவிலை அலங்கரிக்கும். கோவிலை அண்டிய பகுதி எங்கும் ஒரே வனாந்திரக் காடாகவே காட்சியளிக்கும். கோவிலைச் சூழவுள்ள பகுதிகள் மட்டுந்தான் சனப்புழக்கம் உள்ள பகுதியாகத் தெரியும். பயபக்தியோடு மாமாங்கப்பிள்ளையாரை வழிபட்டுவிட்டு தகப்பன், தாய், தங்கச்சிமாரோடு போய் கோவில் ஓரத்திலே ஒரு மரத்துக்குக் கீழே இருந்து கொள்வார்கள். மற்றவர்களை இருப்பாட்டிவிட்டு மூத்த தம்பியை மட்டும் தகப்பன் கையிலே பிடித்துக் கூட்டிக்கொண்டு போய் சீனிக்கடலை, கச்சான்கொட்டை, நெய்பூத்தி, றம்புட்டான்பழம் போன்ற உணவுப் பண்டங்களை வாங்கிக் கொடுத்து வரிசையாக அப்பம் சுடும் அப்பச்சட்டிகளை நோக்கிப் போவார். கிழவிகளும், இளங்குமரிகளும் வேகும் அப்பச்சட்டிகளிலே தீக்குளிப்பார்கள்.

பலூன்கள் வெடிக்கும் ஓசையும், விசில் சத்தங்களும், கிலுகிலுப்பைச் சத்தங்களும் பிள்ளைகள் அழும் ஓசைகளும் அந்தப் பெரும் கூட்டத்திலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதறி எங்கும் பரவும். விடிய விடியக் கண்முழித்து தீர்த்தக்கரைப் பக்கம் தகப்பனோடு போனால் வினை தீர்க்கும் யானை முகனார் மாமாங்கத் தீர்த்தக்குளத்திலே தீர்த்தம் ஆட அமர்க்களமாகப் பவனிவருவார். குளத்தை அண்டிய பகுதி எங்கும் அன்னதானச் சோற்றுப் பானைகளும், கறிச்சட்டிகளும் நெருப்புக் காங்கையில் புகை மூட்டத்தோடு தவம் கிடக்கும். அந்த அழகிய அன்னதான விருந்தோம்பல் காட்சிகளைப் பார்த்தவாறு, ஓயாத புகைக் கூட்டங்களால் கண்கள் கொவ்வைப் பழங்களாகச் சிவக்க ஒரு மரத்தடியில் போய் அமர்ந்து கொள்வார்கள். ஏதோ அழுகிற சத்தம் கேட்பதை ஊர்ந்து நோக்கினால் சாத்திரம் சொல்லும் குறப்பெண்கள் இருவரை குழந்தையின் மாலையைப் பிய்த்ததென்று அடித்து இழுத்துக் கொண்டு பொலிஸார் போகும் சோகமூட்டம் நெஞ்சிலே படர்ந்து கண்களிலே நீர் மழையைச் சொரியவைக்கும்.

சத்தம் சத்தம் எங்குமே சத்தம் பெருக்கெடுத்தோடுவது போல் ஒரு சங்கமக்கலப்பு கோவில் வீதியை முட்டி மோதும். தீர்த்தக்கரை ஓரங்களில் தானம் வாங்கும் ஐயர், குருக்கள்மார்கள் வரிசையாக இருபக்கமும் இருப்பார்கள். அவர்களுக்கு முன்னால் அரிசி, மரக்கறிகள், காசு தானமாகக் குவிந்துகிடக்கும். காடுமண்டிக் கிடக்கும் குளக்கரை ஓரங்களிலும் குளத்துக்குள்ளும் பச்சைப் பசேலென்று நீண்டு ஓங்கி வளர்ந்து கிடக்கும் நாணல் புல்லுகள் தென்றற்காற்றிலே ஆடி கோவில் சூழலைத் தென்றல் காற்றல் தாலாட்டும்.

மூத்ததம்பி அண்ணனுக்கு இவற்றையெல்லாம் நினைத்துப் பார்க்கும் பொழுது இப்பொழுது அந்தப் பசுமை காட்சிகள் கண்களிலே அழியாத கோலமாக வீற்றிருப்பதை ஒருதரம் புரிந்து கொள்கிறார். அவர் கல்யாணம் முடிச்சுப் புதுப்பொஞ்சாதியோடு பாடும்மீன் வாவியால் தோணியிலே தீர்த்தக்கரைக்குப் போனதை ஒருமுறை இன்பவெறியோடு நினைத்துக்; கொள்ளுகிறார். பதினாலுமுழச் சோமன் சீலையை உடுத்து உடம்பை தெரியாத அளவுக்கு அந்தக் குஞ்சுப் பொண்டாட்டி நகைகளும் நட்டுமாக தோணியிலே அவதிப்பட்டு ஏறி, அணியத்திலே இருக்க மூத்ததம்பியர் புறகத்திலே லாவகமாக இருந்து கரை வழியாகத் தோணியை ஓட்டியவாறு அண்டிப்படர்ந்துகிடக்கும் வெள்ளைக் கல்லுப் பாறையைத் தாண்டி பூதாகரமாக நீண்டு கிடக்கும் கறுத்த இரும்புப் பாலத்துக்குள் தோணியை விட்டு சீலாமுனை ஆற்றங்கரையை அடைவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்து வேலி போல் வாவிக்கரையை மறைத்துக் கிடக்கும் நச்சுமரத்திலே தோணியை இழுத்துக்கட்டிவிட்டு தீர்த்தக்கரைக்குப் போன இங்கிதத்தை நினைத்தால் அவருக்கு சிரிப்புத்தான் வருகிறது. சீலாமுனை வளவுகளில் தென்னைமரங்களில் கள்ளுமுட்டிகள் தொங்குவதைக் கண்டு வாய் தானாக ஊறி வழியும் பதினொரு முழச் சோமன் சீலையைக் கட்டி நடக்க முடியாமல் தடுமாறித் தள்ளாடி நடந்து வரும் புதுப்பொஞ்சாதியைக் கையிலே பிடித்தவாறு மாமாங்கப்பிள்ளையார் கோவிலுக்கு வந்து அன்று முழுவதும் கோவில் வீதியிலே சுற்றிச் சுழன்று வலம் வந்து திருவிழாவைக் கண்டு கழித்து புதுக் கல்யாண இன்பத்திலே மனைவி கேட்டதெல்லாம் ஆசையோடு வாங்கிக் கொடுத்து ஆல மரத்துக்கு கீழே அமர்ந்து ஆனந்த உணர்வுகளிலே மயங்கி தேன் பூந்தியையும் அப்பச்சட்டி ஓரம் போய் அப்பம் சுடும் கிழவியிடம் பால் அப்பத்தையும் வாங்கி உண்டு களித்து, இன்பக்கிறுகிறுப்பில் புதுப்பொஞ்சாதியை அணைத்து ஆலிங்களம் செய்து நேசித்து மகிழ்வுகண்ட இன்ப கிறுகிறுப்பையும் மூத்ததம்பி அண்ணன் ஒருதரம் நினைத்து கண்களால் கண்ணீர் வடிய நீண்ட பெரு மூச்சு விட்டுக்கொள்ளுகிறார்.

இளந்தாரியாக ஆத்துப்புளைப்புச் செய்த காலத்தில் நல்ல பணப்புழக்கம். மூத்ததம்பியர் அறுவத்தவலைக்குப் போய் பின்னேரங்களில் ஓரா ஒட்டிகளும், மணலைகளும், பாலமீன்களும் கொண்டுவந்து காத்தான்குடி எல்லையிலே வேக்கரிப் பொன்னையாவின் தேத்தண்ணிக் கடைக்குப் முன்னால் விற்பதையும், மீன்களை வாங்குவதற்கு டொக்கு டொக்கென்று மரத்தினால் செய்த மரமிரிதடிகளை காலிலே அணிந்தவாறு பெரிய பணக்கார முஸ்லிம் தனவந்தர்கள், பெரிய கடை முதலாளிகள் குஞ்சம் வைத்த தொப்பியைப் போட்டவாறு மீன் வாங்க வருவதையும் மூத்ததம்பி அண்ணன் ஒரு தரம் நினைத்துப் பார்த்துக் கொள்ளுகிறார்.

இப்பொழுது சுடலை மைதானமாக உறங்கிக் கிடக்கும் அந்தப் பகுதி அந்த நாளில் கலகலப்பு நிறைந்த லட்சுமிகடாட்சம் பெற்ற பணம் விளையாடும் சொர்க்கமாக விளங்கியதை இரையை மீட்டுக்கொள்ளும் தெருமாடுபோல் நினைவுகளை அறுவடை செய்து பெருமூச்சான உஷ்ணக்காற்றை வெளியே விடுகிறார். அந்தநாளில் காசுக்குத் தட்டுப்பாடில்லை. எந்தநேரமும் ஓயாத உழைப்பு. அமுதசுரபியான பாடும் மீன்வாவி மீன் இனங்களை வாரிவாரிக் கொட்டிய காலமது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் காலங்களில் தீர்த்தக்கரை வேளையில் பணம் தண்ணி பட்டபாடாக மூத்ததம்பியரிடம் நிறைந்து காணப்படும். கச்சான் காற்றோடு போட்டி போட்டு அறுத்தவலைக்குப் போன மீன்களைக் கொண்டு வந்தால் கரையிலே மீன் விற்பதற்குக் காத்துக்கிடப்பார்கள். சாச்சா காசியர், சிக்கியாரகாசியர், வகுத்துச்சுப்பர், கிடுகன்காசியர் போன்ற பழைய மீன் வியாபாரிகள்.

தீர்த்தக்கரைக்குப் போகும் அவசரத்தில் மூத்ததம்பியர் அறவிலைக்கு மீன்களைக் கொடுத்துவிட்டு பணத்தை வாங்கிக் கொண்டு, தன்னுடைய கூட்டாளிகளான இளம் மட்டத்தரவளிகளோடு தீர்த்தக்கரைக்குப் போய்விடுவார். அந்த நாளில் பேர் பெற்ற "வேக்காசியம் கோளில் வசீகர மன்னன் என்ற பட்டம் பெற்ற தியாகராசா பாகுபதர் நடித்த சிந்தாமணிப் படத்தை சனக்கூட்டத்தோடு போட்டி போட்டு முட்டி மோதி டிக்கற் எடுத்து மூத்த தம்பியரும், கூட்டாளிமாரும் பார்த்து மகிழ்வார்கள். தீர்த்தக்கரைக்கு வந்த சனங்கள் தியேட்டரை முற்றுகையிட்டு அடிதடிபட்டு உள்ளே புகந்து டிக்கெட் வாங்கி, வேருத்து விறுவிறுக்க படம்பார்த்துவிட்டு தீர்த்தக்கரைத் திருவிழாவுக்குப் போன அந்தக் காலத்துச் சண்டித்தனமான இனிப்புச் சங்கதிகளை பூரிப்போடு இந்தக்கிழட்டு வயதிலும் நினைத்து மகிழ்கிறார் மூத்ததம்பி அண்ணன். இன்று மட்டககளப்பிலே புதுப்பாலமாக விளங்கும் ஆற்றங்கரை ஓரம் அன்று மாடு வெட்டும் இடமாக இருந்தது. அந்தப் பகுதியில் வெட்ட வெளியில் ரெண்டினால் கட்டப்பட்ட தியேட்டருக்கு அனோஜா என்று பெயர். இன்று பெற்றோலியம் இருக்கும் இடத்தில் வெலிங்டன் தியேட்டர் இருந்தது. அதுவும் 'ரென்ரால்'கட்டப்பட்ட கொட்டகைத் தியேட்டர்தான். தீர்த்தக்கரைக் காலத்தில் இந்த கொட்கைத் தியேட்டர்களில் ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாணி, வேதாள உலகம், வாழ்க்கை சிறிவள்ளி போன்ற பழைய படங்களை மூத்ததம்பியண்ணன் கூட்டாளிமார்களோடு பார்த்திருக்கிறார். மாமாங்கத் தீர்த்தக்கரைக் காலங்களில் இந்தத் தியேட்டர்கள் சனக் கூட்டத்தால் அமர்க்களப்படும்.

ஆமாம் விடிந்தால் தீர்த்தக்கரை இரவுப் பயணம், இப்பொழுது அவருக்குச் சரிப்பட்டுவராது. முதுமை மகள் கண்மணியும் புருஷனும் புள்ளைகளும் இரவு முழுவதும் தீர்த்தக்கரையிலே கண் விழித்துப் புதினம் பார்த்துவிட்டு "புல் புல்" என விடிய முன்பே வீட்டுக்கு வந்துவிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ அக்கினிப் பரீட்சைகளைக் கடந்து இன்று காடழித்து பெரும் கோபுரத்தோடு நகரச் சூழலில் கொலுவிருக்கும் மாமாங்கப்பிள்ளையாரைத் தரிசிக்க மூத்ததம்பி அண்ணன் தூய வெள்ளை வேட்டியை இடுப்பில் கட்டி வெள்ளை வெளேரென்ற துண்டுச்சால்வையைப் போர்த்தியவாறு தீர்த்தக்கரையை அடைகிறார். அரோகராக் கோஷம் வானை முட்டுகிறது. மூத்ததம்பி அண்ணனும் தீர்த்தக்கரைக் குளத்திலே இறங்கித் தீர்த்தமாடுகிறார்.

*12.08.2007*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அது ஒரு அழிவுக்காலம்

"அடா! கேடுகெட்ட கலிகாலம் விளையாட்டுக் காட்டுதிடா தம்பி. இந்த வயது போன புழைக்க முடியாத காலத்திலும் இப்படி ஆட்டம் போடுறானே. அதனால்தான் இந்த ஊரில இத்தன அழிவும் நாசமும் ஏற்படுகிது.

"என்ன சிவசம்பு வானம் மப்பும் மந்தாரமுமாக ஒரே இருட்டுக் காடாகிக் கிடக்கு. றேடியோவிலும் அடிக்கடி சொல்றான் இடி முழக்கத்தோட பரவலாக எங்குமே மழை பெய்யும். பலத்த காத்து வீசும். கடலுக்கு. ஆத்துக்குப் போறவங்க தொழிலுக்குப் போகாம வீட்டோட இருங்க. மூச்சுவிடாமல் றேடியோவில் சொல்லிக் கொண்டிருக்கான். நீ என்னடா தம்பி ஆத்துக்குப்போக வெளிக்கிட்டுத்தா"

"அவனுகள் கிடக்கான் கந்தையாண்ண. ரெண்டு வருஷத்துக்கு முந்தி மார்கழி மாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் வந்த நேரத்தில ஆத்திலதான் வலை வீசித்துக் கிடந்த நான். அந்த நேரத்தில நான் வலை வீசி மீன்புடிச்ச "விரிச்சல்" ஆத்துப்பக்கம் ஒரு அசுமாத்துமுமில்ல. சாடையா மழ தூறத் துவங்க, சரி புடிச்ச மீனோட ஊருக்குப் போவமெண்டு எண்ட கூட்டாளி சுப்புறுட்டச் சொல்ல அவனும் தலையை மெதுவாக ஆட்டிச் சமிக்கை காட்டி "சவளை" ஆத்தில போட்டுத்தொடுக்க சாடையா அலை பரவி வந்தது. என்னடா எண்டு அங்கு பாத்தா வேரோடு புடுங்கி எறியப்பட்ட தென்னை, பன, வேம்பு, மா, பிலா எண்டு பல சாதி மரங்களும் உடைஞ்ச ஊட்டின் சிதைவுகள், கதவுகள், ஜன்னல்கள், ஊட்டுச்சாமான்கள், றேடியோ ரீவி, இல, குழ, மட்ட, ஆடு, மாடு, கோழி, நாய்கள், பூனைகள் ஆம்பிள, பொம்பிள எண்டு மனிதச் சவங்களும் மிதந்து வர எங்களுக்கு அஞ்சும்கெட்டு அறிவும் கெட்டு எப்படி இவையெல்லாம் வருகுது எண்டு ஒன்றுமே புரியாம பேய் அறைஞ்சவன் போல் தோணியைத் தொடுக்காமல் அவைகளப் பயத்தோடு பார்த்துக்கிடந்தம். புறகு நெஞ்சுக்குள்ளே அடைப்புவந்தது போல் அவதிப்பட்டு ஆத்தமூடிக்கிடக்கும் அத்தன அழிவுகளையும் விலக்கி விலக்கி ஓயாத போராட்டத்தின் மத்தியிலே ஊர்க்கரையை அடைஞ்சா அங்க நம்மிட ஆத்தங்கரையில புதினம் பார்க்க, மிதந்து வரும் சாமானப்புறக்க தேர்த் திருவிழாக் கூட்டம். அப்பதான் எங்களுக்கு தெரியும். கடல் பெருக்கெடுத்து கடலை அண்டிய ஊருக்குள் வந்த சங்கதி."

"அப்ப சிவசம்பு ஆத்தில கடல் வந்து பெருக்கெடுக்கல்லையே" ஆத்துக்குள்ள கடல்த் தண்ணி வந்தாலும் கந்தையாண்ண அது ஊருக்குள்ள வந்து அழிச்சமாதிரி பெருக்கெடுக்கல்ல. சாடையா தண்ணிமட்டம் கூடியதும் ஊர அழிச்சு ஆத்துக்க தள்ளியதுந்தான். நம்மிடவண்ட ஆத்துப்புழைப்புக்குக் கொண்டு போற தோணிகள் எல்லாம் ஒரு முள்ளுக்கொப்பும் முறியாம போட்ட மாதிரித்தான் கரையில இழுத்துக் கிடந்தது. கடல்தான் ஊருக்க வந்து கடலை அண்டிய ஊர்களையும் சனங்களையும் பலி எடுத்தது. ஆத்துக்குள்ள வந்த கடல்த் தண்ணி சவங்களையும் மற்ற எல்லாத்தையும் கொண்டுவந்து "ஆத்த" நிரப்பினதல்லாம அவனுகள் சொல்ற "சுனாமியால்" ஆத்துக்கும் ஆத்த அண்டிய ஊர்களுக்கும் இம்மியளவும் சேதம் ஏற்படல்ல. ஆனா, மரங்களும் கம்பு தடிகளும் நாலாவிதமான சாமான்களும் இல, குழ, மட்ட, உடஞ்ச உடமைகள், தளபாடங்கள், கல்லுகள், மண்ணுகள், குப்பகூளம். கழிகள் ஆத்தில வந்து நிறைஞ்சு போனதால, மீன்புடிகாறனுக்கு மீன்புடிக்கிற கொஞ்சம் கஸ்ரமாப்போயித்து. கடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புழைப்புச் செய்யிறவனுக்கு ஏற்பட்ட அழிவு நம்மிட ஆத்துப்புழைப்புச் செய்யிறவனுக்கு சூப்பரவாக வரல்ல. ஆத்தில நூத்துக் கணக்கான சவங்கள் அழுகி மிதந்ததால சனங்கள் கொஞ்சநாள் மீன்சாப்பிட அருவருப்புப் பட்டாங்க. அதனால் ஆத்துப் புழைப்புக்கு கேடுவந்தது என்னவோ உண்மைதான்.

ஆத்தில வல போடுறதும் கொஞ்சம் கஸ்ரமாக இருந்தது. சனங்கள் மீனும் கறிக்கு வாங்கல. அதனால் ஆத்துப் புழைப்புக்குத் தடை ஏற்பட்டது ஊரே அறிந்த சங்கதிதான். எண்டாலும் ஆத்துப்புழைப்புக்காறனுக்குக் சுவிப் அடிச்சதுபோல நிறுவனங்களும் அரசாங்கமும் பணமும் பண்டங்களும் தோணிகளும் உடுபுடவைகளும் சைக்கிள்களும் பெற்றோல்மக்ஸ் லைற்றுகளும் பானை, சட்டி, தளபாடச்சாமான்கள் எல்லாம் தண்ணிப்பட்ட பாடாகக் கிடைச்சது. இன்னா சுனாமியும் ரெண்டு வருஷத்தத்தாண்டி மூணாவது வருஷத்த எட்டிப்பார்க்கபோகுது. இன்னமும் வங்கிகள் மூலம் பணமும் நிறுவனங்கள் சார்பாக பத்து இலட்சம் பெறுமதியான வீடுகளும் உணவுச் சாமான்களும் கொடுபட்டுக் கொண்டே இருக்கின்றன. ஆத்துப் புழைப்புச் செய்யிறவனுக்கு இவையெல்லாம் கிடைத்தது ஏதோ சொர்க்கவாசலைத் திறந்துவிட்டமாதிரி சந்தோஷமும் பூரிப்பும் உச்சம் தலை தொட்டு உள்ளங்கால் வரை பரவிக்கிடப்பதால ஒரே குடிகுடியாகக் குடித்து கும்மாளம் போடுறதும் பொண்டாட்டி புள்ளயளத் துவச்சித் தள்ளுறது மாயிருக்கானுகள். ரோஷம் கெட்டவனுகள் ஒசிச் சோத்துல உடம்ப வளர்த்தவனுகள். கோவில்களில குடுக்கிற 'அமுதுச்சோத்துக்கு' போட்டிபோட்டு முன்பந்தியிலே குந்திக்கிடந்தவனுகள், புண்ணியத்துக்கிரங்கி நிறுவனங்கள் கொடுத்த பத்துப் பதினைந்தாயிரம் பெறுமதியான தோணிகள் அறாவிலைக்குக் காத்தான்குடி யாபாரிமார்களுக்கு வித்துத் தினந்தினமும் குடிச்சுக்குடிச்சு வீடு வாசல்களை நாத்தமடிக்க வெச்சிருக்கானுகள். இந்தச் சுனாமி வந்ததால் கந்தையாண்ண நிண்டவன், இருந்தவன், கொடுப்பனவு கொடுத்தவன், வழி நடத்தியவன், மேற்பார்வை பார்த்தவன் எண்டு எல்லோருக்கும் நல்ல எழுப்பங்கா. இந்தச் சுனாமி வந்தாலும் வந்தது நம்மிடவனுகள் ஆத்துப்புழைப்பையும் மறந்து சாராயத் தவறணைகளக் குத்தகைக்கு எடுத்து அங்கே தவம் கிடக்கானுகள்."

"ஒண்டா சிவசம்பு உண்ட வாய்க்குள்ள சர்க்கர மூட்டையைக் கொட்டினாலும் தகும். அது சரிடா தம்பி. உங்கட பக்கத்து ஊட்டில ஒரே அமர்க்களமாமமே". "தார்ப்பீப்பா" மாதிரி தொந்திபெருத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடக்கும் கந்தையண்ணன் கண்களைச் சிமிட்டி முகத்தை கோணலாக்கி சிவசம்புவை ஓரக்கண்களால் பார்க்கிறார்.

அந்தச் சங்கக்குறைச்சல ஏன் கேக்கிறிங்க கந்தையாண்ண, அந்த ஊட்டில சாராயாப்போத்தல்களும் இறைச்சிக்கறியும் விருந்துந்தான் எந்தநேரமும். அவன் கனகசப இருக்கானே இந்தக் கிழட்டு வயதிலும் அவன் காசண்டா பீயையும் தின்னுவான் எண்டு, அவன பத்தி ஊருக்குத் தெரியுமே கந்தையாண்ண, அந்த ஊட்டில எந்த நாளும் குடியும் கும்மாளமும் தலை விரிச்சாடுதண்ணே", "அடா! கேடு கெட்ட கலிகாலம் விளையாட்டுக்காட்டுதிடா தம்பி. இந்த வயது போன புழைக்க முடியாத காலத்திலும் இப்படி ஆட்டம் போடுறானே. அதனாலதான் இந்த ஊரில இத்தின அழிவும் நாசமும் ஏற்படுது. சுனாமி எண்டும் சூறாவளி வெள்ளப்பேருக்கு எண்டும் எத்தனையைக் கண்டுத்தெண்டா தம்பி, இந்தக் கேடு கெட்ட கலிகாலத்தில".

"ஓமண்ணே! ஓமண்ணே!! மெய்யான கததான். நீங்க சொல்றது. கனகசப ஒரு போக்கணம் கெட்டவன் அண்ண. இப்பவும் மூண்டு குமர்ப்பெட்டைகள் ஒண்டுக்கும் வழியில்லாமல் கிடக்குதுகள். இல்லாட்டித் தனியார் நிறுவனங்களும் அரசாங்கமும் கொடுக்கிற சுனாமி நிவாரணங்கள இப்படி நாசமாக்குவானா. இல்ல தெரியாமத்தான் கேக்கிறன், அவண்ட பொஞ்சாதியும் புள்ளைகளும் சாப்பாட்டுக்கு ஆலாப்பறக்குதுகள். இந்தக் கொள்ளிவாய்ப்பிசாசு ஓசியில கொடுத்த தோணியையும் சாமான்களையும் வித்துத் தினமும் குடிச்சு பொஞ்சாதியையும் மூணு குமர்ப்புள்ளைகளையும் போட்டு அடிச்சுக் கொல்லுறான். ஒழுங்கான சாப்பாடு இல்லாம இந்த வயது போனகாலத்தில காயவெச்ச கருவாடு போல அவண்ட பொண்டாட்டி சங்குவதி கிடக்கிறாள். சதையே இல்லாத அந்த எலும்புக் கூட்டக்கூட அந்த வெறிபுடிச்ச நாய் விட்டுவைக்கானா. தினமும் சாராயப் போத்தலோடு கும்மாளம் அடிக்கிறாங்க. தலையால தெறிச்சிடுவான், ஓசில கிடைச்ச சுனாமி நிவாரணத் தோணிய அறாவிலைக்கு வித்துப்போட்டு உழைக்க முடியாத இந்த கிழட்டு வயதில அந்த ஊட்டத் தரமட்டம் ஆக்குறாங்கா. நல்லதுகள் பொடுக்கெனப்போகுதுகள். இந்தத் தலையால தெறிச்சதுகளுக்கெல்லாம் ஒரு அழிவு வருகுதில்லையே",
"வருண்டா சிவசம்பு, வராமல் போகாது. எத்தன சுனாமி, சூறாவளி, வெள்ளப்பேருக்கு வந்தாலும் இந்த நாசமாப் போனவனுகள் திருந்தமாட்டானுகள். இருந்த ஊரும் முழுமையாக அழிஞ்சு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுவாசல்களோட பொஞ்சாதி, புள்ளையள், இனசனம் முற்றாகத் தொலைஞ்சுபோய் நடைப்பிணமாகத் திரியிற எத்தனையோ சனங்களுக்கு வாழ்வும் போய் நிம்மதியும் போய் சவம்போல கிடக்குதுகள். சுனாமி வந்த ரெண்டு வருஷமும் போய் மூணாவது வருஷமும் எட்டிப்பார்க்கிற காலத்திலும் இன்னமும் வீடு கட்டிக்குடுக்கல்ல பலருக்கு. ஒண்டுமே பாதிக்காத இதுகளுக்கு இந்த வயதிலும் ஆட்டம்போட அவனுகள் அள்ளி அள்ளிக் குடுக்கானுகள்". "துண்ணுத்துக்கேணியில கட்டிக்குடுத்த வீட்டுக்கும் ரகசியமாகக் காசு வாங்கித்தானாம் எண்டு ஊரில குசுகுசுப்பு எழும்புது. காசு குடுத்துப் போட்டு வெளியூர் அகதிகள் அதில இருக்குதுகளாம். அதனால் தலைகால் தெரியாமல் தினமும் குடியும் கூத்தும் நடக்குது. அவனுகள் புண்ணியத்துக்கு இரங்கிக் குடுக்கிறத்த பாதுகாத்துப் புள்ளகுட்டிகள நல்ல நிலைக்கு கொண்டு வருவம் எண்டு எண்ணாம தலையால தெறிச்சவனுகள் நாசமத்தப்போறானுகள்" கந்தையா அண்ணன் ஆத்திரத்தால் விசுவாமித்திர முனியாக கனல் கக்க, "கடல் தண்ணி கொஞ்சம் எட்டிப் பார்த்த 'துண்ணுத்துக்கேணியில நிறுவனங்கள் ஒட்டுமொத்தமாக வீட்டுக்கு ரெண்டு, மூணு எண்டு எல்லோருக்கும் பத்து இலட்சம் பெறுமதியான வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கு. புத்தியாக எல்லாத்தையும் பெற்று நிம்மதியாக வாழுறானுகள் சிலபேர். அவனுகள் புத்தியாகப் புழைக்கத் தெரிஞ்சவனுகள். குடுத்தத்த இப்படி நாசமாக்கிறதுகளும் இருக்குக் கந்தையாண்ண"

"ஓண்டா தம்பி சிவசம்பு. அப்படியும் சில பேர் புத்தியாக நடந்து முன்னேறுகிறானுகள். செத்தைக்குடிலெல்லாம் கடல் எட்டிப்பார்த்த புண்ணியத்தால பெறுமதியான கல்வீடுகளாகப் போச்சு, ஒரு பக்கம் அழிவத் தந்தாலும் இன்னொரு பக்கம் சந்தோஷத்தக் குடுத்திருக்கிறாள் கடல்தாய்."

'சரிடா தம்பி' ஆத்தில மீன் புடிக்கப்போற உன்ன இவ்வளவு நேரமும் மினக்கெட வெச்சு ஊர்வம்ப அளந்துபோட்டன். கூட்டாளி சுப்புறு ஆத்தங்கரையில காத்திருப்பான் நீ போய்த்துவாடா தம்பி" கந்தையா அண்ணன் சிரிச்சபடி கூற, சிவசம்பு வேகமாக ஆற்றங்கரையை நோக்கி நடந்து போகிறான்.

கனகசபையைப் பற்றி அந்த ஊரே சரியான எடைபோட்டு வைத்திருக்கிறது. அவன் சிறுவனாக இருந்தபொழுதே 'தலையால தெறிச்சவன்' என்று ஊர்மக்களால் வசைபாடப்பட்டவன். அவனது தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுமணி புருஷன் காத்தானை சின்ன வயதிலேயே பறிகொடுத்து விதவையானவள். அப்பொழுது கனகசபை கண்டுமணிக்கு நாலு வயதுப் பொடியன். புருஷன முதலைக்குப் பறிகொடுத்த கண்டுமணி நிலைகுலைந்துதான் போனாள். பிழைப்புக்கு அப்பச்சட்டியை வைத்து நெருப்புக் குளிக்கத் தொடங்கினாள்.

தகப்பன் இல்லாத கனகசபையை நல்லநிலைக்குக் கொண்டுவர கண்டுமணி தன்னையே மெழுகாக உருக்கினாள். ஆனால், அவன் கனகசபையோ கண்டுமணியைப் பேய்க்காட்டி விடலையாக ஊர்சுற்றத் துவங்கினான். பள்ளிக்குப் போறன் எண்டு கூறிக்கொண்டு புத்தகத்தையும் சிலேட்டையும் ஆற்றந்துறையை அண்டிய பற்றைக்காட்டுக்குள்ளே மறைத்துவைத்துக் கொண்டு ஆற்றங்கரைத் தென்னை மரங்களிலே ரகசியமாக ஏறி "இளனியைக்" குடிப்பதும் ஆற்றங்கரையிலே வேலியாக வளர்ந்து கிடக்கும் "பூவரச மரங்களில்" குரங்குபோல் பாய்ந்து விளையாடுவதும் ஆற்றங்கரையிலே கைகளால் இறால் கட்டி அவைகளை விற்றுப்பணம் எடுத்து கடைகளில் "கள்ளத்தீன்" வாங்கிச் சாப்பிடுவதும் அவனது நாளாந்தத் தொழிலாகிவிட்டது.

'அடுப்புச்சட்டியிலே' நெருப்புக் குளித்துக் குளித்து கண்டுமணி ஓடாகத் தேய்ந்து போனாள். கனகசபை கசபோக்கிலியாக உருமாறி ஊரிலுள்ள குமர்ப்பெட்டைகளை வம்புக்கிழுத்து கண்டுமணியின் மானத்தைக் கப்பல் ஏற்றிக் கொண்டு வந்தான். ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு முறைப்பாடு கனகசபையைப் பற்றி கண்டுமணிக்கு வந்துசேரும். கண்டுமணி தினமும் தலையிலே அடித்துக் கத்துவாள். ஆக்கிப்போட்டால் 'கள்ளப்பூனை' போல் ரகசியமாக வந்து வயிறுமுட்ட அவளுக்கும் கறிகள வைக்காமல் முழுங்கித்துப் போய்விடுவான் அவன். "மானத்துக்குத்தான் சீல கட்டின. இனி எண்ட உசிர மாச்சாத்தான் சரிப்பட்டுவரும். என்று குமுறிக்குமுறி கத்தி அழுவாள் கண்டுமணி. அவன் ஆத்தந்துறைக்குப் போய் ஆத்துக்குப் போனவர்களின் 'தோணிய' ரகசியமாக எடுத்துக்கொண்டு 'விரிச்சல்' வளைந்து தீவு போல்கிடக்கும் 'மாவிலங்கைத்துறை' ஆறு என்று தோணியில் ஓடி ஓட்டப்பந்தயம் வைப்பான். கரையிலிருந்து ஆத்துக்குப் போய்வந்த தோணிக்காரர்கள் சத்தம் போட்டு வரும்படி கூப்பிட்டாலும் அவன்ட வேலையை முடிச்சுப்போட்டுத்தான் கரைக்கு வருவான். ஆத்திலே மாரடித்து விட்டுவந்த தோணிக்காரன் சினம் பொங்கிவர கம்பை எடுத்து அடிக்கத் துரத்தினால் சாறனைக் கிளப்பி "அம்மணக்கோலத்தைக்" காட்டி நக்கல் சிரிப்புச்சிரிப்பான். இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வளப்புணி" வேலைகளால் ரோஷக்காரக் கண்டுமணி, எவன் எவன் வாய்களாலோ "தூசனை" அர்ச்சனை பண்ணப்படுவாள்.

கார்த்திகை, மார்கழி மாதங்களில் மட்டக்களப்பு வாவியின் ஆற்றுவெள்ளம் பெருக்கெடுத்து "கந்தட்டி வளவுகளை" முற்றுகை செய்யும் பொழுது கனகசபை அவனைப் போன்ற விடலைப் பொடியன்களைக் கூட்டிக்கொண்டு வந்து வெள்ளம் புனலாக ஓடும் பால்போன்ற 'வெள்ளக்கொக்குகள்' போல் நுரை கக்கிப்பாய்ந்தோடும் 'பாடும்மீன் வாவியிலே' நீச்சல் போட்டுக் கும்மாளம் அடிப்பான். இப்படிக் கும்மாளம் அடிச்ச நேரத்திலே பூபதியின் ஒரேமகனான மார்க்கண்டை பொங்கிச் சீறிப்பாய்ந்த ஆவேச வெள்ளப்புனல் சுருட்டி அங்கேயும் இங்கேயும் அலைக்கழித்து பிணமாகக் கரையிலே ஒதுக்கியதை அந்த ஊரின் 'பழங்கட்டைகள்' இன்னும் மறக்கவில்லை. பூபதி மதுரையை எரித்த கண்ணகியாகப் போர்க்கோலம் பூண்டு கண்டுமணியிர வீட்டபோய், 'எடியே தட்டுவாணி, உண்ட கொலகார மகன் எங்கடி? தளுக்கிமினிக்கித்து திரியிற கேடுகெட்டவளே நாசமாப்போன உண்ட மகன் கனகசப, எண்ட மகன சீறிப்பாயிற ஆத்து வெள்ளத்தில குளிப்போமெண்டு கூட்டித்துப்போய் ஆத்துக்குப் பலி கொடுத்துத்தாண்டி மூதேவி! மூளி!! அலங்காரி!!! என்று மண்ணை அள்ளி வாரி இறைத்து கனகசபைக்குத் திட்டிச்சாபம் போட்டாள் பூபதி. கண்டுமணியால் ஒண்டுமே கதைக்க முடியவில்லை. ஒப்பாரி வைத்து அழுதாள். வேறு என்னதான் அவளால் செய்ய முடியும்.

வளர்ந்து பெரியவனாக ஆனபொழுதும் ஒழுக்கம் கெட்டவனாகவே கனகசபை வாழ்ந்தான். ஆத்துப் புழைப்புக்கு அவன ஒருத்தரும் கூட்டிப்போறல்ல. அவன் களவாகத் தோணியை எடுத்தக்கொண்டுபோய் 'கண்ணாக்காட்டு' ஓரங்களில் 'ஒட்டி', 'சள்ளல்' மீன்பிடிக்க வைத்திருக்கும் 'ஒட்டிக்கூடுகளில்' உள்ள மீன்களைக் களவாடி ரகசியமாகக் காத்தான்குடிச் சந்தையிலே விற்றுக் காசு சம்பாதிப்பது வழக்கமாகிவிட்டது. ஒருநாள் 'ஒட்டிக்கூட்டுக்' காரர்களால் கையும் களவுமாகப் பிடிபட்டு செம்மையாக அடியும் உதையும் பட்ட பிறகும் அவன் திருந்தியபாடில்லை. 'நண்டுக்கூட்டுக் காரர்களின் நண்டுகளைக் களவாக எடுப்பதும் மீன்பிடிக்கப் போட்ட வலைகளை ஆத்திலே வைத்துக் களவெடுத்து வருவதும் அவனது வாடிக்கையான தொழிலாகிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்ர மானம் போகிறது என்று பயந்து சீட்டுப்போட்டு விழுந்த காசைக்கொடுத்து தோணியும் வலையும் வாங்கிக் கண்டுமணி கொடுத்தும் அவன் கனகசபை தன்ட கள்ளப்புத்தியை விட்டபாடில்லை. நெடுகிலும் அவனைப் பற்றிய புகார் ஊருக்குள்ளே வந்து கொண்டேயிருந்தது. ஊருக்குள் சாராயம் விற்கும் அத்தனை வீடுகளிலும் அவனுக்கு நல்ல தொடர்பு உண்டு. ஆம், கனகசபை நிரந்தரக் குடிகாரன். அவனை வைத்துக் கொண்டு லாபம் சம்பாதிக்கும் சாராயக் குடும்பங்கள் எத்தனை, எத்தனையோ. சாராயம் போதாதென்று கள்ளுத்தவறணையிலும் நிரந்தரக் கள்ளுக்குடிகாரன் என்று பெயர் எடுத்திருந்தான்.

அவன் பள்ளிக்கூடத்துக்குப் போகிறேன் என்று கண்டுமணியின் கண்களில் மண்ணைத் தூவிப் போட்டு விடலையாக ஊரை மேய்ந்த காலங்களில் தென்னை மரங்களில் ஊறிக்கிடக்கும் கள்ளுமுட்டிகளை மரத்திலே ஏறி வட்டுக்குள் வைத்து கள்ளைக்குடித்து வெறி மயக்கத்தில் ஆத்தம் துறைக் காட்டுப் பக்கம் மலம் கழிக்க வாற ஒரு தரவளியான சில்லென்று தலையைச் சிலிப்பிக் கூவுகின்ற மதாப்புச் சேவல் போல வளர்ந்து பக்குவப்படத் துடிக்கும் இளங்குட்டிகளின் முதுகைக் கிள்ளி, சேட்டைகள் புரிய ஆயத்தமாகும்போது அதுகள் கத்திக்கொண்டு தங்கள் தங்கள் வீடுகளுக்கு ஓடிப்போய் ஒப்பாரி வைத்துச் சங்கதிகளைக் கூறவும் குட்டிமார்களின் தாய், தகப்பன்மார் கண்டுமணியின் வீட்டுக்குப் படை எடுப்பதும் அந்த இளமைக் காலத்திலே ஊர் கண்ட வம்பு கலந்த காட்சிகள் தான்.

சங்குவதி சீனித்தம்பி அண்ணாவியாரின் ஐந்தாவது பெண்புத்திரி. வளவுக் கிணற்றடியில் மதமதத்து வளர்ந்து கிடக்கும் செவ்வாழை போல் துறுதுறென்று செம்மையாக வளர்ந்து வீட்டுக்குள் உறைந்து கிடந்தவள் சங்குவதி. கோவில் திருவிழா காலங்களில் தான் ஊர் அழகிகளின் தரிசனம். ஊரிலுள்ள இளந்தாரிகளுக்குத் துல்லியமாகக் கிடைக்கும். அழகின் அவதாரமாகத் திகழ்ந்த சங்குவதியைத் தட்டிப்பறிக்க அந்த ஊரிலுள்ள மட்டத்தரவளிகள் போட்டி போட்டது என்னவோ உண்மைதான். சீனித்தம்பி அண்ணாவியார் கைதேர்ந்த கூத்துக் கலைஞர். ஊரிலே ஆடி அரங்கேறிய இராமநாடகம், நொண்டி நாடகம், அலங்காரரூபன் நாடகம், பப்பரவாகன் நாடகம், வள்ளி திருமணம், வைகுந்தம், அல்லி நாடகம் என்று பேர் பெற்ற கூத்துக்களைப் படைத்துப் பல கூத்துக் கலைஞர்களை உருவாக்கி நாட்டுக்கூத்து வளர அளப்பரிய தொண்டாற்றியவர் சீனித்தம்பி அண்ணாவியார். அவர் கூத்துக்களரியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துப் பாட்டுப்பாடினால் வேடன்கரை ஆத்திலே மீன்பிடிப்பவர் காதிலே துல்லியமாகக் கேட்குமாம். அவ்வளவு அதிவேகமான சத்தம் அவருடைய வெண்கலச் சத்தம். அவரது மத்தள அடிக்கு எந்த ஊர் அண்ணாவியும் ஈடுகொடுக்க முடியாது. அப்படிப்பட்ட சீனித்தம்பி அண்ணாவியாரின் மகள் சங்குவதியை எப்படியாவது அடையவேண்டுமென்று கசனசபை சபதம் எடுத்துக்கொண்டான். சீனித்தம்பி அண்ணாவியார் நல்ல உழைப்பாளியும் வசதிக்காரனுமான சாமித்தம்பியை மாப்பிள்ளையாகப் பேசி முடித்துக் கலியாணத்துக்கும் நாள் குறிச்சாகிவிட்டது.

கனகசபை ஒருவருக்கும் தெரியாமல் மாந்திரிக ஊரொன்றுக்குப் போய் அங்கு பேர்பெற்ற மந்திரவாதியான முருகன் என்பவரைப் புடிச்சு வசீகர மந்திரப் பொடியை வாங்கிக் கொண்டு வந்து சீனித்தம்பி அண்ணாவியாரின் வளவுக்குள் நடுச்சாமத்தில் ஊதிய அடுத்தகணம் எவருக்கும் தெரியாமல் மோகவெறி தலைக்கேற சங்குவதி கனகசபையைத் தேடி அவனது வீட்டுக்கு ஓடி வந்து விட்டாள். கண்டுமணிக்கு என்னவென்று புரியாத ஒரு அதிர்ச்சி. விடிஞ்ச பிறகுதான் சங்குவதி கனகசபையின் பொண்டாட்டி ஆன கதை சீனித்தம்பி அண்ணாவியாரின் வீட்டுக்கும் மாப்பிள்ளையாக நாள் குறித்த சாமித்தம்பிக்கும் ஏன் அந்த ஊருக்குமே தெரியவந்தது. தெரிந்து இனி என்னதான் செய்ய முடியும். சட்டப்படி பதிவுசெய்து சங்குவதியை மனைவியாக்கிக் கொண்டான் கனகசபை. இந்த அவல நாடக அதிர்ச்சியால் சீனித்தம்பி அண்ணாவியார் மாரடைப்பு வந்து அடுத்த நாளே மண்டையைப் போட்டுவிட்டார். ஊரே இந்த அநியாய நிகழ்வுகளால் சோகத்தில் உறைந்து போய்க் கிடந்தது.

பிறகு சங்குவதி எத்தனையோ துன்பங்களைத் தாங்கிக்கொண்டு கனகசபையோடு வாழ்ந்து பிள்ளைகளைப் பெற்று கட்டிக் குடுத்தும் கட்டிக் கொடுக்காமலும் சீரற்ற துன்பவியல் வாழ்க்கைக்குள் மூழ்கிக்கிடந்ததெல்லாம் பழைய கதை.

திடீரென்று குபீரென்று பிடித்த நெருப்பு ஜோதி அக்கினிப் பிளம்பாக எங்கும் அள்ளி இறைக்கச் சனங்கள் கனசபையின் வீடு பற்றி எரியுது கிழடு தட்டி வயது போன சங்குவதியும் மூன்று குமர்ப்பெட்டைகளும் எரிகிற வீட்டுக்குள்ள அகப்பட்டுப் பொசிங்கிப் போய்ச் சாம்பலாகக் கிடக்கிறார்கள். என்ன அநியாயம். நாசமறுவான், கொலகாரன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கிழட்டு வயதிலும் அந்தக் கனகசபை ஊட்டுக்கு நெருப்பு வைச்சுப்போட்டு பெரிய வெட்டுக்கத்தியோடு ஆடி, ஆடிக் கொம்பிக் கொம்பி ஊட்டச் சுத்திக் சுத்தி வெறிநாய்போல் ஓடி ஓடித்திரியிறான். இப்படிக் கதைத்துக்கொண்டு ஊர்ச்சனங்கள் தலை தெறிக்க ஓடுகிறார்கள். அங்கே நரை மூப்புக்கண்டு அறுபது வயதைத் தாண்டிய சங்குவதியும் வாழாவெட்டியான மூன்று குமர்ப்புள்ளைகளும் எரிகிற அக்கினி நெருப்புக்குள் மரணித்துக் கிடக்கிறார்கள். ஓசியிலே கிடைச்ச காசில கொஞ்சத்தைப் புருஷன் கனகசபைக்குத் தெரியாம மூன்று குமர்ப் பெட்டைகளுக்கும் கழுத்தச் சங்கிலி வாங்கிக் கொடுப்போமென்று சங்குவதி காசை மறைச்ச கோபத்திலதானாம் கொலை வெறி கொண்ட அறுபத்தெட்டு வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் கனகசபை சாராயத்ததைத் தாறுமாறாகக் குடித்துப்போட்டு வந்து மூன்று குமர்ப்புள்ளைகளையும் நரைத்துக் கிழடு தட்டிக் கிடக்கும் பொண்டாட்டி சங்குவதியையும் கத்தியைக் காட்டிப் பயமுறுத்தி வீட்டுக்குள்ளே பூட்டிப்போட்டு லாம்பெண்ணையை எங்கும் ஊற்றி பத்தவெச்சு எரிச்சவன் என்று பக்கத்து வீட்டிலுள்ள சின்னராசா பொலிசுக்கு முறைப்பாடு செய்தான்.

பொலிஸ் வருவதற்கு முன்பே கனகசபை சாராயத்தோடு நஞ்சைக் கலந்து குடித்து விட்டு பிணமாக அந்த எரிந்த வீட்டு வளவு முற்றத்திலே கிடக்கிறான். திரண்டு புதினம் பார்க்க வந்த அந்த ஊரே நெஞ்சத்தைப் புழந்து சோகத்தை நிறைய வைத்திருக்கும் அந்த அநியாயக் காட்சிகளைக் கண்டு கண்கலங்க மனம் குலுங்கி பிரமித்து நிற்பதைக் கண்டு இந்த அழிவுக்காலத்தைக் கண்டு மழை மேகங்களால் கருக்கொட்டிக் கிடந்த வானத்தாய் வாளியால் அள்ளிக்கொட்டுவது போல் வாரி வாரி பேய் மழையாகப்பொழிய அங்கே நிரந்தர முடிவில்லாத அந்திம இருட்டு குடி கொள்ளுகிறது.

*21.10.2007*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிலுவை சுமக்கப் பிறந்தவர்கள்

களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு றப்பர் தோட்டமானது, ஜனாதிபதி தேர்தலுக்கு முந்தியும், தேர்தல் நடந்த பிறகும் ஒருவித அச்சம் கலந்த பீதியும், நீங்காத அந்திமச் சூழல் நிறைந்த மரண உணர்வும் அந்த றப்பர் தோட்ட மக்கள் வாழ்விலே புகுந்து விளையாடுகிறது. ஒழுங்கான சாப்பாடு இல்லாமல், குடிப்பதற்கு தூய தண்ணீர் இல்லாமல், ஒழுங்கான சுகாதார வைத்திய உதவி இல்லாமல், நிம்மதியான தூக்கமில்லாமல், இறப்பர் மரங்களிலே பால் வெட்டப் போகாமல் அந்தப் பழங்காலத்து ஓட்டையும் உடைசலுமான 'லயங்களில்' பயந்து போய் வேதனைகளின் மொத்த உருவங்களாக முடங்கிப் போய்க் கிடக்கிறார்கள்.

அடிமை விலங்கு பூட்டப்பட்ட சிறுபான்மை இனங்களான தமிழர்கள் அவர்கள். மொழி, மத கலாசாரத்தைப் பேண முடியாமல் பேரினவாதிகளின் மரணக் கோட்டைக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைப்பட்டுத் தவிப்பவர்கள். உழைப்புக்கேற்ற ஊதியமில்லை. தொடர்ச்சியான தொழில் இல்லை. வாழ்க்கையைச் செம்மையாக ஓட்டக்கூடிய வருமானமில்லை. பேரினவாதிகளின் சொல்படி நடக்கவேண்டும். அவர்கள் எதைச் செய்யச் சொல்கிறார்களோ அதனைச் செய்ய வேண்டும். மீறினால் அடி, உதை, கொலை, கற்பழிப்பு, லயங்களை உடைத்துத் தீ வைத்து நாசமாக்குதல், வெள்ளைக்காரன் தோட்டத்தைப் பராமரித்துப் பேணிக்காத்த காலத்தில் பசுமையாக மிளிர்ந்த அந்த றப்பர்த் தோட்டம், சிங்கள அதிகாரிகளின் கரங்களுக்குள் சிக்கிக் கொண்ட இன்னாளில் பசுமை முற்றாகக் குன்றி, பால் வற்றி வரண்டு போய்க் காய்ந்து கிடக்கும் தோட்டங்களாகவே காட்சி தருகின்றன. ஒழுங்காக உரம் போட்டு, மருந்து வகைகளை அடித்து, செம்மையாகத் துப்பரவு செய்து பவித்திரமாகக் கண்காணிக்காமல், முதிர்ந்த பால் குறைந்து போன றப்பர் மரங்களை வைத்துக் கொண்டு தோட்டத்தை நாசமாக்கினால், தொழிலாளர்களுக்கு எங்கே ஒழுங்கான வேலை கிடைக்கப் போகிறது. பணந்தான் ஒரே நோக்கமென்றால் ஏழைத் தொழிலாளி வேலை இன்றிச் சாகத்தான் வேண்டும். முத்துச்சாமியின் மனக்குதிரை வேகமாக ஓடிக்கொண்டே இருக்கிறது.

தேர்தல் நெருங்க நெருங்க அவர்களது வாழ்வே அழிபடும் பயங்கரம் 'பிரளயம்' வரும்போல் மக்கள் அச்சத்தால், மழை பெய்தாலே வெள்ளத்திலே மிதக்கும் அந்த நூற்றி ஐம்பது வருடங்களுக்கு முந்திக் கட்டப்பட்ட ஓட்ட 'லயங்களிலே' பயந்துபோய் பதுங்கிக் கிடக்கிறார்கள்.

இரவு நேரங்களிலே கும்பல் கும்பல்களாக தோட்டத்தை அண்டிய சிங்களக் கிராமங்களிலிருந்து வரும் காடையர் கூட்டம், "நீங்கள் வாக்களிக்கப் போகக் கூடாது போனால், ஒட்டுமொத்தமாக 'லயங்களும்' அழிக்கப்பட்டு நீங்களும் சாவீர்கள்" என்று சிங்களத்திலே உரத்த சத்தமாகக் கூறி அச்சுறுத்திக்கொண்டு போவதும், வாக்களிப்பு அட்டைகளையும், அடையாள அட்டைகளையும் ஆண்கள் இல்லாத இடங்களில் பறித்துக் கொண்டு போவதையும் அவர்களால் எப்படி மறக்கமுடியும்? ஆனால், அந்தத் தோட்டத்திலுள்ள மக்கள் தங்கள் தொழிற் சங்கங்களின் வேண்டுகோளின்படி, குறிப்பிட்ட ஒருவரை வெல்ல வைக்க வேண்டுமென்ற குறிக்கோளில் இருந்தவர்கள். தேர்தலன்று கூட்டம் கூட்டமாகச் சென்று பின்விளைவை யோசிக்காமல் குறிப்பிட்ட நபருக்கு வாக்குப் பண்ணி விட்டார்கள். அவர்கள் வாக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணியவர் தோற்று விட்டார். இதனை எதிர்பார்த்துக் கொண்டிருந்த சிங்கள காடையர் கூட்டம் நகரங்களுக்குச் சாமான் வாங்கப் போனவர்களுக்கும், ஆஸ்பத்திரி மற்றும் முக்கியமான கருமங்களுக்குச் சென்றவர்களுக்கும், இன்னும் வேறுதேவைகளுக்குப் போனவர்களுக்கும் சரியான அடி உதை கொடுத்ததோடு, வாள் வெட்டு, மண்டை உடைப்பு இப்படியெல்லாம் நடந்திருக்கிறது. அந்தத் தோட்டத்துக் கோவிலிலும், பிள்ளை மடுவத்திலும் லயங்களை விட்டுக் கூட்டமாக இரவு நேரங்களிலே பயந்துபோய் இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு. "அம்மா ரொம்ப பசிக்குதம்மா, றொட்டி சுட்டுத் தருவியா? பத்து வயது பெண் குழந்தையான பாப்பாத்தி பசியால் வயிற்றைத் தடவியபடி தாயைப் பார்த்துக் கெஞ்சிக் கேட்கிறாள். "பொட்டைப் புள்ளைக்கு பசி வந்திட்டுதா? புளுத்த மா கூட இல்ல. தேங்காயோ ஊட்டுச் சாமங்களோ எதுவுமில்லாம தவிச்சுக்கிட்டுக் கிடக்கன். எங்கடி அம்மா றொட்டி சுட்டு ஒனக்கு பசி ஆத்தட்டும்" தாய் வேலம்மா ஒப்பாரி வைக்காத குறையாக மகளைப் பார்த்துப் புலம்புகிறாள். "எம்புட்டு நாள் வெளியே தல நீட்டி, கையிலே ஒரு சல்லிக் காசுமில்லை. காசுதான் இருந்துக்கிட்டாலும் டவுணுக்குப் போய் ஒரு தம்படிச் சாமானும் வாங்க ஒண்ணா சாமான் வாங்க டவுணுக்குப் போனவக வாள் வெட்டாலும், மண்ட ஒடைப்பாலும் உசிருக்குப் போராடி ஆஸ்பத்திரியில கிடக்காக" தகப்பன் முத்துச்சாமி விரக்தியான எண்ணக் கருக்களைக் கொட்டித் தீர்க்கிறான்.

"இந்தப் பாழாப் போன தேர்தலும் வந்தாலும் வந்தது, நம்மளப் போல தமிழப் பேசிக்கிடும் ஏழபாழங்களுக்கு வாழ்வும் போச்சி, மிஞ்சிக் கிடந்துக்கிட்ட உசிரும் போச்சி, தோட்டத்தில றப்பர் பால் வெட்டப் போயித்தான் எம்புட்டு நாள் ஆவுது. வேலைக்குப் போனாத்தானே பாப்பாத்தி நம்மக்கிட்ட துட்டுப் பொறளும்" வேலம்மா நெருப்புக் காங்கையாக வார்த்தைகளை அள்ளிக் கொட்டுகிறாள். "தோட்டமே நாறிக் கிடக்கு. எப்ப வந்து லயங்கள ஒடைச்சு அனுமான் லங்கைய பொசிக்கின மாதிரி நெருப்புத்தானம் செஞ்சிக்கிடுவானுக எண்டு பசந்து போய் கிடக்கிறம் அல்ல. இந்தப் பாழப் போன எலக்ஷன் வந்துக் கிட்டதால நம்ம தோட்டமே பூண்டோடு கசிலாயம் போமாப் போல கிடக்கல்ல" முத்துச்சாமி பயத்தால் பிதற்றத் தொடங்க, "அவனுக வெண்டுக்கிட்டான். சிங்களக் காடையனுக நம்மள கசக்கிப் புளியிறானுக. நம்மள வோட்டு போடச் சொன்ன சங்கங்கள் எல்லாம் தூங்கிகிட்டுக் கிடக்கானுகளா, மாரி ஆத்தா ஒன்னக் கும்புடுற தோட்டக்காட்டானுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ தரும் வாழ்வு இம்புட்டுத்தானா தாயயே'' ஆதங்கம் பொங்கி வழிய வேலம்மா, களுகங்கை ஆவேசப் புனல் கக்கி புரண்டு வருவது போல் பிரட்டி எடுக்க, "முத்துச்சாமி அண்ணா, முத்துச்சாமி அண்ணா" என்ற சத்தம் கேட்க பயந்து போய் மூச்சிழந்த கிடக்கும் அந்தக் குடும்பம் சத்தமே போடாமல் முடங்கிப் போய் மௌனம் பூண, "அண்ணே நான் தான் அண்ணே ஒங்க தம்பி வேலுச்சாமி". "அடே! வேலுச்சாமி தம்பியா" என்று கூறிக் கொண்டே வெளியே வருகிறான் முத்துச்சாமி. அவனைத் தொடர்ந்து பொஞ்சாதி வேலம்மாவும், மகள் பாப்பாத்தியும் வெளியே வருகிறார்கள். "என்னடா தம்பி நாட்டு நிலம? ஒண்டுமே புரிஞ்சிக்கிடாம இருட்டுக்க தவிச்சுக்கிட்டிருக்கண்டா தம்பி". நிலம ரொம்ப மோசமாத்தான் போய்க்கிட்டிருக்கு அண்ணாச்சி. வாள் வெட்டுப் பட்டுக்கிட்ட சின்னச்சாமியும் சிங்காரமும் செத்துக் கிடக்கானுகளாம். எப்படியோ தப்பிக்கிட்டு வந்த ஒருவன் சொல்லியிருக்கான். பொஞ்சாதி புள்ளங்கள் அங்கிட்டுப் போக முடியாம கத்தி மாயுதுக. என்ன கொடுமங்க அண்ணாச்சி நம்ம தோட்டக்காட்டானுக்கு!" முத்துச்சாமி வேலுச்சாமியின் சோகக் கதையைக் கேட்டதும், நாலுநாள் பட்டினியால் சோர்ந்து கிடந்தவன், மயக்கம் போட்டுக் கீழே விழுந்து விடுகிறான். அவனைத் தண்ணீர் தெளித்து ஒருமாதிரியாக எழுப்ப கறுப்பையா அங்கே ஓடிவருகிறான்.

"அண்ணே லயம் வழிய ஒருத்தரும் இருக்காதுங்க. மொக்காடு போட்டுக்கிட்டு ரகசியமாக சாமான் வாங்கப் போன கறுப்பாயி பொடிச்சிய டவுண்ல காடையனுக எம் மாந்தோ கண்டுபுடிச்சுக்கிட்டு அவளக் கொண்டு கெடுத்துக்கிட்டு, காசு பணத்தையெல்லாம் திருடிக்கிட்டு பத்திரமாக எவருக்கும் தெரியாம சவத்த எறிஞ்சிக்கிட்டானுகளாம். பொலிசுக்காறனுகள் தோட்டத்துக்க வந்து விசாரிச்சுக்கிட்டுப் போறாணுகளாம். நாம வோட்டுப் போட்டம் இந்த தொழிற் சங்கத்தின்ர கதையைக் கேட்டுத்தானே. மாசம் மாசம் சந்தாப்பணத்தைப் புடுங்கிக்கிட்டு வயிறு வளர்க்கிற நாய்ப் பசங்க எங்கண்ணாச்சி ஓடிப்போய் ஒளிஞ்சிக்கிட்டானுக" கறுப்பையா வார்த்தைகளை முடிக்கவில்லை, பணியக் கணக்குத் தோட்டத்திலிருந்து தொழிலாளர்கள் கத்திக் கதறிக் கொண்டு மேல்கணக்குத் தோட்டத்துக்கு ஓடிவரும் ஆழி அலை போன்ற சத்தம் கேட்கிறது.

றப்பர் மரங்களின் இலைகளைத் தாவி பெரும் பூதமாக அனல் பரப்பும் தீப்பிழம்பு கருகிற றப்பர் பால் மணத்தை எங்கும் பரவி இறைத்தவாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய மரங்களிலும் பரவி ஓங்காரமாகத் தாவி வரும்பொழுது. வெறும் உடுத்த உடைகளோடு ஆண்கள், பெண்கள், கிழவர்கள், கிழவிகள், குழந்தைகள் என்று பேதமில்லாமல் கத்திக் கதறிக் கொண்டு மாரி அம்மன் கோவிலை நெருங்க, ஒருவன் மூச்சு வாங்க வேகமாக ஓடிவந்து "ஏன் இங்கிட்டு நிக்கிய. வோட்டு போட்டத்துக்கு பரிசு தந்திட்டானுக. லயம் வழிய இருந்த குமர் குட்டிகளை இழுத்திட்டு காடையர் கூட்டம் ஓடிப்போக, மற்றத் தறுதலைங்க 'லயங்களை' இடிச்சுத் தகர்த்துக்கிட்டு நெருப்பு வைச்சுக் கொழுத்திக்கிட்டு வாறானுக. ரீ.வி., றேடியோ, உடுபுடவைகள், தட்டு முட்டுச் சாமானுக மிசின் பெட்டிகளிலே ஏத்திக்கிட்டு எம்புட்டு வேகமாகப் பறக்கானுக. வக்காட ஒளிமவனுக நம்மிட குமர்க்குட்டிகளப் பதம் பார்க்கல்ல இழுத்துக்கிட்டுப் போறானுக" சொல்லும் போதே கண்களால் தாரை தாரையாக வெட்டப்பட்ட றப்பர் மரத்திலிருந்து பால் வடிவது போல் கண்ணீர் சொரிய இராமையா கூறிக்கொண்டே, "இம்புட்டுப் பேரும் காட்டுப் பக்கம் ஓடுங்க. சண்டாளப் பசங்க இந்த லயங்களையும் நெருங்கிக்கிட்டானுங்க இளம் பொட்டப் புள்ளங்கள நாசமாக்கிப் போடுவானுக" சொல்லிக் கொண்டே இராமையா காட்டுப் பக்கம் ஓடுகிறான். பிறகு அங்கே யார்தான் இருக்கப் போகிறார்கள். கைகளிலே அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு, பசி, மயக்கம் தலையைச் சுற்ற நடக்கமுடியாமல் நடந்து தொழிலாளர்கள் ஓட்டம் எடுக்க, முத்துச்சாமி வேலம்மா குடும்பமும் வேலிகளாகப் பரந்து செறிந்து கிடக்கும் றப்பர்த் தோட்டத்தைத் தாண்டி உயிரையாவது காப்பாற்றிக் கொள்வோமென்ற நப்பாசையில் காட்டை நோக்கி ஓடுகிறார்கள்.

மூலையிலே முடங்கிப் போய் படுத்துக் கிடந்த முத்துச்சாமி திடுக்கிட்டுக் கண் விழிக்கிறான். வேர்வை மேனியெங்கும் ஆறாகப் பெருகி வழிகிறது. உடம்பு தெய்வம் பிடித்தவன் போல் ஆடிக் குலுங்க "என்னடா இந்த இழவுகள் இன்னும்மா விட்டுப் போகாம உலுக்கி எடுத்துக் கிண்டிருக்கு. ஆமா அந்த கொடுமைங்க எம்புட்டுக் காலம் போனாலும் நெஞ்சை விட்டு மறையாதுங்க" முத்துச்சாமியின் வாய் முணுமுணுக்க கண்களை மீண்டும் மூடிக்கொள்கிறான்.

*டிசம்பர் 2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலியுக அரங்கேற்றம்** போர் அழிவை ஏற்படுத்தி ஆயிரம் ஆயிரமாக மனித உயிர்களைக் காவு கொண்ட "சுனாமி" என்ற மறுவடிவம் எடுத்த அந்தக் கடல் பேரலைகளின் கொடிய படை எடுப்பினால் கடலை அண்டிய கிராமங்களும், நகரங்களும் இருந்த இடம் தெரியாமல் பூண்டோடு அழிக்கப்பட்டு நாலு ஆண்டுகளைக் கடந்தால் என்ன. நாற்பது ஆண்டுகளைத் தொட்டால்த்தான் என்ன அது பதித்து விட்டுப் போன பயங்கர வடுவை, குறிப்பிட்ட கோர முத்திரையை யாரால்த்தான் மறந்து வாழ முடியும்?

வாழ்க்கையைத் தடம் புரள வைத்த, மனித குலத்தையே ஒரு நொடிப் பொழுதுக்குள் முழுமையாக அழித்துச் சங்காரம் பண்ணிய அவன் அந்திம காலத்துச் சிறைப் பொறியாம் இரும்புக் கோட்டைக்குள் அவன் சிறைப்பட்டுக் கிடக்கிறான். வாழ்க்கையின் தொடக்கமும், முடிவும் அவனைப் பொறுத்தளவில் முடிந்து போன கதையாகிவிட்டது. எல்லாவற்றையும் இழந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் இனியாருக்காக வாழ்வது? இதற்கு மேலே இன்னுமொரு வாழ்வு தேவைதானா?

முத்துலிங்கம் சித்தப் பிரேமையிலும், இல்லை அதற்கும் அப்பால் நினைவை, உணர்வை, ஏன் பவித்திரமான உயிரையே ஆழ்ந்த இருளுக்குள் பறிகொடுத்து மீள முடியாத யாகத் தீக்குழிக்குள் அமிழ்ந்து போய் இருக்கிறான் அவன்.

கடலும், ஆறும் சங்கமிக்கும் அழகிய கிராமமான முகத்துவாரத்துக்கு மேற்குப் பக்கமாக மட்டக்களப்பு கொழும்பு புகையிரத இரும்புத் தண்டவாளப் பாதை ஊடறுத்துச் செல்லும் பரந்த வெட்டவெளி மேட்டுநிலமான "திராய்மடு" ஊரிலே சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தற்காலிகமாக இருப்பதற்குக் கட்டிக் கொடுக்கப்பட்ட சிறு வீட்டின் ஒரு மூலையிலே தன்னந்தனியாகக் குந்தி கொண்டிருக்கிறான் அவன்.

அவன் எப்படி இங்கு வந்தான்? யாரால் காப்பாற்றப்பட்டான் என்பதெல்லாம் அவனுக்குத் தெரியாது. நாலு ஆண்டுகளை கடந்தாலும் "சுனாமியின்" கொடூரம் இன்றும் அவன் மனத்திரையிலே அழியாத படமாக ஓடிக்கொண்டே இருக்கிறது.

அவன் இப்பொழுது தனிமரம். தனிமரம் தோப்பாகுமா? புதிதாகத் திருமணம் செய்த மனைவி, தாய், தகப்பன், சகோதரர்கள், மாமி, மாமா, மனைவியின் சகோதரர்கள், குழந்தைகள், பெரியவர்கள் என்று முத்துலிங்கத்தின் வம்சமே "சுனாமி" என்ற பெயரிலே ஊழித்தாண்டவம் ஆடிய அந்த "வங்காளவிரிகுடாக் கடலுக்கு" இரையாகிப் போய் விட்டார்களே! இனி அவன் யாருக்காக வாழவேண்டும். எதற்காக வாழ வேண்டும்?

தூரத்துச் சொந்தமான பெரியம்மா முறையான அன்னம்மாக்கிழவிதான் அவனுக்கு இப்பொழுது சொந்தம், உறவு, பாசம், பந்தம் என்று கைகொடுத்து அவனது ஊசலாடும் உயிருக்கு உறுதுணையாக இருக்கிறாள். அந்தக் கிழவியும் சொந்தம் உறவுகளையெல்லாம் கடலுக்கு கொடுத்தவள் தான். அந்த அன்னம்மாக்கிழவிதான் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிறுவனங்களால் தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கும் உணவு வகைகளைச் சமைத்து சாப்பாட்டைக் கொடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேதவித்த மனதுக்கு ஒத்தடம் கொடுத்து அவனது உயிர்வாழ ஏணியாக நிற்கிறாள்.

அரசாங்கமும் ஏனோதானோவென்று உதவி செய்தாலும், தனியார் நிறுவனங்கள் தான் கடைசி மட்டும் கைவிடாமல் சகல உதவிகளும் செய்து வீடுகள் கட்டிக் கொடுத்து நிரந்தரமாக நிழல் தரும் ஆலவிருட்சமாக மிளிர்கிறது. இன்றும் அரைவாசிப்பேருக்கு நாலு ஆண்டுகளைத் தாண்டியும் நிரந்தரமான வீடுகள் கிடைக்கவில்லை. நிறுவனங்கள் அசுர வேகத்தில் வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஊழல்கள் தாண்டவம் ஆடினாலும் உதவிகள் தொடர்கிறது. முத்துலிங்கத்துக்கும், அன்னம்மாக்கிழவிக்கும் கட்டப்படும் நிரந்தரமான வீடு இன்னும் முற்றுப்பெறவில்லை. வீடுகள் பூரணமாக முடிந்தவர்கள் புது வீட்டுக்குப் போய் விட்டார்கள். இரண்டு அறை, விறாந்தை, குசினி, குளியலறை, மலசலகூடம், தண்ணீர் பைப்பு என்று அமர்க்களமான நிரந்தரவீடுகள். வீடு முடியாத படியால் முத்துலிங்கமும், அன்னம்மாக்கிழவியும் "திராய்மடு"வின் தற்காலிக வீட்டில்த்தான் இருக்கிறார்கள். முத்துலிங்கத்தைப் பொறுத்தமட்டில் வீடு இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன? எல்லாம் சூனியமாகிவிட்டது. வீடு ஒரு கேடா அவனுக்கு.

முத்துலிங்கத்துக்கு இந்த மாயவாழ்விலே ஒரு நிரந்தர இருட்டுக் கருக்கொண்டு அவனை அதற்குள் முழுமையாக அமுக்கிவிட்டது. "சுனாமி". வந்த நான்கு ஆண்டுகள் கழித்தாலும் இப்பொழுதும் ஒவ்வொரு நிகழ்வும் அவனது மனக்கண்ணிலே பூப்போலவே விரிந்து உதிர்கிறது. அந்த அனர்த்தம் நடந்தது யாரும் எதிர்பாராத ஒரு அழிவுப் படை எடுப்பாகும். மூன்று நாட்களுக்கு முன் அந்த வீடு திருமணப் பூரிப்பில் ஆனந்த தாண்டவத்தின் உச்சக்கட்டத்தில் திளைத்திருந்தது. புதுமாப்பிள்ளையாக வலம் வந்து கொண்டிருந்த முத்தலிங்கம் புதுவாழ்வின் பொற்கால நினைவுக்குள் சங்கமமாகிக் கிடந்தான்.

திருமணக்களியாட்டம் ஓயாத மூன்றாம் நாள் உற்றார், உறவினர் படை சூழ மாப்பிள்ளை வீட்டாரும், பெண் வீட்டாரும் அங்கு நிறைந்து போய்க்கிடந்த இன்ப அத்தியாயத்தின் மூன்றாம் நாள் அது. ஜோடித்து அலங்கரித்த பந்தல் அப்படியே பொலிவு குன்றாமல் நிமிர்ந்து நின்றது. கட்டிய மணவறை இன்னும் அவிழ்க்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று மாப்பிள்ளை வீட்டாருக்குச் சாப்பாடு கொடுக்கும் "வெள்ளை அவிழ்க்கும்" சம்பிரதாய திருமண நடைமுறை எழுச்சி பூர்வமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இறைச்சிக் கோழிகளை உரிப்பதும், பொரியலுக்குச் சூரன் மின்களை வெட்டிக் கழுவுவதும், பெண்களும், ஆண்களும் பறந்து பறந்து பம்பரமாக ஓடி ஓடி வேலைகள் செய்வதும், குழந்தைகளின் அடங்காத ஓயாத இரைச்சல்கள் அந்தத் திருமண வீடே கலகலப்பின் உச்சிக்கே தாவித்தாவி தனி அழகோடு வண்ணத்திப்பூச்சியாக பறந்தவேளை கடற்கரைப்பக்கம் அந்தப் பகுதிகளையே அதிரவைத்துக் குலுக்கி எடுத்த அதிபயங்கரமான குண்டுச்சத்தங்கள் போல் பயங்கரமான அதிவேகமான சத்தங்கள் காதுப்பறைகளைப் பிய்த்தெறிய, கடற்கரையை அண்டிய பகுதிகளிலிருந்த சனங்கள் "கடல் வருகுது கடல் வருகுது" பேய்க்கூக்குரல்கள் போட்டபடி ஓடி வந்தார்கள். "என்னடா கடல் வாறதாம் ஆமி வாறான் ஆமிவாறான் எண்டு கத்தினகாலம் போய் இப்ப கடல் வருகுதாம் பைத்தியக்காறனுகள்" என்று சத்தமாகக் கூறிக்கொண்டு முத்துலிங்கம் கடற்கரைப்பக்கம் பார்ப்பதற்கு முன்பே கடற்கரைத் தென்னை மரங்களின் வட்டுகளுக்கு மேலே கடல் எழும்பி ஒரே நீலப்புகைமயமாக கடல் வெறிக் கூச்சல் போட்டவாறு ஒரு நொடிப் பொழுதுக்குள் ஊரை நோக்கி சீறிப் பாய்ந்து வந்தது.

அலைக்குள் எல்லோரும் அள்ளுண்டு போகையில் தாவி வந்த பெரும் அலைகளால் குப்புற விழுகிறான் முத்துலிங்கம். நினைவு தடுமாற முன் கண்களைச் சுழல விட்டவனுக்கு அடா! அந்தப் பயங்கர கொடுமையை என்னவென்று கூறுவது. அந்த மணக்கோலம் பூண்டு கிடந்த திருமண வீடு சிதறுண்டு பெரும் அலைகளால் அள்ளுண்டு போக அங்கிருந்த அத்தனை பேரும் ஒட்டு மொத்தமாக அலைப் பொறிக்குள் அகப்பட்டுப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

சோடித்து வைத்திருந்த மணப்பந்தல், மணவறை கடல் அலைகளால் வேகம் வேகமாக இழுபட்டுச் செல்ல.. அள்ளுண்டு போகும் போது அலைகளால் தாவிச் செல்லும் முத்துலிங்கம் புதுமணப் பெண்ணான தன்மனைவியைத் தேடி அந்தப் பயங்கரவேளையிலும் கண்களை மேயவிட்டான்.

ஐயோ! என்ன கொடுமையடா அது. நினைவு தடுமாறாத வேளையிலே தன் மனைவியைப் பார்க்கிறான். ஓயாத சத்தம் போட்டு மரணப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீதியால் அழுத வண்ணம் "என்னைக் காப்பாத்துங்க என்னைக் காப்பாத்துங்க" என்று அவலக்குரல் எழுப்பியவாறு வெள்ளத்துள் அள்ளுண்டுபோகிறாள்.

அவனால் அந்தக் கொடுமையை எப்படித் தாங்கிக் கொள்ள முடியும். அவன் அழுகிறான். அழுகிறான். சத்தம் போட்டுக் குமுறிக்குமுறி அழுகிறான். "காப்பாத்துங்க காப்பாத்துங்க" மரணப் பயத்தால் அவள் அழும் கடைசிக்குரல் அவனது காதுகளை முட்டி மோதுகிறது. சக்தி இழந்த அந்த அவலமான பயங்கர நேரத்தில் அவனால் என்னதான் செய்யமுடியும். சக்தி வாய்ந்த அற்புதம் நிறைந்த "கடலாச்சி அம்மன்" கோவிலே மூலஸ்தானத்தோடு பிடுங்கப்பட்டு அலைகளோடு மல்லுக் கட்டும் பொழுது நாம் எம்மாத்திரம். அவனுக்கு முன்னால் ஒருவித சத்தமும் இன்றி அலை வெள்ளத்தில் அவனது புது மனைவி பார்வதி அள்ளுண்டு போவதைக் காணுகிறான். தெரிந்தும் என்ன செய்வது உலகை அழிக்க வந்த கடல்கோளுக்கு யார் தான் தாக்குப்பிடிக்க முடியும்.

அவன் ஓயாது எப்போதும் கடல் தொழில் செய்யும் தொழிலாளி. சொந்தமாக இஞ்சின்வோட் வைத்து மீன்பிடிக் காலங்களில் காலம் பாராது உழைத்து முன்னுக்கு வந்தவன். அவனது தந்தையும் கடல் தொழிலாளியாக இருந்து காலம் காலமாக கடலோடு மல்லுக்கட்டி ஜீவியம் நடத்தியவர்தான். எத்தனை கடல் குழப்பங்களை, அலைவீச்சுக்களை, பெரும் காற்று மோதல்களை அவர்களது வாழ்நாளிலே கண்டிருப்பார்கள். எதற்கும் போராடி சகலதையும் வென்று வாழ்க்கையிலே முன்னுக்கு வந்தவர்கள் அவர்கள். அந்தப் பரந்த வங்காள விரிகுடாக்கடலும் பாக்கு நீரிணையும் அவர்களுக்குப் பஞ்சு மெத்தையாகத் திகழ்ந்தது என்னவோ உண்மைதான். காற்றிலே அள்ளுண்டு தூர கடலுக்குப் போய் இரண்டு மூன்று நாள் மறுபிறப்பெடுத்து மீண்டும் கரைக்குத் திரும்பிய காலமும் உண்டு.

சகலருக்கும் உதவுவதிலும், ஊரின் காவல்த் தெய்வமான "கடலாச்சி அம்மன்" கோவிலைக் கட்டிக் காப்பதிலும் முத்துலிங்கம் முன்னுக்கு நின்றான். அவனது தாய் மாமனின் மகள்தான் பார்வதி. அழகின் திருக்கோலமாக அந்த வங்காள விரிகுடாக்கடலின் சுகந்தக் காற்றிலே விளைந்த தேவகன்னியாக, கடல் முத்தாக, பாடும் மீன் தேவியாக வலம் வந்தவள் பார்வதி. அவளது அழகிலே மயங்கி, கரம்பிடிக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடித்த இளைஞர்களின் எண்ணிக்கை அந்த ஊரைப் பொறுத்தளவில் ஏராளம்! ஏராளம்!! பார்வதி முத்துலிங்கத்துக்குத்தான் என நிச்சயமாகி ஊர் முழுவதையும் அழைத்து, பெரிய விருந்து கொடுத்து அமர்க்களமாக நடந்த கல்யாணம் மூன்றாம் நாள் பூரணமாகும் முன்பே இப்படிக்கடலின் கோரப் பசிக்கு ஆளாகுமென்று எவர்தான் நினைத்துப் பார்த்திருப்பார்கள். எல்லாம் கனவாய் போய்விட்டதே.

ஓடும் வெள்ளத்தில் போய்க் கொண்டிருக்கும் முத்துலிங்கம் கண்களைத் திறந்து பார்க்கின்றான். ஐயோ! என்ன கொடுமை. அவனது மனைவியின் உயிர் பிரிந்து போய் பிணமாக மிதப்பதைக் கண்டு விடுகிறான். கத்துகிறான். சத்தம் வெளியே வரவில்லை. கண்களால் மட்டும் கண்ணீர் தாரைதாரையாக வழிகிறது. அவனால் என்னதான் செய்ய முடியும். மரக்குத்தியைத் தாவிப் பிடித்து எழும்ப எத்தனிக்கிறான். அவன் சோர்ந்து மயக்கம் அடையும் நிலைக்கு வந்து விட்டான்.

ஒரு அசிங்கமான நீண்ட கறுத்த உருவம் கையிலே குறுகிய வீச்சு வாள்கத்தியோடு செத்துப்போய் பிணமாக மிதங்கும் பார்வதியை நெருங்குகிறது. அவனது இடுப்பிலே ஒரு பை தொங்குகிறது. அதற்குள்ளே ஏற்கனவே அங்கு வந்த பெண்பிணங்களின் மேனிகளிலிருந்து களவெடுத்த நகைகள் இருக்கவேண்டும். பார்வதியின் சவத்தை நெருங்கிய அந்த இதயமே இல்லாத மிருகப் பிறவி, அந்த காம வெறி பிடித்த மிருகம் அந்தச் செத்த பிணத்தை அணைத்துத் தூக்கி வார்த்தைகளால் அந்த அநியாயத்தை எப்படிச் சொல்வது. முத்துலிங்கம் துடித்தே விட்டான். அவன் பார்த்து இருக்க அவன் தாலி கட்டிய மனைவி ஆக்கிக் கொண்டவளை "ஐயோ" என்ன கொடுமை. நான் இன்னும் உயிரோடு இருக்க வேண்டுமா?" சத்தம் வெளியே வரவில்லை. அவனது மனதுக்குள்ளே போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது.

எத்தனை "சுனாமி" வந்தாலும் திருத்த முடியாத அந்த ஈனப் பிறவி, சவத்தை இழுத்துக் கொண்டு போய் தனது காமவெறியை அடக்கிக் கொண்டு, கழுத்திலே கிடந்த தாலி, மாலை, அட்டியல் கைகளிலே கிடந்த காப்புகள், விரலிலே கிடந்த மோதிரங்கள் என அத்தனையையும் கழட்டுகிறான் என்ன அக்கிரமம்! நரகக் குழியிலே தள்ளப்பட வேண்டிய அந்த அநியாயக்காரன் தோடுகளைக் கழட்டும் அவசரத்தில் தோடுகள் கிடந்த காதுகளை அறுத்து பையிலே போடுகிறான். முத்துலிங்கம் முற்றாக நினைவிழந்து விட்டான். "இந்த அநியாய உலகம் இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்க வேண்டுமா? இப்படியான பாதகம் உலகத்தில் தினம் தினம் நடக்கலாமா? கடல் பொங்கி மீண்டும் வந்து இந்த கொடிய உலகத்தைப் பூண்டோடு அழிக்கட்டும். இந்த கேவலமான உலகம் இனிமேல் ஒரு கணப்பொழுதும் இருக்கக்கூடாது. கடல் பொங்கி வரட்டும். இந்த மண் உலகத்தை முற்றாக அழித்து "ஜாலசமாதி" ஆக்கட்டும். எங்கும் ஊர் உலகம் இருக்கக் கூடாது. இந்தக் கொடியவர்களை கடலே தாவி வந்து புசித்து நாசமாக்கு. இனிமேலும் தாமதியாதே! கடல் வரட்டும்! கடல் வரட்டும்!! நினைவு தடுமாறி மயக்கம் அடையமுன் இந்தச்செய்கைகளைப் பார்த்து மனம் வெந்து, உணர்வு இரும்பாகி, எல்லாமே நிலைகுலைந்து போன முத்துலிங்கம் மனதுக்குள்ளே கதறி இப்படி எல்லாம் "சாபம்" இட்டான்.

நாலு அண்டுகள் "சுனாமி" வந்து மாயமாக மறைந்தாலும் கலியுக அரங்கேற்றத்தின் கொடுமை முத்துலிங்கத்தின் மனதை விட்டு மறையவே மறையாது.

நினைவுகளின் மீட்டல்களினால் நிஜப்பொழுதுகளையே மறந்து விட்டதில் இருண்டது கூடத் தெரியவில்லை அவனுக்கு. அன்னம்மாக்கிழவி ஏற்றி வைத்த விளக்கு வெளிச்சம் அவனது நினைவுகளைக் கலைத்தது. இந்த வெளிச்சம் எம் எதிர்கால வாழ்விலும் ஏற்படுமா? என்ற ஏக்கம் அவனது கண்களில் தெரிய அந்த விளக்கினையே உற்றுப் பார்த்த படி இருந்தான் அவன்.

சோடித்து வைத்திருந்த மணப்பந்தல், மணவறை கடல் அலைகளால் வேகம் வேகமாக இழுபட்டுச் செல்ல... அள்ளுண்டு போகும் பெரும் அலைகளால் தாவிச் செல்லும் முத்துலிங்கம் புதுமணப் பெண்ணான தன் மனைவியைத் தேடி அந்தப் பயங்கரவேளையிலும் கண்களை மேயவிட்டான்.

*28.12.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேரோட்டம்

இன்று பகல் கொடியேற்றத்திற்காக இரவு முழுவதும் கிரியைகளும், பூசைகளும் செய்த களைப்பினால் கோயில் வலப்பக்கமாக அமைந்திருக்கும் மடப்பள்ளியின் திண்ணையிலே நித்திரை வெறியில் தன்னை மறந்து தூங்கிக் கிடந்த சோமசுந்தரக் குருக்கள் ஏதோ கெட்ட கனவு கண்ட அவதியில் பதறி எழுந்தார். மேனியெல்லாம் படபடத்து நடுக்கம்காண திகைப்பூண்டை மிதித்த வழிப்போக்கன் போல மலங்க மலங்க விழித்தார். பேய் அறைந்தவன் எதையோ கூர்ந்து நோக்குவது போல் அந்தப் பழம் பெரும் ஆலயமான கொக்கட்டிச்சோலை தான்தோன்றி ஈஸ்வரனின் கோபுரக் கலசத்தை உற்று நோக்கினார்.

"அப்பனே! எம்மையெல்லாம் காத்தருளுகின்ற தான்தோன்றி ஈஸ்வரா 'கொக்கட்டிச் சோலையில் பள்ளி கொண்டுகிடக்கும் சிவபெருமானே! ஏறக்குறைய ஐந்து மாதங்கள் உனக்குப் பூசை இல்லை. புனஸ்காரமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூ இல்லை பழம் இல்லை. உள்அமுதப் பொங்கல் இல்லை. இப்படி ஒன்றுமே இல்லாமல் போய்விட்டதே அப்பா! ஆழிப்பேரலை குமுறி எழுந்தது போல் நான்கு திசைகளிலுமிருந்து அக்கினிச் சுவாலைகளாக எறிகணை வீச்சு படுவான்கரைப் பகுதிகளைப் பதம்; பார்த்து உங்கள் கோவில்ச் சூழலிலும் சுற்றாடலிலும் நர்த்தனம் ஆடிய போது எங்களால் எப்படி ஐயா உனது திருத்தலத்தில் மறைந்து கிடக்க முடியும்? குண்டு விழும் சத்தங்களும், உனது கோவில்ச் சூழலில் கிளை பரவிக் கிடக்கும் ஆல மரங்களிலும் குண்டு விழுந்த மரக்கிளைகளைத் துவம்சம் பண்ணி துண்டு துண்டாகச் சிதறடித்த வேளையில் அப்பனே! எங்கள் நெஞ்சமெல்லாம் ஒருகணப் பொழுதில் வெடித்துச் சிதறிவிட்டதே! பேய் மழை இரைச்சல் போல் சனங்கள் எல்லாம் ஒப்பாரி வைத்துக் கத்தியவாறு உடுத்த உடைகளோடு 'சில்லாங்கொட்டை' சிதறுவது போல் சிதறி, தப்பித்தோம். பிழைத்தோம் என்று ஓடுகின்ற பொழுது உனது திருக்கதவு திறந்த மாதிரிக் கிடக்க நோயாளி மனைவியை அணைத்துப் பிடித்தவாறு உயிரைக் கையிலே பிடித்து ஓட்டமும் நடையுமாக ஓடிப் போய்க் குண்டு மழையில் தப்பி அம்பிளாந்துறைப் பாதையால் அக்கரைப்பட்டுக் கொண்டு குருக்கள் மடத்துக் கோவிலிலே தஞ்சம் புகுந்த அகதி வாழ்க்கையை நினைத்துப் பார்க்கிறேன் ஐயா!" சோமசுந்தரக் குருக்கள் வாழ்க்கையிலே என்றுமே மறக்க முடியாத வேதனைப் பிரளயத்தை ஒருகணம் நினைத்து, நினைத்து: "கொல்லன்பட்டறை' நெருப்புக் காங்கையாக வெளிவரும் உஸ்ணச் சிதறல் போல் பெரு மூச்சுக்காற்றைச் சிதறிவிடுகிறார்.

மட்டக்களப்பு கல்முனை வீதியில், குருக்கள் மடத்தின் எல்லையாக விளங்கும் பகிரங்க வீதி ஓரத்தில் அந்த வளைந்த வெட்ட வெளியில் கம்பீரமாகக் கோவில் கொண்டிருக்கும் திருத்தலத்தில் பூசை புனக்காரம் செய்து மனைவி மக்களோடு கோவிலுக்கச் சொந்தமான வீட்டிலே குடிகொண்டிருந்த தூரத்து உறவினரான முத்துலிங்கக் குருக்களோடு நோயாளி மனைவியையும் பராமரித்துக் கொண்டு ஐந்து மாதங்களுக்கு மேலாக கொக்கட்டிச்சோலை தான்தோன்றி ஈஸ்வரனின் தொண்டூழியத்தை முற்றாக மறந்த நிலையில் வாழ்ந்து வந்த அந்த இக்கட்டான நிலையை எண்ணிப் பார்த்துத் தன்னை அறியாமல், குருக்கள் இரு கண்களாலும் தாரை தாரையாக நீரைச் சொரிகிறார். குண்டு மழையின் மத்தியிலே உயிரைப் பணயம் வைத்து நோயாளி மனைவியோடு ஓடுகின்ற பொழுது, போகும் வழியெல்லாம் குண்டுமழையின் தாக்கத்தால் வீடுகள் மனைகள் எல்லாம் இடிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதைந்து சிதிலமாகியும், இரத்த வெள்ளத்தில் சதைக் குவியலாக உருவமே தெரியாத மனித உடல்கள் சிதறிக் கிடப்பதையும் கண்டு குலை நடுக்கம் எடுத்து நிலை குலைந்து அம்பிளாந்துறை ஆற்றோரம் அந்தச் சனசமுத்திரத்தோடு நெருங்கி மோதுண்டு அக்கரைக்குத் தாவிய சோக உணர்வு நரம்பு பின்னி மனச்சஞ்சலத்தைக் கண் முன்னே காட்டுவதை ஒருதரம் நினைத்துப் பார்த்த சோமசுந்தரக் குருக்கள் என்னதான் சண்டை சச்சரவுகள், போர்ச்சூழல், இயற்கை அனர்த்தம் ஏற்பட்டாலும் தான்தோன்றி ஈஸ்வரனின் ஆவணி மாதத்துக் கடைசி ஞாயிற்றுகிழமைகளில் வருடாந்த உற்சவ காலத்திலே நடைபெறும் புகழ்வாய்ந்த 'தேரோட்டம்' ஒருபோதும் தடைப்பட்டது கிடையாது. இயக்கங்களின் கட்டுப்பாட்டில் 'படுவான்கரை' கிடந்த காலங்களிலும் அந்த அப்பனின் 'தேரோட்டத்' திருவிழா தடைப்பட்டு முடங்கிப் போனது கிடையாது. அகதி வாழ்க்கை வாழ்ந்த கொடுமையான ஐந்து மாதங்களுக்குப் பிறகு படுவான்கரையில் மீளக்குடியேறிய மக்கள், கொக்கட்டிச்சோலை முதன்மைக் கடவுளாம் சிவபெருமானின் 'தேரோட்டத்தைச்' சிறப்பாக சிறப்பாக நடத்தவதற்கு ஆயத்தம் செய்யும் அந்தப் பொன்னான பொற்கால உதயத்தை நினைத்து, அகதி வாழ்வில் பட்ட 'ஆபிரிக்காக்காடுகளின் இருட்டுப் போன்ற' துயரையெல்லாம் மறந்து 'தேரோட்டப்' பூசைகளைச் சிறப்பாக நடத்துவதற்கு தலைமைக் குருக்கள் சோமசுந்தரக் குருக்கள் ஆயத்தமாகிறார். அவருக்கு உதவியாக ஐந்து குருக்கள்மார் வேறு கோவில்களிலிருந்து மனைவிமார்களோடு வருகை தந்துள்ளார்கள். அவரது நோயாளி மனைவியான தனலட்சுமி என்னதான் வருத்தவாதைப்பட்டாலும் கணவனுக்குச் செய்யும் சகல கடமைகளையும் மனம் சோராமல் அன்போடு செய்து வந்ததை சோமசுந்தரக் குருக்கள் அந்த வேளையிலும் நினைத்துப் பார்த்து மனத்திலே புத்துணர்ச்சி பெற்றவராக தன்னை அறியாமல் வாய்விட்டுச் சிரித்துக் கொள்கிறார். கோவிலுக்குச் சொந்தமான பசுமாட்டிலே கறந்தெடுத்த பசும்பாலைக் காய்ச்சி எடுத்துக் கொண்டு அவரது மனைவி தனலட்சுமி சோமசுந்தரக்குருக்களின் கையிலே கொடுத்துவிட்டு 'மடைப்பள்ளிச்;' சமையல் அறையிலே மற்றக் குருக்கள்மாரின் மனைவிமாரோடு சமையல் வேலையைக் கவனிக்கப் போக குருக்கள் பழைய சம்பவங்களை, கோவிலைச் சுற்றிக் கிடக்கும் பரந்த வயல் வெளிகளிலேயே பசுமை குலையாத புல்களை மேய்ந்து மேய்ந்து இரைமீட்டல் செய்யும்'' எருமைகள் போல், நடந்து முடிந்து போன பழைய இனிய வாழ்க்கை ஓட்டத்தை ஒருதரம் திரைப்படமாக மனத்திரையிலே பதிவு செய்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பழுகாமத்தைச் சேர்ந்த சைவகுருக்கள்மாரின் பரம்பரையைச் சேர்ந்த சோமசுந்தரக் குருக்களின் தகப்பன் மார்க்கண்டுக் குருக்களின் தகப்பன் கனகசபைக் குருக்கள் என்று அவரது பரம்பரை கொக்கட்டிச்சோலை தான்தோன்றி ஈஸ்வரனின் புனித தலத்திலே மாறி மாறி பூசை புனைக்காரம் செய்து வந்த பரம்பரையைச் சேர்ந்தவர்களாகும். களுவாஞ்சிக்குடி, திருப்பழுகாமம், மண்டூர், போரதீவு, எருவில் என்ற வட்டத்துக்குள் குருக்கள்மார் மாறிமாறிப் பூசை செய்து வந்த ஒரு திருத்தலமாக தான்தோன்றி ஈஸ்வரனின் திருத்தலம் விளங்கியது.

தந்தை மார்க்கண்டுக் குருக்களின் காலத்தில் படித்துச் சகல சைவ சமய ஆகமங்கள், கிரிகைகள், சமஸ்கிருத ஞானம் முழுவதையும் பூரணமாக அறிந்து தந்தைக்கு உதவியாக பூசைகள் செய்து வந்த வாலிபமான இளமைக்காலத்தை சோமசுந்தரக் குருக்கள் ஒருதரம் நினைத்துக் கொள்ளுகிறார். அந்த நாளில் கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றி ஈஸ்வரனின் தேரோட்டத் திருவிழாக்கள் ஆரம்பாகும் அந்த வேளையில் புகழ்பூத்த புண்ணியபூமியாக ஜொலிக்கும் அந்தத் தெய்வீக மண் பல ஆண்டுகளுக்குப் பிறகு பூத்து அதிசய மணங்காட்டும் குறிஞ்சிப் பூப்போல் இங்கிதமாக தெய்வ மணங்காட்டும் கோவிலின் பின்பக்கம் மட்டக்களப்பு பாடும் மீன் வாவிக்கரை பரந்த வயல் நிலக்காணிகள் பசுமை குலுங்க பச்சை மரகத விரிப்புகளாகப் படர்ந்து கிடக்கும். நெற்பயிர் விதைத்து பயிர் முளை எழும்பி கம்பீரமாகப் பசுமையான பச்சைக் குருத்தோலைகளாகக் கிடக்கும் காலங்களில் ஆற்றிலிருந்து தாவிவரும் தென்றல் காற்று பசுமையான நெற்பயிர்களில் முட்டி மோதி இனிய தென்றலாக கோயில்ச் சுற்றாடலுக்கு எந்த நேரமும் 'சாமரம்' வீசும் இனிய சுவாசிப்பைக் குருக்களின் கிழட்டு மனம் நினைத்துப் புல்லரித்துக் கொள்கிறது.

நெற் களஞ்சியத்தின் தாய்வீடாகக் கணிக்கப்படும் 'படுவான்கரைப்' பகுதியில் ஆயிரக் கணக்கான நெற்காணிகள் சூழ்ந்து கிடப்பதனால் நெல்வயல் செல்வமும் இந்த விவசாய மண்ணைச் செல்வபுரியாக மாற்றி வைத்திருக்கிறது. தான்தோன்றி ஈஸ்வரனின் களஞ்சியப்பட்டறையில் மூட்டை மூட்டையாக நெல்ச் சாக்குககள் நிறைந்து கிடந்தன. ஒவ்வொரு அறுவடை காலத்திலும் நேர்த்திக்கடனாகவும், மானியமாகவும் நெல்லு மூட்டைகள் வண்டி வண்டியாக கோவில் தலத்திலே வந்துகுவியும். நெல் மணிகளால் உயர்வு பெற்ற செல்வத்தலமாக கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றி ஈஸ்வரனின் கோவில் விளங்கியது. கோவிலுக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தமாகவும் நூற்றுக்கணக்கான நெல்வயல்க்காணிகள் கோவிலை சுற்றிய பகுதிகளிலும் ஏனைய கண்டங்களிலும் தாந்தாமலைப் பகுதிகளிலும் காணப்பட்டன. அத்தனை வயல்களும் 'ஆயத்துக்குக்' கொடுக்கப்பட்டுச் செல்வக் கோவிலாக ஈஸ்வரன் கோவில் துலங்கியது. களஞ்சியப்பட்டறையில் நெல் மணிகள் என்றும் மலைபோல் குவிந்துகிடக்கும். இதனைப் பராமரிக்கக் 'கோவிலார்' எனும் வகுப்பினர் தொண்டூழியம் செய்வதற்கு நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்களின் ஊதியத்திற்கு வருஷாவருஷம் 'படிகளாக' நெல்லு மூட்டைகள் கோவில் வண்ணக்குமாரால் வழங்கப்படும். கோவில்க்குருக்கள் மாருக்கும் சம்பளம் ஆண்டு தோறும் நெல்மணிகளாகவும், அர்ச்சனைப் பணமாகவும் கிடைக்கும். உற்சவகாலங்களில் காசும், பண்டங்களும் எக்க செக்கமாகக் கிடைக்கும். அறுவடை முடிந்து 'புதிர்க் கோட்டைகளோடு' தயிர்ப்பானைகள், முற்றிப் பழுத்த வாழைக்குலைகள் சகிதம் 'போடிமார்' இரட்டை மாடுகள் பூட்டிய வேலைப்பாடு நிறைந்த அழகு வர்ணம் தீட்டிய மாட்டு வண்டிகளில் கோவில் முற்றத்தில் இறங்கித் 'தானம்' செய்யும் அற்புதம் வேறு எந்தக் கோவில்களுக்குக் கிடைக்கப் போகிறது. 'மையோர்க் கிழங்கைச்' சுட்டு விரித்தாற் போல் பளிச்செனத் தெரியுமே. ஒரு 'சுண்ணாம்பு' வெள்ளை அப்படியான ஒரு வெள்ளை நிறம் சோமசுந்தரக் குருக்களுக்கு பார்ப்பதற்கு 'பெண்மை கலந்த' ஒரு அழகுச் சாயல் எவரையும் மையல் கொள்ள வைத்தது. வாட்ட சாட்டமான தளதளத்துப் பொலிவாக வளர்ந்து கிடக்கும் கிணற்றடி வாழைமரம் போல் பாங்கான ஒரு உடல்வாகு. சடைத்து வளர்ந்துகிடக்கும் மயிர்க்கற்றையை லாபகமாக முடித்து பின்குடும்பியாகக் கட்டிய தோரணை இளங் குமரிகளின் பின் சாயலைக் காட்டிக் கொண்டிருந்தது. கோவிலுக்குவரும் இளமை பொங்கும் வாலிபர்மார்களும் இவர் மேல் ஒரு கண் 'அடா சின்னக்குருக்கள் ஐயா பாலமுருகன் போல் மனத் தூண்டில் போட்டு இழுக்கிற அழகா இருக்காரு' என்ற வாலைக்குமரிகள் தங்களுக்குள் 'மோக விதையை' விதைத்துக் கொள்வார்கள்.

எந்த 'மோக விதைக்கும்' ஈடுகொடுக்காத சோமசுந்தரக்குருக்கள் கடுக்காமுனையிலிருந்து அழகு வர்ணம் தீட்டிய 'பொட்டி' வண்டியில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைப் பூசைக்கும் தகப்பன் சின்னத்தம்பிப் போடியாரோ கொக்கட்டிச் சோலைக்கோ வில்லுக்குப் பூசை காண வந்த அந்த அழகு தேவதையான தனலட்சுமியின் தெய்வீகக்களை பொருந்திய அற்புதமான வசீகர அழகு சின்னக்குருக்களான சோமசுந்தரத்தை ஆட்டி அதிரடிக்க வைத்தது. அவள் பூசைக்கு வரும் அழகு பட்டுப்பூச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல் கண்சிமிட்டி அன்னம் போல் மெல்ல நடந்து வரும் பாங்கு அடா! தகப்பனோடு ஈஸ்வரனுக்குப் பூசை புனக்காரம் செய்யும் சின்னக் குருக்களான சோமசுந்தரனுக்கு மனத்தை ஏன்னவோவெல்லாம் செய்து பம்பரமாக ஆட்டி அலைக்கழித்து அவரது மனத்திலே பூரணமாக அவள் இடம்பிடித்துக் கொண்டாள். அவரோ சைவக்குருக்கள் தினமும் மரக்கறி சாப்பாடும் தூய்மையான கலாசார உணர்வுகளோடு வேறுபட்ட தனித்துவமான வாழ்வு அவளோ வேறுபட்ட பழக்கவழக்கங்களோடு மச்சம் மாமிசம் என்று வாழுகின்ற இவர்களுக்கு ஒத்துவராத வாழ்வு. அவரோ கோவிலும் குளமுமென்று கிடக்கும் சைவக் குருக்கள் பரம்பரை. அவளோ விவசாயம் செய்யும் குடும்பத்தைச் சேர்ந்தவள். சோமசுந்தரக் குருக்களின் தாய்மாமன் மகள் பார்வதி இவருக்காகவே 'நேர்த்திக்கடன்' செய்துவிட்ட பசுமாடு போல் வளர்ந்து வாழ்ந்து வருகிறாள். ஆனால் சின்னக்குருக்களான சோமசுந்தரமோ எதற்கும் துணிந்து விட்டார். மலைபோல் எதிர்ப்பு வந்தாலும் அதை உடைத்தெறிந்து புதுப்பாதை போடத் துணிந்துவிட்டார். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தகப்பனோடு ஈஸ்வரன் பூசை காண வரும் தனலட்சுமியை தனது வசீகரப் பார்வையால் கவர அவளும் அவரது 'மோகவலையில்' விழுந்து விடுகிறாள். பிறகென்ன, தகப்பன் மார்க்கண்டு குருக்களுக்குத் தெரியமால் கடுக்காமுனைக்குச் சென்று சின்னத்தம்பி போடியாரின் மகளான தனலட்சுமியை வாழ்க்கைத் துணைவியாகத் கைப்பிடித்துக் கொள்ளுகிறார். விஷயத்தைக் கேள்விப்பட்ட மார்க்கண்டுக் குருக்கள் இடியேறு தலையில் விழுந்தது போல் ஆனார். நமது குலமென்ன? ஆசாரம் என்ன? என்று மனச்சஞ்சலத்தால் பைத்தியம் பிடித்தவர் போல் ஆனார். ஆனால் சில வருஷங்கள் 'அஞ்சாத' வாசம் செய்த மகன் சோமசுந்தரக் குருக்களை ஊரார் உறவினர்களின் சமரச முயற்சியால் மனம் கொஞ்சம் தளர்ந்து ஒரே வாரிசான தனது மகன் சோமசுந்தரத்தை அவனது இளம் மனைவியான தனலட்சுமியோடு திரும்பவும் ஏற்றுக் கொண்டு தனக்கு உதவியாக ஈஸ்வரன் பூசைக்கு உதவியாக வைத்துக் கொண்டார். தனலட்சுமி விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவளாக இருந்தாலும் அவள் என்றுமே மச்சம் மாமிசம் சாப்பிடாமல் தூய பக்திப் பெண்ணாகவே வாழ்ந்து வந்தாள். அதனால் அவள் ஐயர் குடும்பத்தோடு சேர்ந்து ஐயர் பெண்ணாகவே மாறிவிட்டாள். அவரது விந்தையான தாம்பத்திய வாழ்வை ஒருதரம் நினைத்துப் பார்த்த சோமசுந்தரக் குருக்களுக்குத் தன்னை அறியாமல் சிரிப்பு பூவிரியும் மொட்டாக வெடித்துச் சிதறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது மனத்திரை அகலமாக விரிய பழைய சம்பவங்கள் படமாக ஓடுகிறது. இயக்கங்களின் கட்டுப்பாட்டில் 'படுவான்கரை' இருந்த காலங்களில் வாவிக்கரைக்கு அப்பாலுள்ள இராணுவ முகாம்களிலிருந்து அடிக்கடி 'ஷெல்' அடிப்பது வழக்கம். எத்தனையோ 'ஷெல்' கள் விழுந்த போதும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வரன் கோவிலுக்கோ கோவில்ச் சுற்றுமதிலுக்குப் பக்கத்தல் பாதுகாப்பாக வெயிலும், மழையும் தாக்காமல் ஓலை, படங்குகளால் கட்டி வைக்கப்பட்டிருந்த 'தேரோட்டத்துக்குப்' பயன்படுத்தும் பெரிய தேரான வேலைப்பாடுகள் நிறைந்த 'சித்திரைத் தேரும்' அதனை விடச் சிறிதான 'சின்னத் தேரும்' எந்த விதப் பாதிப்பும் இன்றி அப்படியே பழுது படாமல் அச்சுக்குலையாமல் இருந்ததைச் சோமசுந்தரக் குருக்கள் ஒருதரம் நினைத்துப் பெருமைப்பட்டுக் கொள்கிறார். அந்த இரு அற்புதமான தேர்களும் எங்கே வைத்து எப்படி யாரால் எந்த மரங்களைக்கொண்டு செய்தது என்பதைச் சோமசுந்தரக் குருக்களின் அப்பா மார்க்கண்டுக் குருக்களுக்கும் ஏன் அவருடைய தந்தை கனகசபைக் குருக்களுக்கும் தெரியாதாம். அவ்வளவு பழமையான அத்தேர் இரண்டும் இன்றும் பழுது படாமல் அப்படியே இப்பொழுது செய்த மாதிரி அழகு ஜொலிக்க இருப்பது அந்த தான்தோன்றி ஈஸ்வரனின் அற்புதத்தால் அல்லவா? இதை எண்ணிப் பார்க்கும் பொழுது சோமசுந்தரக் குருக்களின் கண்களால் கண்ணீர் பூ மழையாகச் சொரிந்து வழிய ஆரம்பித்தது.

தேரோட்ட காலங்களில் பகல் பூசை முடிந்ததும் பின்னேரம் சூரியனின் வேகம் குறைந்த மந்தமான வேளையில் ஆரையம்பதிக் கந்தசாமி கோவிலில் இருந்து வந்த அடியார்களால் 'வடம்' பூட்டி ஆரம்பித்து வைக்க கோவில் வீதியில் தேர் இழுத்துப் பவனி வரும் அருள் மயமான காட்சி ஆரம்பமாகும். ஆரையம்பதி கந்தசாமிக் கோவிலைச் சேர்ந்தவர்கள் வந்து 'வடம்' பூட்டாமல் விட்டால் தேர் ஓடாமல் அப்படியே நின்று விடுமாம்.

இந்த சம்பிரதாயம் வாழையடி வாழையாக கோவில் 'கல்வெட்டில்' எழுதப்பட்டவாறு நடந்து கொண்டுவரும் மரபு மாறாத பக்தி நிகழ்வாம். தேரின் மேல் தட்டில் சுவாமிக்குப் பக்கத்தில் தீபம் காட்டிப் பூசை செய்தவாறு தகப்பன் மார்க்கண்டுக் குருக்களோடு தானும் வந்ததை நினைத்து சோமசுந்தரக் குருக்கள் ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறார். தேர் வரும் வீதியைத் தள்ளி நாலா பக்கங்களும் வெண்கலக் கடைகளும் பூந்திக்கடைகளும், சில்லறைச் சாமான்களோடு யாழ்ப்பாணம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பனாட்டுக்' கூடைகளும், பனை ஓலைப் பெட்டிகளும் நிறைந்த கடைகளும், சாமிப்படக் கடைகளும், சருவந்துப் போத்தல் கடைகளும், சீலக்கடைகளும், தேனீர்க்கடைகளும் குழந்தைகளின் விளையாட்டுச் சாமான் கடைகளும் கரும்பு அன்னாசி போன்ற பழங்கள் நிறைந்த கடைகளும் அப்பப்பா! கொக்கட்டிச்சோலைக் கோவில் கலகலப்பாக கதம்பக் கலவையான சத்தங்களோடு களைகட்டிக் கிடக்கும். கோவில் முற்றமெங்கும் ஆண்களும், பெண்களும், வாலிபரும், மங்கையரும், குழந்தைகளும், கிழவிகளும் சனசமுத்திரமாகவே காட்சிதரும். வீதி எங்கும் ஒரு வித பக்தி மணம் கமழும் சாமி தேர்களில் இருக்க 'வடக்கையிற்றைப்' பிடித்து லாவகமாக இழுத்தவாறு பக்தர்கள் முன்செல்ல, தேர்கள் இரண்டும் மெது மெதுவாகப் பின்னால் ஓடிக் கொண்டுவரும். பக்தர்களின் 'அரோகரா' ஓசைச்சத்தங்களும், கற்பூரச் சட்டி எடுத்துக் குமர்கள் வரும் எழிலும், ஆவேசமாக ஆடிவரும் ஆனந்தக் காவடிகளின் நளினமும், தேரோட்டம் சொர்க்க வாசலைத் திறந்த மாதிரிதான் காட்சிதரும். சோமசுந்தரக் குருக்களின் பாட்டனார் காலத்துக்கு முந்திய காலத்தில் ஒரு அற்புதமான அதிசயம் நடந்ததாகத் தகப்பன் மார்க்கண்டுக் குருக்கள் கூறியதைச் சோமசுந்தரக் குருக்கள் ஒருதரம் நினைத்துக் கொள்ளுகிறார். தேரோட்டத்தில் இழுபட்டு ஓடிவந்த 'சின்னத் தேர்' பின் மதிலை உடைத்துக் கொண்டு ஆட்கள் 'வடம்' பிடித்து இழுத்து வராமல் வேகமாக ஊர்ந்து ஓடிப் போய் அருகிலுள்ள 'பாடும் மீன்' வாவியின் ஆழமான நடுப் பகுதியில் விழுந்து மறைந்து விட்டதாம். இந்த அபசகுணத்தால் ஏன் அற்புதம் நிறைந்த அதிசயத்தால் தேரோட்டம் காணவந்த பக்தர்கள் நடுநடுங்கிப் போய்விட்டார்களாம். இன்னும் அந்தத் தேர் வெளியே வரவில்லையாம். சில வேளை தேரின் முடி தெரியுமாம். அருகில் போய்ப்பார்த்தால் மறைந்து விடுமாம். இன்றும் தேர் ஓடி உடைந்த பின் பக்க மதில்ச் சுவர் கட்டினால் உடைந்து உடைந்து விழுகிறதாம். அதனால் வெறும் கம்புதடிகளை நாட்டி வேலியாக மறைத்து வைத்திருக்கிறார்களாம். சோமசுந்தரக் குருக்களின் மனத்திரையில் 'பழமையான ரகசியங்கள்' வந்து வந்து விழ மேலும் படம் தொடர்கிறது.

'கொடியேற்றம்' நடந்து பதினைந்து நாட்களுக்குத் திருவிழா நடக்கும். ஒவ்வொரு திருவிழாவுக்கும் ஒவ்வொரு ஊரிலிருந்தும் 'கூத்துக்' கொண்டு வந்து ஆடுவார்கள். கன்னன்குடா கூத்துக்களுக்குப் பேர் போன ஊராகும். இங்கு கிழவர்களும், வாலிபர்களும் கூத்துக்கலையின் 'அண்ணாவி' மாராகவே விளங்குகின்றார்கள். வேளாண்மை விதைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுவடையாகும் காலம் வரை பொழுது போக்குக்காக 'கூத்துப் பழகி' ஆடுவதால் அங்கே நாட்டுக் கூத்து அற்புதக் கலையாக வளர்ந்து கொண்டு வந்தது. கன்னன்குடாக் கூத்தென்றால் கோவில் வெட்டையிலே சன சமுத்திரமாகக் காட்சிதரும். விடிய விடிய கண்முழித்து கூத்துக்கலையிலே மயங்கிக் கிடப்பார்கள். மத்தாள அடியும், சல்லாரிச்சத்தமும், சலங்கை ஓசையும் இனிய கூத்துப் பாடல்களோடு போட்டிபோட்டுக் கோவில் வெட்டையைக் கலகலப்பாக மாற்றிவிடும். அல்லிநாடகம், நொண்டி நாடகம் குருக்கேத்திரன் போர், வாழ வீமன் நாடகம், வைகுந்தம், வள்ளி நாடகம், இராம நாடகம், பதினாலம் போர் என்று கூத்துக்கள் கோவில்த் திருவிழாவை ஆனந்தத் திருவிழாவாக மாற்றிக் காட்டும். போரதீவு, மண்டூர், கன்னன்குடா, எரிவில், ஆரையம்பதி மகிழூர்முனை, கல்லாறு, கொத்தியாமலை, வெல்லாவெளி, களுவாஞ்சிக்குடி, நீலாவணை, பாண்டிருப்பு, அரசடித்தீவு, அம்பிளாந்துறை, களுதாவளை, என்று பல ஊர்களிலிருந்தும் நாட்டுக்கூத்துக்கள் கொக்கட்டிச்சோலை தான்தோன்றி ஈஸ்வரனின் கோவிலிலே சிறப்பாக அரங்கேற்றப்படும் இந்தச் சிறப்பு வாய்ந்த கூத்துக்களால் கோவில்ப் பாரம்பரியம் கலை கலாசாரத்தை வளர்த்தெடுக்கும் பண்பாட்டு ஊடகமாக விளங்கியதை சோமசுந்தரக் குருக்கள் ஒருதரம் நினைத்துப் பார்த்துக் கொள்கிறார்.

போன வருஷம் தேரோட்டத்தில் இடம்பெற்ற அசம்பாவத்தை அவரால் என்றுமே மறக்கமுடியாது. தேரோட்டம் வழமை போல் நடந்து கொண்டிருந்தது. சுற்றிவரச் சனசமுத்திரம். கோவில் வீதியை அண்டிய கடை வீதிகளில் ஓயாத இரைச்சல், எங்கும் இரைச்சல்! இரைச்சல்! முடிவில்லாத கடல் அலை போன்ற இரைச்சல் 'வடம் பூட்டி' இழுத்து வரப்பட்ட சின்னத்தேர் எதிர்பாராத விதமாகத் தடம்புரண்டு கீழே சாய, அந்தத் தேரிலே அகப்பட்டுப் பதினைந்து பேருக்கு மேல் இரத்தம் வழிந்தோடும் காயங்களால் போராட சாமிக்கருகிலிருந்து கீழே விழுந்த கோவில்த் தொண்டு செய்யும் கோவிலான் 'சிவலிங்கம் கால் நொறுங்கி உடைபட்டு இன்றும் ஒருகால் இல்லாதவராக பொல்லிலே நடமாடுகிறார். இந்த அனர்த்தம், ஊருக்குப் பேர் அழிவு வரப்போகும்'' முன் எச்சரிக்கை' என்று பலரும் பேசிக் கொண்டார்கள். அதுதான் வீடு வாசல் சகலதையும் இழந்து அகதிகளாக படுவான்கரை மக்கள் ஓடிப் போய் மீண்டு வந்த அகதிக்குடியேற்றம் என்று சோமசுந்தரக் குருக்கள் ஒரு தரம் நினைத்துக் கொள்ளுகிறார்.

'கொக்கட்டி' மரங்களால் சூழப்பெற்ற அந்தப் பயங்கரமான மிருகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் அந்தக் காட்டிலே வாழ்ந்த 'வேடன்' காட்டு மரத்தை வெட்டும் போது பளிச்செனக் கண்களிலே கண்ட சிவலிங்கத்தான் 'சிகரத்தில்' அரண்மனை அமைத்து ஆட்சி செய்த 'சோழராணியால்' பின்பு கோவிலாக அமைக்கப்பட்டதாக கோவில்க் 'கல்வெட்டில்' கூறுவதையும் குருக்கள் ஒருதரம் நினைத்துக் கொள்கிறார். போர்த்துக்கீசர் ஆட்சி செய்த காலத்தில் சைவக் கோவில்களையெல்லாம் இடித்துத் தரைமட்டமாக்கிய வேதனையாம். பிரளயக் காலத்தில் கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றி ஈஸ்வரனின் திருத்தலமும் ஆபத்துக்குள்ளாகும் கொடிய நிலை உருவாகும் அவலத்தைக் கண்டு அக்கோவில் குருக்கள் இந்த இக்கட்டிலிருந்து நீக்கித்தர வேண்டுமென்று கோவிலின் மத்தியிலே படுக்கும் 'நந்திச் சிலைக்குப் பக்கத்தில் உணவும் தண்ணீர் ஏதும் அருந்தாமல் தியானம் செய்து 'பழி' கிடந்த வேளையில் போர்த்துக்கீசத் தளபதி குதிரையிலே ஏறி கோவிலை நோக்கி வந்து நோட்டம் இட்டானாம். பின்பு குதிரை மீது வந்து கீழே இறங்கி ஐயர் படுத்துக்கிடந்த இடத்துக்கு வந்து கோவிலை அலட்சியமாகப் பார்த்து கேவலமாகக் கண்சிமிட்டி சிரித்தவாறு 'உங்களது கல்லுச் சிலையான இந்த மாடு புல்லுத் தின்று மலம் போடுமா? அப்படிச் செய்தால் உங்களது கோவிலை இடிக்க மாட்டோம்'' என்று கூறிவிட்டு, பூனைக் கண்களில் யுத்தவெறி சிவப்புக் கோலம் போட பார்ப்பவரை மருளவைத்த போர்த்துக்கீசத் தளபதி அடுத்தநாள் வருவதாகக் கூறிவிட்டுப் போய்விட்டானாம். இந்த அன்னியநாட்டுப் படைத்தளபதி அடுத்த நாள் கோவிலை இடிக்கும் திட்டத்தோடு படைகளோடு வந்தவேளை, குருக்களின் இறைபக்திக்குப் பணிந்து தன்திருத்தலத்தைக் காக்கும் நோக்கோடு குருக்களின் வேண்டுகோளின்படி அந்தக் கல்லுச் சாமியான மாடு' குருக்கள் கொடுத்த புல்லைச் சாப்பிட்டு புதிதாக மலமும் போட போர்த்துக்கீசத் தளபதியும் அவனது அழிவுப்படைகளும் அச்சத்தால் நிலைகுலைந்து பயத்தால் ஓடிப்போன அந்தத் திருக்கோவிலின் மகிமையை மீண்டும் ஒருதரம் இரை மீட்டுப்பார்த்துக் கொள்ளுகிறார் சோமசுந்தரக்குருக்கள்.

எந்தநேரமும் 'மடபள்ளியில்' உள்ள களஞ்சியசாலையில் மலை போல் குவிந்து கிடக்கும் நெல்லுமூடைகள் இன்று வெறுமையாக்கப்பட்டு பஞ்சக் கோலம் காட்டுவதையும் கண்டு சோமசுந்தரக் குருக்களின் உள்ளம் ஐயப்பனின் எரிமலையின் நெருப்புக் குழம்பாகத் தகித்தது. பூசைக்கு நெய்வேத்தியம் செய்து படையல் பொங்கல் செய்வதற்கு வீடுகளிலிருந்துதான் நெல்லைச் சேகரிக்க வேண்டியிருக்கிறது. பயங்கரமான 'அகதி வாழ்க்கையில்' விவசாய நிலங்கள் காய்ந்து போய்க்கிடப்பதனால் படுவான்கரையிலே நெல்லுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தட்டுப்பாடு வந்துவிட்டது. கோவில்த் தொண்டு செய்யும் 'கோவிலார்கள்' ஆண்களும் பெண்களும் உரலிலே போட்டு நெல்லுக்குத்துவதும், மா இடிப்பதும், பொங்கல் செய்வதும், மோதகம், வடை, கடலை, அவல் போன்ற 'பிரசாதங்களை'ச் செய்வதும் கண்கொள்ளாக் காட்சியாகயிருக்கும். 'கொம்பு சீவிய' உயர்ந்த கொம்புகளை உடைய வளர்ந்து பொலிந்து காணப்படும் மாடுகளைப் பூட்டிய அழகிய வண்டிகள், காளை மாடுகளின் கழுத்திலே கட்டப்பட்ட 'சலங்கை' ஓசைகள் சுற்றுச்சூழலை ஓசை மயமாக்க தயிர், பழங்கள், பண்டங்கள் "புதிர் கோட்டைகளோடு" கோவில் முற்றத்திலே வந்து 'போடிமார்' இறங்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கக் கண்டு இன்றும் அவர் மனதிலே ஓவியமாக வரையப்படுகிறது.

'படுவான்கரைப் பகுதிகளான கடுக்காமுனை, அரசடித்தீவு, பட்டிப்பளை, அம்பிளாந்துறை, பண்டாரியாவழி, படையாண்டவழி, மகிழடித்தீவு, முனைக்காடு, முதலைக்குடா, இலுப்படிச்சேனை, மணல்பிட்டி, வாழைக்காலை, தாந்தாமலை என்று கோவில்த் திருவிழாவுக்கும், தேரோட்டத்துக்கும் வருகின்ற மக்கள் கூட்டமும் பக்தியை நிறைவு செய்யும் தெய்வீகக் காட்சியும் சோமசுந்தரக் குருக்களை இன்னும் ஆட்டிப்படைக்கிறது. மண்முனைத்துறையாலும், அம்பிளாந்துறையாலும் பாதைகளால் 'அக்கரப்பட்டுச்' சனங்கள் ஆயிரம் ஆயிரம் தேரோட்டத்தைக் கண்டுகளிக்கவரும் அழகே தனி அழகுதான். குருக்களின் கிழட்டுமனம் இவற்றையெல்லாம் அசை போடுகிறது.

மனைவி தனலட்சுமி வீடுவாசல், காணிபூமி உள்ளவள்தான். இரட்டை மாடுகள் பூட்டிய இரண்டு அழகிய மாட்டு வண்டிகள் தகப்பனுக்கும் உண்டுதான். சொந்தம் உறவு என்று பெரிய குடும்பந்தான் என்றாலும் அவற்றையெல்லாம் தூக்கி வீசி எறிந்துவிட்டு சோமசுந்தரக்குருக்களோடு கோவில் மடப்பள்ளியோடு வாழ்க்கையை அமைத்துக்கொண்டவள் தனலட்சுமி. சோமசுந்தரக் குருக்கள் தாய் தகப்பனுக்கு ஒரே பிள்ளைபோல் அவருக்கும் 'கண்ணே கண்ணு. ஒண்ணே ஒண்ணு" என்று ஒரு பெண்மகள்தான். அவள் படித்து வளர்ந்து அழகு தேவதையாகப் பவனிவந்து கொண்டிருக்கும் போது 'அந்தப் பிரளயம்' அவர்களது வாழ்க்கையிலே ஏற்பட்டது. ஒரு நாள் தோழிகளோடு 'குளத்திலே' குளிக்கப் போனவள் அந்தக் குளத்துக்கே 'சமாதி' ஆகிப் போய்விட்டாள். அருமை மகளின் பிணக் கோலத்தைக் கண்ட நாளிலிருந்து சோமசுந்தரக்குருக்களின் மனைவி தனலட்சுமி பயித்தியம் பிடித்தவள் போலாகி நிரந்தரமாக நோயாளி ஆகிவிட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கோவிலான்' அடிக்கும் கோவில் 'பறை ஓசை' கொடியேற்ற ஆரம்பத்துக்குக் கட்டியம் கூற, பழைய நினைவுகளைத் தூக்கி வீசி எறிந்து விட்டு, துடித்துப் பதறி எழுந்து கோவில் மூலையிலே 'திலாந்தும் துலாக்காலுமாக'க் காணும் 'கிணற்றடியை' நோக்கி ஓடுகிறார் சோமசுந்தரக்குருக்கள். மளமளவென்று தலையிலே தண்ணீரை வார்த்து முழுகியவாறு பதினைந்து நாள் திருவிழாக்கான கோலாகலமாக நடைபெறப்போகும் 'தேரோட்டத்துக்கான' கொடியேற்ற நிகழ்வுக்குத்தன்னை ஆயத்தம் செய்து கொள்ள, 'மடப்பள்ளியை அண்டிய பூசைபுனக்காரத்துக்குத் தயாராகும் களஞ்சிய அறையை நாடுகிறார் சோமசுந்தரக்குருக்கள்.

*04.01.2009*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழுந்தொன்று கருகிப்போகிறது

தகப்பன் மாடசாமி குடிபோதையில் உழறுகிறான் என்றுதான் ஆரம்பத்தில் மகள் பார்வதி நினைத்துக் கொண்டாள். பேச்சு நீடித்துக் கொண்டு போகும் பொழுதுதான் தகப்பன் பின்னுகிற சூழ்ச்சி வலையின் சூட்சுமம் அந்தப் பன்னிரெண்டு வயதுப் பெண் பிள்ளைக்கு ஓரளவு புரிய ஆரம்பித்தது. கசிப்புக்கு அடிமையாகும் தகப்பனுக்கு எந்த நாளும் தலைகெட்ட வெறி என்றாலும் பணியக் கணக்கு வயத்திலே வாசம் செய்யும் எந்தத் தொழிலுக்கும் லாயக்கில்லாத சோம்பேறியான 'தரகு' வேலை பார்க்கும் முனியாண்டியின் வசியப்படுத்தும் முணுமுணுப்பு மந்திரம் பார்வதியின் காதுகளிலே உருக்கிய கொதிக்கும் வெள்ளித் துகள்களாக நிறைந்து மரண அவஸ்த்தை காட்டும் பொழுதுதான் தனக்குச் சிலுவை அறையப் போகும் துயரச்சம்பவம் இன்னும் பக்குவப்படாத எலும்புத் தோலுமாக வாடிவதங்கிக் கிடக்கும் அந்தப் பேதைப் பெண்ணுக்கு புரிய ஆரம்பித்தது. காலையிலிருந்து அந்தி வரை தேயிலை மலையிலே கொழுந்தெடுத்துக் கொழுந்தெடுத்து பசியால் துவண்டு போய்வந்ததாய்க்கு கிடந்த கொஞ்சம் அரிசி மணியைக் கழுவி உலையிலே போட்டுவிட்டு. இன்னும் சின்னச் சின்ன வேலைகளைத் தாய் வேலம்மாவுக்குச் செய்து கொடுத்துவிட்டு "லயத்து" அறைக்குள் கால் வைக்கும் பொழுதுதான் லயக் காம்பிறாவின் ஓரத்திலே அந்தக் கும்மிருட்டிலே குந்திக்கொண்டு "கசிப்பு" போத்தலை பதம் பார்த்தவாறு தகப்பன் மாடசாமியும், "தரகன்" முனியாண்டியும் இந்த நாடகத்தை நடத்திக் கொண்டிருப்பதை கூர்ந்து நோக்கி காதுகளைத் தீட்டியவள் அப்படியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடாமல், அசையாமல் அந்த இருட்டிலே சிலையாக நின்று கொண்டு அவர்களது சூழ்ச்சி வலைப் பின்னலுக்குள் சங்கமம் ஆகிறாள். லயத்துக் குசினிக்குள் மட்டும் குப்பி விளக்கொன்று எண்ணெய் இல்லாமல் "திரி" கருகிப் போய் சாகப் போகும் கிழவியின் கடசி மூச்சுப் போல் மின்மினிப் பூச்சாக மினுங்குகிறது. இதைத் தவிர லயம் முழுவதும் ஒரே இருட்டு மயந்தான். அந்த இருட்டிலே தன்னைப் பற்றிய பேச்சே அசை போடுவதை காதுகளைத் தீட்டியவாறு கேட்டுக் கொண்டு நிற்கிறாள் பார்வதி.

"டேய் மாடசாமி நான் சொல்ற சங்கதிய ஒரு பிசகுமில்லாமல் அம்புட்டையும் காதில வாங்கிப் புட்டு உம்மவள் பார்வதிய கொழும்பு முதலாளி சில்வா ஐயாக்கிட்ட வேலைக்கு அனுப்புற முடிவ உடனே பார்க்கணும் புரியுதா. ஆமா மாடசாமி உன்னைத்தான் கேக்கிறன். இந்த லயத்தில பசியும் பட்டினியுமா நீங்கத்தான் ஜீவியம் நடத்திக்கிட்டு வர்றிங்க. அந்தப் பிஞ்சுக் கொழந்தையாவது சுகமாக வாழவைக்க வேணாமா? அவளுக்கும் நிம்மதியான வாழ்வுகிட்டும் உங்களுக்கும் துட்டுப் புரளம் இல்லையா மாடசாமி." ஆமா! ஆமா! நீ சொல்ற நூத்துக்கு நூறு அம்புட்டும் நிஷந்தான். எண்டாலும் அந்தப் பொட்டப் பொடிச்சி சம்மதிக்கணுமே எம்பொஞ்சாதி வேலம்மா. மகளைப் பிரிஞ்சு வாழுவா அப்படி எண்டு என்னால் நினைச்சும் பார்க்க முடியல்ல முனியாண்டி. வேலம்மா மலையிலே மாரடிச்சுப் போட்டு வர்ற நேரம் இந்தப் பொட்ட பொடிச்சுதானே அடுப்பெரிய "தேயில மிலாரு" இருந்து சட்டிபானையைக் கழுவி, லயத்துக் காம்புறாவைத் துப்பரவு செய்து சமையலுக்கு அடித்தளமிட்டு அவளிற பாரத்தச் சுமக்கிற அந்தக் குட்டிதானே அதுதான் முனியாண்டி என்ன செய்வதென்று புரிஞ்சிக்காமத் தவியாத் தவிக்கிறன்" "போடா விடயம் புரியாத பேய் மாண்டியே அந்தச் சின்னக் குட்டி இஞ்ச இருந்து என்னத்தையா கிழ்ச்சிடப்போவுது இந்த ஊத்தலயத்தச் சுத்தி சேத்தில புரளுற எருமமாட்டு வாழ்க்கையைத்தாண நீயும் விரும்புறா அப்படி எண்டா இந்தக் கதைய நான் எடுக்கல்ல. என்ன உட்டு உடுசாமி. நான் வேற புள்ளங்களப் பாத்துப் புடுச்சிக்கிட்டுப் போறன் வாற அதிஷ்ட தேவதைய காலில் போட்டு மிதிக்கிற உன்னிட்ட எம்புட்டுத்தான் கதைச்சாலும் அதப் புரிஞ்சிக்காமல் போனா நான் போறன் சாமி. ஆளவிடு" என்ன முனியாண்டி நான் ஏதோ கதைக்குச் சொன்னா டக்கெனக் கோபிச்சிக்கிற சரி முயற்சித்துப் பாப்பம். மசியாட்டி தாய்க்கும், மகளுக்கும் செவிட்டையில நாலு போட்டா தானாக அடங்கிப் போறாவுக சரி முனியாண்டி நீ சொல்ற மாதிரிக் காரியத்த பிசகு இல்லாம முடிச்சிக்கிடுவம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புரியுது புரியுது இப்பதான் மாடசாமிக்கு ஞானம் பொங்கிக் குதம்பி வழிந்து நல்ல பாதையில வளமான வாழ்வுக்குக் கால்பதிக்க மனம் இடந்தருது இல்லையா மாடசாமி" "ஆமா., ஆமா நீ புரிஞ்சிக்காம எதையும் உழராம எப்ப கூட்டிப்போவுறா அட்வான்ஸ் நிறைய வாங்கித் தருவையா. அந்தப் பணக்கார ஊட்டுத் துரை புள்ளையச்சரியாப் பார்த்துக்குவானா. உனக்கென்ன ஐயா ரெண்டு பக்கமும துட்டு வெள்ள மாகப்புரளும்." "போடாமாடசாமி பட்டுப் போன தேயிலமரமாக உண்ட வாழ்வு போகப் போடாது எண்ட கரிசனையால இந்தக் காரியத்தில துணியுறன். எண்ட கூட்டாளி "கவாத்து" வெட்டிய தேயிலமரக்கொழுந்தாக பளிச் செனச்சிலிர்த்து நிக்க வேணாமா? உம் பொஞ்சாதி வேலாம்மாவையும் சவூதிக்கனுப்பி பணம் சம்பாரிக்க ஏதோ இருக்கிறதெல்லாம் சேத்து, போதாக்குறைக்கு கடனும் பட்டு புறக்கரோடு கொழும்புக்கனுப்பி வைச்சா என்ன நடந்திச்சு தெரியுந்தானே. பொஞ்சாதி அரபு தேசத்துக்குப் போகவுமில்ல, உண்ட கனவு பலிக்கவுமில்ல புறக்கருக்கும் வெளியே அனுப்புறன் எண்டு ஏமாத்தின ஏசெண்டுக்கும் இன்னும் இன்னும் எவனுக்கெல்லாம் உடலத் தானம் செய்து ஆறுமாதம் கொழும்பிலவெச்சு ஏமாத்தி, ஏமாத்தி அந்தத் தறுதலைகள் அம்புட்டுப் பேரும் ஆள்மாற உம் பொஞ்சாதி வவுத்தில புள்ளையச் சுமந்து கிட்டு வந்ததுதான் மிச்சம். எவனுக்கோ வம்புல முளைச்ச குட்டிதானே இந்தப் பார்வதிப் பெட்ட. எல்லாத்தையும் கழுவி முழுகி திரும்பவும் ஏத்துக் கிட்டவன் தானே நீ. இளணிய எவறோ குடிக்க கோம்பையச் சுமந்த ரோஷக்காறன் இல்லையா மாடசாமி நீ ஆனா வேலம்மா பொடிச்ச இந்த நிலைமைக்குத் தள்ளிவிட்டது நீதானே. பேராசைப்பட்டு சும்மா வயதில கத்தித்திரிஞ்சு தேயிலைக் கொழுந்தெடுத்த அப்புறாணிப் பொண்ண கொழும்பானுக்குக் கூட்டிக் கொடுத்தது எந்தக் கூறு கெட்டவனுக்கோ வம்புல புள்ளைய உண்டாகி இண்டைக்கு எலும்புத் தோலுமாகக் கிடக்காள் வேலம்மா" உள்ளுக்குள்ள போன "கசிப்பு வசியம்" முனியாண்டியைப் பழைய குப்பையைக் கிழற வைக்க "ஆம்". ஆமா! பழைய குப்பையைக் கிழறி, வெந்த புண்ணில வேல்பாச்சாத முனியாண்டி. அவளுக்குச் செஞ்ச பாவத்துக்கு எனக்குப் பிராயசித்தம் தேட நீதான் கைகொடுத்து உதவனும் பார்வதிப் பொடிச்சி வீட்டு வேலை செய்து கொழும்புச் சீமையில் சம்பாரிச்சு துட்ட அள்ளிக்கொட்டினா எண்ட பொண்டாட்டி வேலம்மாவ ராசாத்திபோல வெச்சிக்கிடுவன் நீதான் முனியாண்டி எனக்குக்கெதியா உதவி செய்யணும்" மாடசாமி வெறிமயக்கத்தில் வார்த்தைகளை தட்டுத் தடுமாறி வெளியேகக்க "மாடசாமி நீ சொல்றமாதிரி கொழும்புச் சீமைக்கு பார்வதி பொடிச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைக்குப் போனா, துட்டென்ன எல்லாமே காலடியில் வந்து கொட்டிக் கிடக்கும் சில்வா முதலாளி கொழும்புச் சீமையிலே கொடிகட்டிப் பறக்கிற கோடிஸ்வரர். பார்த்தும்பாராம நமக்கு அள்ளிக் கொட்டுவாரு நீத்தான் மாடசாமி. விடிவு காலம் புறக்கப்போவுது சரி மாடசாமி உம் மவளையும் பொஞ்சாதி வேலம்மாவையும் வசப்படுத்தி ஒரு நல்ல முடிவு எடுத்திடு ஐயா. கெதியாக் கூட்டித்துப் போவம் பார்வதிய "கசிப்பு" ஏறுமாறாக வயிற்றுக்குள் போக, நாக்குப் பிரண்டு பேச்சுத்தடுமாற தரகன் முனியாண்டி எழும்ப முடியாமல் எழும்பி தட்டுத் தடுமாறி நடந்து போக மாடசாமி எந்த உணர்வும் இல்லாமல் பிணம் போல் லயத்து மூலையிலே முடங்கிக் கிடக்க முனியாண்டி நடந்து போகும் காலடி ஓசையில் "லயத்து நாய்கள்" சத்தங்கள் போட்ட வண்ணம் வெறிக் கூத்து ஆடுகின்றன.

சிலை போன்று நின்று இந்தக் கொடுமையை சீரணிக்க முடியாமல் தாய் வேலம்மாவை நோக்கி ஓடி வருகிறாள் சிறுமி பார்வதி. லயத்துக் குசினிக்குள் ஏதோ வேலை செய்து விட்டு சோர்வும், அசதியும், அடங்காத பசியும் வேலம்மாவை ஆட்டிப் படைக்க தன்னை மறந்து குசினிக் காம்புறாவுக்குள் பிணம் போல் கிடந்தவளை பார்வதி "அம்மாயி, அம்மாயி நான் செத்துப் போயிடுவன் தெரிஞ்சுக்கோ குடிகார அப்பன் என்ன கொழும்புச் சீமைக்குக் கொண்டுபோய் வீட்டு வேலை செய்ய சிங்கள முதலாளிக்கு விற்கப்போறாணாம். நான் உசிரோட இருக்கமாட்டன் செத்துப் போயிடுவன் அம்மாயி" இடியும் மழையும் பெய்யும் போது ஒன்றுமே தெளிவாகத் கேட்காத வானொலி நிகழ்ச்சி போல் அயர்ந்து தூங்கிக் கிடந்த தாய் வேலம்மாவுக்கு மகளின் வார்த்தைகள் எதுவென்று புரியாமல் குழப்பம் அடைந்து துணுக்குற்று எழுந்தவள். "என்னடி பார்வதி நீ சொல்ற ஒன்னுமே புரியல்ல" என்று வேலம்மா சுதாரித்துக் கொண்டு மகளைப் பார்த்துக் கேட்க "அம்மாயி உம்புருஷனும், தரகன் முனியாண்டிப் பயலும் கசிப்பு வெறியில உழறுகிறானுகள் எண்டுதான் அம்மாயி நினைச்சன். புறகுதான் புரிஞ்சிக்கிட்டன் அம்மாயி என்னக்காசுக்கு கொழும்பு சீமையில் வீட்டு வேலைக்கு விக்கப் போறானுகள் எண்டு நான் நிஷமாகச் செத்துப் போயிடுவன் அம்மாயி நான் உன் புருஷனுக்குப் புறக்க இல்லையாம் நீ கொழும்பானுக்கு வம்புல என்னப் பெத்தாயாமே. ஏனம்மா இந்தப் பாவத்தப் புரிஞ்சிக்கிட்டா நான் எதற்காக அம்மாயி உசிரோடு வாழணும்" மகள் பார்வதி கூறிய கூர்மையான நெருப்பு வார்த்தைகள் வேலம்மாவின் நெஞ்சைப் பிழந்து அவளைத் தீராத வேதனைக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுக்கிவிட அவள் மகளுக்கு என்ன பதில் சொல்வதென்று புரியாமல் தவித்தாள். மகள் பார்வதி மீண்டும் மீண்டும் குலுங்கி அழுது மாய கொஞ்சம் பதட்டத்தோடு துணிந்தவளாக தாய் வேலம்மா "அந்தக் குடிகாரனுக ஏதோ பித்தத்தால புலம்புன கதைய பார்வதி புள்ள நீ நிஷமென்று நம்பிக்கிட்டு குழம்பிக்கிடக்கையா. போடி புள்ளம்மா. குடிகாரன் பேச்சு விடிஞ்சாத் தெரியும் பார்வதிக்குட்டி. நீ பேசாம சாப்பிட்டுத் தூங்கு என் கண்ணல்ல. நான் உன்ன எங்கிட்டும் அனுப்பமாட்டன். செல்லக் குட்டி என் உசிரு போன புறவுதான் எதுவும் நடக்கும் புரிஞ்சிக்க தாயே" வேலம்மா தன் மகள் எல்லாவற்றையும் அறிந்துவிட்டாள் என்ற பதட்டத்தில் உண்மைகளை மூடி மறைக்க கஸ்ரப்பட்டுப் பொய் வார்த்தைகளைக் கூறியதும். பார்வதிக்கு மீண்டும் சினம் பொங்கி வந்தது "ஏன் அம்மாயி உண்மைய மூடி மறைக்கிறா. நான் கொழும்பு ஏசண்டுக்குப் பொறந்தது நிஷந்தானே"

"இல்லடி இல்லடி அவனுக குடிபோதையில பொய் சொன்னத்த நீயும் நம்பிக்கிட்டு மனதைப் போட்டுக் குழப்பிக்காத பார்வதி மவ" கூறும் போதே ஒப்பாரி வைத்து அழுதுவிட்டாள் வேலம்மா.

சாப்பாடு வேண்டாமென்று கூறிவிட்டு பார்வதி நித்திரை கொள்வது போல பாசாங்கு பண்ணியவாறு படுத்துக்கிடக்க மற்றத் தம்பிகளான நான்கு சிறு ஆண் குழந்தைகளும் பசிக்களையால் நித்திரையில் மூழ்கிக்கிடக்க வேலம்மாவும் மவள் பார்வதிக்கும் பக்கத்திலே கண்களை மூட அவளுக்கும் பழைய நினைவுகள் எல்லாம் பளிச்செனப் படமாக ஓடுகிறது.

அந்தத் தேயிலைத் தோட்டத்திலுள்ள மற்றவர்களைக் கவரக்கூடிய அழகான 'குட்டிகளில்' வேலம்மா முதல் பெண்ணாக விளங்கினாள். தேயிலைத் தோட்டத்துக் காவல்கார கறுப்பையாவும் அவனது பொஞ்சாதி லட்சுமிக்கும் பிள்ளையாகப் பிறந்தவள் வேலம்மா. பளிச்சென ஒளிகாட்டி பார்க்கும் இளந்தாரிகளை தூண்டில் போட்டு இழுக்கும் வசீகரப் பெண்ணாக வந்த வேலம்மா, பதிமூன்று வயதிலே பெரிய மனிசாகி பதினெட்டு வயதிலே தோட்டத்திலே பேர் பதிந்து தேயிலைக் கொழுந்து நோண்டும் வேலைக்குப் போகத் தொடங்கினாள். அவளது "மோகினித்தனமான" மயக்கும் அழகிலே எத்தனையோ தோட்டத்து இளைஞர்கள் மதிமயங்கி அவளை வாரி அணைத்துக் கொள்ளத்துடித்தது என்னவோ உண்மைதான். ஆனால் காவல்காரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுப்பையா கையிலே காவல் காக்கும் வைரம் பாய்ந்த நெடிய பொல்லை எடுத்துச் சுழற்றி லயத்தையும் மலைக்காடுகளையும் சுற்றி வந்தால் அடங்காத குழந்தைகளும் அடங்கிப் போகும். தோட்டத்துச் சனங்களுக்கு ஒரு இனம் தெரியாத பயமும், அச்சமும் கறுப்பையாவைக் கண்டால் ஏற்படுவது வழக்கம்.

நீண்டு பீப்பா வயிறும் தொந்தியும் உடம்புமாகப் பெருத்து, அடர்ந்த மயிர்க்கற்றையான நீண்ட மீசையோடு எந்தநேரமும் சிவந்த கொச்சிப் பழம் போன்ற கண்களோடு நெடிய வைரம் செறிந்த காவல்ப் பொல்லோடு ஆசான பாவனாக வலம் வரும் பொழுது தேயிலைத் தோட்டமே அந்தக் கம்பீரத்துக்குக் தலை குனிந்து கொள்ளும் கறுப்பையாவுக்குப் பயந்து வேலம்மாவை எல்லோரும் பயபக்தியோடு நோக்கினார்கள். வேலம்மாவுக்கு இருபது வயது நடக்கும் போது கறுப்பையா தனது மருமகன் முறையான மாடசாமியை வேலம்மாவுக்குக் கலியாணம் முடிச்சு வைச்சான். கலியாணம் முடிச்சு மூன்று வருஷங்களாக வேலம்மாவுக்கு ஒரு பூச்சி புழுவும் பிடிக்காத நிலையில் மாடசாமியும், கறுப்பையாவும் குழந்தைச் செல்வத்துக்கு ஏங்கித் தவித்த வேளையில் இரவு நேரம் தேயிலை மலையைச் சுற்றி காவல் செய்த வேளையில் கூடிய "மப்பு" வெறியில் மலைப்பள்ளத்திலே விழுந்து உடல் சிதறி மரணத்தைத் தழுவிய பொழுது மாடசாமி அந்தக் குடும்பத்தை ஆட்டிப் படைக்கத் தொடங்கினான்.

வெளிநாட்டுக்கு வீட்டு வேலைக்குப் போகும் பெண்கள் கைநிறையப் பணத்தோடு திரும்பி வந்து சீரும் சிறப்புமாக வாழ்வதாக வெளிநாடான சவூதிக்குப் பெண்களை அனுப்பும் தரகர் மாடசாமிக்கு ஆசை வார்த்தைகளைக் கூற, மனைவி வேலம்மாவைச் சவூதிக்கு வீட்டு வேலைக்கு அனுப்பத்துணிந்தான். அவனது பேராசையின் விளைவாக இருந்த நகைகளை விற்று இன்னும் சிலரிடம் கடன் வாங்கி தரகரோடு வேலம்மாவைக் கொழும்புக்கு அனுப்பிவைத்தான். அது முடியல்ல. இது இன்னும் சரி வரல்ல. வைத்திய சோதனை இன்னும் முடியல்ல. பாஸ்போட் விசா வந்தால் சவூதிக்கு உடனே போய்விடலாமென்று அந்த ஒன்றுமே தெரியாத கிணற்றுத் தவளையான தேயிலைத் தோட்டத்து அப்பாவிப் பெண்ணான வேலம்மாவை கொழும்பிலே ஆறுமாதம் வைத்து ஏமாற்றி, ஏமாற்றி சவுதிக்கு அனுப்பும் ஏசண்டும், அவனது கூட்டாளிகளும் வேலம்மாவின் இளமையைச் சீரழித்து, பாழ்படுத்தி, நாசமாக்கி, அவள் தூண்டிலில் அகப்பட்ட மீன்குஞ்சாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லொண்ணா நரகவேதனை அடைந்தாள் கடைசியில் சவூதிக்குப் போகவுமில்லை. பணம் சம்பாரிக்கவுமில்லை. சஞ்சலத்தை விலைக்கு வாங்கி, வயிற்றிலே நாலு மாதச் சுமையோடு தோட்டத்துக்கு வந்ததுதான் மிச்சம். தனது பேராசை செய்த மன்னிக்க முடியாத பாவச் செயலால் மனைவிக்கு இந்த நிலை வந்ததென்று மாடசாமியும் துடித்தே போய்விட்டான். கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் செய்து என்ன புண்ணியம் அவமானம் தாங்க முடியாமல் வேலம்மா தற்கொலை செய்ய முற்பட்ட வேளையெல்லாம் மாடசாமி அவளைத் தடுத்து நிறுத்தி அவளுக்கு ஆறுதல் கூறி அந்த அவமானச் சுமையை பாரம் எடுத்துக் கொண்டான்.

கொழும்பிலிருந்து வந்த தரகன் அந்தத் தேயிலைத் தோட்டத்துப் பக்கம் அதன்பிறகு எட்டிப் பார்க்கவேயில்லை. கூனிக்குறுகிய அவமானத்தால் எலும்புந்தோலுமாக வேலம்மா தோட்டத்து லயக்காம்புறாவுக்குள்ளே முடங்கிக்கிடந்தாள். தாய் லட்சுமியும் இந்த அவமானத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் எலிப்பாசணத்தைத் தின்று கண்களை மூட வேலம்மா எல்லா அவமானங்களையும் தாங்கிக்கொண்டு கொழும்பிலுள்ள எந்தப் போக்கிரிக்கோ உண்டாகிய அந்த "வம்புக் குட்டியைப்" பெற்றெடுக்கிறாள். அவள்தான் இந்தப் பார்வதி. இந்தத் தேயிலைத் தோட்டத்துக்கே பார்வதிப் பெண்ணின் பிறப்பு துல்லியமாக விளங்கும்.

எல்லாவற்றையும் மறந்தவளாக தேயிலைத் தோட்டத்திலே கொழுந்தெடுக்கப் புறப்பட்ட பொழுது தேயிலை மலைக் கங்காணி இருந்து கொழுந்து நோண்டும் பெண்கள் வரைக்கும் ஏன் "கவாத்து" வெட்டும் ஆண்கள் வரைக்கும் குத்துக்கதைபோட்டு கேவலமாக நையாண்டி செய்து வேலம்மாவை மேலும் மேலும் அவமானத்தால் தலை குனிய வைத்தார்கள். எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டு அவள் வெறும் கல்லாக வாழ்ந்தாள். இந்த அவமானச் சின்னத்துக்குப் பிறகு மாடசாமி ஓயாத குடிகாரனாக மாறி வேலம்மாவுக்கு குஞ்சும் குரலுமாக நாலு ஆண் குழந்தைகளுக்குத் தாயாக்கினான். இவற்றையும் பார்வதிப் பொடிச்சுக்கு ஏற்படப்போகும் இக்கட்டையும் நினைத்து. அவளைத் தனது உயிரைக் கொடுத்தாலும் வீட்டு வேலைக்கு அனுப்பக்கூடாதென்று உறுதியான வெறியோடு, தன்னை மறந்த நிலையில் பசிக் களைப்பினால் அயர்ந்து தூங்கிப் போகிறாள் வேலம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின் குறட்டை ஒலி காதுகளில் வந்து ஓங்காரமாக நிறைய, பார்வதிப் பெண் மெதுவாகப் படுக்கையிலிருந்து எழும்பிக் கொண்டு தட்டுத்தடுமாறி இருட்டு லயத்திக்குள்ளிருந்து வெளியேறி மெதுவாகத் தேயிலை மரங்களை ஊடறுத்துச் செல்லும் பாதையால் நடக்க ஆரம்பிக்கிறாள். நாய்களின் ஓயாத மரணக் கூச்சல்கள் தேயிலைத் தோட்டமெங்கும் வழிந்து நிறைய, வானத்தைத் தொட வளர்ந்து நிற்கும் சவுக்கு மரக் கிளையிலிருந்து "ஆந்தை" ஒன்று வாளால் அறுப்பது போல அவல ஒலியை எழுப்ப, குருட்டு வெளவால்கள் அங்கும் இங்கும் பறந்து போவது அவளது கண்களுக்குத் தெரிகிறது. இனி உயிரோடு இருப்பதில்லை என்ற உறுதியான முடிவுகளோடு அந்தத் தேயிலைத் தோட்டத்தை வளர்ப்படுத்தும் பெருத்த இரைச்சல் ஓசைகளோடு ஓடிக் கொண்டிருக்கும் அந்தப் பெரிய ஆற்றை நெருங்குகிறாள் பார்வதிக் குட்டி. அவளுக்க எந்தப் பயமும் கிடையாது. அவளது உள்ளம் அந்த உறுதியான முடிவுக்கு எந்தச் சிக்கல்கள் எதுவுமில்லாமல் வந்துவிட்டது. இனி எதற்காக வாழ வேண்டும்? நமக்கு இனிமேலும் ஒரு வாழ்வு தேவை தானா? தாயோ எவனுக்கோ கள்ளமாக உண்டாகி என்னைப் பெற்றெடுத்தவள். அவளுக்கு உடந்தை இல்லை என்றாலும் நான் முகம் தெரியாத எவனுக்ககோ பிறந்தவள்தானே! தகப்பன் என்று இதுவரை அழைக்கப்பட்டவன் அவளுக்குத் தகப்பனாக நடித்தவன்தான். அந்த நடிகன் காசுக்காக என்னை விற்கப்பார்க்கிறான். இனி நான் எதற்கு வாழ வேண்டும். இப்படியெல்லாம் அந்த பிஞ்சுமனம் நினைத்திருக்கும்.

இனி இந்த உலகத்தில் இருப்பதில்லை என்ற இறுதி முடிவோடு அந்த மலைக் குன்றுகளைப் பிளந்து வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் அந்தப் பெரிய ஆற்றை நெருங்கி விடுகிறாள். அந்தப் பயங்கர இருட்டிலே அந்த மலைப்பகுதியும், மலையை அண்டி வளர்ந்து கிடக்கும் தேயிலை மரங்களும் கால் முளைத்த பூதங்களாகத் தெரிய, தனது தாய் வேலம்மாவை நினைத்து ஒருதரம் அழுது விட்டு திடீரென அந்த மலை இடுக்கிலே ஓடிக் கொண்டிருக்கும் ஆற்றிலே பாய்ந்து விடுகிறாள். பார்வதிக் குட்டியின் இந்தக் கோர மரணம் விடிந்ததும், கரையிலே ஒதுங்கிக் கொண்டிருக்கும் அவளது இறந்த உடலைக் கொண்டு முதன் முதல் காணும் ஒருவரால் வேலம்மாவுக்கும், அவளது புருஷன் மாடசாமிக்கும் தெரியத்தானே போகிறது. அதன் பிறகு அந்தத் தேயிலைத் தோட்டத்துக்கு தெரியாமலா போகும்.

*07.02.2010*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருள் விலகுக

மார்கழி மாதத்து அடைமழை அட்டகாசமாகப் பெய்து ஊரெங்கும் வெள்ளத்தைப் பரவவிட்டதோடு குளம், குட்டைகள், வாய்க்கால்கள், ஓடைகள், உப்புக்கரைச்சைகள், தரிசு நிலங்கள் என்று மழை வெள்ளத்தைக் கருக்கொள்ளவைக்க காட்டு வெள்ளம் மட்டக்களப்பு வாவியை ஆக்கிரமித்து நிறைமாதக் கர்ப்பிணியின் நிலைக்குத் தள்ளிவிட அடைபட்டுக் கிடந்த முகத்துவாரமும் வெட்டப்படாத காரணத்தினால் ஆற்று மங்கை வெள்ளத்தில் பொங்கித் ததும்ப கடலில் இருந்து வரும் மீன்களின் வருகை அற்றுப் போய் விடுகிறது. அன்றாடம் வலைகளைப் போட்டு மீன்களைப் பிடித்து விற்று ஜீவியம் நடாத்தும் ஏழை மீனவர்களின் குடும்பம் மிகவும் கஸ்டத்திலே தவிக்க வேண்டிய பரிதாபம். அவர்கள் வீட்டு அடுப்பும் பற்றாத காரணத்தினால் அவர்களது பிஞ்சுக் குழந்தைகள் 'பசி பசி' என ஓலமிடும் துயரச்சுமையின் 'சுனாமி' அட்டகாசம் பெருக்கெடுக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றாட மீன்பிடித் தொழிலாளியான சுப்புறு தவியாய்த் தவித்தான். குடும்ப நிலையைப் பார்க்கும் போது அவனால் திண்ணையில் ஓர் ஓரமாக குந்திக் கொண்டிருக்க முடியவில்லை. பேய் மழை ஓய்ந்து தூறல் போடும் நேரம் தலையிலே சாறனை மொக்காடாகப் போட்டவாறு அவனது மீன்பிடிக் கூட்டாளி பூபாலியின் வீட்டை நோக்கிப் போகிறான். பூவாலியும் ஆறு குமர்ப்பிள்ளைகளோடு குஞ்சும் குராலுமான பத்துப் பிள்ளைகளின் தகப்பன். ஊராரின் ஆற்றோரமாகக் கிடக்கும் 'கந்தட்டி' வளவுக்குள் ஒரு சிறிய ஓலைக்குடிசையில் அத்தனை பரிவாரங்களோடும் ஊசி முனையிலே தவம் செய்யும் கஸ்ரவாழ்வு நடத்தும் குசேலன். பூவாலியும் வீட்டில் படும் பசிக் கொடுமையால் இருக்க முடியாமல் பிள்ளைபெறத் துடிக்கும் 'வகுத்துச் சுமைப் பெண்ணின்' அந்திம நிலையோடு சுப்புறைப் பார்த்து மீன்பிடிக்க ஆத்துக்குப் போய்ப் பார்போமென்ற அவஸ்தையில் கிழித்து போய்க் கிடந்த மழைக்குப் பிடிக்கும் 'சாப்பையை' மழை நீரிலிருந்து காப்பாற்ற கைகளால் தூக்கிப் பிடித்தவாறு வந்து கொண்டிருக்கும்போது சுப்புறவை வழியிலே காணுகிறான்.

"என்னடா கூட்டாளி. மழையும் விடுற பாடில்ல. புள்ளைகளும் பசியால துடிக்குதுகள். வெள்ளத்தில மாயவலக்காறனுகளால் தப்பிக் கிடந்த சின்னஞ்சிறுகசுகளும் உப்புக் கரைச்சக் கண்ணாக் காட்டுக்குள்ள ஓடி ஒளிஞ்சி கிடக்கும். ஏதோ கெழுத்திக் குஞ்சுகளும், சின்னஞ்சிறு திரளிகளும், தப்பிக் கிடக்கும் ஜப்பான் குறளிகளும் படுமா எண்டு ஆத்துக்குப் போய்ப் பாப்போம்" பூவாலி இரண்டு மூணு நாள் ஒழுங்காகச் சாப்பாடு இல்லாத காரணத்தினால் மெலிந்த குரலில் விக்கி விக்கிக் கூற "ஓண்டா பூவாலி ஆத்துக்குப் போய்ப் பாப்போமெண்டுதான் உன்ன நான் தேடி வாறன்." என்று சுப்புறு தொண்டைக்குள் அடைபட்டுக்கிடந்த வார்த்தைகளைச் சிதறவிட "சரி சரி என்ன நடந்தாலும் நடக்கட்டும். ஓயாத மழையைப் பாத்து என்ன செய்யிற. புள்ளையள் அனியாயமாகப் பசியால செத்துப் போயிடுங்கள். சோமண்ணன்ட தோணியக் கேட்டுப்பாரு. நான் ஊட்ட போய் வீச்சு வலைய எடுத்திற்று வாறன்." சுப்புறு வார்த்தைகளை அள்ளி வீசியவாறு வேகம் வேகமாக அவன் இருப்பிடம் நோக்கி ஆவேசமாகப் போய்க் கொண்டிருக்கிறான்.

சோமண்ணனிடம் தோணிய வாடகைக்கு வாங்கிக் கொண்டு ஆற்றங்கரையிலே கிடந்த தோணிக்கு 'கொல்லாவை' பூவாலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டும்போது சுப்புறு வலையும் தண்ணி இறைக்கும் சிரட்டையுமாக வந்து சேர மழைத்தூறலையும் பார்க்காமல் ஆற்றில் தோணியைத் தள்ளியவாறு 'புறகத்தில' சுப்புறு இருக்க வீச்சுக்காரன் பூவாலி 'அணியத்தில்' இருந்து கொண்டு மீன் அசுமாத்தம் காணும் 'விரிச்சலை' நோக்கித் தோணியைத் தொடுத்துக் கொண்டு போகிறார்கள். ஆற்று வெள்ளம் ததும்பி காற்றிலே சிதறுண்டு பரந்து எங்கும் ஓடிக் கொண்டிருக்கிறது. லேசான காற்று தோணியை மெதுவாக ஆட்டி அசைக்க அதற்கேற்ற வகையிலே ஆற்றிலே 'சவளை'ப் போட்டுத் தொடுத்தவாறு போய்க் கொண்டிருக்கிறார்கள். ஆற்று வெள்ளத்திலே மீன் சாதிகள் கண்ணாக்காட்டுப் பக்கம் ஓடிப் போனதால் மீன்கள் துள்ளும் - பாயும் அசுப்பே கண்களுக்குப் புலப்படவில்லை. 'விரிச்சல்' ஆற்றை அண்டியதும் சுப்புறு 'புறகத்தில்' இருந்து தோணியை மெதுவாகத் தொடுக்க கூதலும் குளிருமான விறைப்புத் தன்மையோடு தூறல் மழையிலே எழுந்து ஒடுங்கியவாறு 'போகடுபோக்காக' ஆற்றிலே வலையை வீசுகிறான் பூவாலி.

லாவகமாகத் தோணியைத் தொடுத்துத் தொடுத்துக் காற்று அசைவுக்கேற்ப சுப்புறு தொடுத்து வர மெதுமெதுவாக வீசிய வலையை இழுத்துக் கையிலே தூக்குகிறான் பூவாலி - தூக்கியவன் வலையை உற்றுப் பார்க்கிறான். ஒரு மச்சக் குஞ்சும் வலையில் சிக்கவில்லை. "சீ நாசமத்துப் போன ஆத்தில ஒரு மீன் சாதியும் இல்லாம தொலைஞ்சு போச்சா. அந்த மாய வலக்காறனுகள் இருக்கிறதெல்லாத்தையும் சப்பித் தின்ன கொஞ்சம் கிடக்கும் மீன் குஞ்சுகளும் அள்ளுண்டு காட்டுப் பக்கம் போயித்து. புறகு எப்பிடியிரா சுப்புறு மீன்படும்". பூவாலி வீசிய வலையைத் தூக்கிப் பிடித்தவாறு தோணிக்குள் நின்றவாறு மீண்டும் நாலைந்து முறை ஆற்றிலே வலையை வீசிப் பார்க்கிறான். "சீ என்ன தரித்திரியம் இது. ஒரு அதக்கக் குஞ்சு கூடப் படுகுதில்லையே." என்று சத்தம் போட்டு வெப்பு சாரத்தில் கூறியவாறு ஆற்றை நோக்கிக் காறித் துப்புகிறான். அவன் துப்பிய 'வெற்றிலத் துப்பல்' சிவப்புக் கலராக ஆற்று நீரிலே சங்கமாகி நீரோடு கலந்து அமிழ்கிறது.

மெதுமெதுவாகத் தோணியைத் தொடுத்தவாறு மீன்கள் அசுமாத்தம் காட்டும் 'கெழுத்தி முனை'ப் பக்கம் போகிறார்கள். தூறல் மழை கொஞ்சம் பலமாகப் பெய்ய ஆரம்பிக்க பனை ஓலைத் தொப்பியை மழைக்கு நனையாமல் தலைக்குப் போட்டவாறு நடுங்கும் குளிரோடு மெதுவாகக் கெழுத்தி முனைப் பக்கம் தோணியைக் கொண்டு செல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலமான காற்றோடு மழை ஆர்ப்பாட்டமாகப் பெய்யத் தொடங்குகிறது. காற்றின் அசைவுக்குத் தோணி ஊஞ்சலாக ஆட நிறைந்த ஆற்றுத் தண்ணீர் தோணிக்குள் கிசுகிசென்று ஏறுகிறது. இக்கட்டான இந்தச் சம்பவத்தினால் சுப்புறுவும் பூவாலியும் உண்மையிலேயே பேய் அறைந்தவர்கள் போல் பதட்டம் அடைந்து அதிர்ச்சியில் நிலைகுலைந்து போய்விட்டார்கள். உடனே நிலமையை அவதானித்துத் துணிச்சலாக 'தோணிச் சிரட்டை' யால் மூசுமூசென்று தோணிக்குள் ஏறிய ஆற்றுத் தண்ணீரை சுப்புறு ஆற்றிலே இறைத்துக் கொண்டுவர "பரம நயினாரே நீ தான் எங்களக் காப்பாத்த வேணும். ஒரு மீன் குஞ்சும் படாத இக்கட்டுக்குள்ள நாங்க தவிக்கிறோம். இப்படியான இக்கொடுமையும் எங்களத் தாக்கினா எங்கட குடும்பங்கள் அலைக்கழிஞ்சு நாசமாய்ப் போய்விடும் அப்பா. நீதான் சாமி எங்களுக்குத் தொண நிண்டு எங்களக் கர சேர்க்க வேணும்" பயத்தால் பத்துப் பிள்ளைகளின் தகப்பனான பூவாலி சத்தம்போட்டு ஒப்பாரி வைக்க சுப்புறு குனிந்தவாறு விறைத்த கையை நிமிர்த்தாமல் தண்ணீரை இறைத்துக் கொண்டே வருகிறான். ஒரு பாடாக காற்று ஓய மழையும் நின்று விடுகிறது. ஆனால் வானம் மப்பும் மந்தாரமுமாக கறும்குறுமென்று கிடப்பதால் ஒரே இருட்டுக் காடாக ஆறு கண்களுக்குப் புலப்படுகிறது.

தோணிக்குள் புகுந்த ஆற்று வெள்ளத்தை ஒரு பாடாகச் சுப்புறு இறைத்துவிட்டு நிமிர பூவாலி கொஞ்சம் மனத் துணிச்சலோடு மீண்டும் வலையை ஆற்றை நோக்கி வீசுகிறான். என்ன போதாத காலமோ யார் அறிவார்கள். அந்த மீன் சாதி புழங்கும் 'கெழுத்தி முனை' ஆற்றிலும் மீன்கள் இல்லாமல் மாயமாக மறைந்து விட்டதா? அலுப்பைப் பாராமல் பசிக்களைப்போடும் ஐந்தாறு முறை ஆற்றிலே வலையை வீசியும் ஒரு கெழுத்திக் குஞ்சு கூடப் படவில்லை. "என்னடா கூட்டாளி சுப்புறு. மீன் புழுங்கும் கெழுத்தி முனையிலும் இந்தக் கொடுமை என்டா எப்படியிரா ஆளே நாம உயிர் வாழ்ற? அந்த நாசமாப்போன வலகட்டி மீன் பிடிக்கத் தெரியாத மாயவலக்காரனுகள் இருக்கு மட்டும் ஆத்தில மீனும் இருக்காது; நமக்குப் புழைப்புமில்லை. நம்மிட குடும்பங்கள் இந்த ஆத்த நம்பித்தானே ஜீவிக்குதுகள். அதுக்கும் நாசம் வைக்கானுகளே இந்த நாய்கள் இவனுகளால உண்மையான மீன் புடிகாறனுகள் புழைப்பில்லாமச் சாகவேண்டிய நிலை ஏற்படுகிறதே. இந்த நாசகாறனுகளுக்கு - மீன் இனம் பெருகவிடாம அப்படியே வடிச்செடுக்கிற கேவலம் கெட்டவனுகளுக்கு இடி ஏறு விழுந்து பொசுங்கக் கூடாதா. லேசாகக் காசக்குடுத்து 'ஜப்பான் காறன்' அனுப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கிற 'மாயவலைகள்' வாங்கி ஆத்து மீன் கருவ அப்படியே சூறையாடிப் போட்டானுகளே. பரம்பரை பரம்பரையாக நம்மிட கைகளால வலைகளை முடிச்சு மீன் பிடிக்கிற நம்மிட தொழிலுக்கல்லவா நஞ்சு வைக்கிறானுகள்". மனதிலே நிறைந்து கருக்கட்டிக் கிடந்த வெப்புசாரங்களை ஆவேசமாக உதறிவிடுகிறான் வீச்சுக்காரப் பூவாலி. பூவாலி நீ சொல்றது நூத்துக்கு நூறு சரிதாண்டா கூட்டாளி. இந்தச் சோத்துக்குள்ள நஞ்சு வைக்கிற மாயவலக் காறனுகள இந்த அரசாங்கம் பாத்தும் பாக்காதது போல விட்டுவெச்சிருக்கே. அரசாங்கம் முறையாக நடவடிக்கை எடுத்து இந்த மாயவலக்காறனுகளப் புடிச்சு கூட்டுக்குள்ள போட்டாத்தான் ஏழ பாளையாகயிருக்கிற நம்மளப்போன்ற மீன்புடிகாறனுகள்ர ஊட்டில அடுப்பு எரியும். அது வரைக்கும் உழைப்பில மண் விழுந்தது போலதான். இல்லாட்டி நம்மிட ஆத்தில எந்த மீன் சாதி இல்ல. நாமபுடியாத மீன்வகைகளா? பெரிய பெரிய பாலமீன்கள், ஓரா ஒட்டிகள், பாரைகள், வருஷத்துக்கொருதரம் பிடிபடும் சுறாமீன்கள், பெருத்துவிளைந்து கிடக்கும் மூக்கணாம் கெழுத்திகள், இலத்தி, கூரல், சீலா, சள்ளல், சுட்டாலும் மணக்காத கட்டா மீன்கள், திரளி, காரல், முரல், கிளக்கன், சூம்பல், அதக்கை, மண்ணா, சிலந்தி, இப்படி நாம எந்த மீன்கள புடிக்கல்ல. இதுக்கெல்லாம் கொள்ளி வெச்சுப் போட்டானுகளே நாசமாப்போனவனுகள். இண்டைக்கு மூச்சுப்பிடிச்சி வெள்ளநீருக்கு ஈடுகொடுத்து மழையில நனைஞ்சு வலைய வீசியும் ஒரு மீன் குஞ்சும் படுகுதில்லையே. 'சுனாமி' வந்து எல்லாம் இழந்த கடல் புழைப்புச் செய்யிறவன் இண்டைக்கு கடல் புழைப்பில தன்ர ஜீவியத்த நல்லாத்தான் ஓட்டுறான். எந்தமாய வல போட்டும் அந்த சீதேவிக் கடல ஒண்டும் செய்ய முடியாது. அது பரந்த உலகம். அங்கையெல்லாம் மீன்களுக்கு அழிவு வராது. நம்மிட சின்ன ஆறுகள் மாயவலைக்குத் தாக்குப் பிடிக்காமத் தவிக்குது". தன்னுள் அமுங்கிக் கிடந்த சூறாவளி அமுக்கத்தை வெளியே பரவ விடுகின்றான் ஆத்துப் பிழைப்பின் அனுபவசாலி சுப்புறு.

ஆற்றிலே மீண்டும் மீண்டும் வலையை வீசிப்பார்க்கிறான் பூவாலி. ஆனால் வலையிலே ஒரு சூம்பல் கூடப் படவில்லை. "என்ன தரித்திரியண்டா இது. யாருல முழிச்சு வந்தோமோ தெரியல்லையே. இப்படியும் நடக்குமா? ஒரு காலமும் இப்படி நடந்தது கிடையாதே. சோமண்ணனின் தோணி வாடகைக் காசுக்கு என்ன செய்வது. மீன் ஒண்டும் படல்ல எண்டு அவரிட்ட சொன்னா அவர் சிரிக்கமாட்டாரா? அவரிர தோணிக்காசுக்கு யாருர தாலிய வித்துக் குடுக்கிற. அட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளே! புள்ளையள் பசியால மாயுதுகள். பொண்டாட்டிமார் காசோடையும் கறி ஆக்க மீன்களோடும் வருவார்கள் எண்டு வெச்ச கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருப்பாளுகள். இப்படி வெறுங்கையோடு ஊட்டுக்குப் போனா... அட சாமிமாரே இப்படித் தவிக்கிறதப் பார்க்க வெள்ளத்துக்குள் தாட்டுக் கொண்டு போட்டாத் தேவல்ல." வலையை வீசிக் கொண்டிருந்த பூவாலி மனதிலே எதையோ வெல்லாம் போட்டுக் குழப்பியவாறு சிலைபோல் ஆற்றை வெறித்தப் பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்த சுப்புறு "என்னடா பூவாலி! வல வீசின நீ சில போல பேய் அறஞ்சவன் போல நிக்கா. உனக்கு என்னடா ஆச்சு" சுப்புறு சத்தம் போட்டுக் கேட்ட பிறகுதான் பழைய நிலைக்குத் திரும்பி பூவாலி கவலையோடு சுப்புறுவைப் பார்க்கிறான்.

பூவாலியும் சுப்புறுவும் கைதேர்ந்த ஆத்துப்பிழைப்பாளிகள் சின்னவயதிலே ஆற்றங்கரையை மூடிக்கிடக்கும் 'பெரும்சல்லுக்குவியலுக்குள்' இனப்பெருக்கம் செய்து விருத்தியாகிக் கிடக்கும் கணக்கெடுக்க முடியாத இறால்கூனிகளையும் பெரிய இறால்களையும் அத்தாங்கால் வடித்தும் தென்னை ஓலைகளால் கட்டியும் மட்டக்களப்பு வாவிக்குள் ஜீவியம் நடத்தியவர்கள். படிப்படியாக வாலிபர்களாக வளர்ந்து வந்த நேரத்தில் ஆற்றிலே காலத்துக்கு காலம் பாவிக்கும் வலை இனங்களை தங்களது கைகளால் 'சணல்பஞ்சு' மூலம் எடுத்துத் திரித்தெடுத்த 'சணல்வலை' களைக் கொண்டு விதம் விதமான மீன் இனங்களைப் பிடித்து வலைத் தொழிலுக்குப் பெருமை சேர்ந்தவர்கள் பூவாலியும் சுப்புறுவும். மார்கழி மாதத்தில் தடிப்பான சணல்நூல்களைக் கொண்டு முடித்தெடுத்த பெரும் வலைகளைக் கொண்டு கடலிருந்து முகத்துவாரத்தைத் தாண்டி கல்லடிப் பாலத்தையும் கல்லடி ஆற்றை அண்டி 'வெள்ளைக் கல்லை' யும் அண்டிய பகுதிகளிலும் குட்டிபோட வரும் பெரிய சுறாமீன்களின் குட்டிகளையும் பெரிய சுறாக்களையும் பிடித்த அந்த இனிய காலம் மார்கழி மாதங்களில் அவர்களது நெஞ்சில் கூத்தாடிய இனிப்பு நாட்களாகும். சித்திரை, வைகாசி மாதங்களில் பாலமீனுக்குப்போய் பெரிய பெரிய பாலமீன்களை தோணி நிறையப் பிடித்துக் கொண்டு வந்து காத்தான்குடி பணக்கார முஸ்லிம் முதலாளிமார்களுக்கு தகுந்த விலைகளுக்கு விற்று சீரும் சிறப்புமாக வாழ்ந்த அந்தப் பொற்காலத்தை அவர்கள் ஒருபோதும் மறந்தது கிடையாது. ஊரிலே சிறந்த உழைப்பாளிகளான இவர்களுக்கு எத்தனையோ தகுதியான இடங்களில் பணம், வீடு என்று சிறப்பாக வாழ்ந்த இடங்களில் கேட்டு வந்த பொழுதும் வாழ முடியாமல் தவித்த ஏழைக் குமர்களைக் கையேந்தி அவர்களுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புது வாழ்க்கை கொடுத்தவர்கள்தான் பூவாலியும் சுப்புறுவும். கட்டிய பெண்கள் கலங்காமல் நிம்மதியாக வாழ்வதற்கு இந்தப் 'பாடும் மீன் வாவி' யின் மீன்பிடி உழைப்புத்தான் கை கொடுத்தது. காலம் வேகமாக ஓடிக் கொண்டுவர எத்தனையோ பிரச்சனைகளும் இயற்கை, செயற்கை அனர்த்தங்களும் வாழ்க்கையை மாற்றிப் போட்ட இந்தத் துயரமான காலங்களில் பழைய உழைப்பின் மகிமைகளை இழந்து கலாசாரச் சீரழிவுக்குள் மாட்டுப்பட்டு பழைய பரம்பரைத் தொழிலின் மகத்துவத்தை முற்றாக இழந்து சுயமாக வலைபின்னி சுதந்திரமாக வாழ்ந்த ஆற்றுத் தொழிலில் நவீன நாகரிகத்தில் உருவாக்கப்பட்ட விஞ்ஞானம் பெற்றுவிட்ட வலைகளைக் கொண்டு ஆற்றுத் தொழிலை நாசம் செய்யும் காலத்துக்கு அவர்களும் அடிமையாகிப்போன புதிய மாற்றத்தின் விளைவால் தொழிலும் போலியாகி வாழ்க்கையும் போலியாகி மீன்களின் கற்பகத் தருவாகப் பொலிந்து காணப்பட்ட மட்டக்களப்பு வாவியும் மலடு தட்டிப்போய்க்கிடக்கும் கொடுமைகளைக் காணும்போது வயது போன இந்த நேரத்திலும் அவளர்களது நெஞ்சு வெடித்துச் சிதறுவது போலிருக்கும்.

எதையோவெல்லாம் நினைத்தவாறு ஊர்ந்து வந்து கொண்டிருந்த அவர்களது தோணி பெரும் ஆழமான நடுப்பகுதியான 'விரிச்சல்' ஆற்றை வந்தடைய மிகவும் சோர்ந்து போய் வெறுப்படைந்து வேதனையிலே முற்றாக மூழ்கியவாறு இனி என்ன செய்யப் போகிறோம் என்ற ஏக்கமான தவிப்புக்குள் சிக்கிக் கொண்டிருந்த பூவாலியும் சுப்புறுவும் விரிச்சல் ஆற்றிலே தோணியை நிறுத்திவிட்டு சோகம் ததும்பி வழியும் முகத்தோடு ஆளுக்காள் மாறி மாறித் தங்களைப் பார்த்தவாறு மௌனமாக இருந்த வேளையில் திரும்பவும் லேசான மழை பெய்ய ஆரம்பிக்க 'பூவாலி' நம்மிட பேதாக் காலத்துக்கு விட்டிருந்த மழையும் திரும்ப வந்திற்றிடா. நாம வெறுங்கையோடு போன பொஞ்சாதிமாரிர முகத்தில எப்படிரா முழிக்கிற, பசியால துடிக்கிற புள்ளைகளுக்கு எப்படிரா ஆறுதல் வார்த்தை கூறி பசியப் போக்க வைக்கிற, எனக்குப் பைத்தியமே பிடிக்கும் போல இருக்குடா கூட்டாளி. கடசியாக பரம நயினார ஒரு தரம் வேண்டித்து இந்த விரிச்சல் ஆத்தில ஒரு தரம் வீசித்தான் பாப்பம்". என்று தீராத மௌனத்தைக் கலைத்தவாறு சுப்புறு பூவாலியை பார்த்து வினயமாகக் கூறவும் "சரி நீ சொல்லுற படியா பரமக் கிழவர மனசால வேண்டித்து ஒரு தரம் வீசிப் பாப்பம். ஆத்தாக் கொடுமைக்கு வேறு என்னதான் பரிகாரம் தேட முடியும். மழைக்கு முந்தின கிழமையெல்லாம் பெரிய மீன்கள் படல்ல எண்டாலும் ஏதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோத்துப் பாட்டுக் கென்றாலும் நூறு இரு நூறு என்று கிடைச்ச நமக்கு இண்டைக்கு என்ன கேடு வந்தது. இத்தனை வீச்சு கை நோக கை நோக வீசியும் ஒரு கெழுத்திக் குஞ்சும் வலையில படல்ல. நமக்கும் நம்மிட வலைக்கும் யாரும் சூனியம் செய்து போட்டானுகளோ? என்ன இடியேறுரா நம்மிட தலையில விழுந்த சுப்புறு. அந்தப் பெரிய மழைக்கு முந்தி முகத்துவாரம் அடைபடாமல் கிடந்த வேளை கல்லடிப் பாலத்து ஆத்துல ஒரு அதிசயம் நடந்தது எல்லுவா. சுனாமி வாறதுக்கு ஒரு கிழமைக்கு முந்தி லெட்சக் கணக்கான அதிசயமான பாம்புகள் கல்லடி பாலத்துக்குள்ளால ஓடிப்போனதை சனங்கள் அதிசயமாகப் பாத்துப் பயந்த வேளையில 'சுனாமி' எண்ட பேரில கடல் ஊருக்க வந்து சனங்களையும் அழிச்சு ஊடு வாசல்களையும் விழுங்கி கோரத் தாண்டவம் ஆடிச்சு. போன மாதம் முகத்துவாரம் அடைபடுறதற்கு முந்தி லெட்சக்கணக்கான வெள்ள நீல நிற நீட்டுப்பாம்புகள் கல்லடிப் பாலத்து ஆத்தில ஓடி ஓடி விளையாடுனத்த சனங்கள் என்ன அழிவு வரப் போவுதோ எண்டு பயந்து தீர்த்தக் கரைக்குப் போற மாதிரி கல்லடி பாலத்துப் பக்கம் புதினம் பார்த்த புறகு இந்தப் பெரிய மழ வந்து ஊரையே அழிச்சு நாசமாக்கிப் போட்டு. இப்படி கடலில இருந்து பாம்புக் கூட்டம் ஆத்துக்கு வந்தா ஏதோ ஒரு மோசமான அழிவு வரும் எண்டு இப்ப எல்லோருக்கும் நல்லாப் புரிஞ்சி போச்சு. இந்தப் பெரிய மழைக்குப் புறகு அந்தப் பாம்புகளையும் காணல்ல. முகத்துவாரம் அடைபட்டுப் போச்சு. பாம்புகள் கடலிருந்து வந்து திரும்பவும் கடலுக்குள்ள போனது போல ஆத்துப் பக்கம் ஒரு மீன் சாதியும் வரல்ல. இஞ்ச விளைஞ்சு கிடந்த மீன்களையும் 'மாய வலைக்காரன்கள்' வடிச்செடுத்து நாசமாக்கிப் போட்டானுகள். மழ வெள்ளத்தில் அள்ளுப்பட்டு கிடந்த மீன்களும் கண்ணாக் காட்டுக்குள்ள தவம் செய்யப் போயித்துகள். நம்மப் போன்ற ஏழைகளுக்கு மீனுமில்ல அதனால் சோறும் இல்லண்டு ஆச்சிரா சுப்புறு" ஒரு குட்டிப் பிரசங்கம் நடத்திவிட்டு உசாராகக் குல தெய்வமான ஊரைக் காத்து வரும் பரமநயினாரை நெஞ்சு இளக நினைத்தவாறு பூவாலி ஆற்றிலே வலையை வீசுகிறான். எந்தவிதமான மீன்கள் அசுமாத்தையும் ஆற்றிலே காணோம். சுப்புறு தோணியைக் காற்றிலே அசையவிடாமல் தடுத்து நிற்க பூவாலி வீசிய வலையை பக்குவமாக மெதுமெதுவாக இழுக்கிறான். இழுக்கும்போது ஏதோ வலையில் பட்டுக் கிடப்பது போல் தெரிகிறது. "பரமநயினாரே! நீதான் எமக்குத் துணை" என்று சத்தமாகக் கூறிய பூவாலி பவித்திரமாகத் தூக்கி வலையைத் தோணிக்குள் வைக்கிறான். என்ன அதிசயம்! அவனுக்குச் சொல்லொண்ணாத் குதூகலம். தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாமலேயே பெரும் சிரிப்பாகச் சிரித்தவாறு வலையிலே பட்டுக் கிடந்த பெரிய நண்டை நுணுக்கமாகப் பிடித்து சீலைத்துண்டால் கடிக்கவரும் இரு 'மோங்கான்' நண்டுக் கால்களையும் அசையவிடாமல் கட்டி விடுகிறான். பிறகு வெறும் நப்பாசையால் இரண்டு மூணுதரம் ஆற்றிலே வீசிப் பார்த்தான். ஒரு மச்சமும் படக்காணோம். "சரி சுப்புறு! கடவுள் நமக்குப் படி அளந்திற்றாரு. நாம பட்ட வேதனைக்கு இந்த நண்டத் தந்திருக்காரு. ஒரு கிலோவுக்குக் கூடத்தான் இந்த நண்டு இருக்கும். நண்டு வியாபாரிக்கு குறைஞ்சது ஆயிரத்து ஐந்நூறு ரூபாவுக்குக் கொடுக்கலாம். சரி விரைவாகச் 'சவளப்' போடு நானும் தொடுக்கிறன்.' என்று முக மலர்ச்சியோடு பூவாலி கூறியதுதான் தாமதம் தோணியச் சுப்புறு விரைவாகத் தொடுக்க பட்ட கஸ்டங்களுக்குக் கிடைத்த பயனை அறுவடை செய்ய தோணி ஊர்க்கரையை நோக்கித் தாவிச் செல்லுகிறது.

ஆவணி 2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிர்

இன்று பழைய சம்பிரதாயங்கள், கலாசாரம் பேணுகின்ற சடங்குகள் அருகிப்போய் மறையும் நிலைக்கு வந்துவிட்டது. அன்றைய புதிர் சாப்பிடும் பொற்காலத்தை ஒரு தரம் நினைத்துப் பார்த்தேன். அதன் மகிமைகளையும், விருந்தோம்பல் பண்பாட்டையும் நாம் தொலைத்துவிட்டுத் தேடுகிறகாலம் வந்துவிடுமோ? என்ற தணியாத ஏக்கத்தினால் இந்தச் சிறுகதையை எழுதுகிறேன். பட்டணத்தில் வாழும் இயந்திரமான வாழ்க்கை வாழுகின்ற எம் தமிழர்கள் இதை மறந்தாலும் நமது தமிழ்க் கிராமங்களும், மட்டக்களப்புப் படுவான்கரையும் அந்தச் சம்பிரதாயச் சடங்குகளிலிருந்து நழுவிப் போகாமல் இன்றும் விருந்தோம்பலுக்கு முக்கியத்தவம் அளிப்பதனால் நாம் மனத்திருப்தியோடு ஆறுதல் அடையமுடிகிறது.

"தம்பி நம்மிட மாமியவையும் நெற்கதிர் எடுத்து நாளுக்குப் 'புதிர்' எடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊட்டுக்குள்ள வெச்சித்தாங்களாம். நாமளும் நல்ல நாள் பாத்து 'புதிர் எடுக்கவேணும் மகன். அப்பா எங்கடா! அவர்தான் 'புதிர்' எடுக்கிற விஷயங்களுக்கு முன்னுக்கு நிக்கிறவர்.

"அப்பா ஆத்தோரம் நிக்கிற இளந்தென்னங் கண்டில துறட்டியால் பழுத்த தேங்காய்கள் ஆயிறார் அம்ம."

"சரி மகன்! தேங்காய்கள அவர் ஆஞ்சி வந்ததும் 'புதிர்' எடுக்கிற வேலையைப் பாருங்க. வெள்ளாமை வெட்டத் துவங்கித்தானுகள். இனி புது அரிசி வந்திடும். சிவந்ராத்திரி கழிச்சு நாமளும் நல்லநாளாப் பாத்து 'புதிர்' தின்ன வேணும்.

"சரி அம்ம. அப்பா தேங்காய்ஞ்சி வந்ததும் 'புதிர்' எடுக்கிற வேலையப் பார்க்கச் சொல்றன்."

"இன்டைக்கு வெள்ளிக்கிழமையும் நல்ல நாளுமாகக் கிடக்கு எப்படியாவது கதிர் எடுத்து 'புதிர' ஊட்டுக்க கொண்டு வெய்க்க வேணும்." என்று கூறயவாறு தாய் தங்கமணி மண்டபத்துக்குள் புகுந்து கொள்ள, கடைசி மகன் உயர்தர வகுப்பில் படிக்கும் தனஞ்சயன் ஆற்றங்கரையோரம் தேங்காய் ஆயும் தகப்பன் சாமித்தம்பி வாத்தியாரை நாடிச் செல்லுகிறான்.

சாமித்தம்பி வாத்தியார் 'சைக்கிளி லபோய் மண்முனைத்துறைக்குப் போற வழியில, பிஞ்சும் காயுமாக வெ்ளிறிய மஞ்சள் நிறத்தில் வேளாண்மை வயலுக்குள்ள 'கொலு' கொண்டு கிடந்த நெற்கதிர்களில் கைகொள்ளத் தக்கவாறு பிடுங்கிக் கொண்டு வீட்டுக்கு 'கேற்' றடிக்கு வந்து "டேய் தம்பி! உள்ஊட்டுக்க தேங்கா எண்ண விளக்கக் கொழுத்திப்போட்டு, புதுப் பொட்டியில போனவருஷம் புதிர் எடுத்த கதிரில நாலஞ்சப் போட்டுத்து, வெள்ளச்சீலத்துண்டால மூடித்து அம்மாவப் பொட்டிய எடுத்துவரச் சொல்லு" என்றார்.

புருசனாரின் அன்புக் கட்டளையைக் காதிலே வாங்கிக் கொண்டு, சகலதையும் ஆயத்தமாகச் சாமி ஊட்டுக்குள்ள வைத்தவாறு புதுப்பெட்டியோடு 'கேற்'றடிக்குப் பொஞ்சாதி தங்கமணிவர, சாமித்தம்பி வாத்தியார் மனைவி கொண்டுவந்த புதுப் பெட்டிக்குள் வயலுக்குள் எடுத்து வந்த புதுக்கற்றைகளைப் பக்குவமாய் வைக்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கமணி ஆனந்தம் முகத்தில் கொப்பளிக்க கோவில் கும்பம் எடுத்துப் போறவர்களின் பக்தி உணர்வோடு ஆடாமல் அசையாமல் தெய்வீக உணர்வோடு போவதுபோல் உள்வீட்டுக்குள் சென்று தேங்காய் எண்ணெய் விளக்கின் சுடர் ஒளியில் 'புதிர்'ப் பெட்டியை வைத்தவாறு மூன்று முறை 'தோப்புக்கரணம்' போட்டுக் கும்பிட்டுவிட்டு வெளிமண்டபத்துக்குவர சாமித்தம்பி வாத்தியாரும் பொஞ்சாதியை வைத்தகண் வாங்காமல் பார்த்துவிட்டுச் சாமி அறைக்குள் புகுந்து கொள்ளுகிறார்.

படுவான்கரைப் பக்கம் வேளாண்மை வெட்டத்துவங்கிவிட்டார்கள். ஊரெல்லாம் படுவான்கரைப் பெண்கள் புதுஅரிசிச் சாக்கோடு பவனிவரத் தொடங்கிவிட்டார்கள். சிவராத்திரி வந்து போனதும் நல்ல நாளாய்ப் பார்த்துப் 'புதிர்' சாப்பிடவேண்டுமென்று சாமித்தம்பி வாத்தியார் நினைத்துக் கொள்ளுகிறார். இப்பொழுதெல்லாம் 'புதிர்' தின்னும் விருந்தோம்பல் சம்பிரதாயம் அருகிப் போய்விட்டது. பழசு, புதிசு என்று பார்த்துச் சாப்பிடும் நிலமை மறந்துபோன பழங்கதையாகிவிட்டது. காசிருந்தால் அரிசிக் கடைகளில் அரிசி மூட்டையை எடுத்து வந்தால் சோறுதான் என்ற நடைமுறை இந்த நவீனமான அவசரகால வாழ்க்கையிலே கருக்கொண்டு கிடக்கிறது. 'புதிர்' என்றால் என்னவென்று புரியாத சமுதாயமொன்று உருவாகிவிட்டது. ஒருசிலர் சம்பிரதாய கலாசார உணர்வுகளில் ஊறித் திளைத்தவர்கள் பழசை ஒதுக்கிவிடாமல் வாழையடி வாழையாக வந்து கொண்டிருக்கும் மரபுரீதியான சம்பிரதாய சடங்கு முறைகளுக்கு மதிப்புக் கொடுத்து அதனை வாழ்க்கையிலும் கடைப்பிடித்துக் கொண்டு வருகின்றார்கள். சாமித்தம்பி வாத்தியாரும் இன்னுமொரு சிலரும் 'புதிர்' சாப்பிடும் விருந்தோம்பல் கலையை ஒதுக்கிச் சமாதிகட்டிவிடாமல் இன்றும் அவைகளை முறையாக நடத்திக் கொண்டு வருகிறார்கள். ஆனால் ஊரிலுள்ள பலபேர் 'புதிர்' சாப்பிடும் விருந்தோம்பலை முற்றாக மறந்தாலும் கோவில்களுக்கு 'புதிர்' சாப்பிடும் ஞாபகார்த்தத்துக்காக 'பூசைப்பெட்டி' கொடுத்து பழசை மறக்காமல் காலத்தை ஓட்டிவருவதை ஊரை அவதானிப்போரால் புரிந்து கொள்ளமுடியும். நகரத்தில் வாழும் தமிழர்கள் இதனை மறந்தாலும் மட்டக்களப்பு கிராமப் புறங்களிலும் படுவான்கரைப் பகுதிகளிலும் புதிர் சாப்பிடும் விருந்தோம்பல் இன்றுவரை தொலைந்து போகவில்லை.

சாமித்தம்பி வாத்தியார் சிறுவனாக இருந்த காலத்தில் 'புதிர்' சாப்பிடும் விருந்தோம்பல் சடங்கை ஒருதரம் நினைத்து பார்த்துக் கொள்ளுகிறார்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடடா! அந்தக்காலந்தான் எவ்வளவு எழுச்சியான சம்பிரதாயபூர்வமான சடங்குகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த பொற்காலம். மழைகாலமான மார்கழி மாதம் ஓடிப்போக "தைபிறந்தால் வழிபிறக்கும்" என்ற நம்பிக்கையின் சின்னமான தைமாதமும் பிறந்துவிடும். விதைத்த வேளாண்மை அறுவடைகாணும் இந்த இனிய காலத்தில் புது அரிசியும் பழக்கத்துக்கு வந்துவிடும். பழைய அரிசி முடிந்தால் எப்படியாவது 'புதிர்' சாப்பிடுவதற்கு புது அரிசி வாங்கும் நிகழ்வு ஊரெல்லாம் இனிய தென்றலாக உலாவந்துவிடும். 'புதிர்' சாப்பிடப்போகிறோமென்று நினைத்தாலே சாமித்தம்பி போன்ற சிறு பொடியனுகளுக்கு வருஷம் பிறந்ததுபோல் ஒரே கொண்டாட்டம்தான். எப்ப 'புதிர்' சாப்பிடுவார்கள்! எப்ப 'புதிர்' சாப்பிடுவார்கள்! என்ற தணியாத ஏக்கத்தில் சாமித்தம்பியும், அவனது கூட்டாளிமாரும் பலவிதமான விளையாட்டுக்களில் காலத்தைக் கடத்துவார்கள். சாமித்தம்பியின் தாய் மாமாவான செல்லத்துரைக்குச் செண்பகம் என்ற பெயருடைய ஒரு மகள் இருந்தாள். அவள் சாமித்தம்பியைவிட மூன்று வயது இளையவள். மின்மினிப் பூச்சியைப் போலக் கண்களைச் சிமிட்டி வண்ணாத்திப் பூச்சியைப்போல ஓடித்திரிவாள். பொம்மை போன்ற கவர்ச்சிகரமான - எவரையும் ஒருதரம் நிமிர்ந்து பார்க்க வைக்கும் அழகான சிலை போன்ற பெண் அவள். மச்சான் சாமித்தம்பியோடுதான் எந்த நேரமும்; ஒட்டிக் கொண்டு திரிவாள். செண்பகத்தின் கூட்டாளிச் சிறுமிகளான அன்னம், சின்னது, உமையாத்த, பொட்டுப்புள்ள போன்றவர்களும் சாமித்தம்பியோடும் அவனது கூட்டாளிப் பொடியன்மாரோடும்தான் விளையாட வருவார்கள். சாமித்தம்பிக்கு அப்போது பன்னிரண்டு வயது மச்சாள் செண்பகத்துக்கும் அவளது கூட்டாளிப் பொடிச்சிகளுக்கும் பத்துக்கும் ஒன்பதுக்கும் இடைப்பட்ட வயதாயிருந்தது. சொண்டு சிவந்து மதமதப்பாக வளர்ந்து கூவத்துடிக்கும் இளம் கன்னிச்சேவல் போல் வளர்ந்து வரும் பருவம் அந்தப் பெண் குட்டிகளுக்கு, சாமித்தம்பியோடும் அவனது கூட்டாளிமார்களுடனும் எந்த நேரமும் விளையாடி விளையாடி கூச்சமென்பதே அந்தச் சிறிய பொடிச்சிகளுக்கு மருந்துக்கும் இல்லாமல் போய்விட்டது.

அந்த ஊரின் மத்தியிலேயிருக்கும் 'மாரிர திட்டியில்'ஒரு ஒதுக்குப் புறமாக வெள்ளெருக்கு, தகர, கார, முடிதும்பை, மஞ்சனாமரம், வாகை, பூவரசு போன்ற செடிகளும் மரங்களும் நிறைந்து பொலிந்து மறைப்பாக இருட்டுப்பகுதியாக வளர்ந்துகிடக்கும் இடத்திலே, வண்ணாத்திப் பூச்சிகள் தகரப் பற்றைகளிலும் முடிதும்பை மரங்களிலும் இறக்கை விரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்ணப்பூக்களாகப் படிந்து கிடக்கும். ஆந்த வண்ணாத்திப்பூச்சிகளைப் பிடித்து வெள்ளை நூலிலே கட்டி விளையாடுவதற்காகச் சாமித்தம்பியும் கூட்டாளிமாரும் பறந்து வருவார்கள். பம்பரம்போல் ஓடி ஓடி வண்ணாத்திப் பூச்சிகளைப் பிடிப்பதில் சாமித்தம்பி கைதேர்ந்தவன். மச்சாள் செண்பகம் "எனக்கும் பிடித்துத்தாடா! எனக்கும் பிடித்துத்தாடா" என்று சத்தம் போட்டுக் கத்தியவாறு சாமித்தம்பியைப் பின்தொடர அவனும் அவளுக்கு வண்ணாத்திப்பூச்சியை லாவகமாக இறக்கைகள் பிய்ந்து போகாமல் பிடித்துக் கொடுப்பான். வண்ணாத்திப்பூச்சிகளைப் பிடிக்கும் போதே 'புதிர்' சாப்பிடும் காலம் நெருங்கிவிட்டதை ஒரு தரம் நினைத்துச் சாமித்தம்பி துள்ளிக் குதிக்க மற்ற பொடியனுகளும் சிறு பொடிச்சிகளும் ஆரவாரமாகச் சத்தம்போட்டுத் துள்ளிக்குதித்துக் கூத்தாடுவார்கள். வாகை மரக்கிளைகளில் இலைகளோடு இலையாக பதுங்கிக்கிடக்கும், தங்கநிறத்தை அப்பிவிட்டதுபோல் கோலம் காட்டும், தோல் உரிக்காத பாக்குப் பழமாகக் காட்சிதரும் 'பொன் வண்டு' களை மெல்ல மெல்லக் காலடி ஓசை எழும்பாத வண்ணம் கைகளிலே பொத்திப்பிடிக்கும்போது அவர்களது காலடியில் சொர்க்க வாசல் திறந்துவிட்டது போலிருக்கும்.

தகரப்பற்றைக்குள் மண்ணிலே புதையுண்டுகிடக்கும் 'வெட்டுக்கிளி'களைத் தோண்டி எடுப்பதற்குச் சாமித்தம்பி பற்றைகளை விலக்கிச் சூத்து அரைபடப் பதுங்கிப் போகும் பொழுது மற்றவர்கள் வேடிக்கையாக வெளியே நின்று பார்த்துக் கொண்டிருக்க, பேசாமல் தகரப்பற்றைக்குள் மறைந்து மறைந்து செண்பகமும் சாமித்தம்பி 'வெட்டுக்கிளி'களைத் தோண்டி எடுக்கும்போது அவனுக்குப் பக்கத்திலே சம்மாணம் கொட்டி இருந்துவிடுவாள். 'வெட்டுகிளி' களை மெதுவாகத் தோண்டி எடுத்துக் கைகளால் சாதூரியமாகப் பொத்தி எடுக்கும் அற்புத வேளையில் கூட 'புதிர்' சாப்பிடப் போகிறோம் என்ற தேன்வதையைப் பிழிந்து வாயில் ஊற்றும் இன்ப நினைவே நெஞ்சில் ஓவியம் தீட்டும். பிடித்த வெட்டுக் கிளிகளை கைகளிலே பொத்திப் பிடித்தவாறு பார்க்கும் பொழுது செண்பகம் ரகசியமாக வந்து சம்மாணம் கொட்டிச் சிரித்த முகத்துடன் தனக்கருகில் இருப்பதை கண்டுவிடுவான் சாமித்தம்பி. செண்பகத்தின் அழகு 'செங்காந்தள்;' பூவாக விரிந்தாட அவனது மனதுக்குள்ளே 'கிறுக்கூஞ்சல்' வேகத்தில் ஏதோ சொல்லமுடியாத அபரிதமான உணர்வு நரம்புபின்னி மேனியெல்லாம் மின்சாரம் பாய்ச்ச அவளது பிஞ்சு உடலை இறுக அணைத்து அவளது முல்லை மொட்டுப்போல் குவிந்து கிடக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமை மார்புகளைக் கையினால் திருகும்போது அவளது கண்கள் கொவ்வைப் பழங்களாகச் சிவக்க "உடுடா! நோகுது" என்று மச்சாள் செல்லக் கோபம் காட்ட, கமுகம்பாளை விரிந்து கிடப்பது போல் அவளது அழகிய கூந்தல் குலைந்து பரவிக்கிடக்க மீண்டும் அவளது சிறு குரும்பட்டியாகத் தள்ளிநிற்கும் இளம் முலைகளைக் கைககளால் ஆவேசமாகத் திருகும்போது, "போடா! நாயே! வம்புப்பழக்கம் செய்யிற உன்னோட இனிமேல் பேசமாட்டன் நான்" என்று சிணுங்கிச் சிணுங்கிக் கத்திக் கோபங்காட்டிச் சிலிர்ப்பிக் கொண்டு கன்னிச் சேவலாகத் துள்ளி வெளியே ஓடும்மச்சாள் செண்பகத்தைப் பயம் ஈரல் குலையை ஆட்டுவதுபோல் பேய் அறைந்தவன் போல் பார்த்து நிற்பான். அவனுக்குப் பயம் வந்து ஆட்டிஅலைக்களிக்க என்ன செய்வதென்று தெரியாமல் சிலையாக நிற்பான். இந்தப் புதினம் ஒன்றும் தெரியாத கூட்டாளிமார்கள் வெளியே அவன் வருகைக்காகக் காத்துக்கொண்டு நிற்பார்கள்.

தான் செய்த 'வம்பு விளையாட்டை' மாமாவிடம் சொல்லிவிட்டால் பிறகு அப்பா கமுகமரத்திலே கட்டிவைத்து உரி உரி என்று உரிப்பார். உனக்கு இந்த வயதில பொண் தேவப்படுதிரா எண்டு மாட்டுக்கு மரைக்கு அடிக்கிறதுபோல அடிப்பார். சாமித்தம்பி பயத்தால் எதையெல்லாமோ நினைத்து ஏங்கி நிற்பான். ஆனால் வெளியே ஓடிப்போன மச்சாள் செண்பகமோ ஒருவித சலனமும் இல்லாத முகத்தோடு திரும்பவும் அவனருகில் வந்து "தாடா! வெட்டுக்கிளிய" என்று கொடுப்புக்குள் சிரித்தவாறு கேட்க, சாமித்தம்பிக்குப் பயமெல்லாம் ஒரே வேகத்தில் ஓடிப்போக, மச்சாளிடம் தான் பிடித்த வெட்டுக்கிளியைக் கொடுத்து மெதுவாக அவளது பொன் வண்ண நிறமான கைகளைக் கிள்ள செண்பகமும் வெட்டுக்கிளியோடு புன்னகை சிந்தியவாறு தாவித்தாவி ஓடித்திரிவாள். வெட்டுக்கிளியை பிடிப்பதும், பொன்வண்டுகளைப் பிடித்துப் பவித்திரமாகக் கொண்டு ஆனந்தக் கூத்தாடுவதும், வண்ணாத்திப் பூச்சுகளைப் பிடித்து நூலிலே கட்டி ஓடி ஓடி விளையாடித்திரிவதும் சில்லுக்கட்டை விளையாடுவதும், வார்த்தட்டு அடிப்பதும், கிறுக்கூஞ்சல் செய்து ஊஞ்சல் ஆடுவதும், படிக்கல் கொண்டு முந்திரியம் கொட்டை அடித்து விளையாடுவதும் களிமண்ணைப் பிசைந்து உருவங்கள் செய்து சிறுகோவில்கட்டி விளையாடுவதும், தென்னைமரத்துக் குரும்பட்டிகளைப் பொறுக்கி எடுத்து அழகான சிறு தேர்களைக் கட்டி ஆற்றில கொண்டு அந்தக் குரும்பட்டித் தேரை போட்டுத் தேரை ஆற்றுநீரிலே எறிந்து நீந்தி நீந்தி ஆற்றிலே கும்மாளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டுவதும், பொஞ்சாதி, புருஷன், புள்ளையள், பொலிஸ், விதான என்று விளையாடி இலைகளையும், குரும்பட்டிகளையும், பூக்களையும் மண்ணையும் கொண்டு சோறு கறியாக்கி விளையாடுவதும், வெள்ளமாய் ஓடும் ஆற்றிலே கடதாசிக்கப்பல் செய்து அதிலே விட்டு ஆனந்தப்பள்ளுப் பாடுவதும், தெய்வம் ஆடிக் கட்டுச் சொல்லி வேப்ப இலைக் கொத்துக்களைக் கொண்டு ஆடுவதும், 'புதிர்' தின்னும் காலங்களில் சாமித்தம்பியும் கூட்டாளிமாரும் இப்படியான மரபுரீதியான மண் வாசைன வீசும் விளையாட்டுக்களை விளையாடிப் புதிர்ச் சாப்பாட்டுக்காக அர்ச்சுனதவம் செய்து கிடப்பார்கள்.

'புதிர்' தின்னும் காலம் நெருங்கிவர சாமித்தம்பியின் அப்பா மார்க்கண்டு 'புதிர்' ஆக்குவதற்குக் காட்டிலே கொள்ளிகள் எடுப்பதற்காகத் தனது சிறு வள்ளம் போல் காட்சிதரும் காட்டுமா மரத்துத் தோணியைக் கட்டிக் கொண்டு ஆற்றில் தீவாக விளங்கும் 'இறக்கத்து வாசல்' காட்டுக்குப் போக எத்தணிக்கும்போது அவருக்கு உதவியாக மகன் சாமித்தம்பியும் கோடாலியையும், பெரிய வெட்டுக்கத்தியையும் எடுத்துக்கொண்டு 'அணியப்பலகை' யில் ஏறிக்குந்திக் கொள்ள, "நானும் வாறன் என்னையும் கூட்டித்துப் போங்க" என்று சத்தம் போட்டுக் கத்தியவாறு ஓடி வருகிறாள் செண்பகம். "போடி! மூதேசி, கொள்ளிவெட்ட பொம்புளப்பிள்ளயள காட்டுக்குக் கூட்டிப்போறல்ல. உண்ட அப்பன் எங்களுக்குத்தான் ஏசுவான். பேசாம மாமியோடபோய் இரு.' என்று சாமித்தம்பியின் அப்பா மார்க்கண்டர் சினத்துடன் கூற, "இல்ல நானும் வரப்போறன். நானும் வரப்போறன். அப்பாதான் போகச் சொன்ன" என்று பொய் கூறி பெரிய சத்தமாக ஒப்பாரி வைத்துக்கத்த "சரி அவளக் கூட்டித்துப்போங்க. அண்ணன் வந்து கேட்டா நான் சொல்லிக்குவன்" என்று சாமித்தம்பியின் அம்மா தங்கமணி செண்பகத்துக்குப் பரிந்து பேச, "ஆண் தோற! காட்டில வெச்சுக் கஸ்டப்படுத்தினா காட்டுக்குள்ள பேய் புடிக்க உட்டுப்போட்டு தோணியத் தள்ளித்து வந்திடுவன்"; என்று மாமா மார்க்கண்டர் பயங்காட்டிப்பேசிவிட்டு, செண்பகத்தையும் ஏற்றிக்கொண்டு, 'இறக்கத்துவாசல்' காட்டை நோக்கித் தோணியை வேகமாகத் தொடுத்தவாறு போகிறார்.

'இறக்கத்துவாசல்' தீவின் காடு கண்ணாமரங்களாலும் தில்லை மரங்களாலும் கிண்ணை மரங்களாலும் இன்னும் பெயர் தெரியாத பலபல காட்டுமரங்களாலும் அடர்ந்து பரந்து செறிந்து 'இருட்டுச் சாம்ராச்சியமாக' முல்லை என்று இலக்கணப்படுத்தப்பட்ட அந்தவனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி விளங்கியது. முறுக்கேறிக் காய்ந்து போய்க்கிடக்கும் பட்ட மரங்களிலே மார்க்கண்டர் கொள்ளிகளை வெட்டி எடுக்க, பச்சையும் மஞ்சளுமாகக் கிளைகள் பெருத்த இலைகள் செறிந்த பெரும் பெரும் மரங்களிலே - தாவிப்பரந்து கிடக்கும் பற்றைக்காடுகளிலே விதம் விதமான பறவைகளும் பால் போன்ற வெண்நிறக் கொக்குகளும், கொச்சிப்பழம் போல் சிவந்த சொண்டுகளை உடைய கண்ணைப்பறிக்கும் பச்சை நிறக்கிளிகளும், விதம் விதமான புறாக்கூட்டங்களும், அழகிய கூடு கட்டிய தூக்கணாங் குருவிகளும் குடி கொண்டு குடும்பம் நடாத்தும் அழகைக் கண்டு சாமித்தம்பியும், செண்பகமும் அடங்க முடியாத ஆனந்தக் கடலிலே நீச்சல் அடிப்பார்கள். அந்தக் காடெங்கும் பறவைகளின் ஓயாத இனங்காணமுடியாத சங்கீதச் சிதறல்கள், இரைச்சல்கள், அனுங்கல்கள், முனகல்கள் அப்பாடா! காதுகளில் முட்டி அடைத்துக் கொள்ள அழகிய பெருத்த முயல்கள் பளிங்குக் கண்களை காட்டியபடி குறுக்கும் மறுக்கும் ஓடுவதும் காட்டுக் கோழிகள் அழகாகத் தத்தித் தத்திப் பறப்பதும், தூரத்தே காட்டுப் பன்றிகளின் உறுமலும் அவர்களை வியப்பில் ஆழ்த்திவிடும். இருண்ட 'ஆபிரிக்கக் காட்டின்' பகுதிபோல் அந்தத் தீவு விளங்கியது.

மார்க்கண்டர் வெட்டி எடுத்த கொள்ளிகளைத் தோணியிலே பவித்திரமாக அடுக்கிவைத்துவிட்டு. நான்கு குஞ்சுப் பருவமான கொக்குக் குஞ்சுகளை மரக்கிளையிலிருந்து பிடித்துக்கொண்டு வந்து மரப்பட்டையை உரித்து கயிறாகத் திரித்துக் கொக்குக் குஞ்சுகளின் கால்களில் கட்டி மகன் சாமித்தம்பியிடம் கொடுத்துவிட்டுத் தோணியைத் தள்ளிக்கொண்டு சவளால் வேகமாகத் தொடுத்தவாறு ஊர்க்கரையை நோக்கியவர சாமித்தம்பியும், செண்பகமும் கொக்குக் குஞ்சுகள் கிடைத்த சந்தோஷத்தில் ஊர்க்கரையை நோக்கிக் கண்களைப்பதித்தவாறு சிரித்துக்கொண்டுவர 'விரிச்சல்' ஆற்றிலே பலவகையான மீன் இனங்கள் துள்ளிகுதித்துப் பாட்டம் பாட்டமாக ஓடித்திரிவதையும் ரசித்தவாறு தங்களை மறந்து ஆனந்த மயக்கத்தில் மூழ்கிக்கிடக்கையில் கொள்ளிளை ஏற்றிவந்த தோணி அவர்களது ஆற்றங்கரைக் 'கந்தக்குட்டி வளவு'க்கரையை அடைந்து விடும்.

சாமித்தம்பியின் அம்மா தங்கமணியும் ஓடிவந்து அவர்களோடு சேர்ந்து கொள்ளிகளை அள்ள, செண்பகமும் சாமித்தம்பியும் பிடிச்சுவந்த கொக்குக் குஞ்சுகளோடு துள்ளிக்குதித்தவாறு வளவுக்குள் ஏற, மற்றக் கூட்டாளிமார்களும் கொக்குக் குஞ்சுகளைப் பார்க்க ஓடிவருவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'புதிர்' தின்னப்போகும் இந்த ஆனந்தமான நாட்களில் கொக்குக் குஞ்சுகளும் கிடைத்தது அவர்களுக்குத் தங்கப் புதையல் கிடைத்தது போன்ற உற்சாகம் ஏற்பட அவர்களது கோமாளிக் கூத்துக்கள் ஆற்றங்கரைச் சுற்றாடலை அதிரவைக்கும்.

சாமித்தம்பியின் அப்பா மார்க்கண்டர் திறமையான மீன்பிடிகாரர். விதம் விதமான மீன்களைப் பிடித்துத் தளப்பமில்லாமல் குடும்பத்தை நடத்தியவர் அவர். கரையாக்கன்தீவு குமாரசாமிப் போடியாரும் கொத்தியாமலைத் தயிர்க்காறச் செம்பாப்போடியாரும் மார்க்கண்டரின் நெருங்கிய கூட்டாளிமாராகும். ஒவ்வொரு வருஷமும் 'புதிர்' சாப்பிடுவதற்குக் கரையாக்கன்தீவு குமாரசாமிப் போடியார் புதுநெல் மூட்டை ஒன்று கொண்டுவந்து கொடுப்பார். அதனைப் பக்குமாக அவித்து சொந்தக்காரப் பொண்டுகளைக் கூட்டித்துவந்து உரலிலே குத்தி எடுத்துப் 'புதிர்' சாப்பிட ஆயத்தமாகுவார்கள். குமாரசாமிப் போடியார் புதுநெல்மூட்டையைத் தோணியிலே ஏற்றி வந்து கொடுத்துவிட்டு அவர்கள் 'புதிர்' சாப்பிடுவதற்குரிய சகல சாமான்களையும் காத்தான்குடிச் சந்தையிலே வாங்கிக் கொண்டு தங்கமணி தந்த 'கந்தட்டி வளவு'க்குள் இறக்கிய இனிப்புக் கள்ளை வாங்கித் தாகம் தீரக்குடித்துவிட்டுப்போக, கொத்தியாமலைச் செம்பாப்போடியாரும் 'புதிர்' சாப்பிடுவதற்கான சுவையான எருமைத் தயிர்ப்பானைகளைக் கொடுத்து விட்டுத் தங்கமணி கொடுத்த 'வச்சிக்கள்'ளை ஒரு பிடி பிடித்தவாறு தனது தோணியில் ஏறித் தனது ஊரான கொத்தியாமலைக்குப் புறப்பட மார்க்கண்டரின் வீடு 'புதிரு'க்கு ஆயத்தமாகும். மார்க்கண்டர் 'புதிர்' சாப்பிடுவதற்குப் 'பொரியலு'க்கு மீன்பிடிக்க மகன் சாமித்தம்பியையும் கூட்டிக்கொண்டு மண்முனை ஆற்றிலே நாலுவீச்சு வீசி ஐந்தாறு தரவளியான 'செங்கண மணலை'களைப் பிடித்தவாறு வீட்டுக்கு வர வளவுக்குள் உற்றார் உறவினர் உற்சாகமாக வேலை செய்வதும் பெரிய அண்டாப்பானையிலே சோறு ஆக்குவதும் தங்களது 'கந்தட்டி வளவு'க்குள்ளே இறைச்சிப் பொலிவோடு மதமதத்து வளர்த்து கிடந்த சதைப்பிடிப்பான மூன்று சேவல்களைப் பிடித்து உரித்து இறைச்சிக்குழம்பு வைப்பதும் பலவிதமான மரக்கறிகளை வெட்டி சுவைபட ஆக்குவதும், வீசிவந்த 'செங்கண மணலை'களை அறுத்து பொரியல், ஆணம், வைப்பதும் சொந்தக்காரக் குழந்தைகளும், மகன் சாமித்தம்பியும் மருமகள் செண்பகமும் கலகலப்பாக 'புதிர்' தின்னும் ஆவலில் பாட்டுப்பாடி கூத்தாடி மகிழ்வதும் அந்தக் 'கந்தட்டி வளவு' புதிர் சாப்பிடுவதற்காக புதுவருஷம், பிறந்து கொண்டாட்டம் நடத்துவதுபோல் வார்த்தைகளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளந்து கூறமுடியாத ஆனந்தப்பிரவாகம் பிரளயமாக வெடித்துச்சிதற எங்கும் பூரிப்பு. எவர் முகத்திலும் அளவிட முடியாத பூரிப்பு.

'புதிர்' சாப்பிடச் சோறு, கறிகள், கூழ், பலகாரம், பொரியல் என்று எல்லாவற்றையும் பூரணமாகசச் செய்து முடித்த பிறகு மார்க்கண்டர் கிணற்றடிக்குப் போய் முழுகித் தூய்மையாக வெள்ளை வேட்டியைக் கட்டிக் கொண்டு உள்வீட்டுக்குள்ளே கிணற்றடியில் வெட்டி எடுத்த பெரிய தலைவாழை இலையோடு போய்ச் சப்பாணி கொட்டி இருந்தவாறு பொஞ்சாதி தங்கமணியிடம், சோத்துப்பானையையும் தூக்கித்து 'புதிர்' பினையிற சகலசாமான்களையும் எடுத்திற்று வா" என்று அன்புக்கட்டளை இட, பொஞ்சாதி தங்கமணி அண்ணன் பொஞ்சாதி பூபதி மச்சாளோடு சேர்ந்து சோத்துப்பானையைத் தூக்கிக் கொடுத்துவிட்டுத் தயிர்ப்பானை, பிழிந்து வெண்கலச் சட்டியில் ஊத்திவைத்திருந்த தேங்காய்ப்பால், சர்க்கரை, சீனி, கற்கண்டு, பனங்குட்டான், தேன், நெய், சகலவிதமான பழவகைகள், கூழ், பலகாரங்கள் என்று எல்லாவற்றையும் காலடியில் வைக்க, பெரிய ஆள் உயரத்தில் கம்பீரமாக நிற்கும் வெண்கலத் தேற்காய் எண்ணெய் விளக்கின் பகல் போல் வெளிச்சம் காட்டும் சுடர் ஒளியில் உள்வீட்டில் பெரிய தலைவாழை இலையைப் பக்குவமாகப் போட்டு வெண்கல அகப்பையால் சோற்றை எடுத்து இலையிலே அள்ளி அள்ளிக் குவித்து தேங்காய்ப்பாலை அதற்குள்ளே ஊற்றி அதற்கு மேலே தயிர்ப்பானையைக் கொட்டி மெது மெதுவாகப் பினைந்தெடுத்து, பினையப்பினைய ருசி காட்டும் சாமான்களான கூழ், பலகாரங்கள், சகலவிதமான பழவகைகள், சீனி, சர்க்கரை, கற்கண்டு, உடைத்த பனங்குட்டான், தேன், நெய் என்று எல்லாவற்றையும் எங்கும் பரவலாக போட்டுக் கையால் லாவகமாகப் பினைந்து பினைந்து 'புதிர்' பினையும் கைங்கரியத்தை முடித்துவிட்டு கையால் பினைந்த 'புதிரி' ல் கொஞ்சத்தை எடுத்து வெண்கலத் தேங்காய் எண்ணெய் விளக்குத் திரியிலே வைத்துவிட்டு எல்லோரையும் அழைத்து கற்பூரம் கொழுத்தி தேவாரம் பாடி முடித்துவிட்டு மனைவி, மகன், மனைவியின் அண்ணன், மச்சாள் பூபதி, மருமகள் செண்பகம், உறவினர் குழந்தைகள் என்று சகலருக்கும் பினைந்த புதிரைக் கொடுக்க அவர்கள் எல்லோரும் அவற்றைச் சந்தோசமாக வாங்கிச் சாப்பிட்டுவிட்டுக் கைகளைக் கழுவிக் கொண்டு 'புதிர்' சோறு சாப்பிட மண்டபத்திற்குள் போடப்பட்ட 'பன்பாயி' ல் இருந்துவிட குழந்தைகள் அமிர்தம்போல சுவைகாட்டும் பினைந்த 'புதிரை' வாங்கிச் சாப்பிட்டு நஞ்சுவேரின் சாறைக் குடித்த 'பொட்டியான்' மீன்கள் போல கண்கள் மயங்க இனிப்புக்கிறக்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டமாக ஒரு இடத்திலே இருந்து கொள்ளுவார்கள். மார்க்கண்டரும் புதிரை வாய்க்குள் வைத்துக் கொள்ளுவார். பொஞ்சாதி தங்கமணி ஒவ்வொருவருக்கும் கழுவிய வாழை இலைகளைப் போட்டுவர மார்க்கண்டரும் பொஞ்சாதியும், அண்ணனது பொஞ்சாதி பூபதியும் சகலருக்கும் சோறு போட்டு பொரியல் வைத்து கறிகள் வைத்து தயிரோடு கூழோடு 'புதிர்' சாப்பிடக் கொடுக்க உண்ட மயக்கத்தில் கிடந்த சாமித்தம்பியும், செண்பகமும் மற்றக்குழந்தைகளும் கொஞ்சம் 'புதிர்' சோற்றைக் கறிகளோடு வாங்கிச்சாப்பிட்டு விட்டு இலையிலே கூழை வாங்கி நாக்கினால் நக்கித்திரிவார்கள்.

இனிமையான 'புதிர்' சாப்பிடும் அந்தச் சம்பிரதாய யுகத்தை நினைத்துப் பார்த்த சாமித்தம்பி வாத்தியார் "அப்பாடா! அந்தப் பொற்காலம் இனி எப்பொழுது வரப்போகுது?" என்று நினைத்து நீண்ட பெருமூச்சை விட்டவாறு மீண்டும் 'புதிர்' சாப்பிடுவதற்கு ஆயத்தமாகிறார்.

கார்த்திகை 2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துறைக்காறன்

முற்றி விளைந்த முதிரைமரக் குத்திபோல், பீப்பாவயிறும் திடகாத்திரமான கை கால்களோடு முறுக்கு மீசையும் கொவ்வைப்பழங்கள் போல் எந்த நேரமும் சிவந்து கிடக்கும் கண்களுமாக 'கரும் குரு மென்ற' தார் நிறத் தோற்றத்தோடு, பார்ப்பதற்கு புராண காலத்து வீமன் போல் ஆசான பாவனாகத் தோற்றம் தருவான் துறைக்காறன் செம்பாப்போடி. ஆனால் கல்லுக்குள் நீர் மறைந்து கிடப்பது போல் அவனது முரட்டுத் தோற்றத்துக்குள்ளும் எவரையும் நேசிக்கும் மனித நேயம் மறைந்துகிடந்தது.

பதினைந்து வயது நடக்கும் போதே துறைக்காறனாக, வள்ளத்திலே சனங்களை ஏற்றிப் பறித்த தகப்பன் வேலாப்போடிக்கு உதவியாக வள்ளத்திலே ஏறிக்குந்தியவன் ஐம்பது வருடங்களாக வள்ளத்தை ஊண்டிச் சனங்களை ஏற்றிப்பறித்த செம்பாப்போடி, தனது அறுபத்து ஐந்தாம் வயதில் மண்முனை ஆற்றிலே ஜலசமாதி ஆனது எவரும் எதிர்பார்க்காத துயரச்சம்பவந்தான்.

துறைக்காறனாகச் ஜீவியம் நடாத்திய தகப்பன் வேலாப் போடிக்கு பத்து பால்கறக்கும் எருமை மாடுகளும், பதினைந்து பசுமாடுகளும் இருந்தன. பள்ளிக் கூடப்பக்கமே கால் வைக்காத ஊர் சுற்றும் விடலைப் பருவமான செம்பாப் போடி அந்த மாடுகளுக்குப் புறகால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உப்புக் கரைச்சைப் புல்வெளிப் பக்கமும், அறுவடையான வேளாண்மை வயல் பக்கமும் மேய்ச்சல் காட்டி மாடு மேய்த்துத் திரிந்தவன் தான். தனது தகப்பன் வேலாப்போடிக்கு வயது ஏறி தைரியம் குறைந்து வரும் பொழுது தங்களது பரம்பரைச் சொத்தான சேகப்பத்துத் துறையில் தகப்பனுக்கு உதவியாக வள்ளம் ஊண்டத் தொடங்கினான்.

பெட்டிகள் நிறைய அரிசிகளோடு வரும் பெண்களை சாதுரியமாகப் பட்டப் பெயர் சூட்டிக் கிண்டலாகப் பகிடி பேசி வள்ளத்திலே ஏற்றவைப்பான் செம்பாப்போடி. கறுத்தமைனா, கடல்காகம், முசல்குட்டி, ஊமத்தம்பூ, பூக்காரி, கொண்டையம்மா, கூனித்தாய், புட்டுக்காரி இப்படியெல்லாம் வாய்க்கு வந்த மாதிரி அரிசி கொண்டு வரும் பெண்களுக்கும் பட்டம் சூட்டி, சிரிப்புக் காட்டி கண்இமை வெட்டும் நேரத்திற்குள் எழுவான் பக்கம் இருக்கும் சேகப்பத்துத்துறைக்கு வள்ளத்தைக் கொண்டு வந்து விடுவான் செம்பாப்போடி.

இப்படி அவனது வள்ளத்திலே அரிசிப் பெட்டியோடு பிற ஊர்களுக்கு அரிசி விற்க வந்து திரிந்து, காஞ்சிரங்குடாத்துறையை அக்கரைப்பட்டுப் போனால் பரந்த வேளாண்மை வயல்களின் உறைவிடமாக விளங்கிய இலுப்படிச்சேனை கந்தையாப் போடியாரின் மகளான செண்பகம், செம்பாப்போடியின் கண்களுக்குப் பட்டு, எப்படியாவது அவளை அடைய வேண்டுமென்ற துடிப்பால் வெட்கத்தைப் பாராமல் செண்பகத்திடமே ஒருநாள், "ஏம்புள்ள உன்ன எனக்குப் புடிச்சிருக்கு. என்னக் கலியாணம் கட்டிக்கிறாயா" என்று வாய் நிறையச் சிரிப்பைச் சிந்தியவாறு அவசர அவசரமாகக் கேட்டு விடுகிறான். அவளோ அடக்க முடியாத வெட்கத்தால் தலை குனிந்தவாறு ஒன்றுமே பேசாமல் போய் விடுகிறாள். நல்லவேளை வேறு பெண்கள் இதனைக் கவனிக்கவில்லை. அழகு ததும்ப, கை வண்ணம் நிறைந்த சிற்பியால் செதுக்கப்பட்ட அற்புதச் சிலையாக மிளிர்ந்தவள் செண்பகம். மூக்கும் முளியுமாகப் பால் போன்ற வெள்ளையோடு, கமுகம் பாளையை விரித்தாற்போல் நீண்டு செறிந்து கிடக்கும் கூந்தல் அழகோடு பார்க்கும் இளந்தாரிகளை கொக்கிபோட்டு இழுக்கும் அழகுத் தேவைதை அவள். தகப்பன் கந்தையாப் போடி தாந்தாமலைக்காட்டிலே மரம் வெட்டப்போய் வெட்டிய மரத்தின் உறுதியான கிளை ஒன்று காலிலே வந்து விழுந்து ஒரு கால் முடமாகிப்போய் நடக்க முடியாமல் வீட்டோடு முடங்கிப் போனதால், தாயும் வயது போன காரணத்தினால் குமர்ப்பெண்ணான செண்பகம் அரிசிப் பெட்டியைச் சுமந்து கொண்டு ஊர் ஊராக விற்க நேர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வருஷமாக செண்பகம் சேகப்பத்துத் துறையால் அரிசிப் பெட்டியோடு அக்கரப்பட வருவதும் செம்பாப்போடியும் அவள் வருகையை எதிர்பார்த்துக் காத்திருப்பதும் என்று, அவசர உலகத்தில் காலத்தைத் தள்ளிவர, இனிமேலும் பொறுத்திருக்க முடியாத அவஸ்த்தையில் எப்படியாவது அவள் செண்பகத்தை இலுப்படிச் சேனைக்குப் போய் அவளது தாய், தகப்பனிடம் கதைத்துக் கலியாணத்தை முடித்துத் தரும்படி உடும்புப்பிடியாக தகப்பனிடம் கலியாணவரம் கேட்டு வலுக்கட்டாயமாக உறுதியாக நிற்க, மகனின் இளம்பருவத்து கலியாண மோகத்தொல்லை பொறுக்க முடியாமல், காஞ்சிரங்குடாத் துறையை அக்கரப்பட்டு வேலாப் போடியாரும், அவரது பொஞ்சாதி சீதையும் செண்பகத்தைக் கலியாணம் கேட்டு அவளது ஊரான இலுப்படிச ;சேனைக்குப் போய் வேளாண்மை வயல்கள் இருக்கும் வட்டைக்குள் பெரிய களிமண் வீடு இருக்கும் வளவுக்குள் கால்வைத்தனர்.

செண்பகந்தான் அவர்களைக் கண்டதும் "யாரோ வந்திருக்காங்க, வாகா அம்மா" என்று சத்தம் போட்டு அழைக்க, அவளது தாய் தெய்வி முற்றத்துக்கு வந்து எட்டிப்பார்க்கிறாள். வயது போன ஆணும், பெண்ணுமாக இரண்டு பேர் முற்றத்திலே நின்று கொண்டிப்பதைப் பார்க்கிறாள். உடனே அவர்களைப் பார்த்து, "வாங்க, ஆரப் பாக்கவேணும்" என்று மெதுவாகக் கூறியவாறு இருக்கச் சொல்லி வீட்டு முற்றத்திலே காங்கேயனோடை முஸ்லிம் பெண்கள் குடிசைத் தொழிலாகப் பின்னி விற்கும் 'பன்பாயை' விரித்துப் போடுகிறாள் தெய்வி.

அவர்கள் வந்த ரகசியம் செண்பகத்துக்கு ஓரளவு புரிந்த மாதிரி உணர்வு ஏற்பட அவள் ஓட்டமாக ஓடிப் போய் பள்ளத்து வயல் பக்கம் நின்ற தகப்பனைக் கூட்டி வருகிறாள். மரம் விழுந்த கால் முடமாகிப் போன கந்தையாப் போடியார் கெந்திக்கெந்தி ஒரு பக்கம் சாடையாகக் கெந்தியவாறு வந்தவர், பாயில் இருப்பவர்களை உற்றுப் பார்த்தவாறு "யாரு துறைக்காறன் வேலாப் போடியா" என்று கேட்டவாறு அருகில் அவதிப்பட்டுக் குந்திக்கொள்ளுகிறார்.

"ஓண்டா கூட்டாளி, நீங்க முனக்காட்டச் சேர்ந்த ஆக்கள்தானே. அந்த நாளில் இலுப்படிச் சேனையில் காடு வெட்டி சேனைப்பயிர் செய்யக் குடியேறிய ஆக்கள். ஒரு வகையில் நீங்க எங்களுக்குச் சொந்தமான உறவுக்காரர்கள்தான்" என்று செண்பகத்தின் தகப்பனைப் பார்த்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியவாறு வெற்றிலை போட்டுச் சிவந்து போய்க்கிடக்கும் வாயை அகல விரித்தவாறு சிரிக்கிறார் வேலாப் போடியார்.

"என்னகா இந்தப் பக்கம் திடீரென்று புறப்பட்டிருக்கிறியள்? குத்தகைக்கு வெள்ளாம வயல் பார்க்க வந்ததா? இல்லாட்டி பால்கறக்கிற எரும, பசு மாடுகள் வாங்க வந்ததா? இல்ல உழவுக்கு மாடுகள் தேவையா?" கந்தையாப் போடியார் வினயமாக அவர்களைப் பார்த்துக் கேட்டார்.
"அதெல்லாம் ஒண்டுமில்லகா. உங்கட மகள எண்ட மகனுக்கு பொண் கேட்டு வந்திருக்கம்" மெதுவாக வந்த சங்கதியை வேலாப் போடியார் கூறினார்.

"அப்படியா சங்கதி, உங்களுக்கு எத்தன ஆம்புளப்புள்ளங்கள்?

"எனக்கு ஆம்புளையோ, பொம்புளையோ பருப்புப் போல ஒண்டுதான்கா. எண்ட மகன்தான் சேகப்பத்துத்துறைய இப்ப பாத்துக்கிற. நல்ல தைரியசாலி. எந்தக் கெட்ட பழக்கமும் கிடையா. முதலைக்குடா ஆத்தோரம் உப்புக் கரைச்சையை வெளியாக்கி வெள்ளாம செய்வதோடு, இருநூறுக்கு மேல் இளம் தென்னைகள் குலைகட்டிச் காய்ச்சிக் கிடப்பதோடு, சகல விதமான வாழை மரங்கள், மாமரங்கள், பிலாமரங்கள், கறி ஆக்கிற ஆசணிப் பிலா மரங்கள், கொய்யா, தோட, இலுமிச்ச, அன்னமுன்னா, பப்பாசி, கரும்பு, அன்னாசி, முருங்கமரம், இலுப்ப, வேம்பு, தேக்கு என்று சோலையாக முப்பது ஏக்கர் பூமி பரந்து கிடக்குது. இதவிட நூத்துக் கணக்கான பால் கறக்கிற மாடுகளும், ஆடுகளும், கோழிகளும் நிற செல்வமாக இருக்கு. அதுக்குள்ள நாட்டு ஓடுபோட்ட நாலறவீடும் பெரிய மண்டபமும், குசினியும் இருக்கு. இதெல்லாம் எண்ட புள்ளைக்குத்தான். எனக்கு வேறு யாரு இருக்கா. நானும், எண்டமகனும் கஸ்ரப்பட்டுச் சம்பாரித்த சொத்துக்கள். கரச்சப் பூமிக்கு எண்ட மகன்ட பேரில உறுதியும் வாங்கி எடுத்திட்டன். எண்ட புள்ளையிர கடும் உழைப்பாலதான் உப்புக்கரச்ச தங்கம் விளையும் பூமியாகக் காட்சி தருது." துறைக்காறன் சுயபுராணம் பாடி முடித்தார்.
"அப்படியா, நல்லா கஸ்டப்பட்டு உழைச்சிருக்கியள். முனக்காடு, முதலக்குடா ஆக்கள் வெள்ளாமச் செய்கையில யாருக்கும் சோட போகாத ஆக்கள்தான். எங்களுக்கு இந்த எட்டு ஏக்கர் வெள்ளாமப் பூமிதான் சொந்தமா இருக்கு. மூன்று பொம்புளப் புள்ளங்களுக்கும் காணியப் பிரிச்சு எழுதிப் போட்டன்." என்று கந்தையாப் போடியார் விக்கி விக்கிக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்துக் கொண்டே வேலாப் போடியார், "வேணுமெண்டா புள்ள பேரில இருக்கிற காணித்துண்ட நீங்க செய்யுங்க. நான் உங்கிட புள்ளைய அந்த முப்பது ஏக்கருக்கும் சொந்தக்காரியாக கூட்டித்துப் போயிடுவன்" என்று துறைக்காரறன் உண்ம நிலையப் புட்டு வைக்க, செண்பகத்தின் தாயும், தகப்பனும் பூரண சம்மதம் தெரிவித்துக் கலியாணத்துக்கு நாள் பார்க்கத் தீர்மானம் எடுத்து விட்டார்கள்.

ஊருக்குள் அரிசி விற்பதற்காக நாளாந்தம் சேகப்பத்துறையால் அக்கரப்பட வந்த, பார்ப்பவரை ஒரு தரம் திரும்பிப் பார்க்க வைக்கச் செய்யும் அழகியான செண்பகத்தைத் தனது மனைவியாகக் கலியாணம் முடித்து முதலைக்குடா ஆற்றோரம் செழிப்பாகப் பசுமை பூத்துக் குலுங்கும் உப்புக்கரச்சைத் தோட்டத்துக்கு அழைத்து வந்து சந்தோஷமான வாழ்க்கையை நடத்தி வந்தான். துறைக்காரறன் செம்பாப்போடி உப்புக்கரைச்சையின் ஒரு பக்கம் தங்கக் கதிர்களைத் தூவி விட்டது போல் தென்றல் காற்றிலே நடனம் செய்யும் நெற்பயிர்கள் நிறைந்த வயல் நிலங்களின் சிறப்பும், எந்த நேரமும் நிறை கர்ப்பிணிக் கோலம் பூண்டு பாளைகளைத் தள்ளித் தள்ளி குலைகுலையாக காய்த்துக்கிடக்கும் தென்னை மரங்களின் சுகந்தம் தரும் குளிர்ச்சிக் காற்றும், கைகளாலே ஆய்ந்து வெட்டிக் குடிக்கும் அமுதமான இனிப்பு இளநீரும், விதம் விதமான பழ வகைகளின் அற்புதச் சுவையும் செண்பகத்தைக் கருக்கொள்ள வைத்தன. முதல் குழந்தை ஆணாகவும், அதன் பிறகு ஐந்து பொட்டைக் குட்டிகளும் பெற்று நிறை செல்வமான இல்லற வாழ்க்கையை அனுபவித்து செண்பகம், துறைக்காறன் செம்பாப்போடியின் தர்மபத்தினியாக வாழ்ந்து, துறைக்காறனுக்கு சகல கருமங்களிலும் கைகொடுத்து உதவினாள்.

கள்ளு இறக்கும் இந்தியாக்காறச் சுப்பையாவுக்கு முதிர்ந்த தென்னை மரங்களைக் கொடுத்ததனால் செம்பாப் போடிக்கு மத்தியானமும், பின்னேரமும் இனிப்புக்கள்ளும், வச்சிக்கள்ளும் எந்த நாளும் குடிப்பதற்குக் கிடைத்தன. எத்தனை போத்தல் கள்ளுக் குடித்தாலும் துறைக்காறன் செம்பாப்போடி ஒரு போதும் நிலை குலைந்து, தன்உணர்வு கெட்டு கேவலமாக நடந்தது கிடையாது. ஒவ்வொரு நாளும் வள்ளம் சேகப்பத்துத்துறை ஆற்றிலே ஓட்டம் கண்டு மக்களை ஏற்றி, இறக்கும். எப்படியான மோசமான, வள்ளத்தைப் புரட்டி விடக்கூடிய வெறித்தனமான காற்று அடிக்கும்போதும், காற்றுக்கு ஈடு கொடுத்துச் சாதுரியமாக வள்ளத்தைத் திசை திருப்பி ஒரு முள்ளுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொப்பும் முறியாமல் வள்ளத்தைக் கரைசேர்த்து பயணம் செய்பவர்களை பவித்திரமாக இறக்கி விடுவான் துறைக்காறன் செம்பாப்போடி.

தனது உப்புச்சரைச்சைத் தோட்டத்துக்கு அருகில்தான் தனது அக்கரைப்படுத்தும் வள்ளத்தைத் துறைக்காறன் செம்பாப்போடி கட்டி வைப்பது வழக்கம். இரவு வேளைகளில் யாருக்கும் பூச்சி கடிச்சாலோ, ஆஸ்பத்திரி இல்லாத ஊரிலுள்ள கர்ப்பிணிப் பெண்கள் பிள்ளைப் பெறுவதற்கு மட்டக்களப்பு பெரிய ஆஸ்பத்திரிக்குப் போவதற்கோ பதட்டத்தோடு வந்து துறைக்காறனைச் சத்தம் போட்டுக் கூப்பிட்டு அக்கரைப்படுத்தச் சொன்னால் மறுபேச்சுக் கூறாமல், எந்தப் பயமும் இல்லாமல் உடனே எழும்பி, அந்த வேதனைக்குரியவர்களை அக்கரையில் சேர்த்து விட்டுத்தான் செம்பாப்போடி திரும்புவான். தலை கெட்ட கள்ளுவெறியில் நித்திரை கொண்டாலும் அவன் தனது மனித நேயம் மிக்க கடமையைச் செய்வதற்கு ஒரு பொழுதும் பின் வாங்கியதில்லை. கண்ணியமும், கடமை உணர்வும், மனிதநேயமும் மிக்கவனாக வாழ்ந்த துறைக்காறன் செம்பாப்போடி அந்தப் படுவான்கரை மக்களுக்கு அக்கரைப்படுத்தும் காவல் தெய்வமாக விளங்கினான்.

நாடு குழம்பிப்போய் எங்கும் பயமும் பீதியும் தலைவிரித்தாடிய வேளையில் செம்பாப்போடி துணிந்து சேகப்பத்துத் துறையால் மக்களை அக்கரைப்படுத்தும் ஊழியத்தைப் பிசகாமல் செய்து கொண்டு வந்தான். மண்முனைத்துறை ஓரம் பாரிய இராணுவ முகாம் அமைத்திருந்தார்கள். அந்த முகாமிலிருந்து வரும் ஆமிக்காறனுகள் சேகப்பத்துத் துறைக்கு வந்து துறைக்காறனை அச்சுறுத்தி, பயம் காட்டி இயக்கங்களைப் பற்றி விசாரிப்பதுண்டு. அவன் எதற்கும் பயப்படாமல் சாதுரியமாக அவர்களோடு கதைத்துப் பழகி நல்ல துறைக்காறனாக நடந்ததால், பயந்து பயந்து பயணம் செய்யும் பெண்களுக்கும் அவன் ஒரு பாதுகாப்புக் கவசமாக விளங்கினான்.

மண்முனைத்துறைக் கேம்பிலிருந்து எந்த நேரமும் துவக்கு வெடிகளும், ஷெல்வீச்சுக்களும் நடந்ததனால் படுவான்கரைப் பகுதியிலே வாழ்ந்த குடிமக்கள் எரிமலைக் குழம்புக்குள் சிக்குண்டது போல் பயந்து வாழ்ந்து வந்தார்கள். இயக்கங்களின் உறைவிடமாகப் படுவான்கரைப் பகுதி இருந்ததனால் ஆமிக்காறனுக்கு அங்கிருந்து துறையால் அக்கரப்படுபவர்களை சந்தேகக் கண்களோட பார்க்கத் தொடங்கினார்கள். றவுண்டப்பும், சுற்றி வளைத்துத் தேடுதலும், துருவித்துருவி சோதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்துவதிலும், ஆட்களைப் பிடித்து வைத்துப் பயம் காட்டுவதிலும் ஆமிக்காறனுகள் தீவிரமாக இருந்ததனால் வாலிப வயதான ஆண் பிள்ளைகளும், இளம் குமர்ப் பெண்களும் துறையால் அக்கரப்பட வருவதில்லை. ஆனாலும் வயது போனவர்களை அக்கரப்படுத்தும் தொழிலை அவன் கிரமமாகச் செய்து வந்தான்.

காலம் பந்தயக் குதிரை வேகத்திலே ஓடி தனது கடமையை நிறைவேற்றிக் கொண்டு வரும் பொழுது, துறைக்காறன் செம்பாப்போடியும் வயது ஏறி நரையும், மூப்புமாகி, தனது பிள்ளைகள் எல்லோருக்கும் கல்யாணம் முடிச்சு அவர்கள் வேறு வேறு ஊர்களுக்குப் போன பிறகு கடைசி மகள் கனகந்தான் துறைக்காறனுக்கும், மனைவிக்கும் உதவியாக இருந்தாள். வயது மூப்பேறி அறுபத்தி ஐந்து வயது நடக்கும் போதும் துறைக்காறன் செம்பாப்போடி தனது வள்ளம் ஊண்டி அக்கரைப்படுத்தும் தொழிலை கைவிடவேயில்லை. தனக்குப் பிறகு துறையைப் பார்க்க தனது மக்களை அந்தத் தொழிலைச் செய்யப் பழக்கவுமில்லை. உடம்பிலே ஒரு தளர்ச்சி இருந்தாலும் சேகப்பத்துத்துறையை தைரியமாக நடத்தி வந்தான். சேகப்பத்துத்துறை, செம்பாப்போடியின் உயிர் மூச்சாக விளங்கியது. இந்தப் பயங்கரமான போர்க்காலத்தில் சேகப்பத்துத்துறை பயணம் செய்வதற்கு ஒரு பாதுகாப்பான துறையாக விளங்கியது. அவசரத் தேவைகளுக்கு மட்டக்களப்பு நகரத்துக்குப் போக வருபவர்கள் குறுக்கு வழிப் பாதையான சேகப்பத்துத்துறையையே நாடினார்கள். அரிசி விற்கும் பெண்களும், ஏன் பொதுவாகப் பெண்கள் எவரும் துறையால் அக்கரப்படுவதற்கு வருவதுமில்லை.

துறைக்காரன் செம்பாப் போடி மனம் கலங்காமல் பயம் கொள்ளாமல் வள்ளத்தால் அக்கரப்படுத்திக் கொண்டே வந்தான். சேகப்பத்துத் துறையில் பழைய கலகலப்பு இல்லாவிட்டாலும் மனஉறுதி கொண்ட செம்பாப்போடியால் அந்தத்துறையில் வள்ளம் நிற்காமல் ஓடிக்கொண்டே இருந்தது. நம்பி வரும் பயணிகளை அவன் ஏமாற்றுவதில்லை.

அன்று கொஞ்சம் வச்சிக்கள்ளைத் தாறுமாறாகக் குடித்த படியால் தன்னை அறியாமல் நித்திரையில் கிடந்தான் துறைக்காரறன். மழை வேறு பெரும் எடுப்பாகப் பெய்து கொண்டிருந்தது. புதுவெள்ளம் பரவி ஓடிய நேரம் லேசான காற்று விசியதால் பழுத்த தென்னை மரங்களிலிருந்து தேங்காய்கள் மண்ணிலே தொப்புத் தொப்பன விழும் ஓசை பரவலாகக் கேட்கிறது. இலுப்பை மரத்திலே குடிகொண்டு கிடக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆந்தைகளின் மரண அலறல் காதுகளைக் குடைகிறது. மழைக்குளிர் தாங்காமல் பட்டியில் அடைக்கப்பட்டிருந்த மாடுகள் ஓயாமல் சத்தம் போட்டுக் கத்துகிறது. எந்த வெள்ளம் வந்தாலும் துறைக்காறனின் உப்புக்கரைச்சைத் தோட்டத்துக்குள் ஒரு சொட்டுத்தண்ணியும் ஏறாது. அப்படிக்களியும், மண்ணும் போட்டு உயர்த்தி எந்த வெள்ளமும் போகாதபடி உப்புக்கரைச்சையை சுற்றி வளைத்து இறுக்கமான அணை போட்டிருந்தான் துறைக்காறன்.

மழை கொஞ்சம் ஒய்ந்த நேரம். நேரம் பன்னிரெண்டு மணிக்கும், இரண்டு மணிக்கும் இடையிலிருக்கும். ஊரிலே எந்த அசுமாத்தமும் இல்லாத நேரம். ஊர் நாய்கள் மட்டும் தூரத்திலே ஓயாமல் குரைக்கும் சத்தம் மட்டும் மெலிந்து கேட்கிறது. மண்முனைத்துறைக் கேம்பிலே அடித்த ஷெல் அடியும் ஓய்ந்து கிடந்தது. அந்த நேரம் துறைக்காறனின் கேற்றடியில் வந்து கத்திக் குழறி சத்தம் போட்டுக் கூப்பிட்ட ஒரு வயது போன பெண்ணின் அபயக் குரல் கேட்டு கள்ளு வெறியில் படுத்துக் கிடந்த துறைக்காறனின் காதுக்குள் வந்து பட்டுச் சிதற, துடித்துப் பதைத்துச் செம்பாப்போடி கேற்றைத் திறந்து பார்த்தால் பிள்ளைப் பெறத் துடிக்கும் ஒரு இளம் பெண்ணோடு, இன்னுமொரு வயது போன பெண்ணும் நிற்பதைப் பார்த்து, ஒரு பேச்சும் பேசாமல் கட்டிவைத்திருந்த வள்ளத்தை ஆற்றுக்குள்ளே இழுத்து இறக்கிவிட்டு இரு பெண்களையும் லாவகமாகத் தூக்கிப் பலகையிலே இருக்கவைத்து விட்டு ஒரு ஆவேசத்துடிப்போடு வள்ளத்தை மிகவும் வேகமாக அந்த வயதிலும் அசையாத தைரியத்தோடு அந்தக்கரையை நோக்கி ஓண்டிக்கொண்டு போனான் துறைக்காறன்.

கொஞ்சத்தூரம் வள்ளம் ஓடியிருக்கும். மழை இருட்டில் ஆற்றிலே எந்த அசுமாத்தமும் தெரியாத நேரம் ஓடிப் போன வள்ளம் எதிர்பாராத விதமாக படீர் படீரென்ற ஓயாத வெடிக்குள் அகப்பட்டு துண்டு துண்டாகச் சிதறி, துறைக்காறனும் வள்ளத்திலே பயணம் செய்த பிள்ளை பெறத் துடித்த இளம் பெண்ணும் அவளுக்கு உதவியாக வந்த வயது போன பெண்ணும் சின்னா பின்னமாகப் போய் சேகப்பத்துத்துறை ஆற்றிலே இரத்த வெள்ளத்திலே சங்கமமாகிப் போனதை விடிந்த பிறகுதான் அந்த முதலைக்குடாக் கிராமமும், படுவான்கரைப் பகுதியும் அறிந்து கொண்டது.

மே 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆற்றங்கரை பங்களா** அந்த பென்னம்பெரிய மாடி வீட்டில் ஏதோ சோகப்புயல் மையம் கொண்டு கிடப்பது போல் ஒரு பயங்கரம் நிலைகொண்டு கிடக்கிறது. அந்தப் பழங்காலத்து பெரிய மாடி வீடு வெடிப்புக் கண்டு சிதிலமடைந்து பல வருஷங்களாக பழுதுபார்க்காமல், வெள்ளை அடிக்காமல் சுவர்களிலே பாசி படர்ந்து கிடக்கிறது. மேலே இரண்டு மாடி அறைகளிலும் நூற்றுக்கணக்கான குருட்டு வெளவால்களும் பூனைக்குட்டிகள் போல் வளர்ந்து மதமதத்து குறுக்கேயும், மறுக்கேயும் ஓடித்திரியும் பெருச்சாளிகளும் வாசம் செய்யும் புழுதி மண்டிப் போய்க்கிடக்கும் அந்த இருள் படிந்த மாடி அறைகள் எத்தனை எத்தனையோ ஆண்டுகளாக பூட்டியே கிடக்கின்றன.

மாடி வீட்டை அண்டிய முற்றத்தில் பெரிய கருங்காலித் தூண்களைத் தாங்கிய சின்ன நாட்டு ஓடுகளால் வேயப்பட்ட அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகிய பந்தல் போன்ற வெட்ட வெளியான பரந்த அறையில் ‘அது’ சப்பாணி கொட்டியவாறு, நாக்கைத் தொங்கப் போட்டு ஈ என்று வாயைக் கோணலாக நெளித்தவாறு வருவோர், போவேரையெல்லாம் பார்ப்பதை அங்கு போவோர்கள் பார்த்து விட்டுத் திகைத்துப் போய் நிற்பார்கள். ‘அது’ ஆணுமில்லை, பெண்ணுமில்லை, அலியும் இல்லை. அப்படி என்றால் அது எது? ஆஞ்சநேயரின் மறுவடிவமான குரங்கு போல் ஒரு சாயல். வால் இருந்தால் நிச்சயமாக குரங்கு என்றுதான் பார்ப்பவர்கள் கூறுவார்கள். அப்படியான ஒரு தோற்றமும், செய்கைகளும் சேட்டை பண்ணும் பாங்கும், பற்களைக் காட்டிக் கண்களைச் சிமிட்டி, நாக்கை வெளியே நீண்டத் துப்பும் விதம்... அந்த மாடி வீட்டுக்கு வரும் பெண்களைப் பிடித்து தலையில் லாவகமாக கைகளைக் கொண்டு பேன் பிடித்துக்குத்தும் ஒருவித அபிநய நடிப்பு. நடக்கும் போது குரங்கு போல் துள்ளிப்பாய்ந்தோடும் குரங்கு நடை அப்படியே ஆஞ்சநேயரின் மறுவடிவமான ‘கவி’தான் அது. ஆமாம்! குரங்குக்கு தமிழ் அகராதியில் ‘கவி’ என்ற பெயரும் உண்டல்லவா! முழுமையாக பூரணமாக உடம்பை மறைக்கக்கூடிய ஒரு நீண்ட சட்டைதான் ‘அது’வின் நிர்வாணக் கோலத்தை மறைக்க உதவுகிறது. வீட்டாரும் ஊராரும் ‘வேவி’ என்றுதான் அழைக்கிறார்கள். தொண்டையிலிருந்து பேச்சு வடிவம் வருவதில்லை. குரங்கு போல ஓசை எழுப்புதல், இடைவிடாத முனகல், கீச்சுச்சத்தங்கள்...

பழக்கப்பட்டவர்களுக்கு இது சாதாரண விஷயம். புதிதாக அந்த வீட்டுக்கு வருபவர்கள் துணுக்குற்றுப் பயந்தே போய்விடுவார்கள்! அப்படியானதொரு அருவருப்புச் சின்னம். இந்த விசித்திரப் பிறப்பு அந்த ஆற்றங்கரைப் பெரிய வீட்டிலே எப்படி ஜனித்தது என்ற மர்மமுடிச்சி அந்தப் பெரிய வீட்டுக்காரர்களுக்கும் அந்த ஊரிலுள்ள பலருக்கும் விடை தெரிந்த முடிச்சுத்தான்.

சீனித்தம்பி போடியாரின் மனைவி பவளக்கொடி. நாகமணிப் போடியாருக்கும் சீரங்கத்துக்கும் எத்தனையோ நேர்த்திக்கடன்களுக்குப் பிறகு பிறந்த அழகு தேவதை. ஒரே ஒரு வாரிசான பவளக்கொடி நாகமணிப் போடியாரின் அத்தனை ஐஸ்வரியங்களுக்கும் வாரிசாக திகழ்ந்தாள். ரோஜாப்பூக்களின் நிறங்களை அப்படியே பிழிந்து அப்பிவிட்டது போன்ற ஒரு தனிக் கவர்ச்சியான ஒரு சரும ஜாலம் அவள் மேனியெல்லாம் விளையாடியது. பவளக்கொடியின் முந்திரியம் பழத்தை ஒத்த மூக்கும், அப்பிள் பழம் போன்ற நேர்த்தியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னமும், மீன் போன்ற வட்டவடிவமான அழகு ததும்பும் வதனமும், கயல் விழிகளும், மொள மொளவென்று வாழை மொத்தி போல் தொடைகளும் கைகால்களும், மற்றவரைத் திரும்பிப் பார்க்க வைக்கும் தேவலோக ரம்பையாக பவளக்கொடி காட்சி தந்தாள்.

கண்ணப்பப் போடியாரின் மூத்த மகனான சீனித்தம்பிக்கும் பவளக்கொடிக்கும் ஊரே திரண்டு வர மிகவும் கோலாகலமாக அந்த ஆற்றங்கரை பெரிய வீட்டில் கலியாணம் நடந்தது. ஊரெல்லாம் காணப்படும் வளவுகளோடு தென்னஞ்சோலைகளாகக் காணப்படும். ஆற்றங்கரையை அண்டிக்கிடக்கும் 'கந்தட்டி' வளவுகளும், நூற்றுக்கணக்கான 'படுவான்கரை' வயல்காணிகளும், நிந்தவூருக்கும் ஒலுவிலுக்கும் நடுவே பரந்து கிடக்கும் 'மாட்டுப்பளை'யில் கிடக்கும் நூறு ஏக்கர் காணியும் அக்கரைப்பற்றுத் தென்னந்தோட்டமும், கல்குடாத் தென்னந்தோட்டமும், பெரியகளத்து நூறுஏக்கர் காணியும், பெட்டகத்துக்குள் நிறைந்து கிடக்கும் தங்கநகைக் குவியல்களோடு, இலட்சக் கணக்கான பணங்களும் பவளக் கொடியைக் கைப்பிடிப்பதற்காக சீனித்தம்பி போடியாருக்குச் சீதனமாக வழங்கப்பட்டது.

அடா! இத்தனை பணக்குவியல்களுக்கு மத்தியில் ஆற்றங்கரை மெத்தை வீடும் சீதனமாக நொத்தாரிசு ஐய்யம் பிள்ளையால் எழுதப்பட்டது வசந்த காலங்களில் பூவும், பிஞ்சுமாகக் காணும் மாந் தோப்புகளிலே பலவகையான கிளிகள் கதைபேசி மகிழ்வதும், குயில்கள் சங்கீத ஓசை எழுப்பி கூவிக் கும்மாளம் கொட்டுவதும் அங்கே வாடிக்கை. விதம் விதமான பறவைகள் அழகிய வெண்புறாக்கள், சின்னஞ்சிறு சிட்டுக்குருவிகள் எழுப்புகின்ற பரவலான 'கதம்ப இசை' ஒலியும் அந்த ஆற்றங்கரை பெரிய வீட்டை உல்லாசபுரியாக மாற்றி அமைக்கும். எங்கிருந்து எந்தக்காடுகளிலிருந்து வருகிறதோ தெரியாது. பூவும் பிஞ்சுமாகக் கிடக்கும் அந்த வசந்தகாலத்திலே ஆயிரக்கணக்கான குரங்குகள் அந்த ஊருக்குள் புகுந்து மாமரங்களின் பிஞ்சுகளையும் காய்களையும் உதிர்த்தி நாசம் செய்வதோடு, குரும்பைகளையும், இளநீர் குலைகளையும் துவம்சம் பண்ணும். ஆற்றங்கரைப் பெரிய வீட்டின் மாந்தோப்புக்களையும், இளந்தென்னைகளையும் அந்தக் குரங்குப் படைகள் நாசம் செய்வது வழக்கமாகிவிட்டது.

ஊரிலுள்ள வாண்டுப்பட்டாளம் கடல் அலை போல் ஓசை எழுப்பி கத்திக் குரவையிட்டு, கல்லால், பொல்லால் எறிந்து, சீனவெடிகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொளுத்தி பயங்காட்டி அமர்க்களப்பட்டாலும் அந்த அட்டகாசக் குரங்குகள் பயந்து ஓடிப்போகாமல் தங்களது சேட்டைகளை நடத்திக் கொண்டேயிருக்கும். குழந்தைகளின், சிறுவர்களின் 'தில்லுமுல்லு' ஓசைகள் நீண்ட வால்களோடு, பென்னம்பெரிய கால்களோடு கிளைக்குக் கிளை, மட்டைக்கு மட்டை தாவிப் பாய்ந்து அநியாயம் செய்யும் குரங்குகளை துரத்துவதற்கு உதவவில்லை.

இந்தக் குரங்குகளின் கபளீகர நாடகத்தைக் கண்டு சீனித்தம்பிப் போடியார் மிகவும் மனம் வருந்தினார். இந்த குரங்குகள் செய்யும் அழிவுகளால் தோட்டம் நாசமாவது அவரது மனத்தைப் போட்டு குடைந்தது. இந்தக் கொடிய குரங்குப் படைகளுக்குத் தக்க பாடம் புகட்ட தக்கதருணம் பார்த்துக் கொண்டிருந்தார். இது இப்படி இருக்க, கலியாணம் முடித்து ஒரு சில வருஷங்கள் பம்பரமாகச் சுழன்று பறந்து போனாலும் இன்னும் தனது மனைவிக்கு ஒரு பூச்சி புழுவும் உண்டாகவில்லையே என்ற கவலையும் சீனித்தம்பிப் போடியாரை அரித்துக் கொண்டிருந்தது.

நாகமணிப் போடியாரின் மாமா மூத்ததம்பிப்போடியார் மிகவும் நிதானமாகவும் அவதானமாகவும் அந்தக் காலத்தில் மட்டக்களப்பு வாவியால் பெரிய வள்ளங்களிலே செங்கற்கள், சொறிக்கல்லுகள், கொங்கிறீட்கற்கள், சீமேந்து மூட்டைகள், நீற்றுச்சாக்குகள், இரும்புகள், பெறுமதிவாய்ந்த கருங்காலி மரங்கள் போன்றவற்றைக் கொண்டு வந்து பார்த்துப் பார்த்துப் பணத்தைத் தண்ணீராக இறைத்துக் கட்டியதே அந்த ஆற்றங்கரைப் பெரிய பங்களா, ஒல்லாந்தர் பரம்பரையைச் சேர்ந்த மட்டக்களப்பில் வசித்துவந்த பறங்கி ஓடாவிகளையும் அழைந்து வந்து கட்டிடச்சிறப்பு கண்டவர். சீமந்திலே குடம் குடமாக தேனை ஊற்றி எந்தப் புயலுக்கும் அசையாத உறுதியுடன் அந்த வீட்டைக் கட்டியதோடு ஆற்றுவெள்ளம் வளவுக்குள் ஏறாமல் வீட்டைச் சுற்றி சொறிக்கற்களாலும், கருங்கற்களாலும் நீண்ட உயரமான மதிலையும் கட்டி வைத்திருந்தார். ஆற்றந்துறையில் இறங்கி வள்ளங்களிலே போவதற்கு நீண்ட இறங்கு படிகளைக் கட்டி என்றும் அழியாத இரும்புக்கேற்றைப் போட்டு வைத்திருந்தார். இந்த அரண்மனை வீட்டைக் கண்டு அந்த ஊரே அதிசயத்தில் வாய் பிளந்தது.

ஆற்றங்கரை ஓரம் எல்லையாகக் கட்டப்பட்டுக்கிடந்த அந்த நீண்ட மதில் சுவர்களை அண்டிய பகுதியில் ஏராளமான கிளை பரப்பி நின்றன பூவரசு மரங்கள். இங்கே காக்கை குருவிகள் மற்றும் ஆயிரமாயிரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைல்களுக்கப்பால் இருந்து வந்து சேரும் வெளிநாட்டுப் பறவை இனங்கள் அந்தப் பூவுரசமரக் கூட்டத்திலே தங்கி இருந்து, இனிய சங்கீதச் சூழலை அந்தச் சுற்றாடலில் ஏற்படுத்தி வைத்து அந்த ஆற்றங்கரைப் பெரிய வீட்டின் சிறப்புக்கு மகுடம் சூட்டின. இச்சிறப்புக்களுக்கு மத்தியில் திருமணம் முடித்துப் பல ஆண்டுகள் ஓடிப்போயும் மனைவி பவளக்கொடி இன்னும் குழந்தைப் பாக்கியமில்லாது மலடி போல் வாழ்வது போடியார் சீனித் தம்பியாருக்குச் சொல்லொண்ணாத் துயரத்தை மூட்டியது.

அந்த அற்புதமான ஆற்றங்கரைப் பெரிய அரண்மனை போன்ற வீட்டிலே இப்படியொரு அவலம் முளைக்கக் காரணமென்ன? வாரிசு இல்லாத மலட்டு வீடாகப் போய்விடுமா என்று சீனித்தம்பிப் போடியார் ஆறுதலற்ற சோக வாழ்க்கையிலே அமிழ்ந்து போய் கிடந்தார். எத்தனையோ பூசை புனஸ்காரம் செய்தும், பேர்பெற்ற பூசாரிகளைக் கொண்டு கழிப்புகள் செய்தும், கோவில் கோவில்களாக சென்று நேர்த்திக்கடன்களை அள்ளிச் சொரிந்தும் பவளக்கொடி தாய்மைப் பாக்கியத்தைக் காண முடியாமல் தவித்தாள். காலம் ஓடிக்கொண்டேயிருந்தது. அந்த ஆற்றங்கரைப் பெரிய வீட்டில் மட்டும் தாய்மை பூக்கவில்லை.

சீனித்தம்பிப் போடியாருக்கு இரண்டு கவலைகளே இருந்தன. ஒன்று வாரிசு இல்லாதது. இரண்டாவது தன் சோலைவனத்தை வானரப் படைகள் நாசம் செய்வது. வானரப் படைக்கு ஒரு நல்ல பாடம் புகட்ட அவர் கங்கணம் கட்டினார். ஒருநாள் குரங்குகளின் சேட்டை எல்லை மீறி மாந்தோப்பும், தென்னைகளும் நாசமாகிக்கொண்டிருந்த போது கோபத்தோடு ஓடிப்போய் அலுமாரிக்குள் வைத்திருந்த லைசன் துவக்கை எடுத்து தோட்டாவை மாட்டிக்கொண்டு ஆவேசமாக ஓடி வருகிறார்.

துவக்கோடு மாந்தோப்புப் பக்கம் ஓடிப்போகும் புருஷனார் சீனித்தம்பி போடியாரைப் பார்த்தவாறு நெஞ்சு வேகமாக படபடக்க பின்னால் பவளக்கொடியும் ஓடுகிறாள். குரங்குகளின் சேட்டை எல்லை மீறியதால் சீனிப்போடியார் ஆவேசமாக துவக்கை நீட்டி ஒரு குரங்கைச் சுடுவதற்கு குறிபார்க்கும்பொழுது என்ன ஆச்சரியம்!

அந்த வாய்பேசாத மிருகம் நெகிழ்ந்து, பயந்து, பணிந்து கைகள் இரண்டையும் குவித்துக் கும்பிட்டவாறு மாமரக்கிளையில் இருக்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவளக்கொடி புருஷன் சீனித்தம்பி போடியாருக்குப் பக்கத்திலே வந்து "வேண்டாம் ஐயா வேண்டாம். இந்த வாய்பேசாத ஜீவன் கும்பிட்டு உயிர்ப்பிச்சை கேட்கிறது. பார்த்தீர்களா ஐயா! வேண்டாம் ஐயா எங்களுக்கு இந்த பாவக்காரியம். நீங்கள் ஏதாவது செய்துவிட்டால் பிறகு அந்தக் குரங்கு போடும் சாபத்துக்கு நாங்கள் பலியாக வேண்டும் ஐயா. ஏழேழு ஜென்மத்துக்கும் அந்தப் பழி தொடர்ந்து வரும் ஐயா" என்று குமுறிக்கத்தி சீனித்தம்பி போடியாரின் காலைக் கட்டிப் பிடித்துக் கத்தினாள். ஆனால் பொஞ்சாதியின் காலை உதறிவிட்டு "நீ என்னதான் கத்திக்குமுறினாலும் இந்த சேட்டைக்கு ஒரு முடிவுக்கட்டித்தான் ஆவன்" என்று பெலமாகச் சத்தம் போட்டுக் கூறியவாறு கும்பிட்டுப் பயந்து போய் இருந்த குரங்கைக் குறிவைத்தவாறு சீனித்தம்பிப் போடியார் துவக்கின் வில்லைத் தட்டுகிறார். அடுத்தகணம் கும்பிட்டவாறு குரங்கு செத்து விழுந்தது. அடுத்தகணம் தோப்பை துவம்சம் பண்ணிய குரங்குகள் எங்கே மாயமாய் மறைந்ததோ தெரியாது. குரவைச் சத்தம் போட்ட குழந்தைகளும் பயந்து அவரவர் வீடுகளுக்கு ஓப்போக அங்கே பூரண அமைதி நிலவியது. பவளக்கொடி ஒரே ஓட்டமாக வீட்டுக்குள் புகுந்து கொண்டாள். சீனித்தம்பி போடியார் மண்வெட்டியை எடுத்து செத்த குரங்கைத் தாட்டுவிட்டு கிணற்றடிக்குப் போய் தலையிலே தண்ணீரை வார்த்து முழுகுகிறார்.

நெஞ்சிலே தீராத பயத்தோடு வாழ்ந்து வந்த பவளக்கொடி படுக்கும்பொழுது கனவிலே கும்பிட்ட கையோடு குரங்கு வந்து கதைப்பது போல் உணர்வாள். அவளது நெஞ்சிலே குறிப்பிட்ட குரங்கின் காட்சி ஓவியமாகப் படிந்து கிடந்தது. போடியாருக்கும் பயம் நெஞ்சிலே அப்பிக் கிடந்தது. ஆனால் சீனிப்போடியாருக்கு இப்பொழுதுதான் ஒரு பூரண திருப்தி. அந்தக் காரியத்துக்குப் பிறகு ஒரு குரங்காவது அந்த ஊருக்கு வந்தது கிடையாது.

பயத்தை நெஞ்சிலே பதித்து வாழ்ந்து கொண்டிருந்த பவளக்கொடியும் அந்த வசந்தகாலத்தில் பூத்துக்குலுங்கி 'ஆகி' விட்டாள். ஆமாம்! அவளை மசக்கை ஆட்கொண்டது. சீனிப்போடியாரும் அவரது மாமனார் நாகமணி போடியாரும், மாமி சீரங்கமும் சந்தோஷத்தால் பூரித்துப்போனார்கள். ஆனால் பவளக்கொடிக்கோ புருஷனார் செய்த வேலையால் அந்தக் குரங்கின் நினைப்பே எந்த நேரமும் படமாக ஓடி அவளைச் சங்கடத்தில் மாட்டியது. காலம் ஓடிக்கொண்டே இருந்தது. ஒருமாதம், இரண்டு மாதம் என்று கடந்து பவளக்கொடி பிள்ளை பெறும் மாதம் நெருங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரங்கம் கொஞ்சம் பயந்தாலும் சகல கோவில்களுக்கும் நேர்த்திக்கடன் வைத்து குழந்தை நன்றாக பிறக்கவேண்டும் என்று தவம் கிடந்தாள். பூசாரிமார்களைக் கொண்டு கழிப்புச் செய்ததும், சர்க்கரை அமுது செய்து அம்மனை வேண்டிக் கொண்டதும், வைரவர் பூசை செய்து தெய்வம் ஆடிகட்டுச் சொல்லி மனநிறைவு பெற்றதும்... இப்படி தெய்வத்தை நம்பியதோடு காளி அம்மனுக்கு பெரிய சேவலும் ஆட்டுக்கடாவும் நேர்ந்தார். குழந்தை நன்றாக பிறக்க வேண்டுமென்று நேர்த்திக்கடன் செய்வதும் சீரங்கத்தினதும், நாகமணிப் போடியாரின் வேலையாகவேயிருந்தது.

பவளக்கொடிக்கு வயிற்று நோ எடுக்க, கைதேர்ந்த ஊர் மருத்துவச்சியான தங்கம்மாவுக்கு சொல்லி அனுப்பினார் சீனித்தம்பிப் போடியார். பதறி அடித்துக்கொண்டு மருத்துவிச்சி தங்கம்மா ஓடிவந்தாள்.

பவளக்கொடி வேதனையால் குய்யோ மொய்யோ என்று கத்திக்கொண்டிருந்தாள். ஒரு அரை மணி நேரம் கழித்து குழந்தை பிறந்த 'வீல்' என்ற அழுகுரல் உள் அறையில் கேட்டது. எதுக்கும் பயப்படாத மருத்துவிச்சி தங்கம்மாவே அந்த அதிசயப் பிறப்பைக் கண்டு பயந்தே விட்டாள். டக்கென்று மருத்துவிச்சி தங்கம்மாவின் மனதுக்கு சீனித்தம்பிப் போடியார் சுட்டு விழுத்தாடிய குரங்கின் ஞாபகமே வந்தது. சத்தம் போட்டு "போடியார் போடியார் என்று மருத்துவிச்சி கத்தினாள். எல்லோரும் குழந்தை பிறந்த அறைக்குள் ஓடிப்போனார்கள். "போடியாரே! கோபப்பட வேணாம். குரங்கு போட்ட சாபம் பலிச்சுப் போயித்து போல இருக்கு. அந்த உருவத்தப் பாத்தியளா குரங்கு போல இருக்கு", மருத்துவிச்சி கூறியதுதான் தாமதம் அந்த குரங்கு உருவத்தை வெறித்துப் பார்த்து துப்பிவிட்டு ஆற்றங்கரையை நோக்கிப் போகிறார் சீனித்தம்பிப் போடியார்.

*ஜூலை 2013*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டிக்கூடு

"என்ன துணிச்சலாக இந்த வேலையைப் பாக்கானுகள். இந்தத் துணிச்சலான கள்ளனுகளுக்குச் சரியான பாடம் படிக்க வைக்க வேணும். காத்தான்குடிப்பள்ளி வாசலில் "வாங்கு சொல்லுறதுக்கு முந்திப் போறானுகள் போல தெரியுது. ஆக்கள்ற அசுமாத்தமில்லாத நேரத்தில இந்தத் துணிச்சலான களவச் செய்யுறானுகள் தரித்திரம் புடிச்ச மூதேவிகள்.

புழைப்புச் செய்யாம ஊராண்ட வகுத்தில அடிக்கிற கேடுகெட்ட ஜென்மங்கள். இண்டைக்குஅவங்களஒருவழிபாக்கவேணும். நாம கண்ணாப்பத்த மறைப்புக்குள்ள தோணியைக் கொண்டு கட்டிப் போட்டு மறைஞ்சுகிடப்பம். நுளம்புகள் கடிச்சுத் குதறுந்தான். என்ன செய்யிற. உசிறக் கையில புடிச்சித்து இண்டைக்கு எப்படியாவது "ஒட்டிமீன்" கூடுகளில் நிறை செல்வமாகக் கிடக்கும் "ஒட்டி மீன்களைக் களவெடுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த சோம்பேறிக் கள்ளனுகளப் புடிக்க வேணும்" மட்டக்களப்பு வாவியில் "சவளை" ஊன்றிப் போட்டுத் தொடுத்தவாறு, "அணியத்தில" இருந்து தோணியைத் தீவிரமாகத் தொடுத்து வரும் தனது ஆத்துப் புழைப்புக் கூட்டாளி கந்தசாமியிடம், ஆத்திரம் கடல் அலைபோல் பொங்கிவர "புறகத்திலிருந்து" வேகமாகத் தொடுத்துக் கொண்டுவந்த மார்க்கண்டு" வெப்புசாரமாகக் கூறி ஆத்திரத்தக் கொட்ட ஓண்டா கூட்டாளி இன்டைக்கு அந்த கள்ளக் குரங்குகளுக்குச் சரியான பூச குடுத்து, கைகால்களைக் கட்டித் தோணிக்குள்ள போட்டுத்து ஊர்ச் சனங்களுக்குக் கொண்டு காட்டவேணும். நாம பகல் இரவென்று பாரம இந்த "ஒட்டிக் கூட்டுத்" தொழிலச் செய்து குடும்பச்சுமை இறக்கித்து வாறம். இந்த "ஒட்டிக் கூட்டுக்குள்ளதான் நம்மிட குடும்பச் ஜீவியம் நடக்குது" அதையும் இவங்கள் உலவெச்சுக்கெடுக்கப் பாக்கானுகளே, மண்முன ஆத்துப் பக்கம் போய் கடும் வெயிலில "அத்தாங்கு" மூலம் மீன்கள் தின்னும் "பச்சச் சல்லுகள்" வடிச்செடுத்துச் சாக்கில கட்டித்துவந்து "ஒட்டிக் கூட்டுக்குள்ள" பக்குவமாக வெச்சு, அந்திசாயிர நேரத்தில "இறக்கத்துவாசல்" கண்ணா மரங்களுக்குக் கீழே "ஒட்டிக்கூடுகள்" வெச்சித்து வாறம்.

அந்தச் சீதேவிக் கண்ணாக்காடுகள்தான் தங்கப்பவுனான ஒட்டிமீன்களையும், சள்ளல் மீன்களையும் உற்பத்தி செய்யும் மீன்சுரங்கம். இந்த ஆத்துக் கரையிலே வேலி போல வளர்ந்து இருட்டுக்காடாக் கிடக்கும் மீன்களின் கற்பகத்தருவான இந்த இடத்தில் தான் நாம ஒட்டிக்கூடுகளை வெச்சு ஒட்டிமீன்களையும் "சள்ளல் மீன்களையும் புடிச்சுச் ஜீவியத்தை ஓட்டுகிறோம். இந்த நாசமாப்போன கள்ளனுகள் நம்மிட வகுத்தில மண்ணவாரி இறைக்கானுகளே. பக்கத்தில இருக்கிற கரையாக்கன் தீவு ஆக்களோ, கொத்தியமல ஊர் ஆக்களோ இந்த போக்கணம் கெட்ட வேல செய்து பழக்கமில்ல. அவனுகளுக்கு மீன் தொழிலே தெரியா இப்படி கண்ணா ஓரம் ஆத்தில ஒட்டிக்கூடுகள் வெய்க்கிறத்தையும் அவனுகள் கண்டிருக்கமாட்டானுகள். அவனுகள் வெள்ளாம வயல், ஆடு மாடுகள் எண்டு புழைப்பு நடத்திறவனுகள். இது கைதேர்ந்த நம்மிட ஊர்க்கள்ளனுகள்ற வேலதான் இது. இண்டைக்கு அவனுகளுக்குச் சரியான பாடம்படிப்பிக்க வேணும் மூச்சு விடாம 'தோணியைத்' தொடுத்துக் கொண்டு அவன் கதைத்துவர, 'விரிச்சல்' ஆத்தில தோணி வரும் போது திடீரென்று பெருங்காற்று வந்து தோணியப் பிரட்டிக்கவிழ்க்கப் பார்த்தது. கந்தசாமியும், மார்க்கண்டும் உசாராகி 'தோணியை' மெதுவாகத் தொடுத்து அந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருங்காற்றிலேயிருந்து தப்பினார்கள். கொஞ்சநேரம் பேசாமல் வந்த இருவரும் அந்தப் பெரிய கண்டமான 'விரிச்சல்' ஆற்றைக் கடந்து 'இறக்கத்துவாசலை' நோக்கி வேகமாக தோணியைச் செலுத்தினார்கள். தோணியைப் பலமாக ஊண்டித் தொடுத்தால் அரை மணிநேரத்தால் ஓட்டிக்கூடுகள் வரிசையாக கண்ணாமரங்கள் ஓரம் கொலுவிருக்குமிடத்துக்கு அவர்களின் "தோணி" சென்றுவிடும். கெழுத்திமுனைப்பக்கம், வலைபோட்டு மீன்பிடிப்பவர்களின் 'தோணிகள்' மங்கல் ஓவியமாகக் கண்களுக்கும் தெரிகிறது. அமாவாசை இருட்டு என்ற படியால் ஆறும், ஆற்றை அண்டிய பகுதிகளும் இருட்டுக் காட்டாகக் சாட்சியளிக்கிறது. வானத்தில் நட்சத்திரங்கள் மினுங்குவதால் சிறு ஒளிக்கீற்று இடைக்கிடை கண்சிமிட்டி மறைந்தது. தூரத்தே குடிகொண்டிருக்கும் கரையாக்கன் தீவுக் கோவிலிலே திருவிழா நடக்கிறது போல் தெரிகிறது. ஒலிவாங்கியில் மேளக்கச்சேரி நடைபெறுவது கேட்கிறது. வாணங்கள் விடும் சத்தங்களும் அவைகள் வானத்திலே பாய்ந்துவந்து வெடித்துப் பூ மழையாகச் சொரிவது கண்களுக்கு அந்தக் "குருட்டு இருட்டிலே" மாயஜாலவித்தை காட்டிமறைகிறது. வெடிச்சத்தத்தால் சிதறுண்டு காட்டுப் பறவைகள் வானவெளியிலே கூட்டம் கூட்டமாகப் பறந்து செல்வது மங்கலாக ஓடிமறைகிறது. இன்னும் கொஞ்சநேரத்தில் "இறக்கத்து வாசலின்" கண்ணா, கிண்ணா மரக்காடுகள் வந்துவிடும். மார்க்கண்டும், கந்தசாமியும் "ஓட்டிக்கூட்டுமீன்களைத்" திருடும் கள்ளர்களைப் பிடிப்பதிலே அடங்காத வெறியோடு, ஆவேச உந்தலால் தோணியை இன்னும் வேகமாகத் தொடுக்க ஆரம்பிக்கிறார்கள்.

"ஓட்டிக்கூடு" வைத்து மீன்பிடிப்பது ஒரு கலை நுட்பமான மீன்பிடித்தொழிலாகும். ஓட்டிக்கூடு கட்டும் தொழில் நுட்பம் மட்டக்களப்பு மாவட்டத்திலே காத்தான்குடிக்குப் பக்கத்திலே கொலுவிருக்கும் அழகிய கிராமமான மஞ்சந்தொடுவாய் என்ற ஊர் தான். இந்த ஊரிலுள்ள மீன் பிடி தொழில் செய்யும் மக்கள் பரம்பரை பரம்பரையாக இந்த ஓட்டிக்கூடு கட்டுவதற்கு மூலப்பொருளாக விளங்குவது "ஈச்சமரத்தின்" மட்டைகள்தான். ஊரை அண்டிய பெரிய காடுகளில் ஓங்கி உயர்ந்து பரந்து வளர்ந்து கிடக்கிறது. இது சுவையான "ஈச்சம்பழங்களை" கொத்துக் கொத்தாகத்தருகிற கற்பகதருமரமாகும். சிவத்து நீலப் பழங்களாக இந்த ஈச்சமரப் பழங்கள் காய்த்துத் தொங்கும் காலங்கிளில் ஊர்ச்சனங்கள் பழங்களை வெட்டித்துவர கத்தியும் கையுமாக காடுகளுக்குப் படை எடுப்பார்கள். அரபு நாடுகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிப்புக் களஞ்சியமாக விளங்கும் "பேரீச்சமரங்களின்" வாரிசுதான் இந்த 'ஈச்சமரங்கள்." பழக்குலையை மக்கள் வெட்டி ஓய்ந்த காலங்களில் "ஒட்டிக்கூடு" கட்டுபவர்கள் "ஈச்சமரத்தின்" மட்டைகளை வெட்ட ஆரம்பிப்பார்கள். அந்த ஈச்சமர மட்டைகளை பக்குவமாக வெட்டிக் கொண்டு வந்த பிறகு, அவற்றை நார் போல் சீவி எடுத்து சுடுகின்ற வெயிலிலே காயவைத்து அவை காய்ந்து முறுக்கேறிய பிறகு அவற்றை எடுத்து கட்டுக் கம்பிகளைக் கொண்டு ஒரு பெரிய பெட்டியளவில் வளைத்துச் சப்பட்டையாக்கி "ஒட்டிக்கூடுக்காக" கட்டி எடுப்பார்கள். முன்னும் பின்னும் நன்றாக மறைத்துக்கட்டி தூக்கி ஆற்றிலே வைப்பதற்கு சீவிய கம்புத்துண்டுகளைக் கட்டி கூட்டுக்கு மேலே மீன்கள் புகுந்து "பச்சைச் சல்லை" தின்பதற்கு திறந்த வழிவைத்திருப்பார்கள். ஆற்றிலே அதுவும் "கண்ணா மரங்கள்" ஓரம் அந்த "ஒட்டிக்கூடுகளை" வரிசையாக ஆற்றுத் தண்ணிக்குள் வைத்து விடுவார்கள். பச்சைச் சல்லுகளைத் தின்னும் ஆவலிலே பெரும் ஒட்டிமீன்களும், சள்ளல் மீன்களும் ஓடிவந்து அந்த மாயக்கூட்டுக்குள் சிறைப்பட்டு விடும். கூட்டுக்குள் புகுந்து கொண்ட அந்த மீன்கள் உயிர் பிழைப்பதற்கு கூட்டுக்குள்ளே ஆவேசமாக அடித்துப் பிரண்டாலும் அவைகளால் திரும்பவும் கூட்டுக்குள்ளிருந்து வெளியே தப்பிவர முடியாது. அந்த வகையில் பெலஉறுதியான தொழிநுட்பம் அமைய கூடுகளை கட்டியிருப்பார்கள். மார்க்கண்டு மஞ்சந்தொடுவாய் ஊரைச் சேர்ந்தவன்தான். அவனது அப்பா மூத்தம்பியினர் கைதேர்ந்த 'ஒட்டிக்கூடு' கட்டும் கலைஞராகும். தகப்பன் மூலமாக இந்த 'ஒட்டிக்கூடு' கட்டும் கலையைப் படித்து வைத்திருந்தான் மார்க்கண்டு. தகப்பனும், மகனும்தான் 'ஒட்டிக் கூடுகள்' கட்டி ஆற்றிலே தொழில் செய்து வந்தவர்கள். மார்க்கண்டு ஆரையம்பதியிலே கலியாணம் செய்த பிறகு இந்த ஒட்டிக்கூடு போட்டு மீன் பிடிக்கும் தொழிலை ஆரையம்பதி ஊரிலேயிருந்து செய்யத் தொடங்கினான். ஆரையம்பதி மீனவர்கள் சணல் நூல் மூலம் வலைமுடித்து மீன் பிடிப்பதில் மட்டக்களப்பிலே கைதேர்ந்தவர்கள். ஆனால் அவர்களுக்கு 'ஒட்டிக்கூடு' கட்டி மீன் பிடிக்கத் தெரியாது. அதிலே அவர்கள் ஆர்வம் கொள்வதுமில்லை. மார்க்கண்டு ஆரையம்பதியிலே கலியாணம் செய்து ஒட்டிக்கூடு போட்டு மீன்பிடித்தபோதுதான் அவர்களுக்கு அந்தத் தொழிலைப் பற்றித் தெரிந்தது. மஞ்சந் தொடுவாய் மார்க்கண்டு என்றால் தான் ஆரையம்பதி மக்களுக்கு விளங்கும். மார்க்கண்டு கைதேர்ந்த மீன்பிடிக்காரரான சின்னத்தம்பி அண்ணனின் மூத்தமகள் கண்டு மணியைக் கலியாணம் செய்து அவனது பொஞ்சாதியின் தங்கச்சி புருஷனை கந்தசாமியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவிக்கு எடுத்துக் கொண்டு 'ஒட்டிக்கூட்டுத்' தொழிலைச் செய்து வந்தான்.

மார்க்கண்டு ஆரையம்பதியில் கலியாணம் செய்தது அவன் எதிர்பார்க்காத ஒரு நிகழ்வாகும். கண்டுமணியின் தாய்மாமன் சிவகுரு மஞ்சந்தொடுவாயிக்குக் கள்ளு குடிக்கப் போகும் போது அந்தக் கள்ளு விக்குற வீட்டுக்கு மார்க்கண்டும் கள்ளுக் குடிக்கப் போவது வழக்கம். அப்படி கள்ளுக் குடிக்கும் நேரங்களில் தான் மார்க்கண்டு சிவகுருவைப் பழக்கம் பிடித்தான். அந்தப் பழக்கத்தால் சிவகுருவோடு ஆரையம்பதிக்குவர, சிவகுருவின் அக்கா சின்னம்மாட வீட்டிலே கண்டு மணியை மார்க்கண்டு காண நேர்ந்தது. கண்டு மணியைக் கண்டதும் மார்க்கண்டு நிலைகுலைந்து போனான். அவன் பழைய படங்களை ஒன்றும் விடாமல் வந்த அன்றே பார்த்து விடுவது வழக்கம். அவன் கண்டு மணியைப் பார்த்ததும் பேய் அறைந்தவன் போல் அப்படியே சிலையாக நின்றுவிட்டான். இதனைச் சிவகுருவும் அவதானித்தான். கண்டுமணி பழைய தமிழ்ப்படங்களில் கதா நாயகியாக நடிக்கும் டி.ஆர். இராசகுமாரியை உரித்து வைத்தது போல் அப்படியே தோற்றமளித்தாள். அதே உயரம், மூக்கு, கண்கள், தலை, உடம்பு நிறம், சிரிப்பு, முழுமையான தோற்றம் அப்படியே நடிகை இராசகுமாரியே கண்முன்னால் வந்து காட்சி தருவது போல் மார்க்கண்டுக்குப்பட்டது. அவனுக்குத் தியாகராச பாகவதர் பாடிய "மன், மதலீலையை வென்றவர் உண்டோ" என்ற அற்புதமான பாடல்தான் உடனே நினைவுக்கு வந்தது. எந்த வித பிரச்சினைகளையும் நோக்காமல் கண்டுமணியே தனது மனைவி என்று நெஞ்சிலே ஓவியமாகப் பதிந்து வைத்துக் கொண்டான். அவனது விருப்பத்தை சிவகுருவிடம் வெட்கத்தையும் பாராமல் மார்க்கண்டு எடுத்துக் கூறிய போது எந்த விதமான எதிர்ப்புகளுமில்லாமல் இரு வீட்டாரினதும் பூரண சம்மதத்தோடு கண்டுமணிக்கும், மார்க்கண்டுக்கும் கலியாணம் நடந்தது. மஞ்சந்தொடுவாய் மார்க்கண்டு என்ற நாமத்தோடு ஆரையம்பதிக்கு வந்து குடியேறி குடும்பம் நடத்தி 'ஒட்டிக்கூட்டுத்' தொழிலையும் செய்துவந்தான். கண்டுமணியைக் கைப்பிடித்த சந்தோஷத்தில் மார்க்கண்டு மட்டக்களப்பிலுள்ள படத்தியேட்டர்களான 'வெல்காசிம் கோள்" அனோஜா, வெலிங்டன் போன்ற படத்தியேற்றர்களுக்குத் தனது மனைவி கண்டுமணியை தோணியிலே ஏற்றிக் கொண்டு போய் படம் பார்த்து. தனது ஊரான மஞ்சந்தொடுவாயிலும் தங்கி தனது புதுப் பொஞ்சாதியோடு உல்லாச வாழ்க்கை நடத்தியவர்தான் மார்க்கண்டு. காலசக்கரம் பந்தயக் குதிரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல் வேகமாக ஓட ஐந்து பொம்பிளப்புள்ளைகளுக்கும், நாலு ஆம்புளப்பிள்ளைகளுக்கும் தகப்பன் ஆனான் மார்க்கண்டு.

தனது பொஞ்சாதியிர தங்கச்சி வள்ளியம்மையின் புருஷன் கந்தசாமிக்கு 'ஒட்டிக்கூட்டுத்' தொழிலைப் பழக்கி அவனோடு சேர்ந்து 'ஒட்டிக்கூட்டுத்' தொழிலைச் செய்து வந்தான் மார்க்கண்டு. கந்தசாமி பொண்டுகவேலனின் மூத்தமகன். அவனுக்கு அஞ்சு தங்கச்சிமாருகள் இருந்தார்கள். அவளுகள் கலியாணம் முடிச்சு புள்ளகுட்டிகளோடு தளப்படமில்லாமல் வாழ்ந்த காரணத்தினால் கந்தசாமிக்கு எந்தவிதமான பாரமும் கிடையாது. கந்தசாமி வீச்சுத் தொழிலில் கைதேர்ந்தவன். சோம்பலில்லாமல் பாட்டம்பாட்டமாக வலையை வீசி மீன்பிடித்துச் சீவியம் நடத்திவந்தவன் தனது 'சகலன்' மார்க்கண்டு வந்த பிறகு வீச்சுத் தொழிலைக் கைவிட்டு 'ஒட்டிக்கூட்டுக்குப்' போகத் தொடங்கினான். அவதிப்பட்டு வீசி உழைப்பதைவிட 'ஒட்டிக்கூட்டுத்' தொழிலால் பெரும் சம்பாரிப்பு நடத்த முடிந்தது. செலவுக்குப் பணமும், கறிக்குச் சுவையான ஒட்டிமீன்களும் கிடைத்தன. அந்தி வேளையில் கண்ணா மரக் 'கரையோரம்' ஒட்டிக்கூடுகளை வைத்துவிட்டு வந்தால் அடுத்த நாள் விடியத்தான் ஒட்டிக்கூடுகள் ஏற்றிக் கொண்டு வருவது. குறைந்தது பதினைந்து 'ஒட்டிக் கூடுகளைக்' கொண்டு வைப்பார்கள். அத்தனை கூடுகளிலும் நிறைசெல்வமாக, ஒட்டிகளும் சள்ளல்களும் நூற்றுக்கணக்காக குவிந்து கிடக்கும். ஊரிலுள்ள மீன்துறைக்கு அந்த மீன்களைக் கொண்டு வந்தால் மீன்களை வாங்குவதற்கு பல வியாபரிகள் போட்டி போட்டுக் கொண்டு நிற்பார்கள்.

'வெம்பு றோட்டுக்கு' அங்கால் செறிந்த பெரும் பெரும் மரங்களும், காயான், வீரை, நாவை, பாலை போன்ற மரங்களும், காட்டுத் தென்னைகளோடு எங்கும் பரந்து கிடக்கும் 'ஈச்சமரங்கள்' பச்ச ஓலைகள் வெளியிலே பளபளக்க செறிந்து, நீண்ட வளர்ச்சியோடு "சிவந்த நிறங்களோடு" பழக்குலைகளைத் தள்ளிக்கொண்டு நிறைமாதக் கர்ப்பிணிப் பெண்ணாகக் காட்சிதரும் அழகு எவரையும் ஒரு தரம் நின்று பார்த்து ஆவல் கொள்ள வைக்கும். அந்த ஈச்சம் பழங்களைக் கொத்தித்தின்பதற்கு 'அண்டம்காக்கைகளும், மைனாக்களும், சிட்டுக்குருவிகளும், குருட்டு ஒளியிலே சிதறி ஓடும் தேன்பூச்சிகளும், பச்சைக்கிளிகளும் இந்த ஈச்சமரங்களிலே நித்திய தவம் செய்து கிடக்கும். கல்முனை பிரதான வீதியிலிருந்து பாலமுனை கடற்கரை வரை இந்தக் காடுகள் பரந்து கிடக்கும். மார்க்கண்டும், கந்தசாமியும் நீண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டுக்கத்திகளோடு சென்று "ஈச்சங்குலைகளையும், ஒட்டிக்கூடு கட்டும் ஈச்சை மட்டைகளையும் வெட்டிக் கொண்டு வருவார்கள். ஈச்சம் மரங்களுக்குக் கீழே மடு தோண்டிச்சீவிக்கும் "முயல்கள்" மனித நடமாட்டத்தைக் கண்டு தப்பித்தோம் பிழைத்தோமென்று திடீர் வேகத்தோடு ஓடிமறையும். சிலவேளைகளில் முயல்களைப் பொல்லால் அடித்து கறிசமைக்க கொண்டு வருவதுமுண்டு. வெட்டிவந்த பச்ச ஈச்ச மட்டைகளை வெட்டிச்சீவி ஒட்டிக்கூடு பின்னுவதற்கு ஏற்ற நாராகச்சீவி, வெயிலிலே காயவைத்து, காய்ந்த பின்பு மார்க்கண்டு கலைநுணுக்கத்தோடு ஒட்டிக்கூடுகளைக் கட்டி எடுப்பான். அவன் ஒட்டிக்கூடு கட்டும் அழகைப் பார்ப்பதற்காக அல்லையயல் பெண்களும், குழந்தைகளும் கூட்டமாகக் கூடிப் புதினம் பார்ப்பார்கள். கண்டுமணி அவர்களது தென்னைமரத்திலே "கள்ளு" இறக்கும் இராமசாமி அண்ணனிடம் இரண்டு வச்சிக் கள்ளுப் போத்தல் வாங்கி வைத்திருப்பார். மண்முனை ஆற்றோரம் வடித்து வந்த 'பச்சச்சல்லுகளை' ஒட்டிக்கூட்டுக்குள் பக்குவமாக வைத்து, அந்தப் பச்சைச்சல்லுகளைத் தின்பதற்காக தான் கூடுகளுக்குள் பெரும் தரவளியான ஒட்டிமீன்கள் ஏறிக் குதிக்கும். மார்க்கண்டும் கந்தசாமியும் ஏறக்குறைய பதினைந்து ஒட்டிக்கூடுகளை. இறக்கத்துவாசல் கண்ணாமரம் ஓர் ஆற்றிலே வைத்து விட்டு வந்து விடுவார்கள். காலையிலே போனால் ஒட்டிக்கூடுகள் நிறை கர்ப்பிணிகளாகக் காட்சி தரும் அந்தச் சீதேவி மீன்களை எடுத்துக் கொண்டு ஊரிலுள்ள மீன் சந்தையிலே மீன் வியாபாரிகளுக்கு விற்றுக்காசு எடுப்பார்கள். கறிக்கு ஒட்டி மீன்களும் நிறையக் கிடைக்கும். அல்லையயல் சனங்களுக்கும் கறி சமைக்க ஒட்டிமீன்களைக் கொடுப்பார்கள். மத்தியானம் வாங்கி வைத்த வச்சுக்கள்ளைக் குடித்துவிட்டு, சல்லுகளை அள்ளிக்கொண்டுவர மண்முனை ஆற்றுக்குப் போய் விடுவார்கள். அள்ளிக் கொண்டு வந்த 'மீன்கள் ஆவலோடு உண்ணும்' 'பச்சைச்சல்லுகளை' பதினைந்து 'ஒட்டிக்கூடுகளிலும்'

கவனமாக அடைத்து பின்னேரம் 'இறக்கத்துவாசலுக்குச்;' சென்று கண்ணாமர ஓரங்களில் அவற்றை ஆற்றுக்குள் பக்குவமாக வைத்துவிட்டு ஊருக்கு வந்து விடுவார்கள். காலையில் சென்றுதான் ஒட்டி மீன்கூடைகளை எடுத்துக் கொண்டு ஊர்ச்சந்தையிலே மீன்களைத் தகுந்த காசுக்கு விற்பார்கள். வருஷக்கணக்காக இந்தத் தொழில் எந்தவித இடர்பாடுகளுமின்றி நடைபெற்று வருகிறது. ஊரிலுள்ள மீன்பிடிக்காரர்கள் 'வலைத் தொழிலே செய்து வந்தார்கள். அவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த 'ஒட்டிக்கூட்டுத்' தொழில் தெரியவே தெரியாது. இத்தனை பிள்ளைகளும் பிறந்து அவர்கள் படித்து பெரிய மனிதர்களாக உத்தியோகம் தேடிய இந்த வேளையில் இந்த ஒட்டிக்கூட்டுக்களவு நடந்திருக்கிறது. மார்க்கண்டும், கந்தசாமியும் எல்லை மீறிய ஆத்திரத்தால் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தார்கள். அவர்கள் வருஷம், தீபாவளி ஏதும் கொண்டாட்ட காலங்களில்தான் களுத்துறைச் சாராயத்தைக் குடிப்பார்கள். மற்றநேரங்களில் அவர்கள் தென்னைகளில் இறக்கும் இனிப்புக்கள்ளையும், வச்சிக் கள்ளையுந்தான் குடிப்பது வழக்கம்.

இவற்றை எல்லாம் தாறுமாறாக நினைத்துக் கொண்டு வந்தவர்களுக்கு 'இறக்கத்துவாசல்' வந்ததும் மெதுவாகத் தோணியைக் கரையிலே தள்ளிக் கொண்டு கண்ணாப்பற்றைக்குள்ளே அந்தத் தோணியைக் கட்டிவைத்துவிட்டு மறைவிலே இடுப்பளவு நீருக்குள் இருவரும் நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்களின் அசுமாத்தைக் கண்டு பற்றைகளிலே உறங்கிக் கிடந்த விதம் விதமான பறவை இனங்கள் தங்களுக்குரித்தான ஓசைகளை எழுப்பிக்கொண்டு வேறு இடங்களுக்குத்தாவிப் பறக்கின்றன. காட்டுக்குள்ளே உறங்கிக்கிடந்த 'பன்றிகள்' திடும்பொதுமென்று ஓட்டம் எடுக்கின்றன. இருவரும் பயத்தால் நடுங்கியவாறு அந்த நடுச்சாமப்பொழுதில் 'கூதல் காற்று' மேனியைச் சிலிர்க்க வைக்க, நுளம்புகளின் அகோரகடிகள் இரத்தத்தை உறைய வைக்கிறது. கரையாக்கன்தீவு துறையில் கள்ளமரங்கள் ஏற்றி வந்த வண்டில்களின் சத்தமும், அதனை அவர்கள் ஆற்றிலேயே நிறுத்தி வைத்திருந்த பெரிய வள்ளங்களில் ஏற்றுவதும் அவர்களுக்கு மெதுவாகக் கேட்கிறது. நேரம் ஓடிக்கொண்டிருக்கிறது. கொஞ்சக் கிட்டத் தூரத்திலே தோணி ஒன்று விரைவாக வருவது அவர்களது காதுகளுக்கும் கேட்கிறது. மார்க்கண்டும், கந்தசாமியும் உசாராகினார்கள்.

உற்றுப்பார்க்கும் பொழுது அந்தத் தோணி 'ஒட்டிக்கூட்டுக்குப்'' பக்கத்திலே, வந்து நின்றது. கும்மிருட்டு. அமாவாசை நாள் என்றபடியால் ஆறு இருட்டாகி கிடக்கிறது. அதிலே வந்த இரண்டு பேர் தோணியை விட்டு ஆற்றுக்குள்ளே இறங்குவது தெரிகிறது. மார்க்கண்டும் கந்தசாமியும் கைகளிலே 'கருங்காலிப்' பொல்லுகளையும் கொண்டு வந்து சத்தம் போடாமல் மெதுவாக நடந்து போகிறார்கள். வந்தவர்களில் ஒருவன் ஓடி ஒட்டிக்கூட்டைத் தூக்குகிறான். அவனால் தனியாகத் தூக்க முடியவில்லை. கூடைகள் நிறைய மீன்கள். "டேய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மச்சான் இண்டைக்கு நமக்கு நல்ல வேட்டடா. கூடைகள் நிறைய மீன்கள் நிறைஞ்சுகிடக்குதடா மச்சான் சரி கெதியாத் தூக்கித் தோணிக்குள்ள மீன்களக் கொட்டுவம் சனம் வாறதுக்கு முந்தி நாம கிழம்பவேணும்''. மற்றவன் கூறிக்கொண்டு, வந்தவனையும் அழைத்து மீன்கள் நிறைந்த ஒட்டிக்கூடுகளைத் தூக்கும்போது பலமாக மார்க்கண்டும், கந்தசாமியும் தாங்கள் கையிலே வைத்திருந்த 'கருங்காலிப் பொல்லுகளால் வந்த கள்ளர்களின் முதுகிலும் கைகளிலும் சரியான பூசை குடுக்க, கழுத்து வெட்டப்பட்ட மாடு கத்துவது போல் இருவரும் பெரும் கூச்சல் போட்டுக் கத்தினார்கள். அடிப்பட்டு நீருக்குள் கிடந்த இரண்டு கள்ளன்களையும் தூக்கி எடுத்து நன்றாகக் கைகளையும் கால்களையும் உறுதியான கயிற்றில் இறுக்கிக் கட்டி கண்ணாப்பற்றைக்குள் மறைத்து வைத்திருந்த தங்களது தோணியை அவிட்டுக் கொண்டு வந்து அடிப்பட்ட ஒருவனை அந்தத் தோணியிலும் மற்றவனை அவனுகள் களவெடுக்க கொண்டுவந்த தோணியிலுமாக ஏற்றிப்போட்டு, பதினைந்து ஒட்டிக்கூடுகளிலும் நிறைசெல்வமாகக் கிடந்த ஒட்டிமீன்களை தோணிகளில் கொட்டி நிரப்பிவிட்டு, பதினைந்து வெற்றுக்கூடைகளான 'ஒட்டிக்கூடுகளை பெல உறுதியாக அதனைக் கட்டிவைக்கும் கயிறுகளால் கட்டி, அணியத்திலே வைக்கிறார்கள்.

இதுவரைக்கும் கள்ளர்களையும் யாரென்று மதிக்கமுடியாமல் இருக்கிறது. தோணியின் புறகத்திலே குட்டிச்சாக்குள்ளிருந்த மூன்றுவெற்றி டோச்லைற்றை எடுத்து மார்க்கண்டு தறுதலைகள். ஒவ்வொருத்தரும் எட்டு பத்தென்று புள்ளைகளையும் பொண்டாட்டி மார்களையும் வெச்சிக் கொண்டு, தினக்குடி வெறிக்கு இந்த வேலதான் செய்து வாறிங்க. அந்த பொண்டாட்டிமாரும் புள்ளைகளும் செத்து மாயுதுகள். நீங்க ஊராண்ட மீன்களைக் களவெடுத்து குடிச்சுக் கும்மாளம் போடுறீங்க. உங்களச் சும்மா விடப்போடாடா. ஊர்த்தீர்வைக்குக் கொண்டுபோய் ஊர்மக்களுக்கிட்ட காட்டி சரியான பூசை குடுக்க வைக்க வேணும்'' ஆட்களை இனங்கண்ட ஆத்திரத்தில் மார்க்கண்டும், கந்தசாமியும் மீண்டும் கருங்காலிப் பொல்லால் பூசை குடுக்கிறார்கள். ஆரையம்பதியைச் சேர்ந்த "கலட்டிக்காகக் சுந்தரிர மூத்த மகன், நல்லாறும், சூப்பனைக் கந்தையாவின் நடுவத்திமகன் சங்கரனுந்தான் ஒட்டிக்கூடுகளைத் திருடிய கள்ளர்கள். இவனுகள் சீரா ஆத்துப்புழைப்புச் செய்யாமல் இப்படித்தான் களவெடுத்துச் சீவியம் நடத்தி வந்திருக்கானுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு ஒட்டிமீன் கள்ளர்களையும் இரண்டு தோணிகளுக்குள்ளும் ஏற்றியவாறு மார்க்கண்டும், கந்தசாமியும் வேகமாக ஆற்றிலே சவளைப் போட்டுத் தொடுத்தவாறு ஊர்த் தீர்வைத்துறையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். அடித்த அடியின் வேதனையால் இருகள்ளர்களும் வேதனையால் முனகிக் கொண்டுவர தோணிகள் வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது. தூரத்திலும், பக்கத்திலும் மீன்களுக்கு வலை போட்டு, தோணிகள் மீன்பிடித்துக் கொண்டு நிற்கின்றன. விடிவெள்ளி மறைந்து சாடையாக ஆற்றிலே ஒளிப்புனல் பரவத் தொடங்குகிறது. கள்ளர்களைப் பிடித்த சந்தோஷத்திலும், தீராத ஆத்திரத்திலும் மார்க்கண்டும், கந்தசாமியும் தோணிகளை இன்னும் வேகமாகத் தொடுக்க தோணிகள் பம்பரமாகப் பறந்து தீர்வைத்துறையை முத்தமிடுகிறது.

*03.04.2016*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படிக்கம்**

நல்லதம்பிப் போடியாரின் வீட்டிலே மகளின் திருமணம் சம்பந்தமான பேச்சுவார்த்தை நடைபெறப்போகிறது போடியாரின் வீடு அந்தப் படுவான்கரைப் பகுதியிலே பெறுமதிமிக்க அரண்மனை போன்ற வீடாகும். அதனை வீடு என்று சொன்னால் அதன் மகத்துவம் இல்லாமல் போய்விடுகிறது. அது வீடு இல்லை அரண்மனை. அந்த அரண்மனை சோடனை செய்து பூப்பு நீராடிய கன்னிப்பெண் போல் பார்ப்பவர் கண்களுக்கு ஆனந்தப் பூரிப்பை இறைத்துக் கொண்டிருக்கிறது. குறைந்தது பத்துப் பவுணாவது இருக்கும் சிவத்தக்கல் வைரத் தோடு காதுகளில் மின்சாரம் பாய்ச்ச, கழுத்திலே நூறு பவுண் மாலை மௌனத் துறவி போல் பார்ப்பவர் கண்களை மயக்கம் போட வைக்க, கைகளில் பல பவுண் காப்புகள் ஆட்டம் போட, முத்துக்கட்டிய கொண்டையிலே தங்கக் குத்தூசி தாங்கி நிற்க, காஞ்சிபுரம் பட்டு வேஷ்டி மேனியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகிய பூந்தோட்டமாக மாற்றி வைக்க, சீனத்துப் பட்டுச் சால்வையை தோளிலே போட்டவாறு கம்பீரமான குறுநில மன்னர் போல் காலுக்கு மேல் காலைப் போட்டவாறு சாய்மனைக் கதிரையிலே சாய்ந்து கிடக்கிறார் நல்லதம்பிப் போடியார்.

போடியார் இருக்கும் சாய்மனைக் கதிரை ஓரம் அழகிய வேலைப்பாடு நிறைந்த வெற்றிலை வட்டா வயிறு வைத்த பெருத்த 'குட்டி முயல்' நிமிர்ந்து நிற்பது போல் அந்த "வட்டா" காட்சி தருகிறது. நுணுக்கமான அழகிய வேலைப்பாடுகளோடு 'தூய வெண்கலத்தால்' செய்த அந்த வட்டாவின் முகப்பு வாயில் ஓரம் அரச மர இலைகள் போல் செதுக்கி தூய வெள்ளைக்கம்பிகளால் கோர்த்துக் கட்டப்பட்டிருக்கிறது. அந்த வட்டா தமிழர்களின் கலை பண்பாட்டுச் சின்னமாகக் காட்சிதர, அதன் உள்ளே, தூய வெள்ளைச் சீலை மடிப்பிலே கலூதாவளை வெற்றிலைப் பகளி, காலியிலிருந்து வந்த கொட்டைப்பாக்கு, யாழ்ப்பாணத்து பாணிப்புகையிலை, ஒரு குட்டிப் பேணியிலே சிவப்பு நிறச் சுண்ணாம்பு, ஏலக்கா, கறுவா, மணம் குணம் நிறைந்த கையிப்புக்கட்டி இத்தனையும் அந்த வட்டாவிலே கொலுவிருக்க, மட்டக்களப்பு வாவி ஓரம் கொல்லன் வேலை செய்யும் ஒல்லாந்து தேசத்து 'பறங்கி' இனத்தைச் சேர்ந்த பீற்றரின் அழகிய கைவண்ணத்தால் உருவான பச்சைக்கிளி குந்தி இருப்பது போல் வெற்றிலை வட்டாவில் கிடக்கும் பாக்குவெட்டி. அடா! இதன் மகத்துவத்தை எப்படித்தான் கூறுவது. இந்த வெற்றிலை வட்டாவுக்குப் பக்கத்திலே களிம்பு தெரியாத வெண்கலக்கட்டியிலே வார்த்துச் செய்த வெற்றிலைத் துப்பலை உள்வாங்கும் துப்பல் 'படிக்கம்;' வாயை நீளத் திறந்து, துப்பலை வாங்குவதற்கு தவம் கிடக்கிறது. வளவுக்குள் துப்பி அசிங்கப்படுத்தாமல் வெற்றிலைத் துப்பலை நிறைப்பதற்கு செய்யப்பட்ட துப்பல் படிக்கம் கலை நுணுக்கம் நிறைந்ததாகச் செய்யப்பட்டு தமிழர்களின் கலை பண்பாட்டுச் சின்னமாக எதனையும் ஆக்கிவைத்த நல்லதம்பிப் போடியார் வெற்றிலை வட்டா, துப்பல் படிக்கம் எல்லாவற்றையும் உற்று உற்றுப் பார்த்தவாறு பேச்சுவார்த்தைக்கு வருபவர்களின் வருகைக்காக காத்துக்கொண்டிருக்கிறார்.

நல்லதம்பிப் போடியார் படுவான்கரைப் பகுதியிலே ஒரு புரட்சிகரமான மனிதர். புரட்சிகரமான எண்ணங்களை விதைத்த "விடுதலைக்கவிஞன்." பாரதியின் நேசனாக வாழ்ந்து காட்டியவர் போடியார். மூட நம்பிக்கையின் உறைவிடமாக விளங்கிய ஆற்றுக்கு அப்பாலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிகளில் இருந்த கொண்டை கட்டிய ஒரு மனிதர் எப்படி கலை பண்பாட்டுச்சின்னமாக வாழ முடிந்தது அந்தக் காலத்திலே ஐந்தாம் வகுப்புவரை படித்து, பண்டிதர் செல்லத்துரை ஐயாவின் அணைப்பிலே இலக்கணம், இலக்கியத்தை முற்று முழுதாகக் கற்றுத் தேறியவர். தேவார திருவாசகம், திருக்குறள், மகாபாரதம், இராமாயணம், சங்க இலக்கியங்கள் அனைத்தையும் கற்றுத்தேறிய கொண்டை கட்டிய இந்த மனிதர் கூத்து, கரகாட்டம், கும்மி, மந்திரம், மருத்துவம், வசியம், சூனியம், நாட்டு மூகிலிகள் அத்தனையும் அவருக்கு கைவந்த பாடம். வயல் ஓரங்களில் காடுகளை வெட்டி மூலிகைச் செடிகளை பக்குவமாக நட்டு நாட்டு வைத்தியத்திற்கு ஊக்கம் கொடுத்த நவீன அகத்திய முனிவராவார். பண்டைக் காலத்து பனை ஓலை ஏடுகளை எல்லாம் கண்டுபிடித்து, அந்த அறிவுப் பொக்கிஷங்களை படித்து அதனை நெஞ்சிலே ஓவியமாகப் பதித்துக்கொண்டவர். தேடியும் கிடைக்காத அந்த அறிவுப் பொக்கிஷமான ஏடுகளை கறையானுக்கு இரையாக்காமல் பக்குவமாகக் கட்டி மருந்து பூசிய அலுமாரிகளில் அழிந்து போகாமல் காப்பாற்றி வருபவர். பல்கலைக்கழக அறிஞர்கள், புத்திஜீவிகள் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அந்த ஏடுகளை வந்து பார்த்து தரும்படி கேட்டும் கொடுக்காமல் "என் கண்ணுக்குப் பிறகு அதை எடுத்து பாதுகாப்பது உங்கள் பொறுப்பு." என்று கூறிவிட்டார் நல்லதம்பிப் போடியார். ஒவ்வொரு பனையோலை ஏடுகளையும் வாசித்துக்காட்டி அதன் என்றும் அழிவில்லாத தொன்மைச் சிறப்புக்களை புரிய வைத்தவர். அன்னியனின் ஆட்சிக்காலத்தில் நமது இலக்கியப் பொக்கிஷங்கள் எல்லாம் சூறையாடப்பட்டு அவனது தேசங்களிலே மறைத்து வைத்திருப்பதை மனவேதனையோடு கூறி அழுது புலம்புவார். களவாடிய நமது ஏடுகளை தமிழ் தெரிந்தவர்கள் மூலம் அறிந்து விஞ்ஞான நுட்பங்களையும் மருந்து முறைகளையும் தெரிந்து கொண்டு நாகரிகத்தின் சின்னங்களாக அவர்கள் வலம் வருவதை போடியார் அறியாமலில்லை. இந்த மருத்துவ விஞ்ஞான முன்னேற்றத்தின் மூல வித்து நமது பனை ஓலை ஏடுகள் தான் என்று போடியார் பலரிடமும் கூறி ஆதங்கப்பட்டு நெஞ்சைப் புண்ணாக்கிக் கொண்டவர். சாமிநாத ஐயர் எனும் அற்புத மனிதர் பிறக்காவிட்டால் நமது இலக்கியங்கள், மருத்துவ நுட்பங்கள் அழிந்து போயிருக்கும். அவர் தேடிக்கண்டு பிடித்ததைவிட, இன்னும் எத்தனையோ பனை ஓலை ஏடுகள் இல்லாமல் போய்விட்டது. "திருக்குறள் ஆயிரத்து முன்நூற்றி முப்பது குறளோ அதைவிட ஆயிரம் குறள்கள் இல்லாமல் போனதோ யார் அறிவார்" என்று அடிக்கடி கூறி அழுவார் நல்லதம்பிப் போடியார். போடியார் பனை ஓலை ஏடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் பல கூத்துக்களைப் படைத்து, பல கூத்துக்களை ஆடி களம் கண்ட கூத்துக்கலைஞர் அவர். அவரது விடா முயற்சியினால் காடுகளை வெட்டி ஆயிரம் ஏக்கருக்கு மேல் வேளாண்மைப் பூமிகளை உருவாக்கி படுவான்கரையின் முதன்மைப் போடியாராக விளங்குகிறார். அவருக்கு என்றும் உறுதுணையாக விளங்கும்; அவரது சகல முயற்சிகளுக்கும் கைகொடுக்கும் ஆசை மனைவி மண்டோதரி பாரதி கண்ட புரட்சிப் பெண்ணாகவே வாழ்ந்து காட்டியவர். அவரும் பலதையும் படித்து அறிந்துகொள்ளும் பக்குவம் பெற்றவர். போடியாரின் விடா முயற்சி முன்னேற்றத்திற்கு ஏணியாக விளங்கியவர். போடியார் நல்லதம்பி அண்ணனுக்கு பருப்புப்போல ஒரே ஒரு மகள்தான். போடியார் இலங்கைப் பத்திரிகைகளை படிப்பதோடு தமிழ்நாட்டு இலக்கிய ஏடுகளை தப்பாமல் தொடர்ந்து வாங்கிப் படிப்பார்;. ஆனந்தவிகடன், கல்கி ஏடுகள் அவர் விரும்பிப் படிக்கும் ஏடுகளாகும். ஆனந்தவிகடனில் குறுக்கெழுத்துப் போட்டி வரும். அதனைப் படித்து ஆனந்தவிகடன் குறுக்கெழுத்துப் போட்டியில் கலந்துகொண்டு பரிசும் பெற்றிருக்கிறார் போடியார். கல்கி ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி ஐயாவை மானசீகக் குருவாக நேசிப்பவர் நல்லதம்பிப் போடியார். கல்கி எழுதிய சரித்திர நாவல்களான 'பொன்னியின் செல்வன்;', 'மாமல்லபுரம்' போன்ற சரித்திர நாவல்களை தவறாமல், தப்பாமல் விரும்பிப்படித்து வந்தவர் போடியார். அவரது சமூக நாவலான 'அலை ஓசை', 'கள்வனின் காதலி' அவரது மனதை கவர்ந்த நாவல்களாகும். கல்கி தாசனான நல்லதம்பிப் போடியார் இந்த குறுநாவலை பலமுறை படித்து ஆனந்தப்பட்டவர். அந்த 'மையில்விழிமான்' என்ற குறுநாவலின் பெண்பாத்திரம் முழுமையாகக் கவர்ந்துவிட்டது. வன்னமணி, தங்கமணி, அழகம்மா, பூபதி, சீதை, கறுப்பி, தங்கப்பிள்ளை, சின்னப்பிள்ளை என்று பிறந்த பெண்பிள்ளைகளுக்கும் பெயர் வைப்பதுதான் அந்த படுவான்கரை ஊரின் பழக்கமாக இருந்தது. இவற்றையெல்லாம் ஓரங்கட்டிவிட்டு தன் மகளுக்கு புரட்சிகரமான பெயராக, கல்கி தந்த அந்த அற்புதப் பெயரான "மையில்விழிமான்" என்ற பெயரை வைத்தார் நல்லதம்பிப் போடியார். ஊருக்கே ஒரு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார். பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக ஆக்கிய பெருமை நல்லதம்பிப் போடியாரின் ஆற்றலுக்கு எடுத்துக்காட்டாகும். மையில் விழிமானின் கூட்டாளிப் பெண்கள் அவளை 'மையில்' என்றும், 'மான்' என்றும் அழைப்பார்கள். படுவான்கரைப் பகுதியில் அந்தப்பெயர் புதுமையான விசித்திரமான பெயராகக் காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லதம்பிப் போடியாரின் பழைய சம்பவங்களை அலசிக்கொண்டிருந்த வேளை பேச்சுவார்த்தைக்கு வந்தவர்கள் வாகனங்களில் வந்து இறங்கிவருவதை கண்டுகொள்கிறார். உடனே எழும்பியவாறு பொஞ்சாதி மண்டோதரியைக் கூப்பிடுகிறார். அவர் அழகாக அலங்கரித்து பொன்னால் செய்த தேர் போல் பக்கத்திலே வந்து நின்று கொள்கிறார். போடியாரின் அரண்மனை போன்ற வீட்டிலே வேலை செய்யும் கூலியாட்கள் பம்பரம் போல் கடமையாற்றிக்கொண்டிருக்கிறார்கள். பேச்சுவார்த்தைக்கு வந்த சம்பந்திகளை புன்னகை தவழ நல்லதம்பிப் போடியாரும் மனைவியும் வரவேற்கிறார்கள். பேச்சுவார்த்தைக்கு வந்த ஐந்து பெண்களும், ஐந்து ஆண்களும் பல வண்ண நிறம் கலந்து பின்னப்பட்ட பெரிய அழகான பன் ஓலைப்பாயில் அமர்ந்து கொள்கிறார்கள். வீட்டு வேலைக்காரர்கள் 'கிட்டிப்புள்' போல் தாவித்தாவி பேச்சுவார்த்தைக்கு வந்தவர்களின் பக்கத்திலே பெரிய வெற்றிலை வட்டாவை ஒருத்தன் வைக்க மற்றவன் வெற்றிலை சப்பித் துப்பும் வெற்றிலைப் படிக்கத்தை பக்கத்தில் வைக்கிறான். பேச்சுவார்த்தைக்கு வந்தவர்கள் வெற்றிலை வட்டாவையும் படிக்கத்தையும் வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படிக் கலை நுணுக்கத்தோடு வட்டாவையும், படிக்கத்தையும் அவர்கள் கண்டதேயில்லை. சின்ன வட்டாவும் துப்புவதற்கு சிறிய படிக்கத்தையும் தான் அவர்கள் கண்டிருக்கிறார்கள். ஒரு அரசனின் அரண்மனையில் அவனால் செய்யப்பட்ட பொருட்கள் இருப்பது போல் இந்த சம்பவங்கள் நெஞ்சிலே இனிப்பை வார்த்தது. பேச்சுவார்த்தைக்கு வந்தவர்களும் பக்கத்து ஊரிலே பெரிய பணக்காரர்கள்தான். ஆனால் நல்லதம்பிப் போடியாரோடு அவர்கள் நெருங்க முடியாது. அவர்கள் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றபடியாலும், மாப்பிள்ளை வைத்தியராக மட்டக்களப்பு பெரிய ஆஸ்பத்திரியில் வேலை பார்ப்பதாலும் நல்லதம்பிப் போடியார் இந்தக் கலியாணத்துக்குச் சம்மதம் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைகள் நடப்பதற்கு முந்தி 'சம்பந்தி' ஆட்களைப் பார்த்து,' மங்களகரமான காரியத்துக்குரிய பேச்சுவார்த்தை நடக்கப்போகிறது. தமிழர்களின் வாழ்க்கையிலே கலாச்சாரப் பண்பாடு மிக முக்கியமாகப் பேணப்படுகிறது. அந்த வகையில் மங்கலச் சின்னமான வெற்றிலையை முதலில் சப்பி பின்பு பேச்சுவார்த்தையை ஆரம்பிப்போம்' என்று கனிந்த குரலில் நல்லதம்பிப் போடியார் பேச்சுவார்த்தைக்கு அழைக்க முதலிலே நல்லதம்பிப் போடியார் மாப்பிள்ளையின் தகப்பன் சின்னத்தம்பிப் போடியாரின் பக்கம் வந்து அழகிய பெரிய வெற்றிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டாவைத் தூக்கிக் கொடுக்க மாப்பிள்ளையின் தகப்பன் வெற்றிலை வட்டாவை பவ்வியமாக சிரித்த முகத்தோடு வாங்கிக் கொள்கிறார். அதுபோல் போடியாரின் மனைவி மண்டோதரி மாப்பிள்ளையின் தாய் வள்ளிநாயகியிடம் வெற்றிலை வட்டாவைத் தூக்கிக் கொடுக்க வெற்றிலை சப்பும் படலம் ஆரம்பமாகிறது. வெற்றிலை வட்டாவின் அழகும், கலை நுட்பச்சிறப்பும், அதுபோல் வெற்றிலை சப்பித் துப்பும் வெற்றிலைப் படிக்கத்தின் அழகும், நுட்பமாகச் செதுக்கிய சிற்ப எழிலும் மாப்பிள்ளையின் குடும்பம் ஆச்சரியத்தால் கண்களை அகலவிரித்து பார்த்துக்கொண்டிருந்தன.

நல்லதம்பிப் போடியார் வெற்றிலை வட்டாவுக்குள் கைவைக்கிறார். கைவிரலால் லாவகமாக வெற்றிலையை நரம்பு பின்னி எடுத்து, பாக்குவெட்டியால் பாக்கை துகள்களாக வெட்டி எடுத்து, பாக்குத்துகள்களை வாய்க்குள் போட்டுச் சப்பியவாறு, வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவி, புகையிலைத் துண்டை வாய்க்குள் வெற்றிலையோடு குதப்பி எடுத்து ஏலக்காய், கறுவாய், மணக்கும் கைப்புத் துண்டு அத்தனையையும் வாயில் போட்டு வெற்றிலையைச் சப்புகிறார். போடியாரின் வாய் சிவப்புக் கொச்சிப்பழம் போல் சிவந்து அழகு காட்ட வெற்றிலையைச் சப்பிச் சப்பி துப்பல் படிக்கத்தை கையிலே மெதுவாகத் தூக்கி சிவப்பு இரத்தமாக வடியும் வெற்றிலைத் துப்பலை துப்பல் படிக்கத்துக்குள் துப்பி வெற்றிலைத் துப்பலால் படிக்கத்தை நிரப்புகிறார். அவரைத்தொடர்ந்து வெற்றிலையைச் சப்பி துப்பல் படிக்கத்தை நிரப்புகிறார்கள்.

வெற்றிலை சப்பும் படலம் முடிவடைய திருமணப் பேச்சுவார்த்தை ஆரம்பமாகிறது. பேச்சுவார்த்தையில் எந்தவிதமான முரண்பாடுமில்லாமல் எல்லோரும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக பேச்சுவார்த்தை நிறைவடைகிறது. நல்லதம்பிப் போடியார் உறுதியாகக் கூறிவிட்டார். "எனக்கு இருப்பது ஒரே மகள் தான். என்னிடம் இருக்கும் அத்தனையும் என் மகள் மையில்விழிமானுக்கே சொந்தமானது. வேறு பேச்சுக்கு இடமில்லை. எல்லாம் அவளுக்குத்தான்" என்று பேச்சுவார்த்தைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறார்.

பேச்சுவார்த்தை முடிந்ததும் வெற்றிலை சப்பிய வாயைக் கழுவிவிட்டு விருந்து உபசாரத்தில் கலந்துகொள்கிறார்கள் பேச்சுவார்த்தைக்கு வந்தவர்கள். விருந்து உபசாரம் தடபுடலாக நடந்து கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் வேலைசெய்யும் ஆட்கள் பம்பரம் போல் பறந்து பறந்து உணவுப்பண்டங்களைப் பரிமாறிக்கொண்டிருக்கறார்கள். இனிப்புத் தொதுள், முந்திரியங்கொட்டைப் பலகாரம், பயற்றம்பலகாரம், சர்க்கரைப்பலகாரம், முறுக்கு, சோகி, உழுந்து வடை சகலவிதமான வாழைப்பழங்கள் இப்படி ஆனந்தமான உபசாரம் சபையை அலங்கரிக்கிறது. மகிழ்ச்சியோடு ருசி பார்த்துச் சாப்பிடுகிறார்கள். தமிழர்களின் கலாச்சாரமான உணவுப் பண்டங்கள் பேச்சுவார்த்தைக்கு வந்தவர்களுக்கு இதமாக அமைகிறது. விருந்து உபசாரம் இனிதாக முடிய மீண்டும் வெற்றிலை சப்பும் படலம் ஆரம்பமாகிறது. மீண்டும் வெற்றிலை வட்டாக்களும், துப்பல் படிக்கங்களும் மீண்டும் சபைக்கு வரப்படுகிறது. வெற்றிலை சப்பும் காட்சி அந்தச் சபையை மீண்டும் அலங்கரிக்கிறது. ஏலக்காய், கறுவா, மணக்கும் கையிப்புக்கட்டியின் தூய மணம் வெற்றிலை சப்பியவர்களின் வாயிலிருந்து புறப்பட்டு அந்தச்சபை மண்டபத்தை மணத்தால் சாமரை வீசுகிறது. கொச்சிப்பழம் போல் வெற்றிலை சப்பிய வாய்கள் சிவக்க பேச்சுவார்த்தைக்கு வந்தவர்கள் கையெடுத்துக் கும்பிட்டவாறு நல்லதம்பிப் போடியாரிடமும், அவரது மனைவி மண்டோதரியிடமும் விடைபெற்று தங்கள் வாகனத்தை நோக்கிப் போகிறார்கள். அவர்களது வாகனம் புறப்பட வீட்டுவேலைக்காரர்கள் வெற்றிலை சப்பித் துப்பிய படிக்கங்களைத் தூக்கிக்கொண்டு வெளியே வெட்டிய மடுவிலே கொட்டப்போகிறார்கள்.

*10.10.2021*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆரையம்பதி ஆ. தங்கராசாவின் கதைகளில்
மட்டக்களப்பில் மறைந்துபோகும்
மண்வளச் சொற்கள் அதிகம்
ஆவணப்படுத்தப்பட்டிருப்பதோடு
அடுத்த தலைமுறைக்கும்
கையளிக்கப்பட்டிருக்கிறது.
மட்டக்களப்பின் தனித்துவமான
பண்பியல்புகளைக் கொண்டிருந்த
ஆரையம்பதி கிராமம், இன்று கண்டுள்ள
சமூக மாற்றம் இந்தக் கதைகளினூடாக
உலக தரிசனத்திற்கு வெளிப்பட்டு நிற்கின்றது.
அந்த ஊரின் படைப்பின் வீரியம் இந்தத்
தொகுப்பில் கிளைவிட்டுப் படர்கிறது.

ISBN 978-81-9078-914-1

cover rashmy

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org